விடுதலை

தந்தை பெரியார்
115-வது ஆண்டு
பிறந்த நாள் மலர்



Porter
MOULDED LUGGAGE
AN IDEAL TRAVEL COMPANION
போர்ட்டர்
— பிரிப் கேஸ்கள் மற்றும் சூட்கேஸ்கள்
— தரமானவை - நீடித்து உழைப்பவை
தமிழர்களால் தமிழ்நாட்டில் தயாரிக்கப்படுபவை
விற்பனையாளர்கள் - தேவை:
தயாரிப்பாளர்கள்:
கைவல்யம் டூல்ஸ் அண்டு டைஸ் (பி) லிமிடெட்,
45, மேடவாக்கம் சாலை - கீழ்க்கட்டளை, சென்னை - 43 - ☎ : 23449

தமிழர் தலைவர்
அய்யா அவர்களுக்கு
நாம் அளிப்பது
மலர் மட்டுமல்ல;
நம்மையே தான் !

ஆசிரியர்
'விடுதலை'

வரிசை எண்:	அடங்கல்	பக்கம் எண்:

1. மிக்க பண்பின் குடியிருப்பு 2
2. அரிமா நோக்கும் எதிர்காலப் போக்கும்
— கழகப் பொதுச்செயலாளர் கி. வீரமணி 7
3. நாத்திகமும், ஆத்திகமும் - தவத்திரு குன்றக்குடி அடிகளார் 29
4. பெரியார் பத்து ....
5. வீரமணியிடமிருந்து பெறும் உணர்ச்சி — வி.பி.சிங் 33
6. சிந்தனையின் விடிவெள்ளி - பாவலர் — நாரா. நாச்சியப்பன் 37
7. பொன்மொழி நூல் தடை - ஒரு தொகுப்பு 41
8. தந்தை பெரியார்பற்றி 'பிளிட்ஸ்' 65
9. புத்தரை விஞ்சிய பெரியார்
— பேராசிரியர் ந. இராமநாதன் அவர்களுடன் ஒரு பேட்டி 73
10. தந்தை பெரியார் தமிழ் இசை மன்றம் இசை விழா - படத்தொகுப்பு ....
11. கவுதம புத்தர் பெரியார் 89
12. பவுத்த பிக்கு அம்பேத்கர் 101
13. அன்றே சொன்னார் நம் பெரியார் —வழக்கறிஞர் கோ. சாமிதுரை 103
14. பன்னாட்டு தமிழுறவு மன்ற பெர்லின் மாநாடும் சில அனுபவங்களும்
— நீதி அரசர் பெ. வேணுகோபால் 105
15. தொழிலாளர்கள் பிரச்னை - பெரியாரின் சிந்தனை வெளிச்சம்! 112
16. எதிரிகள் யார்? — தந்தை பெரியார் 113
17. பெரியார் சொற்பொழிவும் - ''சுதேசமித்திரன்'' கணிப்பும்!
— முன்னவர் பு. இராசதுரை 115
18. காகத்தை என்செயப் படைத்தாய்? — புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் 121
19. மார்டின் லூதர் பெரியார் 127
20. பெரியார் பிலாசபி — ஏ.ஜி. கஸ்தூரி ரெங்கன் 129
21. பெஞ்சில் உட்கார வைத்தார்கள்! — காவாலகுடி உத்திராபதி 131
22. பெரியார் இயக்கம் மனிதராக்கியது — குடவாசல் கணபதி 133
23. கடந்த பெரியார் ஆண்டில் கழக டைரி 137
24. வட்டார மாநாடு - படத்தொகுப்பு ....
25. கடந்த பெரியாராண்டில் பொதுச்செயலாளர் அறிக்கைகள் 163
26. ''எல்லாம் இந்தக் கொள்கையால்தான்!'' — கா.மா. குப்புசாமி 169
27. மலேசியாவில் பெரியாரின் தாக்கம்
— 'திருச்சுடர்' கே.ஆர். ஆருடன் நேர்காணல் 177
28. பெரியாரின் பெண்ணுரிமைச் சிந்தனைகள்
— டாக்டர் தாயம்மாள் அறவாணன் 181
29. தந்தை பெரியாருக்கு டில்லியிலிருந்து வந்த கடிதம் — டி.எச். கலீல் ....
30. அசோகச் சின்னத்தை வைத்துக்கொள்ள யோக்கியதை உண்டா?
— தந்தை பெரியார் 185
31. இந்தத் தலைமையின் காலத்திலேயே..? — இனநலம் 187
32. திரும்பிப் பார்க்கிறோம்! — கவிஞர் கலி. பூங்குன்றன் 193

அட்டைப் படம் மற்றும் புகைப் படங்கள்:
பெரியார் கலையகம் - மா. குருசாமி, ஓவியர்கள்: வரதராசன், தங்க-கண்ணன், கருப்புசாமி, கி. இராகுலராஜ்
மலரை மணங்கமழச் செய்த மாந்தர்கள் அனைவருக்கும் நன்றி! நன்றி!!

மிக்க பண்பின் குடியிருப்பு

சுவாமி வேதாசலம் என்ற மறைமலை யடிகள் சென்னை குகானந்த நிலையத் தின் ஆண்டு விழாவில் ஆற்றிய உரை யின் ஒருபகுதி சூட்டை ஏற்படுத்தியது. ''சைவத்தை குற்றம் சொல்பவனை இன் னமும் விட்டு வைத்திருக்கின்றீர்களா? உங்கள் உடலில் சைவக் குருதி ஓடவில் லையா?'' என்ற தன்மையில் அடிகளார் பேசியதாக ஒரு பொறி பறந்தது. தந்தை பெரியாரின் சீடர்களான ஜே.எஸ்.கண் ணப்பர், தண்டபாணி, இராமநாதன் ஆகி யோர் மறைமலை அடிகளாருக்கு எதிராக ஆவேசம் கொண்டனர். 'திராவிடன்' இத ழில் தீப்பறக்க எழுதினர். இதனை மேலும் வளரவிடக் கூடாது என்ற முடி வில் கி.ஆ.பெ. விசுவநாதம் ஈடுபட்டார். மறைமலை அடிகள் தந்தை பெரியா ருக்கு ஒரு மடல் எழுதி கி.ஆ.பெ. அவர்க ளிடம் கொடுத்தார். அக்கடிதத்தை 'திராவி டன்' இதழில் 'மன்னிப்புக் கடிதம்' என்ற தலைப்புக் கொடுத்து வெளியிட்டு விட் டார். இதனைக் கண்ட தந்தை பெரியார் மிகவும் மனம் வருந்தி 'குடிஅரசு' (2.9.1928) இதழில் தலையங்கம் தீட்டி விட்டார். அதில் குறிப்பிட்டு இருப்பதா வது:

நமக்கு திரு. வேதாசலம் அவர்களது பெயரைக் கேட்க நேரிட்ட சமயம் முதலே அவரிடம் ஒருவித விஸ்வாசம்; நமது உணர்ச்சிகளுக்கும் கொள்கைகளுக் கும் அவர் ஒரு உற்ற துணைவர். பின்பல மானவர். சென்றவாரம் ஒரு சமாதானக் கடிதம் நண்பர் திரு. விஸ்வநாதம் பிள்ளை அவர்கள் மூலமாய் திரு. வேதாச லம் அவர்கள் எழுதி அனுப்பியது கிடைத்தது. அதில் எழுதப்பட்டு இருந் தது என்ன என்பது பற்றிக்கூட நாம் கவ னிக்க இஷ்டப்படவில்லை. அக்கடிதமா னது நண்பர் திரு. விஸ்வநாதபிள்ளை அவர்களால் தப்பாய் விநியோகிக்கப்பட் டதால் அது 'திராவிடன்' பத்திராதிபரிடம்

போகவும், அதை அவர் 'மன்னிப்புக் கடி தம்' என்பதாகப் பெயர் கொடுத்துப் பிரசு ரிக்கவும் நேர்ந்தது நமக்கு மிகவும் வருத் தத்தைக் கொடுத்தது என்றாலும் அதன் குற்றத்தையும் நாமே ஏற்றுக்கொள்ளு கின்றோம். ஏனெனில் ஒரு விஷயத்தில் நமது நண்பர்கள் எல்லோருக்கும் ஒரே விதமான பொறுப்பு இருக்கும் என்று நினைத்துக்கொண்டு நண்பர்களிடம் பழ

குவது எப்போதும் சரியாகவே இருப்ப தில்லை. ஆதலால் அக்குற்றத்திற்கு நாம் பொறுப்பாளி ஆவதுடன் இம்மாதிரி சந்தர்ப் பங்களில் இனிமேலாவது நமது நண்பர்க ளும், துணைவர்களும் இம்மாதிரி நடந்து கொள்ளாமல் இருப்பதற்காக நாம் விலை கொடுப்பதின் பொருட்டு நம்மையே நாம் தண்டித்துக் கொள்ளக் கருதி "திராவிடன் " பத்திரிகையில் "மறைமலை அடிகள் மன் னிப்புக் கடிதம் அனுப்பியுள்ளார்" என் கின்ற வார்த்தை காணப்பட்டதற்காக நாம் நிபந்தனையில்லாமல் மன்னிப்புக் கேட்டுக் கொள்ளுகிறோம். அன்றியும் அக்கடிதத்தில் அவ்வளவு கூட இல்லாமல், இன்னமும் எவ் வளவு சாதாரணமாய் எழுதியிருந்தாலும் கூட அதை ஒரு சாக்காகக் கொண்டே அவர் பேசியதைப் பற்றிய விவகாரத்தை நிறுத்தி

இருப்போம் என்பதையும் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்" என்று தந்தை பெரி யார் அவர்கள் பண்பாட்டின் மிக உயர்ந்த சிகரத்திற்கே சென்று எழுதியுள் ளார்கள். மிக்க பண்பின் குடியிருப்பு என்று புரட்சிக்கவிஞர் தந்தை பெரியார் பற்றி எழுதிய வரிகளுக்கு இலக்கணமும், இலக்கியமும் அல்லவா இது!

கொள்கையிலும் வளையாக் குன்றம்!

அதேநேரத்தில் மறைமலை அடிகள் குறிப்பிட்ட கருத்துக்கு எந்தவித சமரசத் துக்கும் ஆளாகாமல், அத் தலையங்கத் தில் தந்தை பெரியார் எழுதி இருக்கும் பகுதி வருமாறு:

"மற்றபடி அபிப்ராய பேதத்தைப் பற் றிய விஷயத்தில் அவர் (மறைமலை அடி கள்) எவ்வளவு இணங்கி வருவதாயினும் நாம் நமது கொள்கையிலோ, அபிப்ராயத் திலோ, ஒரு சிறிதளவு கூட விட்டுக் கொடுக்கவோ, திரு. வேதாசலத்தினுடை யவோ அல்லது வேறு யாருடையவோ நட்பைக் கருதியானாலும், கடுகளவு மாற் றிக் கொள்ளவோ நாம் சிறிதும் தயாரா யில்லை. ஏனெனில், ஆயிரக்கணக்கான வருஷங்களாய் நமது நாட்டில் தோன்றிய சீர்திருத்தக்காரர்களின் உழைப்புகள் பலன் தராததற்கு காரணமே இவ்விட்டுக் கொடுக் கும் தன்மையும், தாக்ஷண்யமும் ராஜ தந்திரச் செய்கையும்தான் என்பது நமது முடிவு" என்று தந்தை பெரியார் குறிப்பிடுவது பண்பாட்டுத் தகைமையிலும், கொள்கை உறுதியிலும் அவருக்குள்ள தனித்தன் மையை வெளிப்படுத்துகிறது.

திரு வேதாசலம் (மறைமலை அடிகள்) அவர் களின் கடிதம்

அன்புள்ள அய்யா,

நலம், தங்கள் நலத்தைத் தெரிவித்தல் வேண்டும். என்னைப்பற்றிய ஒரு குறிப்பு 'குடிஅரசு' பத்திரிகையில் வெளி வந்திருப்பதாக திருச்சி திரு. விஸ்வநாத பிள்ளை வாயிலாக இன்று அறிந்தேன். சென்னை குகானந்த நிலையத்தின் ஆண் டுவிழா நிகழ்ச்சி முறையைப்பற்றித் 'திரா

விடன்', 'தமிழ்நாடு' பத்திரிகைகளிற் போந்துள்ள சிலவுரைகளை நம்பி, அக்கு றிப்பு தங்களால் வரையப்பட்டதென அறிகிறேன். தங்களுக்காவது, தங்கள் இயக்கத்தைச் சார்ந்த அன்பர்கட்காவது எவ்வகையான தீங்கும் செய்ய அல்லது செய்விக்க வேண்டுமென்று யான் எண் ணியதுமில்லை; யாண்டும் சொல்லியது மில்லை. தாங்கள் என்னை வேறாக நினைத்து என்மீது வருந்துதல் வேண் டாம். என்றாலும் கடவுளைப் பற்றியும் அடியார்களைப் பற்றியும் தாங்கள் கொண்டுள்ள கோட்பாடுகளில் மட்டும் யான் கருத்து உடன்பாடுடையேனல் லேன். பத்திரிகைகளில் வெளிவந்த சில வற்றைப் பார்த்து தாங்கள் வருந்தியிருந் தால், அவ்வருத்தத்தை தாங்கள் அன்பு கூர்ந்து நீக்கிவிடல் வேண்டும். தமிழ் மக் கள் முன்னேற்றத்தின் பொருட்டுத் தாங் கள் செய்துவரும் நன் முயற்சிகள் இனிது நடைபெறுக.

அன்புள்ள,

24.8.28 சு. வேதாசலம்

தந்தை பெரியார் அன்றே சொல்லிவிட்டார்!

இப்பொழுது நாம் சமுதாயத்துப் பேரைச் சொல்லி மாற்றி - பார்ப்பானை ஒழித்து நாம் பதவிக்கு வந்து விட்டோம். நமக்கு அப்புறம் வருகி றவன் வாழ்வை மாற்றிக்கொள்வான். **பழையபடி பார்ப்பன ஆதிக்கம் வருவதற்கு என்னென்ன வேணுமோ** அதுதான். நம்மிலே இருக்கிறார்கள் அனேகம் பேர் காட்டிக் கொடுக்கவும், மற்ற காரியம் செய்யவும், என்ன அவமானம் வந்தாலும் லட்சியம் இல்லாமல் பதவிதான் பெரிது என்பதற்கும் ஆட்கள் இருக்கிறார்கள். அவர்கள் தான் மெஜாரிட்டி ஆனதினாலே, மறுபடியும் அவர்கள் கிட்டே போய்ச் சேருவான். அவன்கிட்டே சேர்ந்தால் என்ன? பழையபடி ஆக்குகிறது என்பதுதான். அப்புறம் நம் கெதி என்ன ஆகும்? இப்பொழுது எவ்வள வுக் கைப்பற்றினோமோ, இப்பொழுது எவ்வளவுப் பெருமைக்கு, நன்மைக்கு ஆளானோமோ இதையெல்லாம் மாற்றுவதற்குத்தான் இடமாகுமே தவிர, இதோடு இன்னும் நன்மை தேடுவதற்கு இடமாகாது .

- தந்தை பெரியார்

(4-11-1973 அன்று திருச்சியில் ஆற்றிய உரையிலிருந்து)

தந்தை பெரியார் மற்றும்
பேரறிஞர் அண்ணா அவர்களின்
பிறந்தநாளைப் போற்றிடும் வகையில்

கோ-ஆப்டெக்ஸ் வழங்கும்

சிறப்புத் தள்ளுபடி 20% - 40%

11-9-93 முதல் 17-9-93 வரை

கடன் விற்பனை உண்டு.

கை வண்ணத்துக்கோர்
எடுத்துக்காட்டு
கைத்தறித் துணிகள்

கோ-ஆப்டெக்ஸ்
தமிழ்நாடு கைத்தறி

அரிமாநோக்கும் எதிர்காலப் போக்கும்

'விடுதலை' தந்தை பெரியார் மலர் என்றால் அது வெறும் அய்யா தொண்டின் பாராட்டுக் குவியல் என்பதாக மட்டும் அல்லாமல், அவர்தம் லட்சியங்களை ஆண்டுக்கு ஆண்டு அவர் கண்ட இயக்கமும், அதன் தொண்டர்களான தோழர்களும், தோழியர்களும், அய்யா, அம்மா பெயரால் அவர்கள் உருவாக்கிய அறக்கட்டளைகளும் எப்படி முன்னெடுத்துச் செல்லத் திட்டமிடுகிறார்கள் என்றும், சாதித்த சாதனையை தொகுத்தளிப்பதோடு இனி நாம் செல்லும் ஈரோட்டுப் பாதையின் அடுத்த மைல் கற்கள் எவை எவை என்பதையும் எடுத்துக்காட்டுவதாகும்.

"இயக்கம் இருக்குமா-இயங்குமா?"

தொண்டு செய்து பழுத்த பழமான நம் அறிவு ஆசான் மறைந்து சுமார் 20 ஆண்டுகள் உருண்டோடுகின்ற நிலையில், அவர்களுக்குப் பின் அவர் கண்ட இயக்கம், அவர் தந்த கொள்கைகள் இருக்குமா? இயங்குமா என்று கேட்டவர்கள் இன்று பேச்சற்று மூச்சடைத்து மூக்கின் மேல் விரல் வைத்து எண்ணக்கூடிய வகையில் பெரியார் இயக்கமும் அதன் தாக்கமும் விந்தியத்தைக் கடந்து இமயத்தைத் தாண்டி, ஆல்ப்சுக்கும் அப்பால் உலகின் கடைகோடி வரை பரவுகிறது!

அய்யா ஒரு அறிவியல் கண்டுபிடிப்பு

ஒரு அறிவியல் கண்டுபிடிப்பு எப்படி கண்டுபிடித்தோருக்கு மட்டுமே உரியதாகிவிடாமல், உலகுக்கே சொந்தமாகிவிடுகிறதோ அப்படிப்பட்டதுதான் இருபதாம் நூற்றாண்டு கண்ட இணையற்ற மனிதநேயக்காரரான தந்தை பெரியார் தம் அறிவியல் அடிப்படையில் அமைந்த வாழ்வியல் - சமூகவியல் சிந்தனைகள் ஆகும்.

சடங்குகள், சாத்திரக் குப்பைகள், கோத்திரக் கூளங்கள் இவைகளை ஒழித்த அவர் கண்ட சுயமரியாதைத் திருமண முறை இன்று தென் கிழக்காசியாவில் மலேசியா, சிங்கப்பூர் போன்ற கடல் கடந்த நாடுகளிலும், அரசுகளால் ஒப்புக்கொள்ளப்பட்ட - சட்டரீதியாக ஏற்றுக்கொள்ளப்பட்ட - திருமண முறையாகி, ஆண்டுதோறும் சுயமரியாதைத் திருமண முறை நடைபெறும் நிலை எதைக் காட்டுகிறது?

எழுத்துச் சீர்திருத்தம்!

தமிழ் மொழி - தமிழர்களால் எளிதாகக் கற்றுக்கொள்ளப்படவேண்டுமானால், தமிழ் அச்சும், தட்டெழுத்தும், சுருக்கெழுத்தும் அறிவியல் வளர்ச்சி அடிப்படையில் மொழி அறிவு விரைந்து மக்களால்



ஏற்றுக்கொள்ளப்பட தமிழில் இவ்வளவு எழுத்துகள் (தற்போது உள்ளதுபோல் 247) தேவையில்லை. மாறாக, ஆங்கில மொழிபோல, 26, 30 எழுத்துக்களிலேயே அதனை உள்ளடக்கி சீர்திருத்தம் செய்ய வேண்டும் என்று கூறி, கூறியதை செயலிலும் காட்டிட 'விடுதலீ' என்பதற்கு பதிலாக 'விடுதலை' என்றே 1935-ம் ஆண்டு முதல் அவர்கள் நடத்திய 'குடி அரசு', 'விடுதலை', 'பகுத்தறிவு', 'உண்மை' ஆகிய ஏடுகளிலும், அவர்கள் அச்சிட்டுப் பரப்பிய கொள்கை விளக்க நூல்களிலும் அதனையே - புதிய சீர்திருத்த எழுத்துக்களையே கையாண்டுவந்தார்கள்.

அய்யா மறைந்த 5 ஆண்டுகளில் அவர் தம் நூற்றாண்டு விழாவின்போது, ஆட்சி செய்த எம்.ஜி.ஆர். அரசு, அய்யா நூற்றாண்டின் வேலைத் திட்டத்தின் ஒரு பகுதியாக அந்த தமிழ் எழுத்துச் சீர்திருத்தத்தினை ஏற்று அறிவித்தது.

அதையே தகுந்த அடிப்படையாக - காரணமாக்கி - சிங்கப்பூர் அரசு அய்யாவின் தமிழ் எழுத்துச் சீர்திருத்தத்தினை நடைமுறைப்படுத்தியது.

வழமைபோல தமிழ்ப் புலவர் 'மேதாவிகள்' சிலரது குறுக்குசால் இங்கே இருந்தது என்றாலும் அந்தத் திருத்தம் வேரூன்றியதன் விளைவு சிங்கப்பூர் தமிழர்கள் தமிழை எளிதாகப் படித்திட, எழுதிட ஒரு புது வாய்ப்பு என்ற ஒளி பிறந்தது.

மலேசியாவிலும், தமிழ்நாட்டுப் பத்தாம்பசலிப் புலவர்கள் சிலரைப்போல் இருந்து, குழப்ப அறிக்கைகள் விடுத்தார்கள். மலேசிய திராவிடர் கழகமே பல கருத்தரங்குகளை நடத்தி அந்த நாட்டவருக்கு அதன் விழுமிய பலன்களை விளக்கிடும் முயற்சியை சலிப்பின்றி செய்தது. நல்ல பலன் கிட்டியது! இவ்வாண்டு முதல் மலேசிய அரசும் பெரியாரின் தமிழ் எழுத்துச் சீர்திருத்தத்தினை ஏற்று அரசு உத்தரவு போட்டுவிட்டது. தமிழ் ஏடுகள், வெளியீட்டாளர்கள் அதனை ஏற்கும் நிலை அங்கே மலர்ந்துவிட்டது!

புரட்சிக் கவிஞரின் அறிவு வாக்கு!

பெரியாரின் 'மண்டைச் சுரப்பை உலகு தொழும்' என்றாரே புரட்சிக் கவிஞர் - அது எவ்வளவு தொலைநோக்குடன் அமைந்த அறிவு வாக்கு! உலகப் பெரியார் அவர் என்பதை வரலாறு எப்படி இனி மறைக்க முடியும்?

ஆரிய மதமான இந்து மதம் என்ற பார்ப்பனீய பலகணியை இங்கிலாந்து, அமெரிக்காவில் விவேகானந்தர் பெயரிலும், விசுவ இந்து பரிஷத், தொண்டு நிறுவனப் பணிகள் என்ற 'மாயத் திரைகளை' மாட்டி, செலாவணி செய்துவிட

லாம் என்ற பார்ப்பனரின் திட்டத்திற்குப், பலத்த எதிர்ப்புகள், அந்நாடுகளில் வாழும் அனைத்துத் தரப்பு மக்களிடமிருந்து கிளம்பியிருக்கிறது. எளிதில் ஏமாற்றிடலாம் என்ற சக்திகள் வன்மையான எதிர்ப்பினை சந்திக்க நேர்ந்ததே தந்தை பெரியாரின் - நமது இயக்கத்தின் தாக்கம் அல்லாமல் வேறு என்ன?

புட்டபர்த்தி சாயிபாபா சாயம் வெளுப்பு!

ஆண்டவன் அவதாரம் புட்டபர்த்தி சாயிபாபா என்று உலகெங்கும் பிரச்சாரம் செய்தார்கள். மலேசியாவிற்குச் சில ஆண்டுகளுக்கு முன் கொள்கைப் பிரச்சாரம் செய்ய நாம் சென்றபொழுது 'புட்டபர்த்தி சாயிபாபாவைப் பற்றிப் பேசாதே!' என்று எதிர்ப்புத் தெரிவித்தார்கள். நம் மீது வழக்கும் தொடுக்க முன் வந்தார்கள். அந்த வழக்கறிஞர் பாரீஸ்டர் ஜெயராம் என்ற சாயிபாபா பக்தர்தான். பிறகு புட்டபர்த்தியாரின் உண்மை உருவம் தெரிந்தது நமக்கே கடிதம் எழுதினார். மலேசியாவிலிருந்து புட்டபர்த்தியாரிடம் அனுப்பப்பட்ட மாணவர்களையே ஓரினப் புணர்ச்சிக்கு (Sodomy) அழைத்தார் என்ற செய்தியை அறிந்த நிலையில் அதிர்ச்சி அடைந்து நமக்குக் கடிதம் எழுதி, புட்டபர்த்தி சாயிபாபா புரட்டுப்பற்றி வெளிவந்த நூல்களை எல்லாம், வெளியீடுகளை எல்லாம் நம்மிடம் கேட்டுப் பெற்றார்.

நாம் பிரச்சாரம் செய்தபோது ஏற்க மறுத்த மக்கள், அண்மையில் 1993 ஜூன் 6 ஆம் தேதி அன்று புட்டபர்த்தி சாயிபாபா ஆசிரமத்தில் நடைபெற்ற படுகொலைகள் மூலம் கொஞ்சம் கண்களைத் திறக்க ஆரம்பித்துள்ளார்கள். சாயிபாபாவின் சக்தி அம்பலமானதைவிட அந்த இடம் மோசடியான ஒரு மர்மக் குகை என்பது வெளிச்சத்துக்கு வந்துவிட்டது.

உலகளாவிய நிலையில் நமது பிரச்சாரம் அளித்த பலன் எப்படிப்பட்டது என்பதற்கு இவை சில எடுத்துக்காட்டுகள். அது

மட்டுமா?

இந்தியத் துணைக்கண்டம் முழுவதும் அய்யா!

பீகார் முதல்வர் லல்லுபிரசாத் யாதவ் அவர்கள், 'பார்ப்பனீயத்தை உங்கள் வீட்டிற்குள் அனுமதியாதீர்! பார்ப்பனச் சடங்குகளை ஒருபோதும் ஏற்காதீர்!!' என்று தந்தை பெரியார் தம் சுயமரியாதை இயக்க சமூகப் புரட்சிக் கருத்துக்களையே பீகார் முழுவதும் பிரச்சாரம் செய்துவருகிறார். ஏன்? சுயமரியாதைத் திருமணங்களை அவரே முன்னின்றும் நடத்துகிறார்!

அண்மையில் டில்லி அரசு நிறைவேற்றி சட்டமாக்கிய உள்ளாட்சித் தேர்தல்களில் 30 சதவிகித இட ஒதுக்கீடு பெண்களுக்கு தனியே இருக்கவேண்டும் என்று குறிப்பிட்டுள்ளது. அதை மராட்டிய முதல்வர் திரு. சரத்பவார், அவரது மாநிலத்தில் 30 கூட குறைவு, 50 ஆக உயர்த்துகிறேன் என்று கூறி திருத்த ஏற்பாட்டினை அறிவித்துள்ளார்!

மக்கள் தொகையில் சரி பகுதியாக உள்ள மகளிருக்கு, 50 விழுக்காடு இட ஒதுக்கீடு தேவை என்றும் அதன் மூலம் தான் பெண்கள் சமத்துவம், சமவாய்ப்பு, சுதந்திரம் பெறமுடியும் என்றும் சுமார் அரை நூற்றாண்டுக்கு முன்பிருந்தே முழங்கிய அறிவு ஆசானின் கருத்துக்கள் இன்று

நடைமுறையில் வருவதைப் பார்க்கிறோம்.

(1989-ல் மீண்டும் பதவியேற்ற தி.மு.க. அரசு தமிழ்நாட்டில் கல்வி, உத்தியோகப் பணிகளில் 30 சதவிகித இட ஒதுக்கீடு ஆணை பிறப்பித்ததையும் இந்த நேரத்தில் பெருமிதத்துடனும் குறிப்பிடுவது பொருத்தமாகும்!)

தந்தை பெரியாரின் சமூகநீதித் தத்துவம் வாகை சூடிய ஆண்டு!

கடந்த பெரியார் ஆண்டு 114-ம் ஆண்டு முதல் 115 பிறக்கும் நிலை வரை அவர் கண்ட இயக்கப் பணியின் வீச்சுகள், பெரியார் கொள்கையின் ஒளிமிகு கதிர்வீச்சுக்கள்போல் தமிழகத்தின் மூலை முடுக்குகள் அனைத்திலும் பாய்ந்தன!

தந்தை பெரியார் தம் உயிர்க்கொள்கையான சமூகநீதி - வகுப்புரிமை ஆகியவைகளுக்கு வாகை சூடிய ஆண்டு ஆகும் அந்த ஆண்டு.

அவர்கள் விதைத்த விதை பூத்துக் குலுங்கியதோடு, காய்த்துக் கனிந்து அக்கனியின் சுவையை இதுவரை அறியாதோரை அறியவைத்த ஆண்டு ஆகும்!

உச்சநீதிமன்றத் தீர்ப்பு

1992-ம் ஆண்டு நவம்பர் 16-ம் நாள், மண்டல் குழு பரிந்துரையை அடிப்படையாகக் கொண்டு, சமூகநீதிக் காவலர் மான மிகு வி.பி.சிங் அவர்கள் தலைமையில் ஆண்ட தேசிய முன்னணி அரசு பிறப்பித்த மத்திய அரசு பணிகளில் பிற்படுத்தப்பட்டோருக்கு 27 சதவிகித இட ஒதுக்கீடு ஆணை செல்லும் என்று உச்சநீதிமன்றத்தின் 9 நீதிபதிகள் கொண்ட 'முழு பெஞ்சில்' 6 நீதிபதிகள் (பெரும்பான்மையோர்) அளித்த தீர்ப்பு கிடைத்தது. அதன்படி

1. வி.பி. சிங் அரசு ஆணை செல்லும்

2. நரசிம்மராவ் அரசு போட்ட ஆணை (பொருளாதார அடிப்படையில்) செல்லாது.

3. சாதி அடிப்படையில்தான் அரசு இட ஒதுக்கீடு; பொருளாதார அடிப்படை என்பது அரசியல் சட்டவிரோதம்.

4. பிற்படுத்தப்பட்டவரை, மிகவும் பிற்படுத்தப்பட்டோர் (M.B.C.), பிற்படுத்தப்பட்டோர் என்று பிரிப்பது சட்டப்படி சரியே என்று முக்கிய தீர்ப்பு தந்துவிட்டது.

என்றாலும், இரண்டு தேவையற்ற பிரச்சினைகளைக் கூறி குழப்பத்தை இறக்குமதி செய்தது.

1. 50 சதவிகிதத்திற்கு மேல் இட ஒதுக்கீடு செய்யக்கூடாது.

2. பிற்படுத்தப்பட்டவர்களுக்கான 27 சதவிகித ஆணையை செயல்படுத்துமுன் அதில் உள்ள மேல்தட்டு (Creamylayer) மக்களை அடையாளம் கண்டு நீக்கி அமுல்படுத்த வேண்டும் என்பதாகும்!

மண்டல் காற்றைத் தடுக்க பார்ப்பன சதி!

பெரும் வெற்றி என்ற நிலையில் மண்டல் காற்று மத்திய அரசின் பணிமனைகளில் வீசுவது உறுதி என்பதால், சமூகநீதியை வேரோடு கெல்லி எறிய, மத்திய ஆட்சியையே பிடித்திட, வட நாட்டில் உள்ள பெரும்பகுதி ஒடுக்கப்பட்ட மக்களான பாமர வாக்கு வங்கியினருக்கு 'ராமன்' போதை என்ற பக்தி போதை, பாபர் மசூதி இடிப்பு என்ற இஸ்லாமிய மத எதிர்ப்புப் போதை இவைகளை சூழ்ச்சித் திட்டத்தோடு உயர்சாதி பார்ப்பன வர்ணத்தவர் ஊட்டினர்.

டிசம்பர் 6-ல் பாபர் மசூதி இடித்துத் திசைதிருப்ப முயன்றனர்.

மத்திய காங்கிரசும் வேடிக்கைப் பார்த்தது! பிறகு நாடு தழுவிய எதிர்ப்பு பொங்குமாங்கடல் போல் கிளம்பிய நிலையில், ஒப்புக்காக, (பிரதமர் ராவ் உட்கட்சியில் தனது தலைமையை எதிர்ப்பவர்களின் கை ஓங்காமல் இருக்கவே) ஆர்.எஸ்.எஸ்., பஜ்ரங்தள், விசுவ இந்து பரிஷத் ஆகியவைகளையும் ஜமீயத் இஸ்லாம், அய்.எஸ்.எஸ்., ஆகிய இரு இஸ்லாமிய அமைப்புக்களையும் சேர்த்து 5 அமைப்புகளை தடை செய்து உத்தரவு பிறப்பித்தார்.

அது காகித அம்பாகவே இருந்தது. பிறகு அது விலக்கிக் கொள்ளப்பட்டது.

ஏதோ பெயருக்கு விசுவ இந்து பரிஷத் அமைப்பு தடை மட்டும் ஏட்டளவில் உள்ளது. அதன் கலகக் கர்த்தாவான அசோக் சிங்கால் மீண்டும் அங்கே மசூதியை கட்டினால் டிசம்பர் 6 கதி ஏற்படும் என்று பகிரங்கமாக பிரகடனம் செய்கிறார். சட்டம் வேடிக்கை பார்க்கிறது!

மதவெறி மாய்க்கும் வட்டார மாநாடுகள்!

இந்நிலையில், இந்தியா முழுவதும் மதக்கலவரங்கள் வெடித்து சுமார் 3000 பேர் அதற்குப் பலியான கொடுமையான சூழலிலும் பெரியார் பிறந்த மண்ணான தமிழ்நாடு அமைதிப் பூங்காவாகவே திகழ்ந்தது!

மதவெறிச் சக்திகளின் கலவரக் குரல், திட்டங்கள் வெற்றிபெறாது இருக்க திராவிடர் கழகம் ஜனவரி 3-ம் தேதி தொடங்கி ஒவ்வொரு மாவட்டத்திற்கும் சென்று மாவட்டம் முழுவதும் ''மதவெறியை மாய்ப்போம், மனித நேயம் காப்போம்!'' என்று பிரச்சாரப் பெருமழையைப் பொழியவைத்தது. மாலையில் மாவட்டத்தின் பெருநகரத்தில் பல்லாயிரக்கணக்கான மக்கள் எழுச்சியோடு பங்கு கொண்டு வட்டார மாநாடுகளை நடத்தியது. 1. நாகர்கோயில், 2. தூத்துக்குடி, 3. திருநெல்வேலி, 4. ராசபாளையம், 5. போடி, 6. மதுரை, 7. திருச்சி, 8. கரூர், 9. திண்டுக்கல், 10. ராமநாதபுரம், 11. காரைக்குடி, 12. புதுக்கோட்டை, 13. அரியலூர், 14. விருத்தாசலம், 15. திருக்கோயிலூர், 16. திருவண்ணாமலை, 17. குன்னூர், 18. கோவை, 19. தாராபுரம், 20. ஓமலூர், 21. கிருட்டினகிரி, 22. ஆம்பூர், 23. செங்கற்பட்டு, 24. தாம்பரம், 25. ஆவடி, 26. பட்டுக்கோட்டை, 27. நாகப்பட்டினம், 28. திருவையாறு, 29. வத்ராயிருப்பு.

இந்த மாநாடுகள் அனைத்து மக்களி டையே ஒரு பெரும் நம்பிக்கையை ஏற்ப டுத்தியது. சமூகநீதிக்கு எதிரான சக்திக ளின் திட்டமிட்ட செயலே 'ராமஜென்ம பூமி' பிரச்சினை இராமனுக்காக அல்ல என்பதையும், பெரும்பான்மையோரான ''இந்துக்களின் பிரதிநிதிகள் ஆர்.எஸ். எஸ்., பரிவாரங்கள் அல்ல; அவை பார்ப் பன மேல் சாதி வல்லாண்மையாளரின் பிரதிநிதிகளே என்பதை தமிழ்நாடே அப் பிரச்சாரத்தின் மூலம் புரிந்துகொண்டது.

தொடர்ந்து ஏப்ரல் வரை அப்பிரச்சாரம் - குமரியில் தொடங்கி வடகோடி திருத் தணி வரை நடைபெற்றது!

ஆர்.எஸ்.எஸ். அமைப்பும் அரசியல் கட்சிகளும்!

தமிழ்நாட்டினை எப்படியும் தங்கள் களமாக்கி, தளமாக்கிட வேண்டும் என்று ஆழ்ந்து திட்டமிட்டு முனைப்புடன் தீவி ரப் பணியாற்றிடும் ஆர்.எஸ்.எஸ்., பி.ஜே.பி., இந்து முன்னணி என்ற பார்ப் பன உயர்சாதி அணிகளினால் விளையவி ருக்கும் பேரபாயத்தினைத் தடுத்து நிறுத் தும் பெரும் பணியில் கழகம்தான் முன் நிற்கும் ஒரே தளநாயகராகத் தன்னை ஆக்கிக் கொண்டிருக்கிறது.

பெருந்தீ பிடிக்கப் போகிறது என்று நாம் சொன்ன போதிலும்கூட முற்போக்கு முத்திரை குத்திக்கொண்ட இடதுசாரி கள் உட்பட தமிழ்நாட்டு அரசியல் கட்சி கள் யாருக்கோ வந்த விருந்து என்று மெத்தனத்துடன் உள்ளது மிகவும் வருந் தத்தக்க ஒன்றாகும்!

ஆர்.எஸ்.எஸ். ஊடுருவல் பல அரசி யல் கட்சிகள் - ஆளுங்கட்சி, எதிர்க்கட்சி என்ற பாகுபாடு இன்றி நடைபெற்றுக் கொண்டுள்ளது!

ஆளுங்கட்சியின் தலைமை (முதல் வர்), கரசேவையை ஆதரித்தபோது, முதல் கண்டனம் நமது இயக்கத்தின் குர லாக அமைந்தது மாத்திரம் இன்றி,

பி.ஜே.பி., அ.தி.மு.க. கூட்டு உறுதி என்ற நிலை வந்தால், தமிழ்நாட்டின் கடும் எதிர்ப்பை அ.தி.மு.க. சந்தித்துத் தீர வேண்டிவரும் என்று எச்சரிக்கை செய் தது! 'கூட்டு இல்லை' என்று அவர்களால் பிரகடனம் செய்யவைத்தது திராவிடர் கழ கம்; இன்றுவரை இந்நிலை.

பி.ஜே.பி. அணியுடன் யார் கூட்டு சேர்ந்தாலும் அவர்கள் தமிழ் மண்ணை ஆளத் தகுதியற்றவர் என்பதை புரிய வைப்பதில் கழகம் ஒருபோதும் சளைக் காது. இளைக்காது!

விழுப்புரத்தைத் தலைமையிடமாகக் கொண்ட மாவட்டத்துக்கு சங்கராச்சாரி யார் பெயர் சூட்டப்படும் என்கிற நிலை ஏற்பட்டபோது, தக்க நேரத்தில் எச்சரித் துத் தடுத்ததும் திராவிடர் கழகமே!

இளைஞர்கள் அமைப்பு

இன பலம், அதிகார பலம், கறுப்புப் பணம், பத்திரிகை பலம், இவற்றுடன் ஒரு பெரிய அலைபோலத் தமிழ்நாட் டைக் குறிவைத்துத் தாக்க பார்ப்பன பனி யாக்களின் பண்பாட்டுப் படையெடுப்பு தலைக்குமேல் நிற்கிறது. இதனைத் தடுத்து நிறுத்த இளைஞர்கள், மாணவர் கள் மத்தியில் நம் இயக்கக் கருத்துக்க ளைக் கொண்டுசெல்வதிலும், இயக்கத் தைக் கட்டுவதிலும் நம் கவனத்தை முக்கி யமாகச் செலுத்தவேண்டும்.

உயர்நிலைப் பள்ளி, கல்லூரி மட்டத் தில் தந்தை பெரியாரின் இனமான, பகுத்த றிவு, சமூகநீதிக் கருத்துக்களைப் பரப்பு தல் வேண்டும். துண்டறிக்கைகளைக்



69 சத இட ஒதுக்கீட்டை முடக்கும் உச்ச நீதிமன்ற
ஆணைக்குத் தீ! தீ!! (சென்னை 1.9.93)

கொடுத்துக்கொண்டே இருக்கவேண்டும். அதற்கான திட்டம் தயாரிக்கப்படும். அதன் பொறுப்பாளர்கள் தீவிரமாகச் செயல்பட ஊக்குவிக்கப்படுவார்கள். பம்பரம்போல் சுழன்று பணியாற்றும் 'இளைஞர் தேனீ'யான உரத்தநாடு குணசேகரனைப் போல ஒரு இருபது இளைஞர்கள் தயாரானால், புது வரலாற்றையே உருவாக்கிடலாம்.

பல்வேறு போராட்டக் களங்கள்!

மண்டல் ஆணையை 93 மார்ச் 15-ம் தேதிக்குள் (4 மாத கால அவகாசத்தில்) செயல்படுத்தவேண்டும் என்ற உச்சநீதி மன்ற தீர்ப்பைச் சுட்டிக்காட்டி, தமிழ்நாடு முழுவதும் மத்திய அரசு அலுவலகங்கள் முன்னே அனைத்து சமூகங்கள், சாதிகள், தலைவர்கள், சிறுபான்மையோரை இணைத்து மறியல் செய்து பல்லாயிரக்கணக்கில் கைதானார்கள்.

இதற்கிடையில் தமிழ்நாட்டில் தொலைக்காட்சி நேரங்களை மாற்றி, இந்தித் திணிப்பை வேகப்படுத்தியதை எதிர்த்தும் நாடு தழுவிய அளவில் கிளர்ச்சியில் கழகம் ஈடுபட்டது. தமிழ்நாடு சட்டமன்றத்தில் திராவிடர் கழகம் கிளர்ச்சியில் ஈடுபட்ட அதே நாளில் இந்தித் திணிப்புக் கண்டனத் தீர்மானம் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது!

நாம் புகைவண்டி நிலையங்களில் உள்ள இந்திப் பெயர்களையும் தார் கொண்டு அழிக்க முயன்றோம். கைது செய்யப்பட்டோம். இப்படி பல்வேறு முனைகளில் பல்வேறு கிளர்ச்சிகள்.

பல பிரச்சினைகளில் சிறப்புக் கூட்டங்கள், அரசுக்கு உரிய நேரத்தில் அறிக்கைகள் இவற்றின் வாயிலாக கழகம் பல வழிகளிலும் ஒடுக்கப்பட்டோருக்கு வரவிருந்த கல்வி, உத்தியோக ஆபத்துக்களை தடுத்து நிறுத்தியது.

தமிழ்நாடு அரசுத் தேர்வு ஆணையகத் (பப்ளிக் சர்வீஸ் கமிஷன்) தலைவர் பதவி, அண்ணா பல்கலைக் கழகத் துணைவேந்தர் பதவி, தமிழகக் காவல் துறைத் தலைமை இயக்குநர் (D.G.P.) பதவி போன்ற பதவிகள் பார்ப்பனர்களுக்குத் தமிழக அரசால் தாரை வார்க்கப்படா

காணாத இடத்தில் குரைக்காதே!

மூடர்: இந்த உலகத்தைப் படைத்ததற்கு ஏதாவது ஒரு காரணம் வேண்டாமோ? அதுதான் கடவுள்.

பதில்: சரி, அப்படியானால் கடவுளை உண்டாக்கினதற்கு மற்றொரு காரணம் வேண்டாமா?

மூடர்: கடவுளைப் படைப்பதற்கு ஒரு காரணம் கேட்பது முட்டாள்தனமாகும்.

பதில்: அப்படியானால் உலகப் படைப்புக்குக் காரணம் தேடிக்கொண்டிருப்பது அதைவிட இரட்டிப்பு முட்டாள்தனமாகும்.

மூடர்: உங்களோடு யார் பேசுவார்கள்?

பதில்: சரி, நல்ல காரியமாச்சு... ஆனால் காணாத இடத்தில் குரைக்காதே!

— தந்தை பெரியார்,
'குடிஅரசு' 4.1.1931.

மல் கழகம் தடுத்து நிறுத்தியது உலகம் அறிந்த உண்மையாகும்.

இப்பெரியார் ஆண்டில்...

இப்பெரியார் ஆண்டில் செய்து முடித்த தைவிட, இனிவரும் ஆண்டில் செய்ய வேண்டிய பிரச்சாரப் பணிகளும், ஆக்க வேலைத் திட்டங்களும் மிகவும் முக்கிய மானதாக அமையவேண்டும் என்பது ஒவ்வொரு கருஞ்சட்டை வீரரின், வீராங்கனையின் குறிக்கோளாக இருக்கவேண்டும்.

கழகத்தினை நோக்கி, எங்கு நோக்கினும் - இளைஞர்கள்! இளைஞர்கள்!! இளைஞர்கள்!!! என்பது நமக்கு புது உற்சாகத்தையும், இயக்கத்திற்குப் புது பலத்தையும் ஊட்டுகிறது!

சென்ற மலரில் நம் அய்யா அவர்கள் அருப்புக்கோட்டையில் பேசிய பேச்சின் ஒரு பகுதியை எடுத்துக்காட்டினோம். நமது இளைஞர்கள், கழகத்தவர்கள் மனப்பாடமாகக் கொள்ள வேண்டிய முக்கிய தெளிவுரை அது என்பதால் மீண்டும் நினைவூட்டுகிறோம்.

நமது கழகம் எப்போதும், எதிலும் தோற்காது என்பதை விஞ்ஞான ரீதியாக அறிவு ஆசான் விளக்குகிறார். அப்பகுதி இதோ-

''உத்தியோகம், பதவி, தனிப்பட்டவர்கள் நலன் என்பதான கொள்கையும், திட்டமும் வெற்றி பெறவேண்டுமானால், கோஷ்டி, கூட்டுப் பொறுப்பு, தந்திரம், பித்தலாட்டம் முதலியவை தேவை. அப்படி இல்லாத திராவிடர் கழகம் தனிப்பட்டவர்கள் நலனுக்கு இடமே இல்லாத திட்டமுடையதாகும்! (கழகப் பணியாளர்களுக்கு) உத்தியோகம், பதவி என்ற எண்ணமே உதிக்கச்செய்ய இடமே இல்லாத கொள்கை உடையதாகும்! ஆதலால் அது தோல்வியடைய இடமே இல்லாததாக இருக்கிறது!''

ஆரியத்திற்கு அச்சத்தை அச்சாரமாகத் தந்த மதுரை மாநாடுகள்!

மதுரையில் கடந்த ஆகஸ்ட் 20, 21 ஆகிய நாள்களில் கூடிய திராவிடர் கழக இளைஞரணியின் மாநில மாநாடும், சமூகநீதி மாநாடும், பேரணியும் இவ்வியக்கம் எவ்வளவு கட்டுப்பாடுடன் கூடிய கொள்கை வீரர்களின் கோட்டமாக, லட்சியவாதிகளின் பாசறையாக திகழ்கிறது என்பதை உலகுக்கே பறைசாற்றியது. பார்ப்பன ஏடுகள்கூட அலட்சியப்படுத்த முடியவில்லை.

கருஞ்சட்டை மாநாட்டின், பந்தலை எரித்து எக்காளமிட்ட ஆரியத்திற்கு அச்சத்தை, அச்சாரமாகத் தந்த மாநாடு அந்த மாநாடு!

சமூகநீதிப் போரில் பெரும் கள வெற்றி!

1993 செம்டம்பர் 8-ம் தேதி மண்டல் குழு அறிக்கையில் கண்ட பரிந்துரையின் செயலாக்கம் நமது சமூக நீதிப் போரில் நாம் பெற்ற ஒரு பெரும் கள வெற்றி. ஒரு போரில் பல கள சண்டைகள் உண்டு. (Many battles in a war) அதில் அடுத்த களம் 'மேல் தட்டினர்' (Creamylayer) எனும் மறைமுக தடுப்புச் சுவர் ஆகும். அத்தடுப்புச் சுவரை இடிப்பதும் தமிழ்நாட்டில் சுமார் 13 ஆண்டுகளாக ஒடுக்கப்பட்ட மக்கள் அனுபவித்துவந்த 69 சதவிகித இட ஒதுக்கீட்டுக்கு உச்சநீதிமன்றத்தின் இடைக்காலத் தடை ஆணையால் ஏற்பட்ட அச்சுறுத்தலை நீக்கி அதனை உறுதிப்படுத்துவதும், மத்திய கல்வி நிலையங்களிலும், மாணவர்கள் சேர்க்கையில் 27 சதவிகித இட ஒதுக்கீடு பிற்படுத்தப்பட்டவர்களுக்கு கிடைக்கும்படிச் செய்வதும், புதிய பொருளாதார கொள்கை காரணமாகத் தனியார் துறை வளர்ந்து வரும் சூழ்நிலையில் தனியார்த் துறைகளிலும் தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு இடஒதுக்கீட்டைக் கொண்டுவரச் செய்வதும் நாம் எதிர் கொள்ளவேண்டிய

அவசர அவசிய பணிகளாகும்.

சதா எதற்கெடுத்தாலும், நீதிமன்றங்கள் இட ஒதுக்கீட்டு ஆணைகளில் தம் மனம் போனவாறு தீர்ப்புக் கூறுவதைத் தவிர்ப்பதற்கு ஒரே வழி, நிலச் சீர்திருத்தச் சட்டங்களை நிறைவேற்றி 9-வது ஷெட்யூலின் கீழ் வைத்து, நீதிமன்றங்களுக்குச் செல்ல முடியாது என்று ஆக்கியிருப்பதுபோல ஆக்கிட மத்திய அரசு சட்டம் இயற்ற வேண்டும். மத்திய அரசு அத்தகைய சட்டத்தை நிறைவேற்றிட மாநில அரசுகள் மக்கள் வற்புறுத்த களங்களை ஏற்படுத்தி சமூகநீதிப் போரில் இறுதி வெற்றியை ஈட்டும் பல்முனை யுத்தங்களை இடையறாது செய்து தீரவேண்டும்.

இதில் தமிழ்நாடும், நமது இயக்கமும் தான் முழு விழிப்புடன் 'கிரியா ஊக்கிகளாக' (Catalytic agents) செயல்பட்டாக வேண்டும்!

புதுக்கோட்டை மாவட்டத்தில் இயக்கப் பிரச்சாரம் கடந்த செப்டம்பர் 4-ம் தேதி தொடங்கி 6-ம் தேதி முடிவடைந்தது. 4-ம் தேதி விராலி மலை, அன்னவாசல், பொன்னமராவதி, 5-ம் தேதி வடகாடு, கீரமங்கலம், அறந்தாங்கி, 6-ம் தேதி கந்தர்வகோட்டை, ஆலங்குடி, கரம்பக்குடி ஆகிய ஊர்களில் எனது பிரச்சாரமும், மாவட்ட முழுவதும் தோழர்களின் கிராமப் பிரச்சாரமும் அடைமழை பெய்தது போல் நடைபெற்றது. எனக்கு இது பெரும் சுமை ஆனதால் ஒரே நாளில் அவ்வளவு தொடர் கூட்டங்கள் என்னால் இயலாது என்றாலும் மற்ற தோழர்கள் கலந்துகொண்டு நான் சிற்சில இடங்களில் ஒரு நாளில் இரண்டு நிகழ்ச்சி (அதுவும் காலை முழு ஓய்வுக்குப் பின்) செய்யும் முறை பிற மாவட்டங்களிலும் பின்பற்றப்படவேண்டும். அய்யா பிறந்த நாள் கூட்டங்கள் நவம்பர் வரை நடத்திவிட்டு டிசம்பர் முதல் மாநிலந்தழுவிய அளவில் தமிழ்நாடு முழுவதும் பல மாதங்கள் முன்கூட்டியே திட்டமிட்டு செயலாற்ற முனையவேண்டும்.

அறிவியல் சாதனங்களை பயன்படுத்திப் பகுத்தறிவுப் பிரச்சாரம்!

இனி நேரிடையாக எல்லா ஊர்களுக்கும் வருவதற்குப் பதில் ஆடியோ, வீடியோ பிரச்சார சாதன முறைகளைப் பெரிதும் அறிவியல் ரீதியாக பயன்படுத்த வேண்டும். சிறுசிறு நாடகங்கள், பாடல்கள், கலை நிகழ்ச்சிகள், மூடநம்பிக்கை ஒழிப்பு நிகழ்ச்சிகள் ஆகிய எல்லாவற்றையும் வீடியோக்களாக்கி பிரச்சாரத்தினை மூட நம்பிக்கை ஒழிப்பு, அறிவியல் மனப்பான்மையைப் பரப்பும் பகுத்தறிவுப் பேரொளி வீச்சாக அமைத்திட தலைமைக் கழகம் தனி முயற்சிகளை இவ்வாண்டு மேற்கொள்ளும்.



இரண்டு ஆண்டுகளில் இதற்கென ஆப்செட் அச்சு இயந்திரம், கம்ப்யூட்டர் எழுத்துக் கோர்த்தல் (DTP) போன்றவைகள் செய்ததுபோல, தனி ஸ்டூடியோவே தக்க மின்னணுவியல், ஒலி-ஒளி நிபுணர்களைக் கொண்டு சுமார் 50 லட்ச ரூபாய் செலவில் அமைப்பதுபற்றிகூட நாம் கலந்துபேசி முடிவு எடுக்கவேண்டும்.

அமெரிக்க பகுத்தறிவாளர்கள் மனித நேய அமைப்பினைச் சேர்ந்தவர்கள் பல ஆண்டுகளுக்கு முன்பே மக்களிடையே நன்கொடை பெற்று இதனைச் செய்துள்ளனர்.

எங்கும் 'விடுதலை', 'உண்மை', 'மாடர்ன் ரேஷனலிஸ்ட்' ஏடுகளைப் பரப்புவதே இவ்வாண்டின் தலையாய வேலைத்திட்டம்.

ஏடுகள் பரப்புதலில் முனைப்பு

மற்ற ஏடுகள் எப்படி பெட்டிக்கடைக ளில், பேருந்து நிலையங்களில் மக்கள் பார்வைக்கு தப்பாமல் கிடைக்கிறதோ, அப்படி கிடைத்திடச் செய்திட, புது உத்தி கள், அணுகு முறைகள் கையாளப்படும்.

'விடுதலை'யே ஒரு முழு செய்தித்தாள் வடிவத்துடன் கழகச் செய்திகளோடு கூடு தல் சில பக்கங்களோடு கொண்டு வரும் திட்டமும் ஒருங்கிணைந்து ஆய்வு செய் யப்படுகிறது!

'உண்மை' ஏடு புதுப்பொலிவோடு பீடு நடைபோடுகிறது. அதற்கு நல்ல வர வேற்பு - படித்தவர்கள், அறிஞர்கள், இளைஞர்கள் மத்தியில் உண்டு. தோழர் இராசேந்திரன் இதற்காகப் பாராட்டப்பட வேண்டியவராவார். அதுபோலவே 'விடு தலை' ஞாயிறு மலர் மேலும் பொலிவு டன், தனித்தன்மையோடு சிறப்பாகக் கொண்டுவரப்படவும் திட்டங்கள் தீட்டப் படுகின்றன!

ஒவ்வொரு கழகத் தோழரும், இளைஞ ரும் இந்தப் பணியில் தங்களை முழுமை யாக அர்ப்பணித்துக்கொண்டு ஒரு 'மூச் சுப் பிடித்தால்' நிச்சயம் மேலேற்றிவிட லாம். தடைகள் தானாக விலகி புது சகாப்தம் கழகப் பிரச்சாரத்தினால் தொடங்கப்பட்டாகவேண்டும்.

நூல் விற்பனை நிலையங்கள்!

கழக வெளியீடுகள் விற்பனை நிலை யம், பெரியார் திடலில் உள்ளதைப் போல் பல ஊர்களில் தற்காலிகமாகவும், நிரந்தரமாகவும் அமைத்திடவும், ஒரு தனி நகரும் விற்பனை நிலையத்தை உரு வாக்கி பற்பல ஊர்களுக்கு அதனை அனுப்பிடவுமான திட்டமும் பரிசீலிக்கப் பட்டுவருகிறது.

படித்து வேலை கிட்டாத இளைஞர்கள் மகளிர் பலரையும் இதில் ஈடுபடுத்திட உள்ளோம். கழக இளைஞர்களுக்கு முன் னுரிமை தரப்படும்.

நமது வெளியீடுகள் மட்டுமின்றி உல கப் பகுத்தறிவாளர்கள் முதல் உள்ளூர் பகுத்தறிவாளர்கள், இன உணர்வாளர் கள், சமூகநீதியாளர்கள், நூல்கள் பலவற் றையும் இதில் இணைத்துக் கடைகளை ஏற்பாடு செய்யவும் திட்டமிட்டுள்ளோம்! 'நல்ல நூலைப் படிப்போர்'! என்ற ஒரு அறிவியக்கத்தினை (Book campaign) நாடு தழுவிய அளவில் துவக்குவோம்!

தந்தை பெரியார் தமிழிசை மன்றம்

தமிழர் திருநாளாம் பொங்கலை யொட்டி இவவாண்டு தலைநகரில் தந்தை பெரியார் தமிழிசை மன்றம் துவக்கப் பட்டு மாதம் ஒரு முறை தமிழின உணர் வோடு இசை நிகழ்ச்சிகள் நடைபெற்று வரு கின்றன. இது தமிழர் பண்பாட்டுக் களத் தில் தேவையான ஒன்று. மாணவர் நகல கம் உரிமையாளர் செயலார்வம் மிக்க தீரர் நா. அருணாசலம், அவரது அருமை மகன் சவுரிராசன், ''பல்கலைக் கொள்கலன்'' கலைமாமணி கவிஞர் முத்துக்கூத்தன், அவரது அருமை மகன் கலைவாணன், தலைமை நிலையச் செயலாளர் கவிஞர் கலி. பூங்குன்றன் ஆகியோரின் முயற்சியும் முனைப்பும் பாராட்டத்தகுந்தது. இந்தத் துறையில் நாம் கவனம் செலுத்தியே தீர வேண்டும். கலை, இலக்கியம் இவற்றின் பெயரால் தமிழர்களின் மூளை ஆரியத் தால் விலங்கிடப்பட்டுள்ளது. அதனைத்

தகர்க்க இம் மன்றம் தந்தை பெரியாரின் கேடயமாக நின்று செயல்புரியும்.

பெரியார் பன்னாட்டு பெரு மய்யம்

உலகின் பற்பல பகுதிகளில் உள்ள பெரியார் சிந்தனையாளர்களை ஒருங்கிணைத்து "Periyar International Foundation" என்ற 'பெரியார் பன்னாட்டுப் பெரு மய்யம்' ஒன்றினைத் தொடங்கிட அமெரிக்காவின் டாக்டர் இளங்கோவன், டாக்டர் தணி. சேரன், டாக்டர் அரசு, டாக்டர் லக்குமணன் தமிழ், லண்டன் நண்பர்கள் சங்கரமூர்த்தி, டாக்டர் செல்வநாயகம், மலேசிய திருச்சுடர் கே.ஆர். ராமசாமி, சிங்கப்பூர் நண்பர் எம்.ஆர். சந்திரன், ஆகியோரிடமும் கலந்துபேசி வருகிறோம். வரும் ஆண்டில் அது உருவாக்கப் படும்.

பெரியார் வாழ்க்கை வரலாறு தயாரிக்கும் பணி தொடர்ந்து நடைபெறுகிறது.

சேகரிப்பு நடைபெற்று வருகிறது; குழுவினர்:

1. பேராசிரியர் ந. இராமநாதன், 2. கவிஞர் கலி. பூங்குன்றன், 3. பேராசிரியர் அ. இறையன், 4. பேராசிரியர் கு.வெ.கி. ஆசான், 5. புலவர் கோ. இமயவரம்பன், 6. பேராசிரியர் நம். சீனிவாசன், 7. 'விடுதலை' இராசேந்திரன், 8. டாக்டர் பு. இராஜதுரை (ஒருங்கிணைப்பாளர்)

பெரியார் ஆவணக் காப்பகம் ஒன்றை புதிதாக அமைக்கவும் முடிவு செய்யப்பட்டுள்ளது. இயக்க சம்பந்தமான ஆய்வுகளை, ஆணைகளை பழைய வரலாறு களஞ்சியங்களாகத் தொகுக்க டாக்டர் இராஜதுரை அவர்கள் சென்னை வந்து தங்கி ஏராளம் சேகரித்துவருகிறார். அப்பணி இவ்வாண்டு முடிவடையக்கூடும்.

குழந்தைகள் பழகு முகாம்!

அறிவுலகமேதை நம் அய்யா பெரியார் அவர்களின் கொள்கைகளை பெரியவர்கள், இளைஞர்கள், வாலிபர்கள் ஏற்றால்



மட்டும் போதாது; அதன் துவக்கம் பிஞ்சுக் குழந்தைகளான மழலையர்களிலிருந்தே துவக்கப்படுவது அவசியம் என்ற ஒரு எண்ணத்தை அடிப்படையாகக் கொண்டு தஞ்சை வல்லத்தில் ஒரு வாரம் நடைபெற்ற பெரியார் குழந்தைகள் பழகு முகாம் - அவர்களிடம் ஏற்படுத்திய தாக்கம் சிறப்பானது.

நிரந்தரமாக 'டிஸ்னி உலகம்'போல், 'பெரியார் குழந்தைகள் உலகம்' என்ற ஒரு புதுமை அறிவியல் நோக்கி 21-ம் நூற்றாண்டில் சென்றிடும் எண்ணத்தை அது விதைத்துவிட்டது. மற்றவைகள் ஓரளவு நிறைவேற்றப்பட்டபிறகு அதனை எடுத்து அதற்கென தனியே ஒரு குழு - அறக்கட்டளை - அறிஞர்களைக் கொண்டு அமைத்து வல்லத்தில் ஏற்படுத்தும் யோசனை உள்ளது.

மூட நம்பிக்கை, சினிமா மாயையிலிருந்து இளைஞர்கள் பாதுகாக்கப்பட இப்படிப்பட்ட அறிவியல் திட்டங்கள்

பொதுவாகவே நாடு தழுவிய நிலையில் ஏற்பட்டால் நல்லது! பணம் படைத்தவர்களிடம் மனம் இல்லை. மனம் படைத்தவர்களிடம் பணம் இல்லை. என்றாலும் நாம் நமது பணியைத் தொடங்கினால் நல்ல பணிகளுக்கு நாடே உதவும் என்ற நம்பிக்கை நமக்கு என்றும் உண்டு.



நமது கல்வி நிறுவனங்கள்!

நமது அறக்கட்டளைகளால் துவக்கப்பட்டு நடைபெற்றுவரும் கல்வி, மருத்துவ உதவி, நிறுவனங்கள் வரும் ஆண்டுகளைவிட மேலும் சிறப்புடன் பீடுநடை போடும் வகையில் அவற்றின் வளர்ச்சி மகிழத்தக்கதாக அமைந்துள்ளன. எடுத்துக்காட்டாக,

தந்தை பெரியார் நூற்றாண்டினை ஒட்டி 1980-ம் ஆண்டு அரசு உதவி பெறும் நிறுவனமாக தஞ்சை வல்லத்தில் துவக்கப்பட்ட பெரியார் நூற்றாண்டு மகளிர் பாலிடெக்னிக் கடந்த ஆண்டு முதல்

'பகுதி தன்னாட்சித் தகுதி'யுடைய (Partially Autonamous Status Polytechnic) தாக அரசின் தொழில் நுட்பக் கல்வித் துறையால் அங்கீகரிக்கப்பட்டது.

கோவை அறிஞர் ஜி.டி. நாயுடு அவர்கள் நடைமுறை அனுபவ தொழிற் பயிற்சி, கல்வி அளித்ததைப்போல் எஸ்.எஸ்.எல்.சி., பிளஸ் டூ முடித்து டிப்ளோமா பட்டங்கள் படித்துள்ளவர்கள் குறுகிய காலத்திலும் இரண்டு ஆண்டு நீண்டகால அளவிலும் பயிற்சி சான்றிதழ்கள் பெற்று அவர்கள் பல பணிகளுக்குத் தயாராகும் நிலைக்கு ஆளாக்கும் வண்ணம் இவ்வாண்டு தஞ்சை வல்லத்தில் (Periyar Community College of Continuing Education) பெரியார் சமூக தொடர் கல்வி கல்லூரி ஒன்று செப்டம்பர் 23-ம் தேதி புதுச்சேரி பல்கலைக் கழகத் துணைவேந்தர் டாக்டர் ஏ. ஞானம் அவர்களால் தொடங்கப்பெற உள்ளது.

அமெரிக்காவின் பிரபல தொழில் நிறுவனமான Ganton Technology நம்மோடு இணைந்து தரக் கட்டுப்பாடு பயிற்சி Quality Control Diploma படிப்பு தர முன்வந்துள்ளது.

இந்தியாவில் பாலிடெக்னிக் அளவில் நடைபெறுவது இது முதலாவதாக இருக்கக்கூடும்.

இந்தக் கல்வி ஆண்டு முதல், தஞ்சையைச் சுற்றியுள்ள 20 கிராமங்களிலாவது 6 மாத தொழில்நுட்பப் படிப்பை அங்கே நிலையங்கள் அமைத்து நமது ஆசிரியர்களால் சொல்லிக்கொடுக்கப்படும் திட்டத்திற்கு (Community Polytechnic Scheme) நமது நிறுவனம் மத்திய அரசுக்கு தமிழகக் கல்வித் துறை இயக்குனரால் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

ஆண்டுதோறும் நூற்றுக்கணக்கில் கிராம இருபால் இளைஞர்கள் பயன்பெறுவது இது. கிராம மக்களுக்கு தொழில் நுட்பக் கல்வி அறிவு அவர்கள் இருக்குமிடம் தேடிச் சென்று தரும் நிலை!

உலகின் முதல் பெண்கள் பொறியியல் கல்லூரி வல்லத்தில் உள்ளதல்லவா? அந்த கல்லூரியான பெரியார் - மணியம்மை பொறியியல் கல்லூரியும், புதிய கட்டடங்கள், ஆய்வுக் கூடங்களுடன் பெரியார் ஆய்வுக்கூடப் பிரிவு (Periyar Research and Developement wing) என்ற ஒரு பிரிவினைத் துவக்கி "Periyar" என்ற கம்ப்யூட்டருக்கு ஒட்டி, தனியே தயாரிக்கும் அளவுக்கு அறிவியல் வளர்ச்சி அடைந்துள்ளது. ஆசிரியர்களும், பயிலும் மாணவிகளும் ஒருங்கிணைந்து இதனை நடத்திடுவது மிகவும் எழுச்சியானது. இதனைத்தான் அண்ணா பல்கலைக் கழகத்



காவிரி நீர் பிரச்சினைக்காக முதலமைச்சர் உண்ணாவிரதம் -
கழகப் பொதுச்செயலாளர் சந்தித்து உரையாடல் (19.7.93)

துணைவேந்தர் பெருமைக்குரிய டாக்டர் எம். அனந்தகிருஷ்ணன் பாராட்டினார்கள். தனி விடுதியும் அங்கே சிறப்பாக கட்டி முடிக்கப்பட்டு இதுவரை பல நூற்றுக்க ணக்கில் மாணவிகள் அங்கே அந்த வசதி யால் பயன்பெறுகின்றனர்.

பெரியார் பெண்கள் அய்.டி.அய்., அச்ச கப் பணிகள், பைண்டிங் பிரிவுகள், கிரா மப் பெண்களுக்கு தனிப்பயிற்சி நிலை யம், பெரியார் தட்டெழுத்துப் பயிற்சி நிலையம் எல்லாம் சிறப்புடன் நடை பெற்றுவருகின்றன. அங்கும் ஒரு மருத்து வமனை அண்டை கிராமங்களுக்கு விடு முறை நாட்களில் 'வேனில்' டாக்டர் மருந்துகளுடன் சென்று கடந்த பல மாதங் களாக தொண்டு செய்து திரும்புகின்றனர். கிராம மக்கள் பாராட்டி வரவேற்கின்ற னர். தமிழ்ப் பல்கலைக் கழகத் துணை வேந்தரின் துணைவியார் ஓய்வுபெற்ற மருத்துவக் கல்லூரி 'டீன்' டக்டர் தாரா நடராசன் - இயக்குனராக வாரம் இரு முறை அங்கே வருகிறார்கள்.

திருச்சியில் பெரியார் பெண்கள் மருந்தி யல் கல்லூரி 82-ம் ஆண்டு தொடங்கப் பெற்றது. டிப்ளமோ இன் - பார்மசி, லேப் டெக்னீசியன் படிப்பு, பி. பார்ம் பட்டபடிப்புடன் இவ்வாண்டுமுதல் மேற்பட்டப்படிப்பு M. Pharm (Post graduate) வகுப்புகளும், டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக் கழகம் அனுமதி அளித்து ஊக்கப்படுத்தியதன் விளைவாக துவங்கி நடைபெறுகிறது.

அதற்கென தனி விடுதி கட்டடம் கட்டு மானப் பணிகள் (சுமார் 60 லட்சம் செல வில்) இந்த பெரியார் ஆண்டில் துவக்கப்ப டும்.

பெரியார் - மணியம்மை மேல்நிலைப் பள்ளிக் கட்டடங்கள், பெரியார் மெட்ரிக் குலேஷன் பள்ளிக் கட்டடங்கள் - நாகம்மை ஆசிரியைப் பயற்சி நிறுவனத் திற்கான கட்டடங்களின் விரிவாக்கப் பணி களும் தொடர்ந்து திருச்சி பெரியார் நூற் றாண்டு மகளிர் வளாகத்தில் தொடர்கின் றன. அங்கே பெரியார் கம்ப்யூட்டர் அமைக்கப்பட்டு, அத்துணை நிறுவன மாணவிகள், ஆசிரியைகள், ஆசிரியர்கள். அவர்கள் வாய்ப்புக்கேற்ப கம்ப்யூட்டர் கல்வி பெறுகின்றனர். வேறு எந்த நிறுவ னத்திலும் இப்படி ஒரு புதுமைச் சாதனை எளதில் நடைபெறவில்லை என்று கண் டோர் பாராட்டி மகிழ்கின்றனர். 1-வது வகுப்பு மாணவர் கூட கம்ப்யூட்டர் படித்து விளக்குகிறார்! என்னே விந்தை!

அவ்வளாகத்தில் பல கல்வி நிலையங்க ளில் பயிலும் சுமார் 3,500 மாணவிகளும் சுமார் இருநூற்றுக்கு மேற்பட்ட, ஆசிரியை களும் ஆசிரியர்களும் கம்ப்யூட்டர் அறிவை ஆதார அறிவாக (Basic Knowledge) பெற இதன்மூலம் வசதி செய்யப்பட் டுள்ளது.

பாட நேரம் போக, எஞ்சிய நேரத்தில் அவரவர், மாறிமாறி வகுப்புக்கு வந்து இரவு 8 மணிவரை படிக்க வசதி செய்யப் பட்டுள்ளது!

திருச்சி பெரியார் மாளிகையில் உள்ள பெரியார் ஆசிரியர் பயிற்சி நிறுவனத்திற் கென தனிக் கட்டடங்கள் எழும்ப இருக்கின் றன!

துணை நிற்கும் தூண்கள்!

தஞ்சை, திருச்சி நிறுவன வளர்ச்சிக்கு பொருளாளர் கா.மா. குப்புசாமி, துணைப் பொதுச்செயலாளர் கோ. சாமி துரை, புலவர் கோ. இமயவரம்பன், ஞான. செபஸ்தியன் ஆகியோர் உழைப்பு மிகவும் பாராட்டத்தக்கது.

அந்த நிறுவனங்களுக்கு நமக்குத் தோன் றாத் துணையாக உள்ள வீகேயென் தொழிற்சாலை உரிமையாளரான கல்வி வள்ளல் கண்ணப்பன் அவர்களின் பேராத ரவு ஆகும். வார்த்தைகளால் அதற்கு வெறும் 'நன்றி' என்பது மிகச் சாதாரணம் ஆகும். அவர் நம் நிறுவனத்தின் நிரந்தரப் புரவலர் ஆவார்!

பெரியார் பல்கலைக்கழகம்

பெரியார் கல்வி நிலையங்கள் இணைக்கப் பட்டு பெரியார் பெயரால் ஒரு பல்கலைக் கழகம் அதுவும் தொழில் நுட்பப் பல்கலைக் கழகத் தகுதியுடைய பல்கலைக் கழகம் உரு

வாக்கிட வேண்டும் என்ற வேண்டுகோளை நாம் மத்திய, மாநில அரசுகளுக்கும் அனைத்துக் கட்சித் தலைவர்களுக்கும் உரித்தாக்குகிறோம்.

தமிழகத் தலைவர்கள் பெயரில் பல்கலைக் கழகங்கள் உள்ளன தமிழ்நாட்டில். ஆனால், அத்தலைவர்களை உருவாக்கிய தலைவர் பெரியார் பெயரில் பல்கலைக் கழகம் இதுவரை அமையாதது மிகவும் வேதனைக்குரியது! அதற்கான முழு முயற்சியையும் இவ்வாண்டு நாம் அயராது எடுப்பதாக உள்ளோம்!

சென்னையில்...

பெரியார் திடலில் உள்ள பல்வேறு பணிகள் செம்மையாக நடைபெறும் பெரும் பொறுப்பினை முதுபெரும் பெரியார் பெருந் தொண்டர் சி. ஆளவந்தார் அவர்கள் 'விடுதலை' மேலாளராக இருந்து (வயது 80 என்றாலும்) இளைஞர் போல் உழைக்கிறார். கழகப் பெரும்பணியை சுமப்பதில் தலைமை நிலையச் செயலாளர்கள் கவிஞர் கலி. பூங்குன்றன், ஆனூர் ஜெகதீசன், சட்டத்துறை செயலாளர் வழக்கறிஞர் துரைசாமி, பிரச்சார செயலாளர் துரை. சக்ரவர்த்தி, 'விடுதலை' துணை நிர்வாகி சீதாராமன், உடல் நலம் பாதிக்கப்பட்ட நிலையிலும்கூட ஆர்வம் குறையாத நண்பர் குருசாமி,

மானமிகு பேராசிரியர்கள் ந. இராமநாதன், ஞான. அய்யாசாமி, இறையன், கான் ஆகியோர் நமது மிகுந்த நன்றிக்கு உரியவர்கள் ஆவார்கள்.

சென்னை பெரியார் திடலில் இயங்கும் பெரியார் அய்.ஏ.எஸ்., அய்.பி.எஸ். பயிற்சி நிலையத்தில் தேர்வு எழுதிய மாணவர்களில் இவ்வாண்டு 32 மாணவர்கள் துவக்கத் தேர்வில் வெற்றிபெற்று அடுத்த தேர்வுக்கு ஆயத்தமாகின்றனர்.

3000 மனுக்கள் குவிந்தன. கடும் போட்டிக்கிடையே சுமார் 200 மாணவ - மாணவிகள் இவ்வாண்டு சேர்ந்து படிக்கின்றனர்!

சுமார் 35 லட்ச ரூபாய் செலவில் 4 மாடிக் கட்டடம் பெரியார் திடலில் உருவாகின்றது. அநேகமாக 94-ல் முடிவடைந்துவிடும். இரண்டு அடுக்கில் திராவி



மருத்துவப் பணிகள்

பெரியார் சுயமரியாதைப் பிரச்சார நிறுவனத்தின் சார்பில் சென்னை பெரியார் திடலில் இயங்கி வரும் மருத்துவமனையின் மருத்துவ பணிகள்

பெரியார்- மணியம்மை இலவச மருத்துவமனை மூலம் பய ன் பெற்றோரின் எண்ணிக்கை.

1992 - 93 **ஆகஸ்டு வரை** *47, 453* **நபர்கள்**

பெரியார் நகர குடும்ப நல மய்யத்தின் மூலமாக [illegible]ன் பெற்றோரின் விவரம்

***

1992–93

1.	கருத்தடை அறுவை சிகிச்சை	-	187	நபர்கள்
2.	கருத்தடை சாதனம் (CU-T)	-	247	நபர்கள்
3.	கருத்தடை ஆணுறைகள்	-	8880	உறைகள்
4.	கருத்தடை மாத்திரைகள்	-	1012	பாக்கெட்டுகள்
5.	காசநோய் தடுப்பு ஊசி (பி.சி.ஜி)	-	262	குழந்தைகள்
6.	முத்தடுப்பு ஊசி (டி.பி.டி)	-	262	"
7.	இரு தடுப்பு ஊசி (டி.டி)	-	340	"
8.	போலியோ சொட்டு மருந்து	-	262	"
9.	தட்டம்மை தடுப்பு ஊசி	-	257	"
10.	இரண ஜன்னி தடுப்பு ஊசி	-	907	நபர்கள்
11.	வைட்டமின் ஏ திரவ மருந்து	-	515	குழந்தைகள்
12.	இரும்பு சத்து மாத்திரைகள் (சிறியவர்கள்)	-	84	"
13.	இரும்பு சத்து மாத்திரைகள் (பெரியவர்கள்)	-	275	நபர்கள்

பெரியார் நகர குடும்ப நல மய்யத்துடன் *24-12-91* முதல் இணைந்து இலவசமாக செயல்படும் மகப்பேறு மற்றும் கருத்தடை அறுவை சிகிச்சைப் பிரிவும் இயங்கி வருகிறது. இப்பிரிவில் *2-9-92* முதல் *31-8-93* வரை *277* குழந்தைகள் பிறந்துள்ளன.

24-12-92 முதல் பெரியார் நகர குடும்ப நல மய்யத்தில் குடும்பநல அறுவை சிகிச்சைப் பகுதி துவக்கிவைக்கப்பட்டது. அன்று முதல் *31-8-93* வரை இப்பிரிவில் குடும்ப நல அறுவை சிகிச்சை செய்து கொண்ட மகளிரின் எண்ணிக்கை *80.*

27-2-93 முதல் பெரியார் நோய் பரிசோதனை மய்யம் இயங்கி வருகிறது. இம்மய்யத்தில் *31-8-93* வரை பரிசோதனை செய்து கொண்டவர்களின் எண்ணிக்கை *325.*

டன் நல நிதியும், மற்ற இரண்டு அடுக்கில் பெரியார் அய்.ஏ.எஸ். பயிற்சி அகாடமி (Periyar Acadamy) இடம்பெற்று முழு நேரப் பயிற்சி வகுப்புகள் '95 முதல் நடைபெற வாய்ப்பாகும்.

பெரியார் திடலில் 20 படுக்கைகள் கொண்ட மருத்துவமனை உள்ளது. 24 மணி நேரமும் இங்கு இலவச மருத்துவ வசதி உண்டு. சிறப்பான அறுவை சிகிச்சை நிலையமும் இயங்குகிறது.

பெரியார் நோய் பரிசோதனை நிலையம் (Periyar Diagnostic Centre) பெரியார் திடலில் இயங்குகிறது. குறைந்த கட்டண வசதி; நோய் பரிசோதனைத் துறையில் இது ஒரு அருட்கொடை.

எய்ட்ஸ் நோய் தடுப்புக்கான பெரியார் நிலையம் துவக்கப்பட்டுள்ளது.

பிரபல டாக்டர்கள் மதனகோபால், டாக்டர் தர்மலிங்கம், டாக்டர் லட்சுமி ஆகியோர் தங்கள் தொண்டினை இம்ம ருத்துவமனைக்கு மனமுவந்து தருகின்ற னர்.

பெரியார் இலவச சட்ட உதவி மய்யப் பொறுப்பினை ஏற்றுள்ள நண்பர் வழக்க றிஞர் தில்லை வில்லாளன் அவர்கள் பல திட்டங்களை வைத்துள்ளார். அவற்றிற் கும் செயல்வடிவம் கொடுக்கப்படும்.

திராவிடன் நல நிதி

''திராவிடன் நல நிதி'' என்று நம்மவர் களால் துவக்கப்பட்டு நடைபெற்றுவரும் நிதி நிறுவனத்தின் வளர்ச்சி சுமார் இரண் டரை கோடி ரூபாயைத் தாண்டிவிட்டது!

கழகக் குடும்பங்களிடையே சேமிப்பு பழக்கத்தினையும் தகுதியானவர்களுக்கு உதவுவதற்கும் அய்யாவின் சமூக நீதிக் கொள்கைக்கு அடிப்படையாய் துவக்கப் பட்ட இந்த நிறுவனம் ஜஸ்டிஸ் திரு. பி. வேணுகோபால் அவர்கள் தலைமையில், ஓய்வு பெற்ற வருமான வரித் துறை மேல் முறையீட்டுமன்ற நடுவர் ராஜரத்தினம் போன்ற அறிஞர்கள், திரு. சுரேந்தர் போன்ற ஆடிட்டர்கள் உதவியோடு கழ கப் பொறுப்பாளர்கள் அரிய ஒத்துழைப்பு டனும் சிறப்பாக வளர்ந்தோங்கி வருகி றது.

விரைவில் தஞ்சையில் ஒரு கிளை துவக் கப்படக்கூடிய வாய்ப்பு ஏற்படும் என்பது உறுதி.

"நடிகவேள்'' ராதா மன்றம்

நடிகவேள் ராதா மன்றத்தை புதுப்பித்து திருமணங்கள், மாநாடுகள், (சமையற் கூடங்களையும் உள்ளடக்கி) நடைபெற உதவிடும் வகையில் புதுப்பொலிவுடன் கூடிய கட்டடம் கட்டும் முயற்சி அடுத்த ஆண்டு துவங்கும். அய்யா நினைவிடம் இறுதியில் முற்றிலும் புதிதாக மாற்றிய மைக்கப்படும்.

ஒரு கட்டட நிபுணரின் வரைகலைப் படம் போடப்பட்டாகிவிட்டது!

தஞ்சை மாவட்ட திராவிடர் கழகத் தலைவர் மானமிகு ஆர்.பி. சாரங்கனின் அரிய முயற்சியால் மன்னையில் ஊருக்கு வெளியே இருந்த இடம் விற்கப்பட்டு, ஊருக்கு நடுவே கடைவீதியில் ஒரு அரு மையான கடைகளுடன் கூடிய கட்டடம் வாங்கி புதுப்பிக்கப்பட்டுவருகிறது. அக் டோபரில் திறப்பு விழா நடைபெறும்.

அதுபோலவே கீழத் தஞ்சை மாவட்டம் என்று முன்பு அழைக்கப்பட்ட நாகை காயிதே மில்லத் மாவட்டத்திற்காக, திரு வாரூரில் உள்ள கழக இடத்தில், அதன் தலைவர் மானமிகு எஸ்.எஸ். மணியம் அவர்களது அரிய முயற்சி காரணமாக நகரின் நடுவில் அருமையான கழகக் கட் டடம் எழும்பிக்கொண்டுள்ளது. கழகத் தோழர்கள், விவசாயிகளிடையே நன் கொடை திரட்டும் பணி நடைபெறுகிறது. மகளிரணி பணி மானமிகு ராசலட்சுமி மணியம் அவர்களாலும் சிறப்பாக நடை பெறுகிறது.

கழகப் பொறுப்பாளர்கள் அனைவரும் மிகுந்த ஆர்வத்துடன் பணியாற்றுகின்ற னர்.

வேல்-சோமசுந்தரம் வழிகாட்டுகிறார்!

அதுபோலவே குடந்தையிலும் நமது

இடத்தில் புதிய கட்டடம் எழுப்ப நகராட்சி அனுமதிக்காக காத்திருக்கும் நிலை ஏற்பட்டுள்ளது!

நமது முதுபெரும் பெரியார் பெருந்தொண்டர் திருவத்திபுரம் வேல் - சோமசுந்தரம் அவர்கள் தமது உயிலில் தம் வாரிசுகளுக்குத் தனது சொத்துகளை பங்கிட்டு எழுதியிருப்பதில், பெரியார் சுயமரியாதைப் பிரச்சார நிறுவனமான பெரியார் அறக்கட்டளைக்கு ஒரு குறிப்பிட்ட சதவிகித பங்கினை அளித்து எழுதியிருப்பது நாம் மிகவும் பாராட்டி மகிழத்தக்க அரிய செயலாகும். அவருக்கும் அவர்தம் துணைவியார், குழந்தைகள் அனைவருக்கும் இயக்கச் சார்பில் நமது நெஞ்சம் நிறைந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

மேல்நாடுகளில் இம்முறை சர்வ சாதாரணம் என்றபோதிலும்கூட நம் நாட்டில் இது அரிது; புதுமையும்கூட! தன் பெண்டு, தன் பிள்ளை, தன் வீடு என்ற கடுகு உள்ளத்திலிருந்து விடுபட்டு தொல்லுலக மக்களுக்குத் தொண்டு செய்வோருக்கு துணையாகும் தாயுள்ளத்தை நம்மில் பலர் இம்மாதிரி செய்வதன்மூலமே பெறமுடியும். அதன்மூலம்தான் நாம் செத்தபிறகும்கூட (எப்போதும்) நிரந்தரமாக வாழமுடியும்!

என்னைப்பற்றி...

எம் கடன் பெரியார் பணி முடிப்பதே என்ற நிலையில் பணி! பணி! என்றும் பணி என்று உழைக்க உறுதி பூண்டுள்ளவன் என்ற முறையில் என்னைப்பற்றி ஒரு சில சொல்வதும் இப்போது அவசியமாகிறது!

எனக்கு, வரும் டிசம்பர் 2-ல் 60 முடிந்து 61 வயது தொடங்குகிறது என்பது உண்மைதான்.

பெரியாரின் தொண்டர்களுக்குத் தொண்டன் என்ற மகிழ்ச்சியோடு என்றும் எந்நிலையிலும் உழைத்திடும் நான் எப்போதும் எனது பிறந்த நாள் விழாக்களில் திளைக்காது, அய்யாவின் பிறந்த நாளில் அனைத்தும் அடக்கம் என்று அடக்கத்துடன் நினைப்பவன் என்பதால், 'சிறுதுளி பெருவெள்ளம்' என்று நாம் திட்டமிட்டுள்ள வல்லம் பெண்கள் பொறியியல் கல்லூரி நிதியான ஒரு கோடி ரூபாய் இலக்கை எட்ட எல்லோரும் கூட்டு முயற்சியில் ஈடுபடுவோம்!

60-வது ஆண்டில் "விடுதலை"

தமிழர்தம் போர்வாளாய், கேடயமாய் உரிமைக் குரலாய் கடந்த 59 ஆண்டுகளாகத் திகழ்ந்து, அமைதிப் புரட்சியை தமிழ்நாட்டில் அடக்கமாக செய்துவரும் லட்சிய ஏடான பகுத்தறிவு நாளிதழ் 'விடுதலை'யின் வைர விழா 60 ஆண்டு நிறைவு விழா இவ்வாண்டு என்பதால் அதனைச் சிறப்பாகக் கொண்டாடுவது, ஒரு நாள் விழா நடத்தி அல்ல.

அவ்வேடு இல்லாத வீடு, தெரு, ஊர் தமிழ்நாட்டில் இல்லை என்ற நிலையை

தமிழும் பார்ப்பனரும்

பார்ப்பனர்கள் தமிழ் மொழியை தங்களது வாழ்க்கை வழிக்காகவும், வசதிக்காகவும் பேசுகிறார்களே ஒழிய அம்மொழியில் உள்ள அன்புக்காகவோ, ஆர்வத்திற்காகவோ பேசுகிறவர்கள் அல்ல. உதாரணம் என்னவென்றால், இந்தப் பார்ப்பனர்கள் தங்களுடைய வைதீகக் காரியங்களிலும், தேவாதிபூஜை பிரார்த்தனைகளிலும் தமிழை விலக்கி வைத்திருக்கிறார்கள்.

— தந்தை பெரியார்,
'குடிஅரசு' 4.6.1939.

உருவாக்கும் வகையில் அனைத்து தமிழ் இன உணர்வாளர்களை ஒருங்கிணைத்து செயல்திட்டம் தீட்டப்படவேண்டும்.

'விடுதலை' வீழ்ந்தால் யாரே வாழ்வர்?'

'விடுதலை' வாழ்ந்தால் யாரே வீழ்வர்?'

எனது 60-வது வயதைவிட, 'விடுதலை' யின் 60-வது வயதுதான் நமக்கு மிகவும் முக்கியம். அதனை உணர்ந்து தோழர்கள் 'விடுதலை' வளர்ச்சிக்கு ஒல்லும் வகையில் முயலுவார்களாக!

நம் அய்யா அவர்கள் எனக்கு ஏற்படுத்திய வாழ்க்கைத் துணை நலம் உள்ளபடி என் தொண்டுக்கு துணையாக இருப்பதால் எனது குறைந்த தேவைகள் எப்போதும் நிறைந்தவைகளாகவே இருக்கும்படி அவர்கள் பார்த்துக்கொள்கின்றார்கள்.

எனக்கு அமைந்த குடும்பத்தினர் அய்யா கொள்கைகளிலிருந்து அணுவளவும் மாறாது பின்பற்றுகிறார்கள் என்பதே எனக்குப் பெருமை! அவர்களுடைய செல்வம் மற்றும் கல்வித் தகுதிகள் எனக்கு முக்கியமல்ல. கொள்கைத் தகுதியை வைத்துத்தான் நாம் எவரையும் மதிப்பிடுகிறோம்! எனவே, கடும் நோயிலிருந்து நாம் மீண்டால் போதுமா? நமது மக்களும் சமுதாயமும் மீளவேண்டாமா என்ற எண்ணத்துடன் என்றும் உழைக்க உறுதி பூண்ட எனக்கு இறுதி மூச்சு அடங்கும் வரை குறியெல்லாம் பெரியார் பணி முடிப்பது என்பதே!

பாசத்தைக் கொட்டும் கொள்கைக் குடும்பத்தினர்களே, அய்யா பணி முடிக்க ஆயத்தமாவோம்!

கழகத் தோழர்களுக்கு அன்பு வேண்டுகோள்!

நமது கழகத் தோழர்களுக்கு ஒரு அன்பான வேண்டுகோள்.

ஒழுக்கம், கட்டுப்பாடு, நேர்மை, நாணயம், உழைப்பு என்பதில் நாம் ஒவ்வொருவரும் மிகச் சிறந்து விளங்கவேண்டும்.

பெரியார் தொண்டர்களின் தனிச் சிறப்பு இதில்தான் அடங்கியுள்ளது.

அய்யாவின் பெருமை பெரிதும் அவர்களது மனிதநேயம், பண்பாடு, ஒழுக்கம், நேர்மை, கட்டுப்பாடு இவற்றில் முகிழ்த்துக் கிளம்பியது.

கடினமான கொள்கைகளைச் சொல்லும் நாம் சிறப்பான தனி வாழ்க்கை வாழவேண்டும். நாத்திகன் என்றும் ஒழுக்கவாதி என்று நிலைநாட்டவேண்டும்.

தீய பழக்க வழக்கங்கள் நம்மை தீண்டவிடாமல் இருக்க அய்யா தொண்டன் என்ற அரண் உள்ளதே பிறகு ஏன் தயக்கம்?

சொல்வதை செய்வதும் செய்வதை மட்டும் சொல்வதுமே சுயமரியாதை வாழ்வு! எனவேதான் சுயமரியாதை வாழ்வு சுக வாழ்வு! புரிந்து கொள்வீர்!

போர்வீரர்களுக்கு ஓய்வு ஒரு இடைவெளி நேரம்தான். நிரந்தரம் அல்ல. எனவே, களம் பல என்றாலும் கடமையாற்ற நாம் பலர் என்ற துணிவுடன் இலட்சியபுரி நோக்கி வீறுநடை போடுவோமாக!

சென்னை
17-9-1993

பொதுச்செயலாளர்
திராவிடர் கழகம்

அடிச்சுவட்டில் ...!

- கவிஞர் கண்ணிமை -

தூங்கிவிட்ட தமிழினத்தை
தட்டியெழு கீழ்நோக்கி
வளர்த்த தாடி !

தீங்கினிலே சிக்காமல்
திக்கெட்டும் ஓங்கிடவே
கிளர்ந்த நாடி !

தள்ளாடும் அகவையிலே
தளராது நடக்கவைத்த
ஊன்று கோலே !

பள்ளமுள்ள சமுதாயப்
பாதையிலே வீழாமல்
தோன்று நூலே !

எத்தனையோ சாதி மதம்
இழிசடங்கை மிதித்திடவே
நடந்த கால்கள்

சொத்தைகளாம் பார்ப்பனரின்
சூதுகளை மாய்த்திடவே
அடைந்த வேல்கள் !

தொண்டினிலே துவளாமல்
திகழ்ந்திட்ட மேனியினில்
பெற்ற புண்கள்

பண்புபுகழ் காத்துதமிழ்
மாண்படைய ஒளிகொடுத்து
நின்ற கண்கள் !

பொன்மேனி சுருக்கங்கள்
பொய்யாமல் உழைத்ததனால்
வந்தக் கோடே!

இன் றமிழா! அய்யாவின்
அடிச்சுவட்டில் செல,
புகழும் இந்த நாடே!

இராவணன் ரியல் எஸ்டேட்ஸ்

அரசு MMDA ஒப்புதல் பெற்ற அடுக்கு மாடி வீடுகள்
சென்னை - 600 091 - மடிப்பாக்கத்தில்
ஒரு படுக்கை அறை மற்றும்
இரு படுக்கை அறை வீடுகள் - விற்பனை



இப்பொழுது விற்பனைக்குள்ள
அரசு D.T.P. / MMDA ஒப்புதல் பெற்ற வீட்டுமனைகள்

1. விடுதலை நகர் - மடிப்பாக்கம் - சென்னை-91
2. தொல்காப்பியர் அவென்யு - மடிப்பாக்கம் - சென்னை-91
3. மணியம்மை நகர் - கூடுவாஞ்சேரி
4. ஜீவானந்தம் நகர் - மறைமலை நகர் நகரியம்
5. இந்திரசித் நகர் - திருப்பெரும்புதூர்
6. சூரியன் நகர் - ஒரகடம்

தொடர்பு கொள்க:

இராவணன் ரியல் எஸ்டேட்ஸ் (முதல் மாடி)
30, தெற்கு உஸ்மான் சாலை, ஒட்டல் அருணா எதிரில்
தியாகராயர் நகர் - சென்னை - 600 017
தொலைபேசி: 445499

நாத்திகமும் ஆத்திகமும்

தவத்திரு குன்றக்குடி அடிகளார்

இன்று உலகம் முழுவதும் ஆத்திகமும் பரவி வளர்கிறது; வளர்ந்துவரும் ஆத்திகத்திற்கு ஈடு கொடுக்கும் வகையில் நாத்திகமும் வளர்ந்துவருகிறது. ஆத்திகம் - நாத்திகம் இவற்றிற்கிடையே என்ன வேறுபாடு? என்ன பயன்? என்றெல்லாம் ஆராய்வது இன்றைய தலைமுறைக்கு வழிகாட்ட உதவும்.

ஆத்திகம் - நாத்திகம் ஆகிய இரண்டு கொள்கைகளுக்கும் கடவுளுக்கும் எந்தவிதத் தொடர்பும் இல்லை. ஆத்திகர் என்றால் ''கடவுள் நம்பிக்கை உடையவர்'' என்று பொருள் கொள்ளக்கூடாது. அப்படிப் பொருள் கொள்



தந்தை பெரியார் நினைவிடத்தில் குன்றக்குடி அடிகளார் மரியாதை (24-12-92)

ளக்கூடிய ஒரு பொய்ம்மையை ஆத்திகர்கள் என்று தம்மை இனங்காட்டிக்கொள்பவர்கள் தோற்றுவித்துவிட்டனர். உண்மை அது வல்ல. ஆத்திகம் என்பது கடவுள் நம்பிக்கை யுடைய கொள்கையாக இருந்தால் கடவுள் நம்பிக்கையுடைய இசுலாமிய சமயத்தை எதிர்ப்பது ஏன்? மசூதியை இடிப்பது ஏன்? கிறித்தவ சமயத்தை எதிர்ப்பது ஏன்? கிறித்த வர்களை வெறுப்பது ஏன்? கிறித்தவ சர்ச்சு களை இடிப்பது ஏன்? கடவுள் ஒருவர்தானே! அவர்தானே எல்லாருக்கும் கடவுள்! ''ஒன்று பரம்பொருள்'' என்ற கொள்கை பொய்யா? கடவுளர் பலரா? தேவர்கள் எல்லாரும் கடவு ளரா? 'பூசுரர்' என்ற பூதேவர்களும் கடவுள் களா? இல்லை, இல்லை! இன்று ஆத்திகர் கள் என்பவர்களுக்குக் கடவுளிடத்தில் நம் பிக்கை இருக்கிறதா என்பது ஆய்வுக்குரிய செய்தி. ஆனால், ஒன்று உண்மை. சாத்திரங் கள் சடங்குகளில் நம்பிக்கை இருக்கிறது. சாத் திரங்கள் கற்பித்த வருணாசிரமத்தில் நம் பிக்கை இருக்கிறது; வினைகளில் நம்பிக்கை இருக்கிறது. பணக்காரர் - ஏழை ஏற்பாடு, கடவுள் ஏற்பாடு, பூர்வ ஜன்ம புண்ணிய பலா பலன் என்ற கொள்கையில் நம்பிக்கை இருக் கிறது. இவைகளைக் காப்பாற்றி மனித வர்க் கத்தில் தீண்டாமையையும் சாதிகளையும் நிலையாகக் காப்பாற்றிச் சுரண்டுகிற சமுதா யத்திற்குப் பாதுகாவலாக அமைந்து தம்மை உயர் சாதியினராக, புரோகித சாதியினராக உயர்த்திக்கொள்வதில் ஆத்திகர்களுக்கு அக் கறை.

நாத்திகன் யார்?

நாத்திகர்கள் இதற்கு நேர் எதிரிடையான வர்கள்! தலைவர் பெரியார் ''நான் கடவுளை நம்பவில்லை! ஏன்? நான் அதைக் கண்ட தில்லை! ஆனால், கடவுள் பெயரால் மனித குலத்திற்கு இழைக்கப்படும் அநியாயங்க ளைக் காண்கிறேன். இன்று ஏமாற்றுக்காரர்க ளுக்குக் 'கடவுள்' ஒரு சாதனம்; கருவி! எனவே, நான் கடவுளைப்பற்றி கவலைப்பட வில்லை! எனக்குக் கவலையெல்லாம் மனித னைப்பற்றித்தான்! குறிப்பாகத் தமிழனைப் பற்றித்தான்!'' என்றார். ஆரிய வேத மத சாத்தி ரங்களை ஆராய்பவர்களை நாத்திகர்கள் என்று பட்டம் கட்டித் துன்புறுத்தினார்கள் என்பதை இரணியன் வரலாறு காட்டுகிறது. மத புராணங்களில் - இதிகாசங்களில் கூறப்ப டும் பிறர் மனைவியைக் கூடிய கயவர்களுக் குக்கூட இராவணனுக்குக் கிடைத்த அளவு கண்டனம், தூற்றுதல் இல்லை! இராவணன் சீதையைத் தீண்டக்கூட இல்லை. ஆனால், இராவணனுக்கு நாடு தழுவிய பழி தூற்றல் ஏன்? இராவணன் உயர் சாதியன் அல்லன், முனிவன் அல்லன். இதனால், நமக்குப் புரி வது நாத்திகம் என்பதற்கும் கடவுளுக்கும் சம்பந்தமில்லை என்பதுதான்! நாத்திகம் என் பது ஆரிய சாத்திரங்களை, கோட்பாடுகளை எதிர்ப்பவர்கள்மீது சூட்டப்படும் பட்டம்! கடவுள் மறுப்பாளர் என்று பறை சாற்றுவார் கள். உண்மையில் நாத்திகத்திற்கும் கடவுளுக் கும் சம்பந்தம் இல்லை.

பிறப்பில் வேற்றுமைகள்! குலம் கோத்திர வேறுபாடுகள் மனித குலத்தினை உருக்கு லைக்கும் கொள்கைகள்! கடவுளுக்கே சாதி! இன்ன சாதியினர்தான் கடவுளைப் பூசிக்க லாம்; சோறு படைக்கலாம்! பணக்காரன் - ஏழை ஏற்பாடுகள்! சுரண்டும் வர்க்கத்திற்குப் பாதுகாப்பு! புரோகிதம், மதம் இவற்றிற்குத் தலைமை தாங்க உயர் சாதியினருக்கே உரிமை! சமஸ்கிருதமே தேவ மொழி! தமிழ், சூத்திர மொழி! தமிழில் வழிபாடு கூடாது! தமிழனும் பூசனை செய்யக்கூடாது! இவற் றுக்கு மாறானவையெல்லாம் நாத்திகத்தின் கொள்கைகள், கோட்பாடுகள்!

சோசலிசம் இருக்கிறதா? சமய சார்பற்ற தன்மைதான் இருக்கிறதா?

இன்று நம்மை ஆளுவது மனிதர்கள் அல்ல. அரசியல் சட்டமே ஆளுகிறது. நம்மு டைய அரசியல் சட்டம் சமயச் சார்பற்ற தன் மையை விவரிக்கிறது. ஆனால், நாட்டை ஆள்பவர்கள் சமயச் சார்பற்ற தன்மையை மறந்து பல ஆண்டுகளாகிவிட்டன. ஏன்? நமது நாட்டுக் காவல்துறையினரும், படைவீ ரர்களும் ராம நாம பஜனையில் ஈடுபட்டுத் தம்மையே மறந்து நின்று, பாபர் மசூதியை இடிப்பதைப் பார்த்துக்கொண்டுதானே இருந்தார்கள். ராமர் மீதிருந்த பக்தி, பாபர் மசூதிக்கு வேட்டு! இது எப்படி சமயச் சார்

பற்ற தன்மையாகும்?

அடுத்து, நமது அரசியல் சட்டம் ''ஜனநாயக சோஷலிசக் குடியரசு'' என்று பேசுகிறது. இன்று இந்தியாவில் எங்கே சோஷலிசம் இருக்கிறது? நாளும் பணக்காரர்கள் ''புனல் நிறைந்த தொட்டிகள் ஆகி'' வருகிறார்கள். ''பொத்தல் இலைகளைப்போல'' மக்கள் ஏழைகள் ஆகிவருகிறார்கள். கருப்புப் பணம் குவிகிறது. அந்தக் கருப்புப் பணம் தேர்தலைப் பணச் சந்தையாக மாற்றி வருகிறது. ஏழைகளுக்குக் கிடைப்பதெல்லாம் 'ஜீவனாம்சம்'! இலவசம்! 'குடியரசு' என்று பிரகடனம் செய்யப்பட்டுள்ளது. 'ஜனநாயகக் குடியரசு' என்று பிரகடனம் செய்கிறார்கள். ஜனநாயகம் எங்கு இருக்கிறது? ஆளுங்கட்சித் தலைவர், பாராளுமன்றத் தலைவர் என்று இருந்த மரபை மாற்றிவிட்டார்கள்! இன்று ஜனநாயகப் போக்கில் தனி மனிதர் வழிபாடே நடந்து வருகிறது. அரசியல் விருப்பு - வெறுப்புக்கள், கோபங்கள், கட்சித் தாவல்கள் எல்லாம் நடைபெறுகின்றன. இதனால்தான் தலைவர் பெரியார் ஜனநாயகத்தை நம்ப மறுத்தார்; கேலி செய்தார்! நாட்டைக் கெடுக்கும் மூன்று பேய்களை மக்களுக்கு அறிமுகப்படுத்தி மக்களை எதிர்க்கும்படி தூண்டினார். அந்த மூன்று பேய்கள் எவை? 1. கடவுள் - மதம், 2. சாதி, 3. ஜனநாயகம் ஆகியவையேயாம்! அவர் சொன்ன அய்ந்து நோய்கள் யாவை? 1. சட்டசபை, 2. பத்திரிகை, 3. பார்ப்பனர், 4. தேர்தல், 5. சினிமா. இவை மக்களிடம் இடம் பெற்றவை. மக்களுக்குத் தேவையானவையும்கூட. ஆனால், - இவற்றை நன்னெறியில் பயன்படுத்தாதுபோனால் - தலைவர் பெரியார் அவர்கள் மனித சமுதாயத்தின்பால் கொண்ட பரிவை நிறைவேற்ற இயலாமல் போகும்.

அடிகளாரும் - அய்யாவும்

சர்க்கஸ் வளையத்தில் சிங்கமும் ஆடும் எப்படி ஒன்றுபட்டு ஒன்றுடன் ஒன்று சேர்ந்து விளையாட்டுக் காட்டி ஒன்றையொன்று சுமக்கின்றதோ, அதுபோல்தான் ஒன்றுக்கொன்று பரிகாசம், வெறுப்பு, எதிர்ப்புக் கொள்ளக் கூடிய பகுத்தறிவும் மதமும் குலாவுவதுமாகும்.

காரணம், சிங்கத்துக்கும் ஆட்டுக்கும் ஒற்றுமைக்குக் காரணம் சர்க்கஸ் மாஸ்டரின் சவுக்கடிதான். அதுபோல் இந்த மதமும் பகுத்தறிவும் ஒன்றுபட்டுக் குலவக் காரணம் மக்கள் நலமும் வளர்ச்சியும்தாம்.

- தந்தை பெரியார், 'உண்மை' 14-10-71



தமிழினத்தின்
மானமீட்பர்
தந்தை பெரியார்
115-வது பிறந்தநாள்
'விடுதலை' மலருக்கு வாழ்த்துக்கள்



தரமான தங்கம், வெள்ளி நகைகளுக்கு

☎ 33222

செயன் நகை மாளிகை

27, கான்சா மேட்டுத் தெரு, மதுரை - 1.

ரூ. 100, 200, 400, 500 ஆகிய மாதாந்திர நகை சேமிப்பு திட்டத்தில் சேர்ந்து பயன் பெறுவீர்!

வீரமணியிடமிருந்து பெறும் உணர்ச்சி

வி.பி.சிங்

நான் என்னுடைய நன்றியை வெளிப்படையாக நண்பர் வீரமணி அவர்களுக்கு தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். ஏனெனில், மண்டல் ஆணையை நான் நடைமுறைக்குக் கொண்டு வந்தேன். அப்போது, வட புலமே எனக்கு எதிராக கிளர்ந்தெழுந்தது. ஆனால், ஒரு மாபெரும் கருங்கற் கோட்டையாக, மாபெரும் எஃகுக் கூடாரமாக நின்று எனக்கு நீங்கள் ஆதரவு அளித்ததை இப்போது நினைவு கூர்கிறேன்.

இரண்டு நாட்களாக நான் தமிழகத்திலே உலா வந்து கொண்டிருக்கிறேன். நான் எங்கே சென்றாலும் திராவிடர் கழகத் தோழர்கள் கருப்புச் சட்டையுடனும், திராவிடர் கழகக் கொடியுடனும் நின்று வரவேற்கிற காட்சியினை காண்கின்றேன். அது என் மனதை விட்டு அகலாத காட்சியாக இருந்து கொண்டிருக்கிறது.



மிகப் பெரிய தலைவர் தந்தை பெரியார் வாழ்ந்த காலத்திலே, இந்த நாட்டிலே இருக்கக்கூடிய சமுதாயக் கொடுமைகளைக் கண்டு மனம் வெதும்பினார். அதன் காரணமாக இந்த சமூக அநீதியை - கொடுமையை துடைத்தெறிய வேண்டும் என்று உள்ளத்தில் உறுதி பூண்டார்கள். அதற்காகவே உழைத்தார்கள். ஒரு மனிதனுக்கு சாவை விட மிகக் கொடுமையானது அவமானம் என்றே நான் சொல்லுவேன். இந்த நாட்டிலே கோடிக்கணக்கான மக்கள் சமூக அநீதியால், அவமானத்தால் பாதிக்கப்பட்டார்கள். நெருப்பிலே வெந்து கொடுமைப்படுவதைவிட கொடுமையானது தான் இந்த அவமானத்தால் ஏற்படுகின்ற கொடுமை. எனவேதான் அந்தக் கொடுமையை துடைத்து எறிவதற்காகத்தான் தந்தை பெரியார் அவர்கள் பாடுபட்டார்கள்.

சாதி என்ன செய்து கொண்டிருக்கிறது என்று சொன்னால், அது உள்ளத்தை அடிமைப்படுத்தியிருக்கிறது. இந்த நாட்டிலே இருக்கக்கூடிய கோடிக்கணக்கான மக்களின் உள்ளங் களை - மனத்தை அடிமைப்படுத்தியிருக் கிறது என்பதை நாம் உணரவேண்டும். கைகளிலே போடப்பட்ட இரும்புக் கை விலங்குகளை நாம் உடைத்தெறிய முடியும். ஆனால், மனத்திலே, அறிவிலே பூட்டப்பட்டிருக்கின்ற விலங்கினை நாம் உடைத்தெறிய முடியாது. அந்த விலங்குகளை உடைத்தெறியத்தான் நமக்கு

சுயமரியாதை என்ற உணர்வு வேண்டும்.

இந்த நாட்டிலே இருக்கக்கூடிய தாழ்த்தப்பட்ட மக்களை, சூத்திரன் என்று சொல்லப்படுகின்ற பிற்படுத்தப்பட்ட மக்களை, வருணம் என்று சொல்லக்கூடிய சாதி என்கிற அமைப்பு, அவர்களுடைய உள்ளங்களிலே விலங்கை மாட்டி, அவர்களை நட மாடும் வெறும் எந்திர மனிதர்களாக்கியது. அதனால்தான் தந்தை பெரியார், சுய மரியாதை என்ற ஆணியை, அந்த சாதி அமைப்பின் தலையைப் பார்த்து மிகச் சரியாகவே அடித்தார்கள்.

நாம் 400 ஆண்டுகளுக்கு முன்பு உள்ள வரலாற்றுக்குச் செல்வதைவிட, 4000 ஆண்டு களுக்கு முன்னால் உள்ள வரலாற்றுக்குச் செல்வோம். 4000 ஆண்டுகளுக்கு முன்பு கைபர், போலன் கணவாய் வழியாக இந்த நாட்டுக்குள் படையெடுத்து வந்தவர்கள் இங்கே உருவாக்கி வைத்த அடிமைத்தனம் ஒழிந்தாலொழிய பிரச்சினைக்குத் தீர்வே இல்லை.

மண்டல் அமுலாக்கம் என்பது வெறும் சம்பளத்திற்கான வேலை வாய்ப்பு மட்டுமல்ல. அதிகார வர்க்கத்தில் நமக்கு பங்கு கிடைக்கவேண்டும் என்பதுதான். ஏனென்றால், சாதாரணமான ஏழை மக்களுக்கான 'ரேசன் கார்டு' கிடைப்பதைக் கூட முடிவெடுப்பது அதிகார வர்க்கம்தான். எனவேதான், மண்டல் அமுலாக்கம் என்பது அதிகாரப் பங்கீடு என்கிறோம். எனவே, திராவிடர் கழகத்தை எங்களோடு ஒப்பிட மாட்டேன். ஏனென்றால், அது அரசியலிலே ஈடுபடக்கூடிய இயக்கமல்ல. ஆனால், அரசியலில் ஈடுபடுகின்ற கட்சிகளில், எங்களுடைய ஜனதா தளம்தான் கட்சிப் பொறுப்புகளில் 60 சத விகிதத்தை பிற்படுத்தப்பட்ட தாழ்த் தப்பட்ட - சிறுபான்மை மக்களுக்கு ஒதுக்கீடு செய்திருக்கிறது. அதேபோல நாட்டின் அனைத்து அதிகார மட்டத்தி லும் ஒதுக்கீடு செய்யப்பட்டாலொழிய நாட்டில் முன்னேற்றங்கள் ஏற்பட வாய்ப்பில்லை.

வீரமணி அவர்களே, உங்களை நான் பாராட்டுகிறேன். ஏனென்றால், இங்கே இருக்கக் கூடிய மக்களுக்கு கல்வியை வழங்கிக் கொண்டிருக்கிறீர் கள். எதன் மூலமாக இந்த சமுதாயத்தை உயர்த்த முடியுமோ, அந்த மூலத்தைத் தொட்டு, அந்த அடித்தளத்தைத் தொட்டு, பணியாற்றிக் கொண்டிருக்கிறீர்கள். நீங்களும் உங்களுடன் பணியாற்றக் கூடியவர்களும் ஒரு அடித்தள மான பணியை செய்து கொண்டிருக் கிறீர்கள்.

ஏனென்று சொன்னால், புரட்சி என்பதை வாளைத் தூக்கிக் கொண்டு மட்டும் செய்யமுடியாது. மக்கள் மனதில் எழுகின்ற மலர்ச்சியை வைத்துதான் செய்ய முடியும். அப்படிப் பட்ட பணியை, நாங்களெல்லாம் செய்கின்ற பணியை விட, உயர்ந்த பணியை, நீங்கள் செய்து கொண்டிருக்கிறீர்கள். எனவே, உங்களைப் பாராட்டுகிறோம்.

அரசியலிலே என்னுடைய தோழர் ராம் விலாஸ் பஸ்வானிடமிருந்து நான் உணர்ச்சியைப் பெறுகிறேன். அதே போல், சமுதாயப் பணியிலே, நண்பர் வீரமணி அவர்களே, உங்களிடமிருந்து நான் அந்த உணர்ச்சியைப் பெறுகிறேன்.

(23-12-92 **அன்று திருச்சி பெரியார் நூற்றாண்டு நினைவு கல்வி வளாகத்தில் நடைபெற்ற தந்தை பெரியார் நினைவு நாள், பெரியார் - மணியம்மை குழந்தைகள் காப்பகக் கட்டடத் திறப்பு விழாவில் கலந்துகொண்டு, கட்டடத்தை திறந்து வைத்து, முன்னாள் பிரதமர் சமூக நீதிக் காவலர் வி.பி. சிங் ஆற்றிய உரையிலிருந்து. 'விடுதலை'**, *30-12-1992)*

பத்திரிகைகள்...

சென்ற 30 ஆண்டுகள் எங்காவது நான் மூச்சுவிட்டால் மூன்று கலம் வெளியிட்டு வந்த பத்திரிகைகள், இன்று நான் திராவிடர் கழகத்திற்கு ஆதரவு தெரிவித்தது முதல் மூன் றுவரிகூட வெளியிடக் கஷ்டப்படுகின்றன.

— திரு.வி.க. (24.10.1948)

திருச்சி - பெரியார் நூற்றாண்டுக் கல்வி வளாகத்தில் சமூக நீதிக் காவலர் வி.பி.சிங், இராம் விலாஸ் பஸ்வான் (28.12.92)



DIAL VKN FOR YOUR BOILER REQUIREMENT:

VKN BOILERS ARE:

STRONGER IN CONSTRUCTION

SUPER IN ACTION

LONGER IN DURATION

CONTACT

VKN

THUVAKUDI, TRICHY-620 015.

பாய்லர் தேவைக்கு தொடர்பு கொள்ளவும்

அலுவலகம்		இல்லம்
52571	VKN	27834
52572		49574
52573		29344
52574	துவாக்குடி திருச்சி - 620 015.	29434

LEADING FABRICATORS TO M/s. BHEL

சிந்தனையின் விடிவெள்ளி!

பாவலர் நாரா நாச்சியப்பன்

வேதங்கள் புராணங்கள் சாஸ்திரங்கள்
விந்தைமிகும் ஆகமங்கள் நீதி நூல்கள்
சூதாகப் பெருவாரி மக்கள் தம்மைத்
தொழும்பர்களாய் அடிமைகளாய்த் தாழ்த்தி வைத்துப்
பாதகர்கள் ஆண்டாண்டாய்ப் பரம்பரையாய்ப்
படுகுழிக்குள் தள்ளிவைக்கத் துணையாய் நின்ற
வேதனையை உணர்ந்தவர்கள் மலைத்து நின்றார்!
வெளிச்சொல்ல மாட்டாமல் திகைத்து நின்றார்!



தந்தை பெரியாருடன் - நாரா நாச்சியப்பன் - 1954 ஆம் ஆண்டு இரங்கூன் துறைமுகத்தில் பெரியார், சிங்கப்பூருக்கு புறப்பட்ட போது...

வேதாந்த விசாரணையில் ஈடுபட்டு
விளக்கங்கள் பல சொன்ன ஆசார்யர்கள்
நாதாந்த விரிவுரைகள் ஆற்றிச் சென்ற
ஞானிகளாம் சங்கரர்கள் மாத்துவர்கள்
பேதாதி பேதங்கள் வளர்ப்ப தற்கே
பெரு வாழ்வைப் பயன்படுத்தி மாண்டு போனார்!
சூதான சாத்திரத்தின் தோல் உரிக்கத்
துளியேனும் தம் நினைப்பைச் செலுத்தவில்லை!

பக்தர்களோ நடப்பதெலாம் அண்ட முற்றும்
படைத்த இறை நடத்துதிரு விளையாட்டென்று
புத்தியிலே நரிக்குணத்தை வைத்தி ருப்போர்
புரிந்து வரும் சேட்டைகளை உணர வில்லை!
சித்தர்களோ சாத்திரத்தின் வயிற்றைக் கீறிச்
சிந்தனையைக் கிளப்பிவிட்டார்! எனினும் அந்தப்
பகுத்தறிவு பரவாமல் தடுப்ப தற்கே
 புராணிகர்கள் புற்றீசல் போல வந்தார்!

வள்ளுவரின் குறள்கற்றும் திருந்தா மக்கள்
வாக்கியரின் ஞானத்தைப் போற்றா மக்கள்
வள்ளலார் பொது நெறியிற் செல்லா மக்கள்
மதியொளியைத் திரையிட்டு மூடிக் கொண்டு
கொள்ளையரின் காட்டுவழிச் சிக்கிக் கொண்டு
குத்து விடத் தெரியாத கோழை யர்போல்
தள்ளுண்டு குழியடியில் அழுந்திப் போனார்
தலை யெடுக்க வழியின்றி விழி பிதுங்கி!

அத்தனையும் முன்செய்த வினையென் பார்கள்
ஆண்டவனின் சித்தமிது மறுக்கப் போமோ?
எத்தகைய துய ரெனினும் விதியேன் றோதி
இதை மாற்ற முயலாமல் துயர் கொள் வார்கள்!
புத்தனொரு ஞாயிறுபோல் தோன்றி வந்தான் !
புதுக்கருத்தை ஞாலத்தில் எடுத்துச் சொன்னான்!
பித்தத்தைத் தெளிவித்து மக்கள் நெஞ்சில்
பீறிட்டே ஒளிவெள்ளம் கிளம்பச் செய்தான்!

இருண்டி ருந்த நெஞ்சமெல்லாம் அறிவு தோன்றி
எங்கெங்கும் புத்துணர்வு பெருக லாச்சு !
அருண்டோடிப் பழமையெலாம் மூலைதேடி
அடங்கிப் போய் நிலைகுலைந்து மறைய லாச்சு!
உருண்டுவரும் சக்கரத்தில் மேலும் கீழும்
உருமாறிப் போவது போல் பொதுமைக் கொள்கை
திரண்டுவரும் மக்களிடம் சிறப்புச் சேர
தெளிவான அறிவு நிலை வளர லாச்சு!

புத்தரைப் போல் இங் கொருவர் பொறுப்பை ஏற்றார்
புதுக்கருத்தை மக்களிடம் பரப்ப வந்தார்
சத்தற்ற மத வாதம் கடவுட் பற்று
சாதி வெறி தீண்டாமை மூடக் கொள்கை
பித்தத்தை வளர்க்கின்ற புராண மூட்டை
பேதத்தை மூட்டுகின்ற மனுவின் நீதி
அத்தனையும் புரட்டென்று புரட்டிப் போட்டே
அடித்துரைக்கும் துணிவோடு கிளர்ச்சி செய்தார்.

38

மக்களிடம் குடிகொண்ட அறியா மைக்கு
மருந்துதர வேறொருவர் வராத தாலே
தக்கவனா திறனுண்டா என்றெண் ணாது
தனியாளாய் முன்வந்தேன் தொண்டு செய்ய!
சிக்குண்டு தவிக்கின்ற மக்கள் நோயைத்
தீர்ப்பதற்குச் சரியான மருந்தொன் றுண்டு
பக்குவமாய் நான் தருவேன் அதன்பேர் நல்ல
பகுத்தறிவு தானென்பார் உறுதி யாளர் !

மடமையினால் அடிமைநிலை பூண்ட வர்க்கும்
மற்றவரைத் தாழ்வு செயும் கொடிய வர்க்கும்
இடங் கொடுக்கும் வேதத்தைப் புராணச் சேற்றை
எடுத்தகற்றி விட்டாலே நலங்கள் கூடும்.
கடவுளென்றும் ஆச்சார பூசை யென்றும்
கைகூப்பி வணங்குவதில் பேதம் கூட்டித்
தடங்காட்டி மாந்தர்களைக் கூறு போட்டுத்
தனிப்படுத்தும் கேவலத்தை எடுத்துச் சொன்னார்.

மக்களுக்கு விழிப்புணர்வு கூட்டு தற்கும்
மடமை நிலை போக்கி அறி வூட்டு தற்கும்
தக்கபணி செய்வதனை வாழ்வு நோக்காய்த்
தன்மான நெறிகாட்டி நிமிரச் செய்தே
அக்கரை கொண் டுழைக்கவந்த புரட்சிச் சிங்கம்
அதிர்வெடியாம் கருத்துரைத்த பெரும்பீரங்கி !
சிக்கனத்தின் பிறப்பெடுப்பு! பொதுவு டைமைச்
சிந்தனையின் விடிவெள்ளி! பெரியார் ! ஆமாம் !

வெண்தாடி அசைந்திருக்க மேடை மீது
வீற்றிருக்கும் பெரியாரைக் காணும் போது
மண்மீதில் வேற்றுமையை வெட்டிப் போட
வந் துதித்த மற வனிவன் என்று தோன்றும்!
எண்ணத்தில் பொதுவுடைமை தோற்று விக்க
எடுத்தகுரல் வைதிகத்தின் இடுப்பொடிக்கும்!
கண் ணெல்லாம் சிவப்பேறத் தாழ்ந்தி ருந்தோர்
கனன்றெழுவார் நிமிர்ந்தெழுவார் புலிகள் போலே!

மூன்று விழுக் காடுள்ளோர் தொண்ணூற் றேழை
முடக்கிவைத்த கொடுமைகளை எடுத்துக்காட்டிச்
சான்றுதரும் சாத்திரங்கள் வேதக் குப்பை
சாதித்த புன்செயலை விளக்கிக் காட்டித்
தோன்றி வரும் ஞாயிறுபோல் எழுச்சி யூட்டித்
துவண்டிருந்த மக்களினம் தன்மானத்தை
ஏன்றுவரத் தூண்டிவிட்ட ஏந்தல்! என்றும்
எங்கள் குலம் தழைக்கவந்த பெரியார்! கண்டீர்!

வெடி குண்டு சாமி

தந்தை: (மகனிடம்) என்னடா இது அநியாயமா இருக்கு? வெடி குண்டுக்குப் போய் பூஜை போட்டுகிட்டு இருக்கிறியே... உனக்கு என்ன வந்தது?...

மகன்: சர்வ சக்தி படைத்த கடவுள் வாழும் கோயில்களையே உடைத்து நொறுக்கி... சுக்கு நூறாக்கிவிடுகிறதே... இந்த குண்டு!... அதனால்தான் இதுக்கு பூஜை போட்டுகிட்டு இருக்கிறேன்... இது தவறாப்பா?

தந்தை: ?... ?... ?...

— நெய்வேலி க. தியாகராசன்
கோரநாட்டுக்கருப்பூர்

பெரியார் பத்து பெரியார் பத்து பெரியார் பத்து
பெரியார் பத்து பெரியார் பத்து பெரியார் பத்து
பெரியார் பத்து பெரியார் பத்து பெரியார் பத்து
பெரியார் பத்து பெரியார் பத்து பெரியார் பத்து
பெரியார் பத்து பெரியார் பத்து பெரியார் பத்து



பெண்களே!

''நீங்களும் மேல்நாட்டுப் பெண்களைப்போல சகல உரிமைகளையும் பெற்று, இன்ப வாழ்வு வாழவேண்டும். அதற்கு நீங்கள் ஆண்களைப்போல் படிக்கவேண்டும். உங்களுக்குச் சட்டத்தின் மூலம் பல உரிமைகள், சொத்துரிமை, விவாகரத்து உரிமை ஆகிய உரிமைகள் வரக் காத்திருக்கின்றன. அவ்வுரிமைகளை அனுபவிக்க உங்களுக்குக் கல்வி அறிவு அவசியமாகும். நகைகளிலோ, சேலைகளிலோ உங்களுக்குள்ள பிரியத்தை ஒழித்து விடுங்கள்! இவற்றில் பிரியம் வைத்துக்கொண்டு இருப்பவர்களானால், ஜவுளிக் கடையிலும் நகைக்கடையிலும் சேலை விளம்பரத்திற்காக அவ்வப்போது வெவ்வேறு சேலை உடுத்தி வெவ்வேறு நகை மாட்டி வெளியே நிறுத்தி வைக்கும் வெறும் பொம்மைகள் போலத்தான் நீங்கள் ஆகவேண்டும்''.

'குடி அரசு', 5-6-1948

நான் ஆட்படுவது...

''நான் எந்த மதக்காரனுக்காவது ஏஜண்டு அல்ல; அல்லது நானும் எந்த மதக்காரனுக்காவது அடிமையும் அல்ல. அன்பு, அறிவு என்கிற இரண்டு தத்துவங்களுக்கு மாத்திரம் ஆட்பட்டவன்''.

— தந்தை பெரியார்
'குடி அரசு', 11-9-1927





சீர்திருத்தம் என்பது...

''என்ன என்ன சாதனங்கள் சீர்திருத்தத்திற்குத் தடையோ அவைகளை வேருடன் அழிக்கத் தயாராயிருக்க வேண்டும். அவைகளில் ஒரு சிறு தாரையாவது, கிளைவேரையாவது மீத்து வைத்துக் கொண்டு சீர்திருத்தம் செய்யலாமென்று எந்தவிதமான சீர்திருத்தக்காரர்கள் நினைத்தாலும் அவர்கள் ஒரு காலமும் வெற்றி பெறமாட்டார்கள் என்பது உறுதி.''

'சமுதாய சீர்திருத்தங்கள்'
பக்கம் 9

கடவுளுக்கு விரோத மான காரியம்...

''சாதி, உயர்வு - தாழ்வு, செல்வம், தரித்திரம், எஜ மான், அடிமை ஆகியவைக ளுக்குக் கடவுளும் கர்மமும் தான் காரணம் என்று சொல்வ தானால், பிறகு மக்களுக்கு விடுதலையும் முன்னேற்ற மும் எங்கே இருக்கின்றன? கடவுளையும் கர்மத்தையும் ஒழித்தாலொழிய, அதற்காக மனிதன் எப்படிப் பாடுபட முடியும்? மேடும் பள்ளமும் கடவுள் செயலானால், மேட்டை வெட்டிப் பள்ளத் தில் போட்டுச் சமன் செய்வது கடவுள் செயலுக்கு விரோத மான காரியமே ஆகும்.''

'குடி அரசு', 7-9-1930



என் சுயநலம்...

எனக்குச் சுயநலமில்லை என்று கருதாதீர்கள். நான் மகா பேராசைக்காரன். என்னு டைய ஆசையும் சுயநலமும் எல்லையற்றன. திராவிடச் சமுதாய நலனையே என் சொந்த நலமாக எண்ணி இருக்கிறேன். அந்தச் சுயந லத்திற்காகவே நான் உழைக் கிறேன்.

— 'விடுதலை', 15-1-1955

பேச்சு என்பது...

''பேச்சு என்றால் சிலர் அழகுக்குப் பேசுவார்கள்; சிலர் அலங்காரத்திற்காகப் பேசுவார்கள்; மக்கள் சிரிக்க வேண்டும் - கைதட்ட வேண் டும் என்று சிலர் பேசுவார்கள்; சிலர் தாம் கற்றவைகளை வெளியிடுவதே முக்கியம் என்று பேசுவார்கள்; சிலர் தம் கருத்துகளை வெளியிடப் பேசுவார்கள். கடைசியில் சொன்ன ரகத்தினன்தான் நான்''.

'விடுதலை', 3-2-1963

நான் துறவி...

நான் துறவி. துறவிக்கு வேந்தன் துரும்பு என்பார்கள். எனக்கு வேந்தன் மாத்திரம் துரும்பல்ல; கடவுளும் துரும்பு. சாதி துரும்பு. அரசியலும் துரும்பு. துரும்பு மாத்திரமல்ல; அவைகளை, எல்லா யோக்கியக் குறைவையும் காய்ச்சிச் சுண்ட வைத்துப் பிழிந்தெடுத்த சத்து என்று சொல்லுவேன்.

— 'விடுதலை', 15-10-1967

சுயமரியாதை இயக்கம்!

''ஒருவன் உழைப்பில் ஒருவன் நோகாமல் சாப்பிடுகிறது என்கிற தன்மை இருக்கும் வரையிலும், ஒருவன் தினம் ஒரு வேளை கஞ்சிக்கு வழியின்றிப் பட்டினி கிடந்து சாவதும் மற்றொருவன் தினம் 5 வேளை சாப்பிட்டுவிட்டு வயிற்றைத் தடவிக்கொண்டு சாய்மான நாற்காலியில் சாய்ந்து கொண்டிருக்கிறது மான தன்மை இருக்கிறவரையிலும், ஒருவன் இடுப்புக்கு வேஷ்டி போட்டுக்கொண்டு உல்லாசமாகத் திரிவதான தன்மை இருக்கின்ற வரையிலும் பணக்காரர்கள் எல்லாம் தங்கள் செல்வம் முழுவதையும் தங்களது சுய வாழ்வுக்கே என்று எண்ணிக்கொண்டிருக்கிற வரையிலும் சுயமரியாதை இயக்கம் இருந்தேதான் தீரும். மேற்கண்ட தன்மைகள் ஒழியும்வரை இவ்வியக்கத்தையும் ஒழிக்க யாராலும் முடியாது''.

'குடி அரசு', 1-6-1930



இளைஞர்களே!

''நாம் மிகக் கீழான நிலையில், மிக்க இழிவான தன்மையில் அழுத்தப்பட்டு இருக்கிறோம். நமக்குச் சட்டசபையில் இன்று வேலையில்லை. தேர்தலில் சம்பந்தப்பட்டு மானமிழந்து வாழக்கூடாதென்று தெரிவித்துக் கொள்கிறேன். மக்களிடம் நம்பிக்கை பெறுங்கள்; மக்களை ஒன்று படுத்துங்கள்; மக்கள் பலத்தை ஒன்று திரட்டுங்கள்; தியாகத்திற்கும், தன்னல மறுப்பிற்கும் மக்களைத் தயார் செய்யுங்கள். அதற்கு வழி காட்டுங்கள். நீங்காத நீண்ட நாளைய இழிவை நீக்கிக் கொள்ள நம்முடைய எதையும் விடவும், எப்படிப்பட்ட கஷ்டத்தையும் அனுபவிக்கவும் தயாராகுங்கள். போராட்டம் அதோ கண்ணுக்குத் தெரிகிறது. புறப்படுங்கள்; மார்பில் குண்டு வாங்க நிமிர்ந்து வாருங்கள். ஓடி ஒளியாதீர்கள். கோழையாக வாழ்வதை, சுயநலக்காரர்களாக வாழ்வதை, மானமற்றவர்களாக வாழ்வதை வாழ்வென்று கருதாதீர்கள்''

நூல்: 'இளைஞர்களுக்குப் பெரியார் அறிவுரை', பக்கம் 63

அய்யா பணி முடிக்க ஆசிரியர்
அவர்களின் போர் வாளாய் திகழ்வோம்



1991 - 93 மாணவ ஆசிரியர்கள்

பெரியார் ஆசிரியர் பயிற்சி நிறுவனம்,

புத்தூர், திருச்சி - 17

எனது நோக்கம்

''தன்மான உணர்ச்சி, பகுத்தறிவு - சிந்தனை இவை களில்லாமல் சுயராஜ்யம் கிடைத்து என்ன பயன்? பேடியின் கை ஆயுதம் என்பதைத் தவிர அதை வேறு என்ன என்று சொல்வது? மானத்தையும் அறிவையும் போற்றி மக்களுக்கு நான் எடுத்துச் சொன்னபோது அறிவீனர்களும் சுயநலக்காரர்களும் 'போச்சுது மதம்' என்றார்கள். 'ஒழியட்டும் அப்படிப்பட்ட மதம்' என்றேன். 'சுயராஜ்யம் வேண்டுமே' என்றார்கள். 'அதைப் பற்றி எனக்கு கவலையில்லை' என்றேன். 'கடவுள்?' என்று மிரட்டினார்கள். 'பார்க்கிறேன் ஒரு கை அந்தக் கடவுளையும்!' என்றேன்.

'மனிதனுக்கு மானமும் பகுத்தறிவும்தான் முக்கியமான தேவையே ஒழிய மற்றவைகள் அல்ல' என்று உறுதியாக ஒரே பிடிவாதமாகக் கூறினேன். 'சிந்தித்துப் பார்! எதையும் ஆராய்ச்சி செய்து பார்!' என்பதற்காகவே என்னை பலர் மதத்துக்கு விரோதி, கடவுளுக்கு விரோதி, காங்கிரசுக்கு விரோதி, கம்யூனிஸ்ட்க்கு விரோதி, சுயராஜ்யத்திற்கு விரோதி என்றெல்லாம் நிந்திக்கிறார்கள்.

மனித வாழ்வில் பல்வேறு துறைகளிலும் இருக்கிற குறைபாடுகளை எடுத்துச் சொல்லி சிந்தித்துப் பார்த்து, அவைகளை நீக்கிச் சீர்திருத்தம் செய்யச் சொல்வது தவிர வேறு நோக்கம் எதுவும் எனக்குக் கிடையாது''

'விடுதலை', 6-2-1959

"தொண்டு செய்து பழுத்த பழம் -
தூய தாடி மார்பில் விழும்,
மண்டைச் சுரப்பை உலகு தொழும்,
மனக்குகையில் சிறுத்தை எழும்,
அவர் தாம் பெரியார் ...."

அந்த பெரியாரின் 115-வது பிறந்தநாளில் எங்களது இனிய நல்வாழ்த்துக்கள்

A.R.K. டெக்ஸ்டைல்ஸ் பர்ம்

சுத்தப்பட்டு, ஸ்பன்சில்க், நவீன கைத்தறி
கோடம்பாக்கம் புடவைகள் தயாரிப்பாளர்
388, திருச்சி மெயின் ரோடு,
குகை, சேலம் - 6.

தந்தை பெரியார் 115-வது பிறந்தநாளில் எங்களது நல்வாழ்த்துக்கள் !

K.R.G. நாகப்பன் - ராஜம்மாள் அறக்கட்டளை (Regd)

"K.R.G.N.R. மருத்துவமனை"

267, திருச்சி மெயின்ரோடு, குகை, சேலம் - 636 006

தொலைபேசி - 53609 வீடு : 54776

K.R.G.N.R. மருத்துவமனையின் மருத்துவத் தொண்டு

தினசரி பிற்பகல் 3 மணி முதல் மாலை 5 மணிவரை இலவச சிகிச்சை !

சலுகைக் கட்டணத்தில் (ரூ. 500,-ல்) கண் அறுவை சிகிச்சை !

மருத்துவர் கட்டணம், மருந்து, படுக்கை வசதி - கண்ணாடியும் வழங்கப்படும்.
மகுடஞ்சாவடி, வனவாசி, சிந்தாமணியூர் - தொ. ஜேடர்பாளையம், கொண்டலாம்பட்டி, களரம்பட்டி, சேலம் நகரம் என்று பல்வேறு ஊர்களில் இலவச மருத்துவ முகாம்கள் இதுவரை 13 நடத்தப்பட்டுள்ளன.

சிகிச்சை பெற்றோர் எண்ணிக்கை 6,060
கண் மருத்துவத்திற்கு மூன்று முகாம்களில் கண் சிகிச்சை பெற்றோர் 1,878

மாத வருமானம் ரூ.400,- வரை உள்ள ஏழை நோயாளிகளுக்கு இலவசமாக படுக்கை வசதி (Bed) தரப்படும்.

With Best Compliments From

Phone : 28861, 28114

****
**
*

Sre Ganesh Plywood Agencies

*
**
****

(Near Ramakrishna Talkies)
4, Madurai Road,
TRICHY - 620 008.

With Best Compliments From

Phone Off : 49641
Res : 28642

MADRAS SCIENTIFIC SUPPLIES

P.B. NO. 914
D 22, NORTH EAST EXTENSION,
THILLAINAGAR,
TRICHY - 620 018.

Dealers in :

LABORATORY, INDUSTRIAL, CHEMICALS, INSTRUMENTS & GLASSWARES ETC.,

N. MEGANATHAN N. SEKAR N. RENGANATHAN



விடுதலை மலருக்கு வாழ்த்துகள் !

தமிழினக் காவலர் தலைமையில் ....

தந்தை பெரியார் பணி முடிக்க ....

சூளுரைப்போம் !

தமிழ்நாடு இனிப்பகம்

45, ஆற்காடு சாலை, சத்துவர்சசாரி - வேலூர் - 9

உயர்தர இனிப்பு கார வகைகளுக்கு மிகச் சிறந்த இடம்

உரிமை : க. சிகாமணி

அம்பேத்கர் மாவட்ட தி.க. இளைஞரணி செயலாளர்

Rtn. வி.என். சூரியமூர்த்தி

****

****

***

*

* தந்தை பெரியார்

செங்கல் தொழிலகம்

* என்.எஸ். குட்டிமணி லாரி சர்வீஸ்

* லட்சுமிநாராயணா ரைஸ்மில்

வல்லம்படுகை - 608401, சிதம்பரம் வட்டம், தென் ஆற்காடு மாவட்டம்

தொலைபேசி எண் : 32

அலுவலகம் : 39 F, சபாநாயகர் தெரு, சிதம்பரம்.

பொன்மொழி நூல் தடை

தந்தை பெரியார் அவர்களின் பேச்சு - எழுத்துக்களில் சிந்திய ஆயிரம் ஆயிரம் முத்துகளில் சேகரித்த சிலவற்றை ''பொன்மொழிகள்'' என்ற பெயரால் திருச்சி திராவிடமணி பதிப்பகத் தோழர் டி.எம்.முத்து அவர்களால் தொகுக்கப்பட்டு 1947ல் வெளியிடப்பட்ட புத்தகத்தை சென்னை மாநில காங்கிரஸ் ஆட்சியாளர் பறிமுதல் செய்ததுடன் தந்தை பெரியார் அவர்கள் மீதும், நூலை வெளியிட்ட தோழர் டி.எம். முத்து மீதும், நூலை அச்சிட்ட புதுக்கோட்டை ரிப்பன் அச்சகத்தார் மீதும், (வகுப்புத்துவேஷம்) திருச்சி சப்டிவிஷனல் கோர்ட்டில் வழக்குத் தொடரப்பட்டது. 11.3.1950 முதல் வழக்கு நடந்து வந்தது. பத்து முறை வாய்தா போடப்பட்டு கடைசியாக 18.9.1950 மாலை 3 மணிக்குத் தீர்ப்புக் கூறப்பட்டது. தந்தை பெரியார் அவர்களுக்கு ரூபாய் 700 அபராதம் அல்லது ஆறு மாத சிறைத் தண்டனை, இரண்டாம் குற்றவாளி தோழர் டி.எம். முத்துக்கு 500 ரூபாய் அபராதம் அல்லது 4 மாதத் தண்டனை; மூன்றாம் குற்றவாளி புதுக்கோட்டை ரிப்பன் அச்சக உரிமையாளருக்கு ரூபாய் 500 அபராதம் அல்லது 4 மாத சிறைத் தண்டனையும் அளித்துத் தீர்ப்பு வழங்கப்பட்டது. இரண்டாம், மூன்றாம் குற்றவாளிகள் உடனே அபராதத் தொகையைக் கட்டிவிட்டனர். தந்தை பெரியார் அபராதம் கட்ட மறுத்து திருச்சி மத்திய சிறைச் சாலைக்குச் சென்றார். இது 12-வது முறை சிறைவாசமாகும்.



ஆயிரக் கணக்கான மக்கள் நீதிமன்றத்துக்கு வெளியில் கூடி ''தந்தை பெரியார் வாழ்க'' என்று முழக்கமிட்டார்கள். திரு தி.பொ. வேதாசலம், எம்.கே. குப்தா ஆகியோர் தோழர்களிடையே உரையாற்றி அமைதிப்படுத்தினர்.

தந்தை பெரியாரின் கார் ஜப்தி

தந்தை பெரியார் அவர்களுக்கு 1948 -ல் சுற்றுப் பயணத்துக்காக ஒரு கார் வழங்கப்பட்டது. ரூபாய் 12 ஆயிரம் மதிப்புள்ள அந்தக் கார் சேலம் என்.எஸ். சர்வீஸ் உரிமையாளர் என். சத்தியாபிள்ளை அவர்களிடமிருந்து சேலம் குகை ஜெகதீசர் அவர்கள் மூலமாக ரூபாய் 9 ஆயிரத்துக்கு வாங்கப்பட்டு தந்தை பெரியாரிடம் அளிக்கப்பட்டது.

தந்தை பெரியார் அவர்களின் 'பொன்மொழி' நூலுக்காக 700 ரூபாய் அபராதம், அபராதம் கட்டத் தவறினால் 6 மாதம் சிறைத் தண்டனை திருச்சி நீதி மன்றத்தில் (சப்டிவிச

With Best Compliments From

☎ 24414
29260

Sathya®

STEEL FURNITURE

LOW PRICE, HIGH QUALITY.

Sri Sathya Agencies,
23, Nandhi Koil Street,
Trichy-620 002.

பெரியார் கார் ஜப்தி

னல் கோர்ட்டில்) அளிக்கப்பட்டு 18.9.1950 முதல் தந்தை பெரியார் சிறைவாசம் அனுப வித்தார். மக்கள் கிளர்ச்சியின் எதிரொலி கார ணமாக 28.9.1950 அன்று காலை தந்தை பெரி யார் விடுதலை செய்யப்பட்டார்.

சிறையிலிருந்து திடீரென்று அரசு விடு தலை செய்தது என்றாலும் சிறையில் இருக்க வேண்டிய மீதி காலத்துக்காக அபராதம் என்று, தந்தை பெரியார் அவர்களின் காரை ஜப்தி செய்து ரூபாய் 835 க்கு ஏலத்தில் விட்டு அபராதத் தொகையை வசூல் செய்தனர். அபு ராதம் வசூல் செய்யத் தகுந்த காரணம் இருக் கிறது என்று சர்க்கார் கருதினால் அவ்வாறு செய்யலாம் என்கிற சட்டப்படி அது நடை பெற்றதாகத் தெரிகிறது.

பிரபல நீதிக்கட்சித் தலைவர் என்.ஆர். சாமியப்ப முதலியார் அவர்களின் மைத்துன ரும் பிரபல மிராசுதாரருமான தஞ்சாவூர் மாவட்டத்தைச் சேர்ந்த பஞ்சநாத முதலியார் அவர்கள் அந்தக் காரை ஏலம் எடுத்து மறுபடி யும் தந்தை பெரியாரிடம் ஒப்படைப்பது என்று ஏலத்திற்கு சென்றார். வல்லபாய் பட் டேல் மறைவை ஒட்டி அன்று ஏலம் நிறுத்தப் பட்டு, மறுநாள்தான் ஏலம் விடப்பட்டது. மறுநாள் அவரால் ஏலத்திற்குச் செல்ல முடிய வில்லை.

திருச்சி வாடகைக்கார் சர்வீஸ் உரிமை யாளர் இரத்தினவேல்பிள்ளை என்பவர் ரூபாய் 835 -க்கு அந்தக் காரை ஏலம் எடுத்தார்.

ஏலம் எடுத்த அவரிடம் அந்தத் தொகை யைக் கொடுத்து, காரைப் பெரியாரிடம் ஒப்ப டைக்க பஞ்சநாத முதலியார் முன்வந்தார்.

ஆனால் பொது மக்களின் நன்கொடை மூலமாகவே அது செய்யப்படவேண்டும் என்று பலராலும் கருதப்பட்டதால் பஞ்சநாத முதலியார் அவர்களின் தலைமையில் ஒரு கமிட்டி அமைக்கப்பட்டு, நிதி வசூல் செய் யப்பட்டது. ஏலம் எடுத்த திருச்சி இரத்தின வேலு அவர்கள் ஏலம் எடுத்த தொகைக்கே காரை விட்டுக் கொடுத்தார்.

காரை ஏலம் எடுத்து அதனை திருச்சி பாப்புலர் ஆட்டோ மொபைல் ஒர்க்ஷாப் கம் பெனியில் பழுது பார்த்து புது கார்போல் மாற்றி அமைக்கப்பட்டது.

இந்தக் காரை தந்தை பெரியார் அவர்களி டம் வழங்கும் நிகழ்ச்சி ஒரு விழாவாக 14.1.1951 அன்று மாலை 5.30 மணிக்கு திருச்சி பெரியார் மாளிகையில் நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு திராவிடர் கழக மத்திய நிர்வாகக் குழுத்தலைவர் தி.பொ. வேதாசலம் தலைமை வகித்தார். நன்கொடை அளிக்கப்ப டும் காரைப்பற்றியும், அது இரண்டரை ஆண் டாக 65,000 மைல் சுற்றுப் பிரயாணம் செய்து தமிழ்நாட்டில் இந்தக்கார் மூலம் பெரியார் ஆற்றிய தொண்டைப்பற்றியும் அதனால் ஏற் பட்ட பலனைப்பற்றியும் அவர்தம் தலைமை உரையில் குறிப்பிட்டார்.

புதுக்கோட்டை இராமச்சந்திர துரை, திருச்சி 'சமரசம்' ஆசிரியர் சுல்தான் பாக்தாத், 'தொண்டு' ஆசிரியர் வ.வீராசாமி ஆகியோர் பாராட்டுரை வழங்கினார்கள். கார் அளிப்புக்

குழுத்தலைவர் பஞ்சநாத முதலியார் காரை தந்தை பெரியாரிடம் வழங்கினார்.

தந்தை பெரியாரின் இலட்சிய வெற்றி!

காரைப் பெற்றுக்கொண்ட தந்தை பெரி யார் அவர்கள் குறிப்பிட்டதாவது: இந்தக் கார் என்னுடையது அல்ல. கழகத்துக்காக நன் கொடையாகக் கொடுக்கப்பட்டுள்ளது. இதற்காக நன்கொடை அளித்த பொதுமக்கள் கழகப் பணிக்கு என்னை ஆளாக்கி என்னிடம் வேலை வாங்கவே கழகத்துக்கு நன்கொடை யாக அளித்தார்கள். அவர்கள் விருப்பப்ப டியே என் ஆயுள் முடியும்வரை கழகத் தொண்டு ஆற்றுவேன். இந்தக் கார் பிரயா

With the Best Compliments from ☎ 20572

DEALER

Zenith, TATA, GST, Apollow, G.I. Pipes, R. Brand & Other fittings, PVC Pipes & Fittings, LPC Jet Pumps, Genuine Spares at reasonable rate.

UMAYAL PIPE SUPPLIERS

199, Anna Salai,
Thanjavur - 613 001.

Sister Concern

UMAYAL PIPE TRADERS

1, Narayana Pillai Street,
Mayiladuthurai - 609 001.
☎ 2275

ணத்தின்போது அல்லது இந்தக் காரில் சென்று பணியாற்றும்போது எனது உயிர் நீங்குமானால், ஆவி அடங்குமானால் அதுதான் எனக்கு இலட்சிய வெற்றி அடைந்ததாகும்; பொதுமக்களின் நம்பிக்கைக்குப் பாத்திரமானதாகும் என்று ஒரு மணி நேரம் உரை ஆற்றினார். 6, 7 ஆயிரம் பேர் திரளாக அவ்விழாவில் கூடியிருந்தார்கள்.

தொகுப்பு என்றும், இவைகள் எதுவும் அந்நாளில் சர்க்காரால் தடை செய்யப்பட்டவைகள் அல்ல என்றும் இரண்டாவது எதிரி வாதிக்கிறார். மூன்றாவது எதிரி இப்புத்தகம் அச்சடிப்பது சம்பந்தமாக ஏற்பட்ட தகவல்கள் எதுவும் தமக்குத் தெரியாதென்கிறார்.

இப்புத்தகத்தின் உள் அட்டைப்பகுதியி

''பொன் மொழி'' வழக்கில் நீதிபதி தீர்ப்பு!

பிராமண சமூகத்தின்மீது இதர சமூகங்களுக்குப் பகை உணர்ச்சியோ வெறுப்புணர்ச்சியோ ஏற்படும் வகையில் ''பொன் மொழி'' என்ற தமிழ்ப் புத்தகத்தை வெளியிட்ட எதிரிகள் மூவரும் இ.பி.கோ. 153 (எ) பிரிவின்படி குற்றம் செய்ததாக திருச்சி ஜில்லா மாஜிஸ்திரேட் கோர்ட்டில் செய்யப்பட்ட பிராது முதல் எதிரி புத்தகத்தின் ஆசிரியர்; இரண்டாவது எதிரி வெளியிடுபவர்; மூன்றாவது எதிரி அச்சிட்டவர்.

சர்க்காரின் உள்நாட்டு இலாக்காவின் *1-3-1950* - ம் தேதியிட்ட *850* எண்ணுள்ள அனுமதி உத்தரவின் மீது இப்பிராது தொடரப்பட்டிருக்கிறது.

சர்க்கார் சார்பில் மூன்று சாட்சிகள் விசாரிக்கப்பட்டனர்.

முதல் சாட்சி புதுக்கோட்டை ரிப்பன் அச்சகத்தின் நிர்வாகி; மூன்றாவது எதிரி அச்சகத்தின் உரிமையாளர்.

இரண்டாவது எதிரி கொடுக்கப்பட்ட ஆர்டரின் மீது இப்புத்தகம் அச்சிடப்பட்டிருக்கிறது. முதல் எதிரியின் அனுமதி அங்கீகாரத்தின் மீது இப்புத்தகம் வெளியிடப்பட்டிருக்கிறது என்று இரண்டாவது எதிரியால் ஷ்டி புத்தகத்தின் தலைப்புப் பகுதியில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. முதல் எதிரியின் அனுமதியின் மீதே தாம் அப்புத்தகத்தை வெளியிட்டதாகவும், பல ஆண்டுகளாக முதல் எதிரியால் எழுதப்பட்டும் பேசப்பட்டும் வந்தவைகளின் பொறுக்கு மணிகளே இப்புத்தகத்தின்

விருந்தே இது முதல் எதிரியின் அனுமதியின் மீது வெளியிடப்பட்டது என்பது நன்கு விளங்கும். இதுதான் முதல் பதிப்பு - முதல் எதிரியின் பழையநாள் பேச்சுக்கள் எழுத்துக்களிலிருந்து பொறுக்கி எடுக்கப்பட்டவைகளாயிருக்கலாம். ஆனால், புத்தக வடிவில் வந்தது இது முதல் பதிப்பாகும். இதில் பல பகுதிகளில் நான் கோடிட்டுள்ள சொற்கள் பிராமண சமூகத்தின் மீது பொதுமக்களுக்கு வெறுப்பு ஏற்படுமாறு செய்யக்கூடியவையாகும்.

ஆட்சேபகரமான பகுதிகள்

1. சைவமதம் என்றால் என்ன? அது பார்ப்பன மதம் அல்லாமல் வேறு தனிமதம் என்றோ யாராவது சொல்ல முடியுமா?

2. ஒரு பார்ப்பானாவது செல்லாக்காசாவது கோயில் குளம் - ஒரு தான தருமம் இவற்றிற்குக் கொடுத்திருப்பானா? அப்படி இருக்க, இவ்வளவு செய்தும் நாம் ஏன் சூத்திரர்களாக இருக்கவேண்டும்? அவர்கள் மட்டும் ஏன் ஒன்றும் செய்யாமலே நம்மை ஏமாற்றி உண்டு பிராமணர்களாய் வாழ வேண்டும்?

3. குழவிக் கல்லையும், பித்தளைப் பொம்மைகளையும் வைத்துக்கொண்டு இது சாமி, இது சாமி பெண்டாட்டி, இதற்கு நாலு கால பூஜை செய்யவேண்டும் என்றெல்லாம் கூறி நம் பணத்தைப் பிடுங்கித் தின்னும் பார்ப்பானையும் அவனை அதற்கு அனுமதித்து வரும் குழவிக்கலையும்

With Best Wishes from

DEVI ELECTRICALS

(Electrical Suppliers)

Shop: 21343
Ext. Godown
Resi: 22429

1083, East Main Street,
Thanjavur - 613 001.

ஒழிக்கவேண்டுமென்று தானே நாங்கள் ஆசைப்படுகிறோம்.

4. கடவுளின் பெயரால் உங்களை மட மைக்கும், மூடநம்பிக்கைக்கும் ஆளாக்கி

சோம்பேறி சுக வாழ்வு வாழும் பார்ப்பனர் களை - உங்களைத் தீண்டாதவர் என்று ஒதுக்கி வைத்து உங்களுக்காக கடவுளிடம் விண்ணப்பம் செய்வதாகக் கூறி தற்காப்பற்று வாழும் பார்ப்பனர்களை ஒருபோதும் நம்பி மோசம் போகாதீர்கள்.

5. பார்ப்பனக் கடவுளுடைய யோக்கிய தையைச் சொல்லப் புறப்பட்டால் கையும் வாயும் காகிதமும்கூட நாற்றமெடுத்துவிடும்.

6. வடநாட்டான் ஒழிந்தால் பார்ப்பனர் கள் அடங்கி விடுவார்கள். பின், ஜாதி முதலி யவற்றை அவர்களே மூட்டை கட்டி விடு வார்கள்.

7. தீண்டாமை விலக்கென்று கூறி கோவில் திறந்து விட்டார்களே, இன்னும் பார்ப்பான்தானே மணியடித்து வருகிறான்; தட்டில் விழுகிற காசு அவனுக்குத்தானே இன்னும் போய்க்கொண்டிருக்கிறது?

8. பார்ப்பனர்களுக்கு ஒன்று கூறுகி றேன்; நீங்கள் கடவுள், சாஸ்திரம், மதம் மீது பழியைப் போட்டு நாட்டுக்குரிய - நாட்டை ஆண்ட எங்கள் இனத்தவர்களை ஏமாற்றிப் பிழைத்ததை இந்த 1949-ம் ஆண்டோடு மூட் டைகட்டி வைத்துவிட்டு பகுத்தறிவுக்கு இடம் கொடுங்கள். மனிதத்தன்மையை வள ருங்கள்.

9. நான் எனது 17-வது வயதிலேயே இந் தக் கடவுள்களையும் இந்தப் பார்ப்பனர்க ளின் பித்தலாட்டங்களையும், எதிர்க்க ஆரம் பித்துவிட்டேன். அதிலிருந்து இன்று வரைக் கும் சுமார் 53 ஆண்டுகளாக நானும் பகுத்தறி வுப் பிரச்சாரம் செய்து வருகிறேன். இதனால் நானென்ன செத்து விட்டேனா? அல்லது எனக்கு இழிவு ஏற்பட்டுவிட்டதா? இல் லையே! பின் ஏன் பகுத்தறிவு வழி நடக்க அஞ்சுகிறீர்கள்? அச்சம் விடுங்கள்! அறிவு பெற்று எழுங்கள்!

இவைகளில் கையாளப் பட்டிருக்கும் சொற்களிலிருந்து ஆசிரியரின் வெறுப்பு உள் ளம் விளங்கும். இத்தகைய நோக்குடன் கூடிய புத்தகத்தை வெளியிட்ட இரண்டாவது

எதிரியும் இந்நோக்கத்தைக் கொண்டவர் என் பதும் தானாகவே உணரப்படுவதாகும். மூன் றாவது எதிரிக்கு இது அச்சிடப்பட்டது தெரி யாதென்றாலும், அவரே அச்சக உரிமையாள ராகயிருப்பதாலும், நம் முன்னுள்ள சில ஆதாரங்களிலிருந்தும் மூன்றாவது எதிரிக்கு நட்ப்பு விஷயம் தெரிந்திருக்கிறது என்று எண்ணுவதற்கு இடமிருக்கிறது.

எனவே, இம்மூன்று எதிரிகள் மீதும் குற் றப்பத்திரிகை வாசிக்கப்பட்டது, மூன்று எதி ரிகளும் தாங்கள் குற்றவாளிகளல்ல என்று கூறினார்கள்.

எதிரிகளின் வாக்குமூலம்

எதிரிகள் சர்க்கார் தரப்பு சாட்சிகளை குறுக்கு விசாரணை செய்யவில்லை. முதல் எதிரியும் இரண்டாவது எதிரியும் எழுத்து மூலம் வாக்கு மூலம் (ஸ்டேட்மெண்ட்) கொடுத்தார்கள். முதல் எதிரி தமது வாக்கு மூலத்தில், குற்றச் சாட்டிலுள்ள பகுதிகள் தனது முன்னாளின் பேச்சுக்களில் காணப்படு பவைகள் என்றும், ஜனநாயகக் குடி அரசில் பிராமணீயத்திற்கு அவசியமோ தேவையோ இல்லை என்பதை எடுத்துக் காட்டுகின்றன என்றும் குறிப்பிட்டுள்ளார்.



முதல் இரு எதிரிகளின் சார்பில் ஒவ்வொரு சாட்சியும் விசாரிக்கப்பட்டது. எதிரிதரப்பின் முதல் சாட்சி ஒரு எழுத்தாளர்; அவருக்கு முதல் எதிரியை 25 வருடங்களாகத் தெரியுமென்று கூறினார். முதல் எதிரி அரசியல் உலகில் செய்த காரியங்களை விளக்கினார். ஆட்சேபகரமானவைகள் என்று சொல்லப்படும் இப்பகுதிகள் பிராமணர்களுக்கோ, பிராமண சமுதாயத்திற்கோ எத்தகைய கேடும் விளைவிக்கவில்லை என்றும், ஒன்றுபட்ட சமுதாயமாக விளங்குவதற்கு பிராமணீயம் எவ்வாறு தடைக்கல்லாக இருக்கிறது என்பதை எடுத்துக் காட்டும் எண்ணத்துடனே இவை கூறப்பட்டு வந்ததென்றும், ஆட்சேபகரமானதென்று சொல்லப்படும் கடைசி பாரா பல பகுதிகளின் கருத்து என்றும் மேலும் எடுத்துக் காட்டினார். இரண்டாவது சாட்சியும் இதுபோன்ற எழுத்தாளர் தான். முதல் சாட்சியைப் போலவே இவரும் சாட்சியமளித்தார்.

பிராமணர்பற்றிய விளக்கம்

எதிர் தரப்பில் ஆட்சேபகரமானவைகள் என்று சொல்லப்படுபவைகள் பிராமணர்களுக்கோ பிராமண சமூகத்திற்கோ விரோதமானதல்ல வென்று வாதிக்கப்பட்டது.

நாமமும் உச்சிக்குடுமியும், பிராமணர்களை மட்டும் சுட்டிக் காட்டுபவைகளல்லவென்றும், இதர சமூகத்திலும் இத்தகைய அடையாளங்கள் உடையவர்கள் இருக்கிறார்கள் என்றும், பிராமணர் என்ற சொல் பிராமணர்களை மட்டும் குறிப்பதல்ல வென்றும், விசுவாசப் பிராமணர், பட்டுநூல்கார பிராமணர் போன்றவர்களையும் குறிப்பிடலாம் என்றும்,

'நம் பணத்தைப் பிடுங்கித் தின்னும்' பார்ப்பாஜை என்பது பிராமணர்களை அல்ல, பிராமண புரோகிதர்களை - குருக்களைக் குறிக்கும் என்றும் வாதிக்கப்பட்டது.

குறிப்பிட்ட பகுதிகள் பிராமணர்களையோ பிராமண சமூகத்தையோ குறிப்பிடுபவைகளா என்று முடிவு செய்வதற்கு புத்தகம் முழுவதையும் எடுத்துக்கொள்ளவேண்டும் என்று நான் கருதுகிறேன். இக்கருத்து எதிர்தரப்பாலும் ஒப்புக் கொள்ளப்பட்டிருக்கிறது. பிராமணீயத்தைக் குறித்த எதிர் தரப்பின் வாதங்கள் கடினமானவைகள். தமிழ் மொழி நிபுணர்களுக்குத்தான் அவர்கள் கருத்து விளங்கும்; சாதாரண பாமரமக்களுக்கு விளங்காது.

வாசகங்கள் எழுதப்பட்டிருக்கும் விதம் பிராமணர்கள் மீதோ பிராமண சமுதாயத்தின் மீதோ வெறுப்படையச் செய்யக்கூடியதாகவே இருக்கிறது. எனவே, எதிரிகளின் வாதங்களை என்னால் ஒப்புக்கொள்ளமுடியவில்லை.

"குற்றம் குற்றமே!"

இந்திய அரசியல் சட்டத்தின் 19(1)(அ) பிரிவின் கீழ் அளிக்கப்பட்டுள்ள பேச்சு சுதந்திரத்தின்படி இது குற்றமாகாது என்று எதிர்தரப்பில் வாதிக்கப்பட்டது. ஆனால், அதே விதியின் 2-வது பிரிவில் ஒழுக்க முறைக்கு கேடு விளைவிப்பவைகளாயிருந்தால் நடைமுறை சட்டம் அமுல் செய்வதை தடுக்காது என்று கூறப்பட்டிருக்கிறது. பிரஸ்தாப பகுதிகளில் உபயோகிக்கப் பட்டுள்ள சொற்கள் பிராமண சமுதாயத்தின் ஒழுக்க முறையைக் குறை கூறுவதாகவேயிருக்கிறது என்று நான் திருப்தியடைகிறேன்.

எதிரிகள் மூவர் மீதும் பிராது ருசுவாய் விட்டது. எனவே, இ.பி.கோ. 153 ஏ. பிரிவின் கீழ் எதிரிகள் மூவரும் குற்றவாளிகள் என்று முடிவு செய்து அவர்களைத் தண்டிக்கிறேன்.

இக்குற்றத்திற்கு சிறைவாசமோ, அல்லது அபராதமோ அல்லது இரண்டுமோ விதிக்கப்படலாம். தண்டனை விதிப்பதன் மூலம் குற்றவாளிகள் இதன் முக்கியத்துவத்

தந்தை பெரியாருக்குச் சிறை

தையுணர்ந்து இத்தகைய குற்றத்தை மீண்டும் செய்யாமலும், இத்தகைய பிரசாரங்களுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்காமல் இருக்கவும், ஒரு குறிப்பிட்ட சமுதாயத்தின் மீது பொது மக்களுக்கு ஏற்பட்டிருக்கும் வெறுப்பை மாற்றச் செய்யவும் உதவியாக இருக்கவேண்டும் என்பதே அதன் நோக்கமாகயிருக்கும் என்று நினைக்கிறேன்.

இந்நோக்குடன் பார்த்தால், சிறைத்தண்டனை தேவையில்லை. அபராதம் விதித்தால் போதுமென்று நினைக்கிறேன். மேலும் முதல் எதிரி வயதானவர் சிறைத்தண்டனை விதிப்பது அவசியமில்லை என்று கருதுகிறேன். இரு எதிரிகளைவிட முதல் எதிரிக்கு தண்டனை அதிகமாயிருக்க வேண்டும் என்று கருதுகிறேன்.

அபராதம் அல்லது சிறை!

இந்தக் கருத்துடன் கீழ்க்கண்டவாறு தண்டிக்கிறேன்:

முதல் எதிரிக்கு ரூ.700 அபராதம், கட்டத் தவறினால் 6 மாதம் வெறுங்காவல்.

இரண்டாம் எதிரிக்கு ரூ. 500 அபராதம், கட்டத் தவறினால் 4 மாதம் வெறுங்காவல், மூன்றாவது எதிரிக்கு ரூ.500 அபராதம், கட்டத் தவறினால் 4 மாதம் வெறுங்காவல்.

— ("விடுதலை," 30-9-1950)

தந்தை பெரியாரின் வாக்கு மூலம்

'பொன் மொழி' வழக்கில் நீதிமன்றத்தில் பெரியார் அவர்கள் எழுத்து மூலம் அளித்த வாக்குமூலம் (ஸ்டேட்மெண்ட்).

இரண்டாவது எதிரி என்னுடைய பேச்சுக்களிலிருந்தும் எழுத்துக்களிலிருந்தும் சில கருத்துக்களைத் திரட்டி புத்தக வடிவில் வெளியிட்டு தானே வருமானத்தை எடுத்துக் கொள்வதாகவும் என்னிடம் அனுமதி கேட்டார். நான் சரியென்றேன். ஆனால் இப்பொழுது பிராதில் கூறப்பட்டுள்ள தொகுப்புகள் என்னால் பொறுக்கி எடுக்கப்பட்டவைகஎல்ல. தெரிந்தெடுக்கப்பட்ட பகுதிகள் அச்சிடப்படுவதற்கு முன் என்னிடம் காட்டப்படவுமில்லை; விற்பனைக்குத் தயாராவதற்கு முன்னும் என்னிடம் காட்டப்படவில்லை. வெளியிட்ட பிறகுதான் நான் அதை பார்க்கும் வாய்ப்பு கிடைத்தது. அதுவும், அதில் உள்ள வாசகங்களை நுணுக்கமாகப் படித்துப் பார்த்து கவலை கொள்ளவில்லை. அவைகள் என்னால் எழுதப்பட்ட, பேசப்பட்டவைகள்தானா என்பதும் எனக்கு தெரியாது.

இவ்வளவு காலத்திற்குப் பிறகு அவைகள் சரியாகக் குறிப்பிடப்பட்டுள்ளன என்றும் என்னால் சொல்லமுடியாது.

பெரும்பாலும் அவைகள் அக்காலங்களில் பயிற்சியில்லாத இளைஞர்களால் நெட்டெழுத்திலே எழுதப்பட்டவைகள். மேலும் அவைகள் வெளியிடுபவர்களின் கருத்துக்கேற்றபடி வெளியிடப்பட்டிருக்கலாம். எனவே அவைகளிலிருந்து தொகுக்கப்பட்ட இத்தொகுப்பு நான் அன்று என்ன கருத்துடன் சொல்லியிருப்பேனோ அதைக் கொண்டிருக்க முடியாது. இ.பி.கோ. 153ஏ பிரிவுப் பற்றிய விளக்கம் எனக்கு பாதுகாப்பளிக்கிறது. நான் எப்போதும் வகுப்பு துவேஷம் உண்டு பண்ணுகிறதில்லை. கடந்த கால் நூற்றாண்டாக, இந்நாட்டிலே மக்கள் சமுதாயத்தில் வகுப்பு வேற்றுமை, பொறாமை, மனக்கசப்பு, பகைமை ஆகியவைகளை வளர்க்கும் காரியங்களை எதிர்த்துப் போராடி வருகிறேன்.

கடந்த பல நூற்றாண்டுகளாகவே, இந்து சமுதாயம், பிராமணர், பிராமணரல்லாதார், தீண்டப்படாதார் -

என மூன்று பிரிவினர்களாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றனர். முதல் பிரிவினர் கல்வியில் ஏகபோக உரிமையைக் கொண்டாடி வருகிறார்கள். இதனால் அறிவு வளர்ச்சி பெற்று,

வருகிற ஆட்சியாளர்களின் கைப்பாவைகளாக விளங்குகிறார்கள். குறைந்த முயற்சியிலே அதிக லாபத்தை நன்மையை அடையும் தன்மையில் இருக்கிறார்கள். இது தவிர, அவர்கள் எல்லா வகுப்புக்கள் மீதும் மதத்தின் பேரால் ஆதிக்கம் செலுத்தி வருகிறார்கள். சாதிப் பிரிவுகள்தான் சமுதாய அமைப்பை உண்டு பண்ணியிருக்கிறது.

நான் கடைசியாக எடுத்துக்காட்டியுள்ள தீண்டப்படாத பிரிவினர் இந்து மதத்திற்குப் புறம்பானவர்கள். அவர்களுக்கு கல்வி, சொத்து, சமுதாய அந்தஸ்து முதலியவைகள்

With Best Compliments from

TNGST. No. 403149 P.P. 21827

MEENAKSHI & CO.,

GENERAL MERCHANTS, PAPER & STATIONERES

1784/5, Manojiappa Street, Thanjavur - 613 009.

எங்களிடம் பள்ளி மாணவ-மாணவிகளுக்கும் கல்லூரி
மாணவ-மாணவிகளுக்கும் தேவையான அனைத்து
நோட்டு புத்தகங்கள் தரமான முறையில் கிடைக்கும்.
மற்றும் அரசு நிறுவனங்களுக்கு தேவையான அனைத்து
ஸ்டேசனரி சாமான்களும் பேப்பர் வகைகளும்
மொத்தமாகவும், சில்லரையாகவும் கிடைக்கும்
என்பதை தந்தை பெரியார் 115-வது பிறந்த நன்னாளில்
எங்களின் நிறுவனத்தின் இதய பூர்வமான
வாழ்த்துக்களோடு தெரிவித்துக் கொள்கின்றோம்.

கிடையா, அவர்கள் அடிமைகள்.

மேற்கூறிய இரு பிரிவினர்களுக்குமிடையே உள்ளவர்கள்தான் சாஸ்திரப்படி சூத்திரர்கள் என்று அழைக்கப்படுகிற பார்ப்பனரல்லாத பெருங்குடி மக்கள். இவர்களில் முதற்படியிலுள்ள சிலருக்கு கல்வி வசதி கிடைத்தது. இவர்கள் பார்ப்பனர்களைப் போல் அவர்களின் பழக்க வழக்கங்களையே பின்பற்றினார்கள்; ஆட்சியாளர்களின் பார்ப்பன சமுதாயத்தின் 'ஆமாம்' போடும் சாமிகளானார்கள். அவர்கள் தங்களை 'அதிர்ஷ்ட' சாலிகள் என்றும், தங்களை வைதீக சமூகம் மதம் ஆகியவைகளைச் சேர்ந்தவர்கள் என்றும் கருதிக்கொண்டு காலத்தோடு ஒத்துப் போய்க் கொண்டு எத்தகைய சீர்திருத்தத்திற்கும் ஒப்புக் கொள்ளாதவர்களாயுமிருந்து வருகிறார்கள். நடுத்தர மக்களாகிய சூத்திரர்கள் அல்லது பார்ப்பனரல்லாதார்களில் பெரும்பாலோர் ஏழைகள், தரித்திரர்கள், கல்வியறிவில்லாதவர்கள். ஏறக்குறைய மூன்றாவது பிரிவினர்களான தீண்டப்படாதவர்களை ஒத்தவர்கள். இவர்களை சர்க்கார் பிற்பட்ட வகுப்பார் என்று பிரித்து வைத்துள்ளார்கள்.

'பிரிவுகள் - வேற்றுமைகளை நான் விரும்பவில்லை!'

1919-ம் ஆண்டு இந்திய சட்டத்தை நிறைவேற்றிய பிரிட்டிஷ் பார்லிமெண்டார், மற்ற சமூகத்தார் மீது சிறுபான்மையான சமூகம் ஆதிக்கம் செலுத்தி வருவதை ஒப்புக்கொண்டு, பார்ப்பனரல்லாத பெரும்பான்மையான சமூகத்திற்கு தனித்தொகுதி ஸ்தானங்கள் ஒதுக்கிற்று. ஒரு வருடத்திற்கெல்லாம் பார்ப்பனரல்லாதார் இயக்கம் தோன்றியது. நல்ல ஆதரவும் கிடைத்து, 1920 - 24-ல் பொதுத் தேர்தல்களில் வெற்றி பெற்று சென்னை ஆட்சியை நிர்வகித்து வந்தது.

முதல் எதிரியாகிய நான், அந்நாளில் இந்திய தேசிய காங்கிரசில் முக்கிய பதவிகளை வகித்து வந்தேன். அதாவது மாகாண காங்கிரஸ் கமிட்டியில் முக்கிய பொறுப்பான பதவியிலிருந்து வந்தேன், சமுதாயத்திலுள்ள இத்தகைய பிரிவுகள் - வேற்றுமைகள் இருப்பதை நான் விரும்பவில்லை. பார்ப்பனர் பார்ப்பனரல்லாதார் என்ற பிரிவுகள் உடனே ஒழிக்கப்பட வேண்டுமென்று கருதினேன். படித்த

With Best Compliments from

L.No. 31/91-92
Rc.No.

RKB அரிசி கடை

இராமலிங்கசாமி அறக்கட்டளை அங்காடி,
21-A, டேனியல் தாமஸ் நகர்,
(பழைய ஹவுசிங் யூனிட் அருகில்)
தஞ்சாவூர்-613 007.
தொலைபேசி: 22547

பார்ப்பனர்கள் - வெளிநாட்டுக்குச் சென்று திரும்பிய பார்ப்பனர்கள் என்னைப் போலவே கருதினார்கள். ஆனால், வைதீகப் பார்ப்பனர்களும் சாஸ்திரங்களையும் புராணங்களையும் படித்து ஊறிப்போன பார்ப்பனரல்லாத பெரும்பான்மையோரும் எதிர்த்தார்கள். எனவே, நானும் சில தோழர்களும் காங்கிரசைவிட்டு வெளியேறினோம்.

வைக்கத்தில் தீண்டப்படாதார்களுக்காகப் போராடினேன். கோவிலுக்குப் போகும் ரோட்டில் தாழ்த்தப்பட்ட தோழர்களை அழைத்துச் சென்றேன். அதன் காரணமாக திருவிதாங்கூர் சர்க்காரால் ஒரு தடவைக்கு மேலாகவே சிறைப்படுத்தப்பட்டேன். ஆனால் என் முயற்சி வெற்றியடைந்தது.

கோயில் நுழைவு சட்டமாக்கப்படுவதற்கு வெகு நாட்களுக்கு முன்னமே நான் கோயில் நுழைவை ஆதரித்து வந்திருக்கின்றேன். என்னுடைய தோழர்கள் இதற்காக ஈரோட்டிலும் திருவண்ணாமலையிலும் கோவிலுக்குள் நுழைந்தார்கள். இதிலும் வெற்றியடைந்தேன். தென்னிந்திய ரயில்வேயால் நடத்தப்படும் உணவு விடுதிகளில் பார்ப்பனர் பார்ப்பனரல்லாதார் என்ற பிரிவுகள் ஒதுக்கப்பட்டிருப்பதை நான் எதிர்த்தேன். இப்பிரிவுகள் நீக்கப்படாவிட்டால் திருச்சி ஜங்ஷன் பிளாட்பாரத்தில் சத்யாக்ரகம் செய்யப்போவதாக அறிவித்தேன். அதிலும் நான் வெற்றியடைந்தேன். இவ்வேற்றுமைகளைக் குறிக்கும் பலகைகளை அப்புறப்படுத்துமாறு ரயில்வே போர்டார் உத்தரவு பிறப்பித்தார்கள்.

பொதுவிடங்களில் வகுப்புகளுக்கு இருக்கும் குறைகள் நீக்கப்பட வேண்டுமென்று நான் கிளர்ச்சி செய்தேன். அதன் பயனாக, இதுபற்றிய சட்டம் இன்று சட்ட புத்தகத்தில் ஏறிவிட்டது.

வகுப்புவாரி பிரதிநிதித்துவத்திற்காக நான் அன்று போராடினேன். அதே கொள்கையை இன்றைய ஆட்சியாளரே ஒத்துக் கொள்கிறார்கள். பிரதிநிதித்துவமில்லாத வகுப்புகளுக்கும் எந்த அளவுக்கு அவர்கள் பயத்தைப் போக்கமுடியுமோ அதையும் இன்றைய ஆட்சியாளர் செய்து வருகிறார்கள்.

இப்பொழுது பிராதில் காணப்படும் பகுதிகள், நீண்ட நாட்களுக்கு முன் கடந்த 25 ஆண்டுகளாக நான் பேசியவைகளிலிருந்து பொறுக்கி யெடுக்கப்பட்டவைகளென்று வைத்துக் கொண்டாலுங்கூட, பிராமணீயம் ஜனநாயகத்துக்கோ குடியரசுத் தன்மைக்கோ ஏற்றதல்ல, பயனுள்ளதல்லவென்று என்னால் குறை கூறப்பட்டவைகள், இந்து சமுதாயத்திலுள்ள சாதிப் பிரிவுகளையும் வைதீகத் தன்மையையும் நான் எதிர்த்து வந்திருக்கின்றேன். உருவ வணக்கத்தையும் அதனால் நாட்டில் ஏராளமான பணம் பாழாவதையும் நான் கண்டித்து வந்திருக்கிறேன். இவ்வகளுக்கு ஆதாரமான புராணங்கள் சாஸ்திரங்கள், வேதங்கள் இன்று பயனளிக்காது என்று எடுத்துக்காட்டி வருகிறேன். பகுத்தறிவுக்கு இவை புறம்பானவைகள் என்பதையும் எடுத்துக் காட்டியிருக்கிறேன்.

எவ்வளவு பழமையானதாயிருந்தாலும், என்ன வரலாற்றைப் பெற்றிருந்தாலும், உண்மையை எடுத்துக்காட்டவேண்டும். சமுதாயத்திற்கேற்றதல் லாத சில முறைகள் நீக்கப்பட வேண்டுமானால், அவைகள் பற்றி மக்கள் யாவரும் உணருமாறு எடுத்துவிளக்கப்பட வேண்டும். அப்பொழுதுதான் ஏதாவது சீர்திருத்தம் செய்யமுடியும். உள்ளதை உள்ளவாறு எடுத்துக்காட்டப்படாவிட்டால் சமுதாயத்தில் எத்தகைய சீர்திருத்தமும் செய்யமுடியாது.

ஒரு வகுப்புக்கும் மற்ற வகுப்புக்கும் துவேஷத்தையுண்டுபண்ண வேண்டுமென்ற எண்ணம் எனக்கில்லை. வகுப்பு என்பது தெளிவாக இல்லை. எந்தெந்த வகுப்புகளுக்கிடையே துவேஷத்தை வளர்க்கும் எண்ணம் எனக்கிருக்கிறது என்பதை வழக்கில் எடுத்துக்காட்டப்படவில்லை.

பிராமணர்கள் என்பதெல்லாம் வைதீகப் பிற்போக்கு பிரிவினர்களையே குறிக்கும். பல பார்ப்பன சீர்திருத்தவாதிகள் எனக்கு நண்பர்களாயிருக்கிறார்கள்.

என்மீது சாட்டப்பட்டுள்ள குற்றங்கள் குறிப்பிடுவதுபோல் நான் குற்றவாளியல்ல. இவ்வாறு தந்தை பெரியார் அவர்கள் எழுத்து வடிவில் வாக்குமூலத்தை அளித்தார்.

(ஆதாரம் 'விடுதலை' 2.10.1950 பக்கம் 1,3)

ஸ்ரீ தர்ம ஸம்வர்த்தினி விலாஸ் R.C. No.: 402144

K.S.K. நாராயணசாமி செட்டியார்

டீலர்: செட்டிநாடு சிமெண்ட்
உரம் & பூச்சிமருந்து

வல்லம் - 613 403, தஞ்சாவூர் மாவட்டம்

"பெயர் சொன்னால் போதும் தரம் எளிதில் விளங்கும்"
"செட்டிநாடு சிமெண்ட்"

"அன்பு மக்கள் கடலின் மீதில்!"

"பொன்மொழி" என்ற நூலைப் பறிமுதல் செய்து தந்தை பெரியார் அவர்களுக்குத் தண்டனையும் வழங்கப்பட்டதைத் தொடர்ந்து தமிழ்நாடெங்கும் பொது மக்களும் கழகத் தோழர்களும் கொந்தளித்து எழுந்தனர்; தீர்ப்பு வெளியானது என்று கேள்விப்பட்ட அன்றே ஈரோட்டில் கண்டனக் கூட்டம் நடத்தி - துண்டு வெளியீடுகள், சுவரொட்டிகள் வினியோகித்ததற்காக ஈரோடு பி.சண்முகவேலாயுதம், எம். சுப்பையா, கே. சுப்பண்ணா, எல். பழனிவேலு, கே. ஜெக்கரியா ஆகியவர்களை 151 -வது பிரிவின் கீழ் காவல் துறையினர் கைது செய்து காவலில் வைத்தனர்.

தமிழ் நாடெங்கும் கண்டனப் பொதுக் கூட்டங்கள் நடைபெற்றன.

எடுத்துக்காட்டாக சென்னையில் மட்டும் மாவட்ட திராவிடர் கழகம் சார்பாக் 22.9.50 முதல் .. 10.50 வரை என்று வரிசையாகப் பல பகுதிகளிலும் பொதுக் கூட்டங்கள் அறிவிக்கப்பட்டன.

அக்கிரகார ஏடுகள் எரிக்கப்பட்டன!

ராபின்சன் பூங்கா மைதானத்தில் மாலை நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் எஸ். இராமநாதன், சாமி, சிதம்பரனார், பி. பாலசுப்பிரமணியம், குத்தூசி எஸ். குருசாமி முதலியோர் உரை ஆற்றினர். கூட்டத்தினர் 'ஹிந்து' 'சுதேசமித்திரன்' ஏடுகளை எரியூட்டினர்.

நாடெங்கும் கிளர்ச்சியின் காரணமாகத் தோழர்கள் கைது செய்யப்பட்டனர்.

கே.பி. சந்திரன், சம்பந்தம், ஆரணி மதியழகன், எ.வி. துரைசாமி, பி.டி.சுப்பிரமணியம், ஏ. துரை, ஜி.கே. சாமி, மூர்த்தியப்பன், எஸ். மூர்த்தி, எம்.கே.டி. சுப்பிரமணியம், கே.எஸ். கருணாநிதி, துலுக்காணம் ஏ. கிருஷ்ணன், கே. சோமசுந்தரம், ஏ.டி. சங்கர், கோ. பச்சையப்பன், தங்கதுரை, எஸ்.யு. மணி, பி. மணி, ராஜா ஆகியோர் சென்னையில் கைது செய்யப்பட்ட தோழர்கள் ஆவார்கள்.

பெரியார் சிறைக் கோட்டம் சென்றது குறித்துத் தமிழ்நாட்டு மக்கள் ஒரு முகமாக எழுந்து நின்றதைச் சமாளிக்க முடியாமல் பத்து நாட்களிலேயே 28.9.1950 அன்று காலை 10 மணிக்கு சென்னை அரசாங்கம் விடுதலை செய்தது.

15.10.1950 அன்று ஈரோடு டவுன் ஸ்கூல் மைதானத்தில் எம்.ஜி. அங்கப்பசெட்டியார் அவர்களின் தலைமையில் நடைபெற்ற பாராட்டுப் பொதுக்கூட்டத்தில், தாம் எந்த சூழலில் விடுதலை செய்யப்பட்டேன் என்பதைத் தந்தை பெரியார் அவர்கள் விளக்கினார்கள்.

யாரைப் பாராட்டுவது?

"நான் ஆறு மாதம் தண்டிக்கப்பட்டு இருந்தாலும், பத்தே நாளில் விடுதலையடைந்தேன். அப்படி விடுதலை அடைந்தற்கு யாரையாவது பாராட்ட வேண்டும் என்றால் உங்களைத்தான் பாராட்ட வேண்டும். ஏனென்றால் உங்களின் கிளர்ச்சியின் காரணமாகத்தான், என்னை சிறையில் வைத்திருந்தால் வெளியில் கிளர்ச்சி நடந்து கொண்டுதான் இருக்கும் என்று சர்க்கார் கருதி என்னை விடுதலை செய்தார்கள்.

இது சாதாரணமானதல்ல; 30 வருஷமாக தமிழ்நாட்டின் அரசியல் பொது வாழ்வு பற்றி எனக்கு நன்றாகத் தெரியும். எந்த காலத்திலும், எப்போதும், எந்த தலைவருக்கும் இது

மாதிரி - அதாவது மக்கள் செய்த கிளர்ச்சியினால் சிறையிலிருந்து விடுதலை கிடைத்ததில்லை. ஏன் - இந்தியாவிலேயே இதுவரைக்கும் யாருக்கும் இப்பேர்ப்பட்ட மாதிரியில் விடுதலை கிடைத்தது இல்லை....

என்னை விடுதலை செய்யும்படி பார்ப்பனர்களும், சட்ட சபை மெம்பர்களும் சர்க்காருக்கு வேண்டுகோள் மேல் வேண்டுகோள் விட்டார்களாம். ஆனால் இவர்களேதான் என்னைச் சிறைக்கு அனுப்புவதற்கு மூலகாரணமாய் இருந்தவர்கள். எதற்காக விடுதலை செய்யும்படிக் கேட்டுக்கொண்டார்கள் என்றால், நான் உள்ளே இருக்க இருக்க இங்கு அதிகமாகத் தங்களுக்கு பாதகமான காரியங்கள், அதாவது கழகக் கொள்கைகள் அதிகமாகப் பரவுகிறது என்பதைக் கண்டு, கலங்கித்தான் என்னை விடுதலை செய்யவேண்டும் என்று அவர்களாகவே மனுப்போட வேண்டி வந்திருக்கும்.

நான் சிறைக்குப் போனவுடன் தமிழ்நாட்டில் மிகச் செல்வாக்குப் பெற்ற சர்க்காரையே ஆட்டி வைப்பன என்று சொல்லத்தக்க மாதிரியில் இருக்கின்ற 'இந்து' 'சுதேசமித்திரன்' போன்ற பத்திரிகைகள் கொளுத்தப்பட்டன. அந்தப் பத்திரிகையெல்லாம் பகிஷ்காரம் செய்யத்தக்க அளவுக்கு உணர்ச்சி பெற்றார்கள். இதைக் கண்டு அந்தப் பத்திரிகைகள் மிகவும் பயந்து போயினபோல் தெரிகிறது. சென்னையில் எனக்குக் கிடைத்த ரகசியமான செய்திப்படி 'இந்து', 'மித்திரன்' பத்திரிகை ஆசிரியர்களும் சட்ட சபை மெம்பர்களும், 'போலீஸ் அதிகாரிகளும் என்னை விடுதலை செய்தால்தான் நிலைமையைச் சமாளிக்கமுடியும் என்று கூறினதன் பேரில்தான் விடுதலை செய்யப்பட்டதாகத் தகவல் கிடைத்திருக்கிறது. உடனே மந்திரி சபை 3 மணிக்குக் கூடி 3.15 மணிக்கு என்னை விடுதலை செய்துவிடலாம் என்று முடிவுசெய்து, 4 மணிக்கெல்லாம் ஜெயிலுக்குத் தந்தி அடித்துவிட்டார்கள்'' என்று தந்தை பெரியார் அவர்களே ஈரோட்டுப் பொதுக்கூட்டத்தில் பேசி இருக்கிறார்கள் என்றால் கடவுள் மறுப்பாளராக இருக்கக்கூடிய இனமீட்பர் தந்தை பெரியார் அவர்களுக்கு மக்கள் மத்தியில் எந்த அளவுக்குச் செல்வாக்கு இருந்தது என்பதைத் தெரிந்துகொள்ளலாம்.

எந்த அளவுக்கு மக்களின் அன்புக் கடலில் தந்தை பெரியார் அவர்கள் தெப்பமாக இருக்கிறார்கள் என்பதற்கு இந்த நிகழ்ச்சியே சரியான எடுத்துக் காட்டாகும்.

அரசு அறிக்கை

'பொன் மொழிகள்' நூல் வழக்கில் சிறைத்தண்டனை அளிக்கப்பட்ட தந்தை பெரியாரை விடுதலை செய்து சென்னை மாநில அரசு வெளியிட்ட அறிக்கை:

''இங்கு சில காலமாக வட இந்தியர்களுக்கு எதிராகவும், ஒரு சில வகுப்பாருக்கு எதிராகவும் வகுப்புத்துவேஷம் உண்டாகும் வகையில் சில ஸ்தாபனங்கள் பிரச்சாரம் செய்து வருவதை பொதுமக்கள் அறிவார்கள். இப்பிரச்சாரத்தைத் தொடர்ந்து அவ்வப்போது பிரசங்கங்கள், வெளியீடுகள் வெளிவந்து கொண்டிருக்கின்றன. தாராள நோக்குடன் பார்த்தால்கூட இவை சட்ட வரம்பிற்குட்பட்டவை என்று சொல்வதற்கில்லை. இது சம்பந்தமாக, சட்டத்தை மீறும் எத்தகைய காரியத்தையும் சர்க்கார் அனுமதிக்காது என்று பலமுறை எடுத்துக்காட்டப்பட்டிருக்கிறது.

முக்கியமல்லாத பேச்சுகளோ, வெளியீடுகளோ கவனிக்கப்படாமல் விடப்பட்டருக்கின்றன. ஆனால் முக்கியமான பேச்சுகள் அல்லது வெளியீடுகள் சம்பந்தமாக நடவடிக்கை எடுப்பதில் சர்க்கார் எப்பொழுதும் தவறியதில்லை.

இந்தக் கொள்கையின் அடிப்படையில் தான் நன்கு ஆலோசித்தே, 'பொன் மொழி' என்ற புத்தகத்தை எழுதியதற்காக இ.பி.கோ. 153 ஏ. பிரிவின் கீழ் திரு. ஈ.வெ. ராமசாமி அவர்கள் மீது வழக்குத் தொடருமாறு சர்க்கார் உத்தரவு பிறப்பித்தது.

'ஆரிய மாயை' என்ற ஓர் புத்தகத்தை எழுதியதற்காக திரு. அண்ணாதுரை மீதும் அதே பிரிவின் கீழ் வழக்குத் தொடர உத்திரவு பிறப்பிக்கப்பட்டது. இவ்விருவர்களும் இச் சட்டத்தின் கீழ் குற்றஞ்சாட்டப்பட்டு, ரூ.700 அபராதமும், அபராதம் கட்டத் தவறினால் ஆறுமாத சிறையும் என்று தண்டிக்கப்பட்டதாகத் தெரிகிறது. இவ்விருவர்களும் அபராதம் கட்ட மறுத்து சிறை வாசத்தை ஏற்றுக்கொண்டதாக மேலும் தெரியவருகிறது.

இவ்வழக்கை சர்க்கார் பரிசீலனை செய்து பார்த்ததில், இவர்களை சிறையில் அடைத்து வைக்கவேண்டிய அவசியம் என்று சர்க்கார் கருதவில்லை. அபராதம் கட்டுவதற்குப் பதில் சிறை புகுந்ததில் உள்ள மீதமுள்ள தண்டனை காலத்தைத் தள்ளுபடி செய்து, அவ்விருவரையும் விடுதலை செய்யுமாறு உத்திரவு பிறப்பிக்கப்படுகிறது''.

இவ்வாறு அரசின் அறிக்கையில் கூறப்பட்டது.

தந்தை பெரியாரின் கருத்து

மேற்கண்ட அரசின் அறிக்கைபற்றி ஈரோடு பொதுக் கூட்டத்தில் *(15.19.1950)* தந்தை பெரியார் தெரிவித்த கருத்து வருமாறு:

''நான் வெளியில் இருப்பதைவிட சிறைக்குள் அடைத்து வைத்திருப்பதனால் தங்களது நிலைமை மோசமாகப் போய்விடும் என்று என்னை விடுதலை செய்கிற சர்க்கார், என்னை விடுதலை செய்யும்படி வெளியிட்ட அறிக்கையில் மிக வீம்பாகப் பேசி இருக்கிறார்கள். அதாவது நான் செய்தது குற்றம் குற்றமேதான். அதற்காகத் தண்டிக்கப்பட வேண்டியது மிக அவசியந்தான். இந்த மாதிரியான பிரசாரங்களை வளரவிட்டுக் கொண்டிருப்பது கூடாது என்று மிகுந்த காரசாரமாக அறிக்கையின் முன் பகுதியில் கூறிவிட்டு, என்றாலும் இவரை விடுதலை செய்கிறோம் என்று கடைசியில் முடித்திருக்கிறார்கள். சாதாரணமாக சர்க்கார் அறிக்கையின் முன் பகுதியை யாராவது படித்துப் பார்த்தால் இந்த மாதிரியான காரியம் செய்ததற்கு ஆறு மாதம் தண்டனை போதாது, இன்னும் அதிகத் தண்டனை விதிக்கவேண்டும்; ஆதலால் அதற்குச் சர்க்கார் அப்பீல் செய்யவேண்டும் என்றுதான் முடிப்பார்கள். அவ்வளவு வேகமாக அறிக்கையின் முற்பகுதியில் சொல்லி விட்டு, கடைசியில் என்றாலும் விடுதலை செய்கிறோம் என்றால் என்ன அர்த்தம்? எதற்கு விடுதலை? உங்கள் கிளர்ச்சி

With Best Compliments from

"VIYEL" Industries

WELDING & ENGINEERING WORKS

3/3-D, Keela Chatram Road, Tennur, Trichy - 620 017.

Branch: 58-A, Mathuram Colony, Puthur, Trichy-17

☎ 33827

Manufacturer of:

Steel Buckets, Chairs, Tables, Collapsible Gates and Welded Mesh-Grills, Rolling Shutters etc.

யால் என்னை விடுதலை செய்துதான் ஆக வேண்டும் என்ற நிலைமைக்கு சர்க்கார் வந்து விட்டார்கள் என்று தானே அர்த்தம்''. என்று தந்தை பெரியார் அவர்கள் கருத்துத் தெரிவித் தார்கள்.

ஜாடை காட்டினார் பெரியார்



தந்தை பெரியாரின் 'பொன் மொழி' நூலுக்காகவும், அறிஞர் அண்ணாவின் 'ஆரியமாயை' நூலுக்காகவும் திருச்சி சப்டிவிஷனல் மாஜிஸ்டிரேட் 700 ரூபாய் அப ராதம்; கட்டத் தவறினால் ஆறுமாதம் சிறை என்று 18.9.1950 அன்று தீர்ப்பு வழங்கினார். அபராதம் கட்ட மறுத்து இருவரும் சிறை ஏகினர். திருச்சி சிறைச்சாலையில் இருவரும் பக்கத்துப் பக்கத்து அறையில் வைக்கப்பட்ட னர். ஒருவருக்கொருவர் பேச்சு இல்லை; ஆனால் தந்தை பெரியார் அவர்கள் உணவுப் பொருள்கள், தின் பண்டங்களை அண்ணா வுக்குக் கொடுப்பார். அப்பொழுது திராவி டர் கழகமும், தி.மு.க.வும் மாறுபாடு கொண்டு இருந்தகால கட்டம் அல்லவா?

10 நாள் கழிந்தது. திடீரென்று இருவரும் விடுதலை செய்யப்பட்டனர். 28.9.50 காலை 10 மணிக்கு அண்ணா அவர்களை அழைத்துச் செல்ல தோழர்களோ, வாகனமோ வர வில்லை. தந்தை பெரியார் அவர்களின் வேனில் அண்ணாவை ஏற்றிக் கொள்ளுமாறு தந்தை பெரியார் ஜாடை காட்டினார். அதன் படி அய்யாவும், அண்ணாவும் ஒரே காரில் வந்தனர். தந்தை பெரியார் திருச்சி புத்தூர் பெரியார் மாளிகையில் இறங்கிக் கொண்டு, அண்ணாவை சங்கரம் பிள்ளை வீட்டில் இறக் கிவரப் பணித்தார்.

சந்திரா மளிகை

வல்லம்

மளிகை சாமான்

பெரியாருடன் சிறையில் இருந்ததுபற்றி அண்ணாவின் நெகிழ்ச்சி

... திருச்சியில் எனக்குக் கிடைத்த வாய்ப்பு எப்படிப்பட்டது தெரியுமா தம்பி! பெரியாரும் அதே நாளில் அதே விதமான தண்டனை பெற்று அதே சிறைக்கு வந்தார்.

'ஆரிய மாயை' என்னும் ஏடு தீட்டியதற்காக எனக்குச் சிறை.

'பொன் மொழிகள்' தீட்டியதற்காகப் பெரியாருக்குச் சிறை.

திருச்சிக் கோர்ட்டாருக்கு இப்படியொரு காட்சியைக் காணவேண்டுமென்று ஆசைபோலும்! இரண்டும் தனித்தனி வழக்குகள்; தனித்தனியாகத்தான் விசாரணைகள்; எனினும் தீர்ப்பு மட்டும் ஒரே நாளில், ஒரே நேரத்தில் அளிக்கப்பட்டது. பிரிந்து நெடுந்தூரம் வந்துவிட்ட என்னை, அன்று அந்தக் கோர்ட்டில் பெரியாருக்குப் பக்கத்திலே நிற்கச் செய்து, வேடிக்கை பார்த்தது வழக்கு மன்றம். போலீஸ் அதிகாரிகள் அதைத் தொடர்ந்து ஒரே வேனில்(Van) ஏற்றிச் சென்றனர். அதைத் தொடர்ந்து திருச்சி மத்தியச் சிறையிலே இருந்த அதிகாரி, பெரியார் கொண்டுவந்திருந்த சாமான்களைக் கணக்குப் பார்த்துச் சரியாக இருக்கிறதா என்று கூறும் பொறுப்பை என்னிடம் ஒப்படைத்தார். என் வாழ்க்கையில் நான் மறக்கமுடியாத சம்பவம். எனக்கு உள்ளூர பயம். கேள்விக் கணையுடன் நிறுத்திக்கொள்ளாமல் அன்புக் கணையையும் ஏவினால் என்னால் எப்படித் தாங்கிக் கொள்ளமுடியும் என்றெல்லாம் அச்சப்பட்டேன்.

பக்கத்துப் பக்கத்து அறை; பகலெல்லாம் திறந்துதான் இருக்கும்; பலர் வருவார்கள்; இங்கு சிறிது நேரம்; அங்கு சிறிது நேரம்; இன்னும் சிலர் கூர்ந்து கவனித்தபடி இருப்பார்கள், நாங்கள் இருவரும் பேசிக்கொள்கிறோமோ என்று. அவர் அறைக்கு உள்ளே இருக்கும்போது நான் வெளியே மரத்தடியில்! அவர் வெளியே வர முயற்சிக்கிறார் என்று தெரிந்ததும் நான் அறைக்கு உள்ளே சென்றுவிடுவேன்.

இப்படிப் பத்து நாட்கள்.

நாளைய தினம் எங்களை விடுவிக்கிறார்கள் - முன் தினம் நடுப்பகலுக்கு மேல் ஓர் உருசிகரமான சம்பவம் நடைபெற்றது. பெரியாருக்கு வேலைகள் செய்து வந்த 'கைதி' என் அறைக்குள் நுழைந்து, 'அய்யா தரச் சொன்னார்' என்று சொல்லி, என்னிடம் ஆறு பிஸ்கட்டுகள் கொடுத்தான். கையில் வாங்கியதும் என் நினைவு பல ஆண்டுகள் அவருடன் இருந்தபோது கண்ட காட்சிகளின் மீது சென்றது.

மறுநாள் திடீரென்று விடுதலை கிடைத்தது. அந்த வேடிக்கையும் கேள், தம்பி! எங்களை விடுதலை செய்யப் போகிறார்கள் என்ற செய்தி உள்ளே எங்களுக்குத் தெரிவதற்கு முன்பே வெளியே தெரிந்துவிட்டிருக்கிறது. எனவே, எங்களை அழைத்துச் செல்ல நண்பர்கள் வெளியே ஏற்பாடுகள் செய்யத் தொடங்கிவிட்டிருந்தனர். நமது (தி.மு.) கழகத்தார் ஏற்பாடுகளில் மும்முரமாக ஈடுபட்டு நேரத்தை மறந்துவிட்டனர்; எனவே சிறைக் கதவு திறக்கப்பட்டு எங்களை வெளியே அனுப்பியதும் வாசற்படியருகே பெரியாரை அழைத்துச் செல்ல வந்தவர்கள் கொண்டு வந்த மோட்டார்தான் இருந்தது. அதற்கு என்னையும் அழைத்துச் சென்றனர். இது போதாதென்று போட்டோ எடுப்பவர் ஒருவர் ஓடி வந்தார். 'இருவரும் அப்படியே நெருக்கமாக நில்லுங்கள்' என்று போட்டோ எடுத்துவிட்டார். அது வெளியிடப்படவில்லை.... வேதாசலம் அவர்கள் வீடுவரையில் சென்று

With Best Compliments from

☎ Off: 20574
Resi: 20565

RANEE PARADISE

14, Cutchery Road, Thanjavur - 613 001
Tamilnadu State

- RANEE GROUP
- RANEE PARADISE
- RANEE ENGINEERING
- RANEE AGENCIES
- RANEE BLUE METALS

அவர் இறங்கிக்கொண்டார். நான் அதே மோட்டாரில் சாம்பு இல்லம் சென்றேன்.

கவனித்தாயா தம்பி, எனக்கு ஏற்பட்ட இந்த அனுபவத்தை, திராவிட முன்னேற்றக்

தொகுப்பு: மின்சாரம்

கழகம் என்ற ஒரு தனி அமைப்புக்குப் பெரிய தோர் ஆபத்து இந்தப் பத்து நாட்கள் என்று நண்பர் ஒருவர் கூறினார். உண்மைதான். நான் அவ்வளவு சுலபத்தில் மனதைக் கரைய விட்டுவிடுபவன்தான். ஆனால், பத்து நாட்கள் அவருடன் பேசி மீண்டும் பழைய நட்பைப் பெறுவதற்கான வாய்ப்பு என்னைத் தட்டித் தட்டி அழைத்தபோதும் நான் அந்த எண்ணத்திற்கு இடங் கொடுக்காதிருந்தேன். காரணம் கொடியவன் என்பதல்ல. நான் ஒரு அமைப்புக்குப் பொறுப்பாளியாக்கப்பட்டு விட்டதால், நான் மேற்கொள்ளும் எந்த நடவடிக்கையும் அந்த அமைப்பை உருக்குலைக்கக்கூடியதாக இருக்கக்கூடாது என்ற நேர்மையான எண்ணத்தினால்தான்.

— அறிஞர் அண்ணா

(நூல்: பேரறிஞர் அண்ணாவின் பெருவாழ்வு
ஆசிரியர்: கவிஞர் மறைமலையான்
பக்கம்: 230-232)

'பொன்மொழி' தடை நீக்கம்

தந்தை பெரியார் நூற்றாண்டு விழாவையொட்டி தமிழக அரசு நியமித்த விழாக்குழுவின் பரிந்துரைப்படி:

தந்தை பெரியார் அவர்களின் 'பொன் மொழிகள்' நூல் மீது இந்த தடை *15.5.1979* அன்று நீக்கப்பட்டது. தமிழக அரசு பிறப்பித்த அந்த ஆணை வருமாறு:

அரசு ஆணை

Public (Law & Order-B) Department

G.O.Ms.No.1162 Dated: the 15th June-79

Read:-

1. G.O.Ms.No.692. Public (General-A) Department, Dated: 20.2.1950
2. From the Inspector-General of Police D.O. Letter No.C.12/61728/C, Dated: 4.12.1978.

ORDER:

In the Government Order read above, it was notified under section 19 of the Indian Press (Emergency Powers) Act, 1931 (Gentral Act XXIII of 1931) (Since repealed) that every copy of the Tamil book entitled "Pon Mozhigal" by Thiru E.V. RAMASWAMY NAICKER, published by the 'Dravida Mani Pathippakam', Tiruchirappalli and printed at the

"பொன் மொழிகள்" நூல் தடை பற்றிய ஒரு தொகுப்பு!

"Madras Rippon Press" Pudukkottai and all other documents containing copies of translations of the said book in as much as it contains matter of the nature described in section 4(1) (d) and (h) of the said Act, by declared to be forfeited to the Government.

2. The Periyar Centenary Committee constituted by the Government in connection with the Periyar Centenary Celebration recommended inter alis, that the ban on books by Periyar E.V. Ramaswamy may be lifted.

3. The Government, after careful consideration of the matter in the altered circumstances since the ban order referred to above, direct that the Orders issued in the Government Order read above be cancelled with immediate effect.

(By order of the Governor)
V. KARTHIKEYAN
Chief Secretary to Government

'விடுதலை'யின் சுட்டிக் காட்டல்!

அய்யாவின் நூலான பொன்மொழிக ளுக்கு விதித்த தடையை நீக்கியதற்காக அ.தி.மு.க. அரசுக்கு நமது பாராட்டுதல்கள், நன்றியும் செலுத்துகிறோம்.

அவ் வாணையை எழுதிய அதிகாரிகள் அய்யா பெயரில் 'நாயக்கர்' என்று சேர்த்தி ருப்பது குறித்து மிகவும் வேதனைப்படுகி றோம்.

முதல்வர் அவர்களோ, அமைச்சர்களோ இதற்குப் பொறுப்பு என்று கூறமாட்டோம்.

ஆனால், தமிழக அரசின் ஆணை இப் படி இருக்கலாமா? இது குறித்து எச்சரித்து ஒரு சுற்றறிக்கையை அனுப்ப முதல்வர் முயற்சி எடுத்தல் நல்லது.

''விடுதலை'', 22-6-1979.

எலி ஒழிப்பிலும் மதம்!

கேள்வியாளர்: சேமிப்பு உணவு தானியங் களை எலிகள் பாழடித்து விடுகின்றன. சிலர் பட்டினியால் சாகக்கூடிய நிலை இருந்தும், பம்பாய் தானாபந்தர் பகுதியில் பெரும் வியாபாரிகள் அந்த நகரசபையின் எலி ஒழிப் புத் திட்டத்திற்கு பெரும் எதிர்ப்பு தெரிவித்து வருகிறார்கள்.

பிரதமர்: பம்பாயிலா அப்படி நடக்கிறது?

கேள்வியாளர்: ஆம். பம்பாயில்தான்.

பிரதமர்: எனக்குத் தெரியாது. அதுபற்றி நான் கவனிக்கிறேன். அவர்கள் ஏன் இந்தத் திட்டத்திற்கு எதிர்ப்புத் தெரிவிக்கவேண்டும்?

கேள்வியாளர்: மத உணர்ச்சி அடிப்படை யில் எதிர்க்கிறார்கள்.

பிரதமர்: எலி ஒழிப்பிலுமா மத உணர்ச்சி?

கேள்வியாளர்: ஆமாம். எலி ஒழிப்பில்தான் மத உணர்ச்சி. இது அங்கு நிறைய இருக்கி றது. இதை நீங்கள் நன்றாக கவனிக்கவேண் டும்.

பிரதமர்: இது மிகவும் வருத்தத்திற்குரியது. நாட்டில் எவ்வளவோ பிரச்சினைகள் இருக் கின்றன. இவர்கள் இப்படி எல்லாம் எதிர்ப்பு தெரிவிப்பதினால்தான் அந்த பிரச்சினை களை வெல்ல முடியவில்லை.

— 'பிளிட்ஸ்' (28.2.77) ஏட்டுக்கு பிரதமர் இந்திராகாந்தி அளித்த பேட்டி.

குறிப்பு: (திலகர் துவக்கிய இந்(து)த மத வெறி இன்னும் தொடர்கிறது!)

தந்தை பெரியார் பற்றி

BLITZ

(பம்பாய 'பிளிட்ஸ்' (24.3.56) இதழில் வெளியிடப்பட்டுள்ள சிறப்புக் கட்டுரை இது.)

சென்னை கவர்னர் பிரகாசா சில நாட்களுக்கு முன்னர் அசாதாரண சொற்பொழிவொன்று விசித்திர மேடையில் ஆற்றினார்.

அச்சொற்பொழிவு விஷயம் புது நாடமைப்பு அறிக்கையாகும். சொற்பொழிவு ஆற்றியது - அவரது தாயக மாநிலத்திலுள்ள பெரெய்லி நகர ரோட்டரி கிளப் விசேஷக் கூட்டத்திலாகும்.

அப்போது திரு. ஸ்ரீபிரகாசா சொன்னார் - வடநாட்டை எதிர்த்து தென்னாடு புரட்சி செய்துவருகிறது என்பதாக.

இவர் கூறியதை கவனிக்குமிடத்து இந்தப் புரட்சியின் தன்மை என்ன? இதன் தலைவர் யார்? என்ற கோரிக்கைகள் எழுகின்றன.

அவர் ஒருவரே!

தமிழ்நாட்டின் அண்மை சமுதாய - அரசியல் நிலவரத்தைக் கவனித்தவருக்கு ஒரே ஒரு விடைதான் இதற்குண்டு.

76 ஆண்டுகளுக்கு அதிகமான முதியவரும், கருப்புச்சட்டை நாட்டுப் பற்றாளரும் வெண்தாடி வேந்தருமான திரு. ராமசாமி (நாயக்கர்) அவர்களே தென்னாட்டிலே பல நூற்றாண்டுகளாக ஆதிக்கம் செலுத்தியும் நாசம் விளைத்தும் வருவதான ஆரியத்தை எதிர்த்து தமது கருப்புச் சட்டைப் படைகளை அணிகூட்டிப் புரட்சி நடத்தி வருகிறார்.

இந்தியத் தலைமையமைச்சர் (நேரு) ஓராண்டுக்கு முன் பேசுகையில், தென்னாட்டுத் திராவிட மக்களுக்கு ஆரியர்கள் விளைத்து வந்துள்ள அநீதிகளின் வரலாற்றை எடுத்துக் கூறியதுடன் இப்போது விளைக்கப்படும் சங்கடங்களையும் சுட்டிக்காட்டினார். ஆனால் பிரஸ் டிரஸ்ட் ஆஃப் இந்தியா ''புத்திசாலி''த்தனமாக இவரது இந்தப் பேச்சை இருட்டடிப்புச் செய்துவிட்டது.

ஆரியத்தின் எதிரி!

வடநாட்டாரின் ஆதிக்கத்தின் பிரதிநிதிகளாக இருப்பவர்கள் 20 லட்சம் பார்ப்பனர்கள் என்பது திரு. ராமசாமி (நாயக்கரின்) திட்டமானக் கருத்தாகும். **இந்தப் பார்ப்பனர்கள் வடநாட்டாருக்கு அடிமையாகவும் பங்காளிகளாகவுமிருந்து 3 கோடி தமிழர்களின் சமுதாய அறிவு முன்னேற்ற வழிவசதிகளை தடைப்படுத்தி வருகின்றனர் என்பதே இவரது கருத்து.**

திரு. நாயக்கர் அவர்களை பத்து லட்சக்கணக்கானவர்கள் பின்பற்றுகின்றனர். அவர்கள் இவரை ''பெரியார்'' என்று மதிப்புப் பெயரளித்து அழைக்கின்றனர்.

(9)

பகுத்தறிவுப் பகலவனே! தந்தை பெரியாரே!
தங்களது 115 ஆம் ஆண்டு பிறந்தநாள் விழாவினை வாழ்த்தும்

தந்தை பெரியார் பகுத்தறிவு நூல்கள்

விற்பனை நிலையம்

நகர பேருந்து நிலையம்,
சேலம் - 636 001

சேலம் நகரில் இல்லம் நாடி தமிழினத்தின் போர் முரசாம் ''விடுதலை''
நாளிதழ் மற்றும் சமூக மாற்றத்துக்கான ஓர் வாழ்வியல் இதழாம் ''உண்மை''
இவற்றை இல்லம் நாடி வழங்குவதே எம் பணி.

அய்யா வழியில் அயராது உழைக்கும் தளபதியே!
கருஞ்சிறுத்தைப் படையின் தலைவனே!
உன் கட்டளையால் அய்யாவின் பணி முடிப்போம்.

தோழமையுள்ள சேலம். ப. கந்தசாமி,
பொதுச்செயலாளர், பகுத்தறிவு ஆசிரியரணி

தமிழ்நாட்டிலுள்ள மற்றொரு மகத் தானவரும் வலிமை மிக்கவருமான முத லமைச்சர் திரு.காமராசர் அவர்களைப் போன்றே இவரும் இந்த நவீன காலப் படிப்பைப் படித்தறியாதவர்.

அப்படியிருந்தும் மூடநம்பிக்கைகள் மலிந்துள்ள மூடக் கொள்கைகள் மட மைச் சடங்குப் பித்தலாட்டங்கள் சிலை வணக்க மடமைகள் ஆகியவற்றை இவர் இடைவிடாது எதிர்த்து வருகி றார். இதனால் இவர் பார்ப்பனரால் வெறுக்கப்படவும் மற்ற எல்லா மக்க ளாலும் போற்றி அன்பு செலுத்தப்பட வுமான உயர்தர அந்தஸ்தைப் பெற்று விளங்குகிறார்.

இந்த மெய்மையை இப்போது மறைக்கவியலாது மறைக்கவும் முடி யாது.

சாதி-மொழிபற்றி எண்ணிக்கொண்டி ருக்கும் காங்கிரஸ்காரர்களும்- எம்.எல்.ஏ.க்கள் உட்பட இவரை சமா தானம் செய்ய நெடுவழி செல்லுவார் கள்.

ஒடுக்கப்பட்ட மக்களின் உரிமைக் காப்புவீரர்

அரசியல் கட்சியன்று இவரது திராவி டர் கழகம். 1931-ம் ஆண்டு தோற்று விக்கப்பட்டது. பல நூற்றாண்டுகளாக ஆரியர் (வடவர்) ஆதிக்கத்தால் விளைந்துள்ள கேடுகளை ஒழித்துக் கட்டும் சமுதாய-ஒழுக்கச் சீர்திருத்த புரட்சியே இதன் முக்கியக் குறிக்கோள்.

ஏழைகள் நிலவுரிமை கொள்ளச் செய்யவேண்டும் என்று பொருளாதா ரப் புரட்சி செய்யும் நோக்கமும் இது கொண்டுள்ளது.

'மகாத்மா' காந்தியாரின் கண்டிப் பான தியாகத்துறை அரசியல் முறையி லும் இவர் பங்குகொண்டு பயிற்சி பெற்றவராகையால் இப்போது இவர் பலாத்கார முறைகளை விலக்கி வருகி றார்.

இவர் இப்போதைய சமுதாய ஒழுக்க சீர்திருத்தப் புரட்சி மேதையான தற்கு அடிப்படைக் காரணங்களாகத் தூண்டுகோலாக இருந்தவைகளையும் சுருக்கமாகத் தருகிறோம்.

இவர் 1879-ஆம் ஆண்டிலே எளிய நிலவரத்திலிருந்த தாய்-தந்தைக்குப் பிறந்தவர்; பெற்றோர்கள் உடலுழைப் பினால் 'கஷ்ட ஜீவனம்' செய்தனர். அப்போது அடக்கப்பட்டு, ஒடுக்கப் பட்டு அவதியுறும் மக்கள் நல்வாழ்வு பெற வழி செய்ய பாடுபட வேண்டும் என்ற எண்ணம் இவருக்கு உதித்தது இந்த நிலவரத்தில்தான்.

இவர் கடந்த 45 ஆண்டுகளுக்கு மேலாக, பொது வாழ்விலே நடத்திவ ரும் விடாப்பிடியான கடும் போராட் டத்தின் லட்சியமும் இவ்வித ஒடுக்கப் பட்ட மக்களின் நல்வாழ்வுக்கு வழி செய்வதேயாகும்.

ஓயாத உழைப்பும் சிக்கனமுறையும் தொழில் திறமையும் இவரது பெற் றோர்கள் பின்னர் நல்ல சொத்து சேர்க்க வாய்ப்பளித்தது, இந்து மதக் கும்பலின் கருத்தைக் கவர்ந்தது.

அறிவாளிகளும், பிறருமான ஆஷா டபூதிகள் இவர்களது வீட்டுக்கு படை எடுத்தது திரு. நாயக்கர் அவர்களுக்கு இந்த மூடச் சடங்குகள், மடமைகள் மீது வெறுப்பு ஏற்பட சாதனமாயிற்று.

இவர் இந்த ஆட்களுடன் அடிக்கடி வாக்குவாதம் செய்வார். இதனால் இவர் தாமாகவே எதையும் எண்ணி யும்-பகுத்தறிந்தும் பார்க்கும் திறமை இவருக்கு வளர்வுற்றதுடன், தன் சொந் தக் கோட்பாட்டையும் விடாப்பிடியா கப் பிடித்து நிற்கும் பிடிவாதமும் ஏற் பட்டது.

தமிழ்நாட்டிலுள்ள மற்ற தலைவர்க

தந்தை பெரியார் 115 ஆவது ஆண்டு
பிறந்தநாளில் வாழ்த்துக்கள்!

பெரியார் விட்டுச் சென்ற பணிகளை தமிழினக் காவலர்
மானமிகு கி. வீரமணி தலைமையில் செய்து முடிப்போம்.

60 ஆண்டு காலமாக சேலம் நகரில்
புகழ்பெற்ற அசைவ உணவு விடுதி

"பாரத மாதா ஓட்டல்"

47, கல்லாங்குத்துத் தெரு
சேலம் - 636 001.

தன்மானத் தந்தையே! பகுத்தறிவுப் பகலவனே!
தங்களது 115 ஆவது பிறந்த நாளில் எங்களது நல்வாழ்த்துக்கள்

TNGST NO.792402 CST NO.419171/10.2.86

CORPORATION WATCH COMPANY

15, Thippusulthan Market,
Salem - 636 001.

Dealers in:
Watch, Wall Clock, Timepiece,
Straps, Tools & Spare Parts

TNGST.RC.675269 ☎ 68061 P.P.

GREAT WATCH COMPANY

WHOLE SALE & RETAIL
Dealers in: Clocks, Timepieces, Straps & Parts
20-B, 1st Agraharam, Salem - 636 001

ளிடமிருந்து இவரைப் பிரித்துக்காட்டும் தனிச்சிறப்பு இதுவேயாகும். இவர் தனிச்சிறப்பு, தனி திறமையுள்ள தலைவராக ஈடுமெடுப்புமற்று விளங்குவதற்கும் இதுவே - பகுத்தறிவுச் சிறப்பே காரணமாகும்.

பள்ளிக்கூடத்தில் கொஞ்சகாலம் படித்துவிட்டு இவர் தமது தகப்பனாரின் மண்டியில் வேலை பார்த்தார். வியாபாரத்திலும் நல்ல கெட்டிக்காரர் என்று பெயர் வாங்கினார். அப்போதைய வழக்கப்படி அவருக்கு சிறுவயதிலேயே திருமணம் நடந்தது. சிறிது காலத்திற்குப் பின்னர் இவருக்கு சம்சாரத்தில் அலுப்புத் தட்டிப்போய், சந்நியாசியாக காசிக்கு ஓடிவிட்டார். பின்னர் 1911-ம் ஆண்டில் ஈரோட்டுக்குத் திரும்பிவந்தார்.

அதன்பிறகு இவர் ஈரோட்டு நகரசபை அலுவல்களில் பங்குகொண்டு நகர நலனுக்கு உண்மையாகப் பாடுபட்டு நகரசபைத் தலைவருமானார். அப்போது இந்த நகரசபைப் பதவிக்கு அதிக மதிப்பிருந்தது; பெருமை மிக்கப் பதவியாகக் கொண்டாடப்பட்டது. அவர் நகர நலனுக்காகப் பணியாற்றிய சிறப்பைப் பாராட்டி அரசாங்கத்தாரும் இவருக்கு "ராவ்பகதூர்" பட்டம் தர முன்வந்தனர். ஆனால் இவர் அந்த அரசாங்க கவுரவப் பட்டத்தை ஏற்க மறுத்துவிட்டார். நாட்டுக்கும் காங்கிரசுக்கும் பணியாற்றுவதை விரும்பியடைந்தார்.

கருத்து வல்லுரம் வாய்ந்தவர்!

இவரது அதியற்புதமான வாழ்க்கை வரலாற்றின் இரண்டாம் கட்டம் இதன் பின்னர் தொடக்கமாயிற்று.

அந்தக் காலத்திலேயே, தமிழ் நாட்டிலே சுதந்திர இயக்கத்துக்கு ஊக்கமளித்து பாதுகாத்து நடத்தி வந்தவர்கள் முக்கியமாக திராவிட (பார்ப்பனரல்லாதார்) பெருந்தலைவர்கள் நால்வரேயாகுமென்பது எல்லோரும் ஒப்புக்கொள்ளப்பட்ட மெய்ம்மையாகும்.

இந்த நால்வரில் திரு. நாயக்கர் அவர்கள்தான் அதிக அஞ்சா நெஞ்சமும் விடாப்பிடியானவரும் கருத்து வல்லுரம் படைத்தவருமாவார் என்பது எல்லோரும் ஒப்புக்கொண்டதாகும்.

1919-க்கும் 1924-ம் ஆண்டுக்கும் இடைப்பட்ட காலம் தமிழ்நாட்டில் காங்கிரஸ் மிகமிக அதிகவன்மை கொண்டு விளங்கிய காலமாகும்.

இந்தக் காலம் முழுவதும் திரு. நாயக்கர் அவர்கள் இந்த காங்கிரசின் யாருக்கும் அஞ்சாத மனஉரம் மிக்கத் தனிப்பெரும் தலைவராக விளங்கினார்.

கதர் இயக்கத்தில் தீவிர பங்கு கொண்டார். பலவகை கஷ்ட நஷ்டங்களுக்குமுள்ளானார். கதர் துணிகளை முதுகில் சுமந்துகொண்டு ஊர்தோறும் சென்று விற்றார்.

மதுவிலக்கு இயக்கத்திலும் பங்கு கொண்டார். நீதிமன்ற விலக்கு அறப்போரிலும் பங்குகொண்டார். இதனால் இவருக்கு வரவேண்டிய கடன் வகை பத்திரங்கள் காலாவதியாகி இவருக்கு அதிகப் பண நஷ்டமும் விளைந்தது. பள்ளி மறுப்பு இயக்கத்திலும் பங்கு கொண்டார்.

நாடுபுகழ் வைக்கம் சத்தியாக்கிரகம் நடத்தப்பட்டதும் இந்தக் காலத்திலேயாகும்.

மற்றும் தமிழ்நாட்டில் முதல் முதலாகப் பெண்கள் காங்கிரஸ் இயக்கத்தில் பங்குகொள்ள முன்வந்ததும் இந்தக் காலத்திலேயாகும். இந்த அறப்போரில் முதல்-முதல் பங்குகொண்டு கஷ்ட நஷ்டங்களுக்கு உள்ளானவர் திரு. நாயக்கர் அவர்களின் இளம் மனைவியார் (திருமதி நாகம்மை) அவர்களேயாவார்.

பகுத்தறிவு மகான்

1924-ம் ஆண்டிலேயே தமிழ்நாடு காங்கிரஸ் தலைமைப் பதவியை ஏற்றுக்கொள்ளுமாறு திரு. நாயக்கர் அவர்

தமிழினத்துக்குத் தன்மானத்தை ஊட்டிப் பகுத்தறிவுச் சிந்தனையை வளர்த்து மூட நம்பிக்கையை ஒழித்த சுயமரியாதைச் சிங்கம் தந்தை பெரியார் அவர்களின் 115 வது பிறந்தநாள் நல்வாழ்த்துக்கள்.

"சேலம் திவான் பீடிகள்"

D.C. திவான் மொய்தீன் சன்ஸ்

திவான் பீடி கம்பெனி,
பழைய மார்க்கட், சேலம் - 636 001.

"தமிழுக்குப் புதிய விடிவினைத் தந்து,
தமிழ் உணர்வினுக்குத் தன்னைத் தந்து,
தமிழனுக்கு எழுச்சியைத் தந்து
தாழ்வுற்ற தமிழ்ச் சமுதாயத்தை முன்னேற்றியவர் தந்தை பெரியார்!
தமிழ்ச் சமுதாயம் அவரை மறந்ததில்லை. எங்கள் தமிழ் உணர்வே! உயிரே!

மறப்போமா தந்தை பெரியாரை

தந்தை பெரியாரின் 115 -வது பிறந்த நாளில் எங்களது வாழ்த்துக்கள்
☎ 54571

MANNAN BEEDI FACTORY

Fort, Salem - 636 001.

மன்னான் பீடி பாக்டரி,

கோட்டை, சேலம் - 636 001.

கள் கேட்டுக்கொள்ளப்பட்டார். இதே காலத்தில்தான் இவர் காங்கிரசை விட்டு வெளியேற வேண்டியதும் தொடக்க மாயிற்று.

1924-ம் ஆண்டிலே பொதுப் பணத்தைக் கொண்டு சேரன்மாதேவி என்ற ஊரில் ஒரு குருகுலம் ஏற்படுத்தப்பட்டது. இது காங்கிரஸ் கோட்பாடுகளைத் தழுவியதாகும். ஆனால் இந்த குருகுலம், சாதி வெறியைக் காட்டும் போக்கைக் கொள்ளலாயிற்று. திரு. நாயக்கர் அவர்களும், பார்ப்பன காங்கிரஸ்காரர்களுடன் பலமுறை சுற்றுப்பிரயாணம் செய்த போதும்கூட இந்த மானக்கேடான சாதி வேற்றுமைத் தடைகளுக்கும் இலக்காக்கப்பட்டார். எனவே இந்தச் சாதிக் கொடுமைகளை எதிர்த்து இவர் தீவிரப் போராட்டம் நடத்தலானார்.

அதுவரைக்கும்-அதன் பின்னரும் நெடுங்காலம்வரை தென்னாட்டு காங்கிரஸ் தலைமையை பார்ப்பனர்கள் தங்கள் ரகசிய சூழ்ச்சிகளால் கைப்பற்றிக் கொண்டிருந்தாலும் காங்கிரஸ் தலைவர்களுடன் முக்கியமாக வடநாட்டுத் தலைவர்களுடன் 'கோல்மால்' வேலைகள் செயது வந்தாலும் திரு. நாயக்கர் அவர்களின் இந்த முயற்சிக்கு தடை விளைத்து வந்தனர்.

தம் தாயக மக்கள் இவ்வகையாக மேற்கொண்டு மானக்கேட்டுக் குள்ளாக்கப்பட்டதைக் கண்டு திரு. நாயக்கர் அவர்கள் மனக்கொதிப்படைந்தார்.

உடனே தமக்கெனத் தனிப் போராட்டக் களம் அமைத்துக் கொண்டார். போராட்ட முறையும் அமைத்துக் கொண்டார். இப்போதைய புதுக்களத்தைத் துவக்கினார்.

ஜஸ்டிஸ் கட்சியில் பங்கு கொண்டார் என்றாலும் அது அப்போது பரம்பரை ஜமீந்தார்களைக் கொண்டிருந்ததால், இவரது மதம் ஒழிப்பு-சமுதாயப் புரட்சிகளுக்கு அது போதுமானதாக இல்லை.

எனவே இவர் சுயமரியாதை இயக்கத்தைத் தோற்றுவித்தார். பார்ப்பனப் புரோகிதர்களை நீக்கி திருமணங்கள் செய்வதில் இது கவனம் செலுத்தி வந்தார். பின்னர் திராவிடர் கழகம் ஏற்பட்டது.

அயல்நாடுகளில்

இவர் பலமுறை ரஷ்யாவுக்கும் இங்கிலாந்துக்கும் சென்று சுற்றுப் பிரயாணம் செய்து திரும்பியதால் இவரது சமத்துவக் கொள்கைகள் மேலும் வலுவடைந்து பரவலாயிற்று. மற்றும் மலேயா முதலிய அண்டை நாடுகளுக்கு இவர் சென்று பார்வையிட்டதால் ஆங்காங்கு தமிழர்கள் படும் அவதிகளையும் கண்டறிந்தார்.

ஒரே வழி

எனவே இந்த அவதிகள், அவல கேடுகள் எல்லாம் ஒழியவேண்டுமானால் உள்ள கலப்பற்ற பகுத்தறிவு மேதை இவராகையால் இந்நாட்டில் எந்த மாபெருந் தலைவர்களின் மன்றங்களிலும் இவருக்குச் சிறப்பான இடம் அளிக்கப்படுகிறது. உழைப்பாளியும் மெய்மையாளரும் துணிவாளருமான ஒரு காங்கிரஸ் தலைவர் இந்த வழியை எப்படி மேற்கொண்டார் என்பது தமிழ் நாட்டு சமுதாய-பொது வாழ்வில் துலக்க முடியாத மர்மமாக இருந்து வருகிறது.

('விடுதலை' 25.3.1956)

ஸ்தாபிதம் 1972 R.C. 415483

படங்களை சிறந்த முறையில் பிரேம் செய்து வாங்க,
கட்டிடங்களுக்கு தேவையான அனைத்து ரக கண்ணாடிகளும்
வாங்க மிகவும் சிறந்த நிறுவனம்

ஜெமினி பிரேம் ஒர்க்ஸ்

&

கிளாஸ் பேலஸ்

40/1, பெரிய தெரு,
பட்டுக்கோட்டை - 614 601

உரிமை — ஜெமினி. வீ. இராமமூர்த்தி

WITH BEST WISHES

HOTEL RAJAM

M.S. Road, Vadasery, Nagercoil - 629 001.
Phone: 4581 (10 Lines) Telex: 436-204 Rajam-IN

புத்தரை விஞ்சிய பெரியார்

—பெரியார் பேருரையாளர் இராமநாதன் அவர்களுடன் ஒரு பேட்டி!

(பெரியார் சிந்தனை அஞ்சல் வழிக் கல்லூரியின் முதல்வர் பெரியார் பேருரையாளர் பேராசிரியர் ந. இராமநாதன் அவர்களுடன் பேட்டி கண்டவர் திராவிடர் கழகத் தலைமை நிலைய செயலாளர் கலி. பூங்குன்றன். நாள்: 2.9.1993; இடம்: பெரியார் திடல், சென்னை-7

வினா 1: தந்தை பெரியாரைத் தாங்கள் சந்தித்த நிகழ்ச்சிகள் முக்கிய உரையாடல்கள்

விடை: தந்தை பெரியாரைப்பற்றி நீங்கள் என்னை நேர்காணலுக்கு வந்திருப்பதே சிறப் பிற்குரிய ஒன்றாக எண்ணுகின்றேன். காரணம் நாமிருவரும் வாழ்க்கைப் பயணத்தில் ஒரே படகில் ஒரே குறிக்கோளோடு பயணம் செய்து கொண்டிருப்பவர்கள் என்ற ஒப்புமை நம்மிருவர்பாலும் காண்கின்றேன்.

யான் பள்ளிப் படிப்பை முடித்துவிட்டுத் தமிழ்ப் படிக்க முயன்ற காலம் தொட்டுச் சுமார் அய்ம்பது ஆண்டுகட்கு மேலாக வாழ்க்கைச் சூழ்நிலையை ஒட்டி எந்தப் பணியை மேற்கொண்டு எங்கே இருந்தாலும் தந்தை பெரியார் தொண்டில், சிந்தனைகளில் உள்ளத்தைப் பறிகொடுத்துக் கொஞ்சமும் சலிப்படையாமல் தொடர்ந்து வந்திருக்கின் றேன்.

நீங்களும் கடந்த நாற்பது ஆண்டுகட்கும் மேலாக வாழ்க்கைப் பயணத்தை ஒட்டி எந்தப் பணியில் எங்கே இருந்தாலும் தந்தை பெரியார் தொண்டில் சிந்தனைகளில் உள்ளத்தைப் பறிகொடுத்துக் கொஞ்சமும் சலிப்ப டையாமல் தொடர்ந்து வந்திருக்கின்றவர்கள் என்பதை நான் உங்களுடன் பழகிய காலம் முதற்கொண்டு நன்றாக அறிந்துள்ளேன். மேலும் தந்தை பெரியார் பற்றிய வாழ்க்கைக் குறிப்புகளைப் பல்வேறுபட்ட படங்களைச் சேர்த்து வைப்பதில் கருத்தைச் செலுத்திச் சேகரித்து முறைப்படுத்தி வைத்துத் தக்கசமயத்தில் அவ்வப்போது வரும் வெளியீடுகளில் பயன்படுத்தி வருகின்றீர்கள். நீங்கள் மேற்கொண்டுவரும் இவ்வருஞ்செயல்களால் நம் கழக வெளியீடுகள் அவ்வப்போது நிறைவும் பொலிவும் பெற்று விளங்குகின்றன. அத்தகைய நீங்கள் என்னை நேர்காணலுக்கு வந்திருப்பதையே பெருமையுடையதாகக் கருதுகின்றேன்.

தந்தை பெரியாருடைய தொடர்பு எனக்கு வாய்த்தது என்பது பல படிநிலைகளைக் கொண்டதாகும். முதலில் நான் என்னளவில் அவரைக் கருத்தளவில் நானாகச் சந்தித்துப் பின்னர் அவரைக் கண்ணாரக் காண வேண்டுமென்ற அவாவிற்கு முதலில் ஆட்பட்டேன். பள்ளிப் படிப்பை முடித்துத் தமிழ்க் கல்லூரியில் படிப்பதற்கு முன்னர்ப் பலதமிழ் இலக்கிய இலக்கண நூல்களை தனிமையில் நானாக என்னுடைய தந்தையார் உதவி கொண்டு பயின்று கொண்டிருந்த காலம். எங்கள் ஊர் மணியக்காரர் சுந்தரராசு சுண்டையார் ''ஈ.வெ.ராவின் இலங்கை உபந்நியாசம்'' என்னும் முக்காலணா விலையுள்ள புத்தகத்தைக் கொடுத்துப் படிக்கச் சொன்னார். அதனை நான் பலமுறைத் திரும்பத் திரும்பப் படித்தேன். அடுத்து மா. சிங்காரவேலனாரின் ''கடவுளும் பிரபஞ்சமும்'' என்னும் நூலையும் யானே வாங்கிப் பல முறை படித்தேன். இவை இரண்டும் என்னைப் புதிய ஒரு உலகத்திற்குக் கொண்டு

With Best Compliments from

☎ 22925

M. கதிர்வேல்

A பிளாக் 1-2,
இலைக்கட்டு, தேங்காய் வியாபாரம்,
காமராஜ் மார்க்கெட், தஞ்சாவூர்

மனிதனை மனிதனாக மதித்தது தந்தை பெரியார்
ஒருவரால்தான் சமூகத்தில் நடைமுறைக்கு வந்தது.

செய்யும் தொழிலே தெய்வம்

கல்யாணம் மற்றும் இதர
விசேஷங்களுக்கு தேங்காய் சப்ளை செய்யப்படும்.

போய்ச் சேர்த்தன. பேராசிரியர் உலக வூழிய னார் எங்கட்கு ஒரு வகையில் உறவினர்.

அவர் ஆறணா விலையுள்ள பாரதிதா சன் பாடல்களைக்கொண்ட ஒரு சிறு நூலை வைத்துக்கொண்டு அப்பாடல்களின் கருத்தி லும் பாடல்களின் சொல்லாட்சியிலும் ஈடு பட்டுப் பலமுறை வாய்விட்டுப் பாடி மகிழ்ந்து கொண்டிருந்தார். அந்தப் பாடல்க ளில் பல பாடல்களை அவர் பாடியதைக் கேட்ட அளவிலேயே அவைகள் எனக்குப் பாடமாய்விட்டன. நானே புத்தகத்தைப் படிக்காமலே பாடல்களைச் சொல்லத் தொடங்கினேன். அவைகளில் சிறப்பாக என் னுள்ளத்தைக் கவர்ந்தவற்றை மட்டும் குறிப் பிடுகின்றேன்.

சாணிக்குப் பொட்டிட்டுச் சாமியென்பார் செய்கைக்கு
நாணி உறங்கு நகைத்துநீ கண்ணுறங்கு!
தெய்விகத்தை நம்பும் திருந்தாத பெண்கு லத்தை
உய்விக்க வந்த உவப்பே! பகுத்தறிவே!
வெண்முத்தில் நீலம் விளையாடிக் கொண்டிருக்கும்
கண்கள் உறங்கு! கனியே உறங்கிடுவாய்!
வாடப்பல புரிந்து வாழ்வை விழலாக்கும்
மூடப் பழக்கத்தைத் தீதென்றால் முட்ட வரும்
மாடுகளைச் சீர்திருத்தி வண்டியிலே பூட் டவந்த
ஈடற்ற தோளா! என்னிளந் தோளா! கண் ணுறங்கு!
எல்லாம் அவன் செயலே! என்று பிறர் பொருளை
வெல்லம்போல் அள்ளி விழுங்கும் மனித ருக்கும்

புலவர் இராமநாதன்



புலவர் இராமநாதன் அவர்களின் பிறந்தநாள் 1-4-1922 பெற்றோர்கள் நடராச தென் கொண்டார் - மீனாம்பாள்

துணைவியார்: ஆயிக்கண்ணு

குழந்தைகள்: இல்லை

தம்பி: புலவர் பழனி நாதன்

கரந்தை புல்வர் கல்லூரியில் வித்துவான் படித்து, அண்ணாமலை பல்கலைக் கழகத்தில் பி.ஓ.எல் படிப்பும், மதுரை காமராசர் பல்கலைக் கழகத்தில் எம்.ஏ.யும் படித்தவர்.

கரந்தை தமிழ்க் கல்லூரி, காரைக்குடி இராமசாமி தமிழ்க் கல்லூரி ஆகிய வற்றில் 25 ஆண்டு காலம் தமிழ் விரிவுரையாளர் - முதல்வர் என்ற நிலையில் பணியாற்றியவர்.

1) ''கவிஞரும் காதலும்''
புரட்சிக் கவிஞர் இருக்கும் பொழுதே எழுதப்பட்ட இந்நூலை புரட்சிக் கவிஞரே வியந்து பாராட்டினார். தம் பாராட்டை அந்நூலின் முகப்புரையில் தந்துள்ளார். தம் வாழ்க்கை வரலாற்றை இப்பகுதியில் 'அகவற்பா'வாகவும் தந்துள்ள சிறப்பு இந்நூலுக்கு உண்டு.

2) புலவர் புலமைப்பித்தன் அவர்களின் ''பாவேந்தர் பிள்ளைத் தமிழ்'' என்ற நூலுக்கு எழுதிய உரை மிகவும் சிறப்பானது.

3) சென்னை பல்கலைக் கழகத்தில் பாவேந்தர்பற்றி இவர் ஆற்றிய அறக்கட்டளைச் சொற்பொழிவு ''புரட்சிக் கவிஞரின் பாடல்களும் நானும்'' என்னும் நூலாக வெளிவந்துள்ளது. அருப்புக் கோட்டை கைலாசம் நினைவு அறக்கட்டளை சொற்பொழிவு ''பெரியார் ஒரு முழுப்புரட்சியாளர்'' என்ற பெயரில் பெரியார் சுயமரியாதைப் பிரச்சார நிறுவன வெளியீடாக வந்துள்ளது.

4) ஆண்டுதோறும் 'விடுதலை' பெரியார் மலரில் இவரின் கட்டுரைகள் இடம் பெற்று வருகின்றன.

காப்பார் கடவுளுமைக் கட்டையில் நீர்
போகுமட்டும்
வேர்ப்பீர்! உழைப்பீர்! என உரைக்கும்
வீணருக்கும்
மானிடரின் தோளின் மகத்துவத்தைக்
காட்ட வந்த
தேனின் பெருக்கே என் செந்தமிழே கண்
ணுறங்கு!''

கம்பராமாயணப் பாடல்களில் பெரும் புலமை பெற்றவர் பேராசிரியர் உலக ஊழியர். அவையல்லாமலும் கடவுள் மதத் தொடர்பான நூல்களில் ஆழமான புலமையும் பயிற்சியும் உடையவர். அவர் எனக்குச் சொன்னார். தந்தை பெரியார் கருத்துகளைத் தான் கடவுள் மதங்கட்கு எதிராகப் புரட்சிக்கவிஞர் இப்படிப் பாடியுள்ளார் என்றார். தந்தை பெரியார் கருத்துகளில் முன்னரே உள்ளத்தைப் பறிகொடுத்த என் இளைய உள்ளம் பாரதிதாசனார் பாடல்களில் கொஞ்சம் கொஞ்சமாக மிக்க பயிற்சியும் பற்றும் கொள்ளச் செய்தது. கடவுள் மதக் கருத்துகளைக் கொண்ட பாடல்கள் வளமாகப் பாடப்பட்டிருந்தாலும் அவைகளெல்லாம் மூடப்பழக்

கங்களை வளர்ப்பவைகளே என்ற உண்மை என்னுள்ளத்தில் ஆழமாகப் பதிந்துவிட்டது. என்றாலும் பாக்களின் அழகில் ஈடுபட்டுக் கடவுள் மதத் தொடர்பான பாடல்களா னவை எனக்குப் பாடமாய்விட்டன. 'குடியர சு' இதழ் அவ்வப்போது கிடைக்கும். அவைக ளையும் விடாமல் படித்தேன்.

மூன்று காரியங்கள்

மனிதன் அடிமைத் தனத்திற்கு மூன்று காரியங்கள் இப்பொழுது முக்கி யமாய் இருந்து வருகின்றன. அவைக ளாவன:

1) யாரோ ஒருவன் ஏதோ ஒரு காலத் தில், என்னமோ ஒரு பாஷையில் யாருக்காகவோ, என்ன உத்தேசத் தின் மீதோ சொன்னதாக யாராலோ எழுதி வைக்கப்பட் டதை ஒப்புக் கொண்டு பின்பற்ற சம்மதிப்பது.

2) மற்றவர்கள் என்ன சொல்லுவார் கள் என்று பயப்படுவது.

3) நாம் இறந்து போனால், நமது பெண்டு பிள்ளைகளுக்கு என்ன கதி என்று நினைப்பது.

— தந்தை பெரியார்
'குடி அரசு' 4.10.1947 (பக்கம் 8)

தந்தை பெரியாரைக் கண்டேன்! கண்டேன்!!

தந்தை பெரியாரைக் காணவேண்டு மென்ற எண்ணம் இயல்பாக என்னுள்ளத் தில் ஆழமாக எழுந்து கொண்டேஇருந்தது. 1940 அல்லது 1941 ஆம் ஆண்டுகளில் கும்ப கோணத்தை அடுத்த தாராசுரத்தில் ஒரு மாநாட்டைப் பாவலர் பாலசுந்தரம் கூட்டி னார். அது சாமி - சிதம்பரனார் தலைமையில் நடந்தது. அந்த மாநாட்டிற்கு நானும் என்னு டைய தோழரும் சென்றோம். தொடர் வண் டியில் தந்தை பெரியார் வந்திறங்கினார். தோழர்கள் பெரு முழக்கமிட்டு வரவேற்றார் கள். முதன்முதலாகத் தந்தை பெரியாரின் கவர்ச்சிமிக்க முகத்தோற்றத்தையும் உடலழ கையும் வயது முதிர்ந்தவராக இருந்தாலும் இளைஞர்களும் நாணும் சுறுசுறுப்பையும் துடிதுடிப்பையும் கலந்த அவருடைய உரை யாடலையும், உரையையும் கண் குளிரக் கண் டும் காது குளிரக் கேட்டும் மகிழ்ந்தேன்.

அடுத்துக் கந்தைப் புலவர் கல்லூரியில் சேர்ந்து படித்துக்கொண்டிருந்தபோது சர். ஏ.டி. பன்னீர்செல்வம் அவர்கள் இங்கிலாந்தி லுள்ள இந்திய மந்திரியின் ஆலோசகராகச் செல்லுகின்றார் என்று அவருக்குக் கரந்தைத் தமிழ்ச்சங்கத்தின் சார்பில் ஒரு வரவேற்புக் கொடுத்தனர். அந்நிகழ்ச்சிக்குத் தந்தை பெரி யார் வந்திருந்தார். அப்போது தந்தை பெரி யாரை நெருக்கமாக நின்று பார்த்து மகிழ்ந் தேன். அவர் அங்கு வந்திருந்த பெரிய மனிதர் களுடன் உரையாடும்போது அவர் உரைதான் எடுப்பாகக் கேட்டது. மற்றவர்கள் படித்தவர் களாகவும் பெரிய மனிதர்களாகவும் இருந்தா லும் பெரியாருக்கு முன்னர் வாயடங்கி இருந் தனர். எல்லோரும் தந்தை பெரியார் பேசுவ தையே கேட்டுக்கொண்டிருந்தனர். படிக்கும் காலத்தில் (1941 முதல் 1946 வரை) தஞ்சைக் குப் பெரியார் வரும் போதெல்லாம் சென்று அவர் உரையைக் கேட்டிருக்கின்றேன். பல முறைப் பேரறிஞர் அண்ணாவும் தந்தை பெரி யாரும் வந்து உரையாற்றியுள்ளனர். தந்தை பெரியாரின் பேச்சு வெளிப்படையாகவும் புதுமைகள் கலந்ததாகவும் தெளிவானதாக வும் வழவழப்பில்லாமல் வரையறையோடு கூடியதாகவும் இருப்பதை அப்போதே கேட்டு மகிழ்ந்திருக்கின்றேன். பேரறிஞர் அண்ணாவின் உரையானது தந்தை பெரியா ரின் பேச்சுக்கு விளக்கமாகவும் அடுக்கு மொழியழகுடையதாகவும் கேட்பதற்கு இனிமையாகவும் இருக்கும். இருவரின் பேச்

சுக்கு இணையாக அல்லது ஒப்பாகத் தமிழ் நாட்டில் பேசுவாரும் இல்லை. இருவர் எழுத்துக்கு எதிராக எழுதுவாரும் இல்லை.

பெரியாரிடம் ஒரு கேள்வி!

தஞ்சையை அடுத்துள்ள கள்ளப் பெரம்பூரில் தந்தை பெரியார் உரையாற்ற வந்திருந்தார். அப்போது கரந்தைக் கல்லூரியில் பணியாற்றிக்கொண்டிருந்தேன். அங்குச் சென்று பெரியார் பேச்சைக் கேட்டேன். திரும்பும் போது நேரம் அதிகம் ஆய்விட்டது. அய்யா வேனிலேயே திரும்பினோம். முதன்முதலாக இப்போதுதான் உரையாடினேன். அப்போது தந்தை பெரியாரிடம் ஒரு கேள்வியைக் கேட்டேன். காந்தியாரைச் சுட்டுக் கொன்ற சமயம். போதிய தக்க பாதுகாப்பில்லாமல் அய்யா அவர்கள் தொடர்ந்து பயணம் செய்வது மிக்க அச்சமாக இருக்கின்றது. இதற்கு ஒரு ஏற்பாடு செய்து கொள்ளக்கூடாதா? என்று கேட்டேன். அய்யா பின்வரும் கருத்துப்பட கூறினார்கள்.

காந்தியார் பார்ப்பனரால் பெரிய மனிதர் ஆக்கப்பட்டார். பார்ப்பனர் ஆதிக்கத்திற்குக் காந்தியார் தொடர்ந்து பயன்படுவார் என்று பார்ப்பனர் எண்ணியிருந்தனர். சுதந்திரம் கிடைத்தபின் அவர் அந்த நிலையினின்றும் மாறிப்பேசத் தொடங்கினார். மகம்மதியருக்கும் பார்ப்பனரல்லாத மிகத் தாழ்த்தப்பட்டடுக் கிடக்கும் மக்கட்கும் வழி விட்டுப் பார்ப்பனர் ஒதுங்கவேண்டும் என்று பேசத் தொடங்கினார். பார்ப்பனர் தயவால் மகாத்மா ஆனார். அவர்கட்கு எதிராக இப்படிப் பேசத் தொடங்கிவிட்டடனர். சுட்டுக் கொன்ற நாதுராம் விநாயகக் கோட்சே என்ற அந்த ஒருவரை மட்டும் காட்டிவிட்டு இந்தச் சதிக்கு உடந்தையாயிருந்த அவ்வளவு பேரும் தப்பிவிட்டனர்.

என்னுடைய நிலைமை அப்படியில்லை. பார்ப்பனர்களை நான் எல்லாவகையிலும் எதிர்த்து வளர்ந்தவன். எனக்கொன்று நேருமானால் உடனடியாகப் பார்ப்பனர்தான் செய்திருப்பார்கள் என்று மக்கள் எண்ணிவிடுவார்கள். இதன் விளைவு நேரடியாகப் பார்ப்பனருக்கு மிகப் பெரிய பாதிப்பை ஏற்படுத்திவிடும். இந்தப் பின் விளைவை எண்ணி அவர்கள் என்னிடம் நேரடியாக வர மாட்டார்கள். என்றார்.

தஞ்சை இராமநாதன் செட்டியார் மன்றத்தில் 'தொண்டு' இதழின் ஆசிரியர் திரு வீராசாமி அவர்கள் ஒரு கூட்டத்தைக் கூட்டியிருந்தார். அவர் எனக்கு நன்கு அறிமுகமானவர். எங்கள் ஊருக்குப் பக்கத்து ஊர்க்காரர். இயக்கத்தொடர்பால் நெருக்கமாகவும் இருந்தோம். அவர் அந்த கூட்டத்திற்கு என்னை அழைத்திருந்தார். நானும் அங்குப் போயிருந்தேன். வழக்கறிஞர் ஓ.எ. நாராயணசாமி அய்யர் தலைமையில் கூட்டம் நடந்தது. அங்குப் பேசிய பலரும் பெரியாரைத் தொடர்ந்து கண்டித்துப் பேசினார்கள். இப்படிப் பேசியது பிடிக்கவில்லை. நான் பேசும்போது அவர்கள் பேசியதைக் கண்டித்தேன்.

''இந்த நாட்டில் மிகச் சிறுபான்மையராகவுள்ள பார்ப்பனரால் மிகப்பெரும்பான்மையராகவுள்ள பார்ப்பனரல்லாத மக்கள் அனைவரும் அரசியல் சமுதாய இயல் இரண்டிலும் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளனர். அதனை முற்றாக முழுமையாக ஒழித்துப் பார்ப்பனரல்லாதவர்களை முன்னேற்ற வேண்டுமென்பது அய்யாவின் கொள்கை. அந்த கொள்கைப்படி அவர் தொடர்ந்து பல வகையில் திட்டமிட்டுத் தம்முடைய தொண்டைச் செய்துவருகின்றார். இந்த வகையில் அவர் தொடர்ந்து செய்துவரும் தொண்டு உங்கட்குப் போதாமல் தோன்றலாம். அது உங்கட்கு குறையாகத் தோன்றுமானால் நீங்கள் தான் முயற்சித்து ஒழித்துக் கொள்ளவேண்டும். அதற்குத் தந்தை பெரியார் எப்போதும் ஆதரவாகவே இருப்பார். உங்கள் முயற்சிக்கு அவர் எப்போதும் பாதகமாக நடக்கமாட்டார். அப்படி நடந்ததாக வரலாறில்லை. இதற்காக நீங்கள் அவர் உங்கட்கும் சேர்த்துச் செய்து வரும் தொண்டை மறந்து கண்டிக்கலாமா? இது சரியா? என்று கேட்டேன். இப்படி நான் பேசுவது சரியல்ல என்று கூச்சலிட்டார்கள். இதனால் அந்தக் கூட்டத்தில் கலவரமாயிற்று. இந்தச் செய்தியைப் பெரியாரிடம் யாரோ சொல்லியிருக்கின்றார்கள். அதற்குப் பின்னர் நான் தந்தை பெரியாரைக் கண்ட

போது என்னை இதுபற்றிக் கேட்டார்கள். நான் நடந்தவற்றை விரிவாகக் கூறினேன். பெரியார் என்னிடம் பின்வருமாறு கூறினார்.

அவர்களில் சிலர் அப்படித்தான் இருப்பார்கள். இதுபற்றி 'நாம் கவலைப்படக்கூடாது. நம்மால் ஆன நல்ல காரியங்களை நாம் செய்துகொண்டே வரவேண்டும். இதனை நீங்கள் பெரிதாக எடுத்துக்கொள்ளவேண்டியதில்லை,' என்று கூறினார்கள்.

தந்தை பெரியார்பால் ஈர்க்கப்பட்டது ஏன்?

வினா 2: தந்தை பெரியார்பால் தாங்கள் ஈர்க்கப்பட்டமைக்குரிய காரணங்களைக் கூறுங்கள்.

விடை: நான் தமிழகச் சிற்றூரில் பிறந்து வளர்ந்தவன். சிற்றூரில் வாழும் மக்கள் அனைவரின் அன்றாடப் பழக்க வழக்கங்கள் எல்லாம் எனக்கு நன்றாகத் தெரியும். இந்த மக்களின் உண்மையான நிலைமைகளைக் கண்டு அவர்கள் வாழ்க்கையில் உள்ள குறைகளை குறைகளாக எடுத்துக்கூறியவர்கள் யாருமில்லை. சிற்றூர் மக்கள் கடவுள் மத மூடநம்பிக்கைக்கு முழுவதும் ஆட்பட்டவர்கள். இவை தொடர்பான குறைகளை எடுத்துக் கூறியவர்கள் இல்லை. எழுதியவர்களும் இல்லை. நாம் படிக்கின்ற படிப்புகளும் மூடநம்பிக்கை... ய மக்களிடத்தில் வளர்ப்பனவாகவே உள்ளன. தங்களுடைய தாழ்வுகட்கு மூடநம்பிக்கைகளே காரணம் என்பதும் பெரும்பாலானமக்கட்குத் தெரியாது. வழி வழியாக - தலைமுறை தலைமுறையாகத் தாங்கள் உண்மைகள் - உயர்வானவைகள் என்று நம்பி கடைப்பிடித்து வரும் கடவுள் மதத் தொடர்பான செயல்முறைகள் அவ்வளவும் மூடநம்பிக்கைகள் என்பது நாட்டுப்புற மக்கட்கும் கடவுள் மத வழிப்பட்ட படிப்பாளர்கட்கும் கொஞ்சமும் புரியாது. தெரியாது. இந்த இரண்டு கூட்டத்தாருக்கும் நன்கு புரியும்படி எடுத்துப் பேசியவரும் எழுதியவரும் தந்தை பெரியார் ஒருவரேயாகும். தந்தை பெரியார் பேச்சில், எழுத்தில் மக்கள் நலம் என்ற ஒன்றைத் தவிர வேறு சுயநலம் என்ற ஒன்று அறவே இல்லை. பணக்காரர்களும், படித்தவர்களும், வழிகாட்டிகள் என்று பெயர் எடுத்தவர்களும் எல்லாம் சுயநலக்காரர்கள். தமிழக வரலாற்றில் தந்தை பெரியார் போன்ற ஒரு மனிதனைக் காணமுடியாது. எல்லா மனிதர்களும் மற்றவர் எக்கேடு கெட்டால் நமக்கென்ன? நாம் வாழ்ந்தால் போதும் என்று தொடர்ந்து எண்ணி வாழ்ந்தவர்கள்.

இத்தகைய தமிழ் மக்கள் கூட்டத்தில் தமக்குரிய செல்வ வசதியோடு கூடிய வாழ்க்கையைக் கொஞ்சமும் எண்ணாமல் எளியரின் எளியராக உண்டும் உடுத்தும் ஊர்பல சுற்றியும் அடித்தளத்தில் கிடக்கும் அறிவில்லாதவர்களாகிய மக்கள் தங்கள் வாழ்க்கையில் முன்னேறப் பேசியும் எழுதியும் வரும் தொண்டைத் தந்தை பெரியாரிடம் தவிர வேறு யாரிடத்தும் நான் காணவில்லை. ஆகவே, அவரிடத்தும் அவர் கொள்கைகளிடத்தும் மிக்கபற்றுக் கொண்டேன்.

இந்தக் கொள்கையில் உள்ள ஈடுபாடு காரணமாகத் தாங்கள் சந்திக்க நேர்ந்த எதிர்ப்புகள் தொல்லைகள் அவற்றைக் கடந்து வந்த விதம் பற்றிக் கூறுங்கள்.

அன்புள்ள நண்பரே! பெரியார் கொள்கைகளை ஏற்றுக்கொண்டதால் சந்திக்க நேர்ந்த எதிர்ப்பு தொல்லைகளைக் கேட்டீர்கள். நான் என்ன சொல்லப்போகின்றேன் என்றால் எதிர்ப்பு தொல்லைகளில் சிக்கிக் கொள்ளாமல் பெரியார் கொள்கைகளால் வென்று வாழ்ந்த வரலாற்றைக் கூறுகின்றேன்.

தமிழர்களில் இரண்டொருவர் வாழ் வாங்கு வாழும் வகையறியாது ஏதோ பெரியார் கொள்கைகளை முற்றும் அறிந்தவர்கள் போலப் போலித்தனமாக இரண்டொரு காரியங்களைத் தங்கள் வசதிக்காகச் செய்துவிட்டு, என்னைப் பழிவாங்கி விட்டார்கள். நான் பெரியார் கொள்கையால் கெட்டுப் போனவன் என்று புலம்பிக் கொண்டு திரிந்தார்கள். இனியும் திரிவார்கள். தந்தை பெரியார் கொள்கைகள் என்பவை வெறும் நடைமுறைப்படுத்த முடியாத கொள்கைகள் அல்ல. பெரியார் கொள்கைகள் என்பவை முழுக்க முழுக்க வாழ்க்கை நெறிகளாகும். ''தின்ன மண்ணுக்குச் சோகை'' என்று நாட்டுப் புறத்துப் பழமொழிகளில் ஒன்றுண்டு.

அருப்புக்கோட்டை கைலாசம் அறக் கட்டளை நிறுவனர் டி.கே. சுப்பிரமணி யம் முதல் சொற்பொழிவின்போது உரையாளர் பேராசிரியர் இராமநாதன் அவர்கட்கு ஆடை போர்த்துதல்
(சென்னை 24.12.1978)

தந்தை பெரியார் கொள்கைகளை நாம் எந்த அளவுக்குப் பின்பற்றுகின்றோமோ அந்த அளவுக்கு நாம் நன்மையடையலாம். பெரியார் கொள்கைகளில் எவையேனும் இரண்டு கொள்கைகளைப் பின்பற்றினால் அந்த இரண்டாலும் நாம் முன்னேறுவதைக் காணலாம். பெரியார் கொள்கைகளைப் பின்பற்றுவோருக்குத் தன்னம்பிக்கை வேண்டும். நான் கல்லூரியில் படிக்கும்போது மிகத் திறமையோடு படித்தேன். கடவுள் மதங்களை வெறுத்தாலும் கடவுள் மதங்கள்பற்றிய நூல்களில் எனக்கு நல்ல புலமை உண்டு. திறம்பட அமைந்த எந்தப் பாடல்களையும் நான் எளிதில் வரப்பண்ணிவிடுவேன். இலக்கண நூற்பாக்கள் உரைகள் எல்லாம் எனக்கு பாடமாக இருக்கும். புத்தகங்களைப் பார்க்காமல் நானே சொல்லிக்கொண்டிருப்பேன். திருக்குறள் பரிமேலழகர் உரை குறையுடையது என்பார்கள். எனக்கு அவர் குறை பண்ணிய இடங்களும் தெரியும். அவர் நிறைவாக எழுதியுள்ள பகுதிகள் பலவற்றையும் நன்றாகத் தோய்ந்து படித்துள்ளேன். எனக்குப் பல குறட்பாக்களின் உரையை நினைத்துப் பின்னர்ப் பாட்டை நினைப்பேன். தமிழ் நூல்கள் என்றால் அவற்றை பண்டையோர் பாட்டும் உரையும் என்றுதான் கூறுவார்கள். பாடல் எவ்வளவு சிறப்பிற்குரியனவோ அவ்வளவு உரையும் சிறப்பிற்குரியன என்பது கருத்து. தந்தை பெரியார் கருத்துகளை நான் பாடமாக்குதற்கு என்னுடைய தமிழ் இலக்கண அறிவையும் இலக்கிய அறிவையும் நன்கு பயன்படுத்தி எழுதி வருகின்றேன். இரண்டொரு சான்று கூறுகின்றேன்.

தந்தை பெரியார் ஒரு இடத்தில் இப்படிக் கூறுகின்றார். ''கடவுள் இல்லை யென்றால் நீ எப்படி? என்கிறார்கள். அதாவது நீ எப்படிப் பிறந்தாய்! என்கிறார்கள். படைப்பவன் கடவுளானால் சாகடிப்பவன் யார்? அவனும் கடவுளா? ஏன் படைக்கவேண்டும்? ஏன் சாகடிக்கவேண்டும்? இது என்ன விளையாட்டு?'' என்று பேசியுள்ளார். இதனைப் படித்தவுடன் தந்தை பெரியார் எந்த இடத்தை நினைத்து இவ்வாறு பேசியுள்ளார் என்பதைச் சட்டென்று நான் புரிந்துகொண்டேன்.

உலகம் யாவையும் தாமுளவாக்கலும்
நிலை பெறுத்தலும் நீக்கலும் நீங்கலா
அலகிலா விளையாட்டுடையார் அவர்
தலைவர்
அன்னவர்க்கே சரண் நாங்களே!
— கம்ப நாடர்

எல்லா உலகங்களையும் உளவாக்கலும் நிலை பெற்று வாழும்படிச் செய்தலும் முடிவில் அழித்தலும் ஆகிய செயல்களை இறைவனே செய்கின்றான் என்று கம்பர் பாடியுள்ள பாடலைத்தான் சுட்டுகின்றார் என்று எடுத்துக் காட்டிவிளக்கியுள்ளேன்.

இப்படி யெல்லாம் என்னுடைய புலமைத் திறத்தால் என்னிடம் யாரும் குறை காணமாட்டார்கள். என்னைப் பார்த்தால் சிரித்துக் கொள்ளுவார்கள்.

அடுத்துக் கரந்தையிலும் காரைக்குடியிலும் கல்லூரி மாணவருக்கென உணவு விடுதி வைத்து நடத்தியதால் மாணவர்க்கு அரசாங்க உதவித் தொகைகள் நிறையக் கிடைத்தன. மாணவர்கள் நிறைய வந்து படித்தார்கள்.

தந்தை பெரியாருக்கு டில்லியிலிருந்து வந்த கடிதம்

அன்புள்ள தந்தை பெரியார் அவர்களுக்கு டி.எச். கலீல் தாழ்மையான வணக்கம்.

தாங்கள் சிறைச்சாலையில் இருக்கும்போது தங்களுக்கு சிறைச்சாலை விலாசத்துக்கு ஒரு கடிதம் எழுதினேன். நான்கு மாதங்களுக்கு முன்பு இங்கு சீர்திருத்த திருமணத்திற்கு ஏற்பாடு செய்து அதை நடத்தினேன். திருணம் திரு. தர்மலிங்கம் அவர்களது தலைமையில் நடைபெற்றது. இங்குள்ள காங்கிரஸ் எம்.பிக்கள் அதில் பேசினார்கள். இங்குள்ள வடநாட்டார்களும் அத்திருமணத்தை மிகவும் பாராட்டினர். சீர்திருத்த திருமணம் இங்கு நடந்திருப்பது இதுதான் முதல் தடவை. திருமண இதழ் தங்களுக்கு ஒன்று அனுப்பியிருந்தேன்.

இங்கு நம்முடைய கழகத்தைப் பற்றி நன்றாக விளம்பரமாக இருக்கிறது. தென்னாட்டில் இருந்து யார் வந்தாலும் அவர்கள் ராவுணன் பரம்பரையைச் சேர்ந்தவர்கள் என்றும் தங்களை தென்னாட்டு இராவணன் - 'தக்ஷிண பிரதேஷ் கா ராவன்' - என்றே பத்திரிகைகளில் போடுகிறார்கள். மேலும் தங்களைப் பற்றியும் கழகத்தைப் பற்றயும் மிகவும் நன்றாக வடநாட்டு மக்கள் தெரிந்து கொண்டுதானிருக்கிறார்கள்.

இங்கு ராஷ்டிரபதி பவன் பக்கத்தில் சரீன் நாத் நந்தா என்பவர் இராமாயணப் பிரசாரம் செய்கிறார். இராவணனைப் பற்றிச் சொல்லும்போது, "ராவணன் இன்னும் சாகவில்லை. இராவணனும் இராவணனின் வம்சமும் தக்ஷிணப் பிரதேசத்தில் இன்னும் இருக்கிறார்கள். அந்த இராவணன்தான் ஈ.வெ.ரா." என்று பிரசாரம் செய்கிறார். இந்த அளவுக்கு நம்முடைய கழகச் செய்திகள் அவர்களை அறிவுறுத்தியிருக்கிறது.

மேலும் வள்ளுவர் மன்றம், தமிழ்ச் சங்கம், என்றும் இங்குள்ள தமிழர்கள் நடத்தி வருகிறார்கள். தாங்கள் குவாலியர் வருவதாக பத்திரிகை மூலம் தெரிந்தேன். வருவதாயிருந்தால் தாங்கள் டில்லிக்கு வரமுடியுமா? தேதியைத் தாங்கள் தயவு செய்து தெரியப்படுத்துங்கள். இது மிகவும் முக்கியம். இந்தக் கடிதம் கண்டதும் தாங்கள் வரும் விபரத்தைத் தெரியப்படுத்துவீர்கள் என்று மிக்க ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறேன். தங்கள் உடல்நலத்தைப் பற்றியும் திருமதி மணியம்மையார் அவர்களது நலனையும் கேட்க மிக ஆவல். வணக்கம்.

23.9.58

டி.எச்.கலீல்
128, சவுத் அவன்யூ, புதுடில்லி.

நம்முடைய அருத்தமற்ற பேராசை சுயநலங்களே நமக்கு இவ்வளவு வீட்டு வேலைகளை ஏற்படுத்திக்கொண்டது.

— தந்தை பெரியார்

தந்தை பெரியார் 115-வது பிறந்தநாள்

'விடுதலை' சிறப்பு மலருக்கு நல்வாழ்த்துகள் !

உலக நாடுகளுக்கெல்லாம் பகுத்தறிவு ஒளிபரப்பும்

தன்மானத் தலைவர் தந்தை பெரியார் வாழ்க !

* * *

தமிழ் மக்களுக்குத் தரமான சுவை பொருந்திய

பலகார வகைகள் வழங்கும் ஒரே நிலையம்

தமிழக எண்ணெய்ப் பலகாரம்

உரிமையாளர் : பே. தேவசகாயம்

தயாரிப்பு & விற்பனை நிலையம்

92, திருப்பரங்குன்றம் சாலை

மதுரை - 625 001

தந்தி : பெரியார்

தொலைபேசி : 33213

இல்லம் : 31922

தொலைபேசி : 33234

அழகிய வண்ண வண்ண அரசியல் சினிமா
சுவரொட்டிகளுக்கு

திரிசூல் ஆப்செட் பிரிண்டர்சு

திருச்சி

திரிசூல் லித்தோசு

2A/1 முகம்மதியர் சந்து
நகர்மன்றச் சாலை
மதுரை - 1

பெரியார் பணி முடிப்போம் ! இனமானக்காவலர் வழிநடப்போம் !

பெரியார் பிறந்த நாள்
விடுதலை மலருக்கு
நல்வாழ்த்துக்கள் !

பாவேந்தர் அழகு பொருள் அங்காடி

(கவரிங் மற்றும் திருமண அன்பளிப்பு பொருட்கள் கிடைக்கும்)

பெரியார் பழச்சாறு மய்யம்

(தேன் சுவை மிக்க பழச்சாறு வகைகள் கிடைக்கும்)

என்றும் பெரியார் தொண்டன்

வி. சடகோபன்

வ.ஆ.அ. மாவட்ட திராவிடர் கழக துணைச் செயலாளர்
தாளாளர் தந்தை பெரியார் தொடக்கப்பள்ளி
லிட்டில் பிளவர் ஆங்கிலப் பள்ளி, குடியேற்றம் - வ.ஆ.அ.மா.

"தொண்டு செய்து பழுத்த பழம் தூயதாடி மார்பில் விழும்
மண்டைச் சுரப்பை உலகு தொழும் மனக்குகையில் சிறுத்தை எழும்
அவர் தாம் பெரியார்"!

அய்யா அவர்களின் 115-வது பிறந்த நாளில்
அய்யா வழியில் அயராது உழைக்கும் விடுதலை ஆசிரியர்
தமிழர் தளபதி மானமிகு கி. வீரமணி
பணி சிறக்க நல்வாழ்த்துகள் !

மழை வேண்டின் மரம் நடுங்கள் !
ஊட்டச்சத்து வேண்டின் எங்களை நாடுங்கள் !!

பால்ரொட்டி, பழரொட்டி, பிஸ்கட், கேக்,
பன் வாங்கச் சிறந்த இடம்

தமிழரசி பேக்கரி

தயாரிப்பு & விற்பனை நிலையம்
70-71, அழகர் கோவில் சாலை,
மதுரை - 625 002.

குறிப்பு : ஆர்டர்களுக்குக் குறித்த நேரத்தில் தயார் செய்துத் தரப்படும்

உரிமையாளர் : M.தெய்வராசன்

எங்கள் நல்வாழ்த்துக்கள்

TNGST : 342786

தொலைபேசி : 23084, 24114

V. சோமசுந்தரம்

விறகு கமிஷன் வியாபாரம்

ஆந்திரா எடை மிஷின்

நெ. 143/1 E.B. ரோடு

திருச்சி - 620 022

அறிவுலக ஆசான் தந்தை பெரியார்

115-வது பிறந்த நாள் வாழ்த்துக்கள் !

- கிருஷ்ணா பேக்கரி
- நியூ கிருஷ்ணா பேக்கரி
- கிருஷ்ணா ஸ்வீட்ஸ்

பண்ருட்டி சாலை , வடலூர் - 607 303, தெ.ஆ. வள்ளலார் மாவட்டம்

WITH BEST COMPLIMENTS FROM

சூரியா ப்ளோர் & கெமிக்கல்ஸ் (பி) லிமிடெட்

தொழிற்சாலை & அலுவலகம்

மேல சொக்கநாதன் பேட்டை,
கீழ மூங்கிலடி அஞ்சல்,
சிதம்பரம் வட்டம் - 608 102.

என். குஞ்சிதபாதம், எம்.ஏ.,
நிர்வாக இயக்குநர்

எமது தயாரிப்புகள்

சோடியம் சல்பைடு
பிளாக்ஸ் (FLAKES)
பிட்ஸ் (BIDS)
சாலிட்ஸ் (SOLIDS)

தந்தை பெரியார் 115-வது ஆண்டு பிறந்த நாள் மலர்
சிறப்படைய எங்களது நல் வாழ்த்துகள்

தொலைபேசி : 22217, 23110

தரமான தங்க, வைர நகைகளுக்கு சிறந்த நிறுவனம்

ஸ்ரீ கிருஷ்ணா ஜுவல்லரி ஹால்

29 - 30, 203 காசுக்கடைத் தெரு,
சிதம்பரம் - 608 001.

உரிமையாளர் : A.K. சிதம்பரம் செட்டியார்

அஞ்சல் பெட்டி எண் : 14

தொலைபேசி: கடை : 22812, 22453
வீடு : 22758

ஸ்ரீ நடராஜ விலாஸ்
ஜுவல்லரி ஹால்

26/28, கடைத் தெரு,
சிதம்பரம் - 608 001.
உரிமையாளர் : ஆர். இராமநாதன்

தொலைபேசி - வீடு : 22758

தனலட்சுமி அம்மாள்
திருமண மண்டபம்

22, அனந்தீஸ்வரன் கோயில் அக்ரஹாரம்,

சிதம்பரம் - 608 001.

திருமண விழா, வளையலணி விழா, மஞ்சள் நீராட்டு விழா,

மற்றும்

இதர சுப வைபவங்களுக்கும் நகரில் நவீன வசதியுடன் கூடிய சிறந்த இடம் !

கார்த்திகேயன் திருமண மண்டபம்

(டீலக்ஸ்)

சிதம்பரம்

நவ நாகரிக தங்க கவரிங் நகைகள்

மொத்தமாகவும் சில்லரையாகவும் கிடைக்கும்

M.K. சீல் உத்திரவாதமுள்ளது

ஸ்ரீ முருகன் கவரிங் வர்க்ஸ்

17, இளமையாக்கினார் கோவில் தெரு,

சிதம்பரம் - 608 001

தொலைபேசி

கடை : 28803 வீடு : 22352

பெரியார் நூற்றாண்டுக் கல்வி வளாகம் - திருச்சி 28.12.92



'சிம்பொனி' இசை அமைத்து உலகப் புகழ் பெற்ற தமிழர் 'மாஸ்ட்ரோ' இளைய ராஜாவுக்கு - நேரில் சென்று பொதுச்செயலாளர் வீரமணி சால்வை போர்த்தி பாராட்டு (சென்னை 4.8.93)

— உடன் தந்தை பெரியார் தமிழிசை மன்றத்தினர்

டி.கே.எஸ். கலைவாணன் குழுவினர் (21.1.93)



டி.எல். மகராசன் குழுவினர் (19.1.93)

தாராபுரம் சுந்தரராசன் குழுவினர் (20.1.93)

தந்தை பெரியார் தமிழிசை மன்றம்

மதுரை "நாதகர மேதை" பொன்னுத்தாயம்மையாருக்குப்
பொற்கிழி அளிப்பு - மானமிகு கி. வீரமணி
"புரட்சிக் கலைவேந்தர்" பாரதிராஜா (19.1.93)

சென்னையில் புரட்சிக் கவிஞர் விழா 29.4.93



இயக்குநர் வி. சேகருக்குப் பாராட்டு

நடிகர்கள் சத்யராஜ், காகா ராதா கிருஷ்ணன் ஆகியோருக்குப் பாராட்டு

மூட நம்பிக்கை ஒழிப்பு நிகழ்ச்சிகள்



மூட நம்பிக்கை
ஒழிப்பு நிகழ்ச்சிகள்



மறைமலை நகரில்
திடீர்க் கோயில் மோசடி!

மோசடியைக் கண்டித்து
ஆர்ப்பாட்டம் (6.4.93)

திடீர் கோயிலும் - பார்ப்பனரும் ஓட்டம் (10.5.93)

அப்பொழுது விலைவாசிகள் குறைவு. அரசாங்க உதவித் தொகைப் பணம் சாப்பாட்டுச் செலவு போகப் புத்தகங்கள் வாங்கவும் மாணவர்கட்கு உதவியாக இருந்தது. நூறு மாணவர்கள் விடுதியில் இருந்தால் இரண்டு மாணவர்களை விடுதிப் பணம் கட்டாமலே இலவசமாக சாப்பிட்டுப் படிக்க ஏற்பாடு செய்துவிடுவேன். அந்த இருமாணவர்களும் விடுதிக்குள்ள சில வேலைகளைப் பார்க்கச் செய்வேன். திறமை மிகுந்த விடுதிப்பணம் கட்ட முடியாத மிக்க ஏழையாயுள்ளவர்கள் ஆண்டு தோறும் இருவரைச் சேர்த்துவிடுவேன். அவர்கள் விடுதி இல்லை யென்றால் படிக்கவே முடியாது.

பணத்தை வாங்கி வங்கியில் போட்டு வைத்துக்கொள்வேன். பொருட்கள் - காய்கறிகள் வாங்க மாதம் இருவரை மாணவர்களில் நியமிப்பேன். இவர்கள் வாங்கி வரும் பொருட்கள் - காய்கறிகள் எல்லாவற்றையும் தணிக்கை செய்ய இருமாணவரை நியமிப்பேன். இவர்களைக் கண்காணிக்க ஆசிரியர் ஒருவரை நியமிப்பேன். தணிக்கை செய்த மாணவர் கையெழுத்திட்ட பற்றுச் சீட்டுப்படிக் கணக்கிட்டு - இடவாடகை - சமையல்காரர் கூலி எல்லாவற்றையும் கூட்டி மொத்தச் செலவைக் கண்டுபிடித்து சாப்பிடுகின்ற மாணவர்கள் ஒவ்வொருவருக்கும் பங்கிடு செய்து அவைகளை அறிக்கையாக்கி என்னிடம் காட்டுவார்கள். மாணவர்கள் யாவரும் பத்தாம் வகுப்பு பி.யு.சி. படித்துள்ளவர்கள் வந்து சேருவார்கள். ஆதலால் கணக்குகளை அவர்களே செம்மையாகப் பார்த்துக் கணக்கிட்டுத் திறமையாக முடிப்பார்கள். அவர்கள் என்னிடம் கொடுத்த வரவு செலவுப் பட்டியலை நான் வேறு சில மாணவர்களிடம் காட்டிச் சரிதானா என்பதைக் கேட்பேன். சரியென்று சொன்னவுடன் அறிக்கைப் பலகையில் கையெழுத்திட்டுப் போட்டுவிடுவேன். மாணவர்கள் மாதம் தோறும் பணம் கட்டிவிடுவார்கள். இரண்டு கல்லூரிகளிலும் ஆண்டு தோறும் நாடகம் எழுதச் செய்து நடத்திக் காட்டினேன். கரந்தையில் பேராசிரியர் பாலசுந்தரத்தைக் கவிதை நாடகமாக எழுத வைத்து மாணவர்களை நடிக்க வைத்தேன். அப்படி எழுதிய நாடகம் புத்தகமாக்கப்பட்டு எல்லாக்கல்லூரிப் பிள்ளைகட்கும் பாடமாக வைக்கப்பட்டது. காரைக்குடியில் நாடகம் எழுதுவார் இல்லை. அங்கு நானே ''சோழன் கரிகால் வளவன்'' என்ற பெயரில் நாடகம் எழுதி நடிக்க வைத்தேன். இரண்டாண்டுகள் தொடர்ந்து நடித்தார்கள். அந்த நாடகத்தின் கையெழுத்துப்படி என்னிடம் இருக்கின்றது. தேர்வுகளிலும் மாணவர்கள் நல்லவண்ணம் தேர்ச்சி பெற ஆவன வெல்லாம் செய்வேன். இவ்வாறு நான் நடத்திய கல்லூரி எல்லா வகையாலும் சிறப்புற்று விளங்கச் செய்தேன். நான் என்ன பேசினாலும் பெரியார் கொள்கைகளை எவ்வளவு பேசினாலும் ஒன்றும் கேட்கமாட்டார்கள். திருவையாறு - தருமபுரம் - திருப்பனந்தாள் - மயிலம் - கோவை பேரூர் முதலான இடங்களில் இருக்கும் கல்லூரிகள் இவ்வளவு சிறப்புடன் ஆரவாரத்தோடு நடத்தப்படுவதில்லை. மடங்களில் நடத்தப்படும் கல்லூரிகளில் படிக்கும் மாணவர்கள் சிறைக் கைதிகள் போலக் காலத்தைக் கழிப்பார்கள்.

பார்ப்பனர்பற்றி காந்தியார்



மாயவரத்தில் பிராமணர்கள் பஞ்சம சகோதரர்களிடம் சமமாகப் பழகினால் மற்ற வகுப்பினர் அவர்களைப் பின்பற்றமாட்டேன் என்று சொல்லுவார்களா? தங்களுடைய தற்கால நிலைமை பூர்வீகத் தவ பலத்தால், தலைமுறைத் தத்துவமாய் கிடைத்தது என்று பிராமணர்கள் சொல்வார்களேயானால், அவர்களே தேசத்தை நாசமாக்கும் பாவி யாவார்கள்.

— காந்தியார்

ஆதாரம்: ''தமிழ் நாட்டில் காந்தி'' பக்கம் 170

11

காரைக்குடியில் தொடர்வண்டி நிலையத்துக்குத் தென் புறத்தில் பலவகையான உரிமைச் சிக்கலுக்கு ஆட்பட்டுக் கிடந்த இருபது ஏக்கர் அரசாங்க நிலத்தைக் காரைக்குடிக் கல்லூரிக்கு இனாமாக அரசு உதவும் வகையில் அவைகட்காவன வெல்லாவற்றையும் முறையாகச் செய்து முடித்துவைத்தேன். அந்த இடத்தில் இப்போது கட்டடம் கட்டி உள்ளார்கள். கல்லூரி கலைக் கல்லூரியாக பி.லிட்., எம்.ஏ., வகுப்புகளை உடையதாக நடந்து கொண்டிருக்கின்றது.

பொதுச்செயலாளரிடம் சிக்கினேன்.

இந்தக் கொள்கைப் பின்னணியில் இடம் பெற்ற தங்களால் மறக்கமுடியாத நிகழ்ச்சிகள்.

நான் காரைக்குடியில் இருந்து வெளியே வரும்போது இப்படி இங்கே வந்து பணி புரிவேனென்று அறவே நம்பவில்லை. அந்த அளவுக்கு நம்மை உணர்ந்து நமக்குரிய இடத்தை யார் கொடுப்பார்கள்? தந்தை பெரியார் இருந்தால் கிடைக்கும். அவரில்லாத இக்காலத்தில் நமக்கு கிடைக்குமென்று என்னால் நினைக்கவே முடியவில்லை. ஆகவே நாம் நம்முடைய பயிர்த்தொழில் தொடர்பான காரியங்களில் முழுமுயற்சியோடு இறங்கவேண்டும். வயது முதிர்ச்சியடைந்த பிறகு போய்ப் பயனில்லை. இரண்டாண்டுகள் முன்னே போகலாம் என்று முடிவு செய்தேன். தொடர்ந்த பல ஆண்டுகளின் கல்விப் பணியில் ஒரு சலிப்பும் எனக்கு ஏற்பட்டது. இடை இடையே தந்தை பெரியார் காரியங்களையும் பார்க்கலாம் என்றுதான் எண்ணி வெளியே வந்தேன். நான் எண்ணியபடியே சில ஆண்டுகள் கழிந்தன. மதிப்புக்குரிய நமது பொதுச்செயலாளர் மானமிகு **வீரமணி** அவர்கள் ஒரு நாள் என்னை அழைத்து **தந்தை** பெரியார் அவர்களின் நினைவுச் சொற்பொழிவை முதன் முதலாக நீங்கள் நிகழ்த்த வேண்டும் என்றார். இதனைக் கேட்டவுடன் எனக்குத் தலைச்சுற்று சடக்கென ஏற்பட்டது. நாமெங்கே! தந்தை பெரியார் எங்கே! நம்மை விடப் பெரிய அளவில் பட்டம் பதவிகளைப் பெற்றவர்கள் எல்லாம் இக்காலத்தில் தந்தை பெரியார்பற்றி உரை நிகழ்த்தக் காத்துக் கொண்டு கிடக்கின்றார்கள். அவர்களை கொண்டு நிகழ்த்தினால் தந்தை பெரியாருக்குப் பெருமை சேர்ப்பதாக இருக்கும். நான் எங்கேயோ ஒரு மூலையில் ஓரம் ஒதுக்கில் இருந்துகொண்டு கல்விப்பணி புரிந்தவன். நாம் போய் நினைவுச் சொற்பொழிவைச் செய்தால் அது பெரியாருக்குச் சிறுமை சேர்ப்பதாக முடியுமே! குருவித் தலையில் தேங்காயைக் கட்டி விட்டுப் பறக்கச் செய்வதுபோல இருக்கின்றதே என்று என்னையும் அறியாமல் எனக்கொரு பதட்டம் ஏற்பட்டது. சட்டென்று மறுத்துக் கூறினேன். உரை நிகழ்த்த மிகப்பெரிய படிப்பாளர்கள் - கல்வியாளர்கள் - சிந்தனையாளர்கள், எழுத்தாளர்கள் என்றெல்லாம் விரும்பி வந்து பெரியாரைப் பற்றி உரையாற்றக்காத்துக் கிடக்கின்றார்கள். இந்தச் சூழ்நிலையில் என்னை நிகழ்த்தச் சொல்லுவது பொருந்தாததாக எனக்குப் படுகின்றது. வேண்டாம் என்று மறுப்புரை கூறினேன். மற்றவரை நீங்கள் அழைக்காவிட்டாலும் பெரியாரைப்பற்றிய உரையை நிகழ்த்த நீங்கள்தான் தகுதி உடையவர்கள். உங்கட்குத் தான் எல்லாத் தகுதிகளும் நிறைய உண்டு. உலகம் பெரியார் என்றதும் உங்களைத்தான் நினைக்கும். ஆகவே நீங்கள் நிகழ்த்துவது முழுப் பொருத்தமாக இருக்கும் என்று விரித்துக் கூறாமல் இவ்வளவு கருத்துக்களையும் உள்ளத்தில் அடக்கிக்கொண்டு நீங்களே நிகழ்த்துங்கள். அதுதான் பொருத்தமாக இருக்கும். என்னை விட்டுவிடுங்கள் என்று கூறினேன். பொதுச்செயலாளர் விடவில்லை. பிறகு நானே எனக்கு அமைதி செய்துகொண்டு பார்ப்போம் என்று முயன்று நிகழ்த்தினேன். பின்னர் புத்தகமாக எழுதினேன். அப்போதெல்லாம் மனம் நிறைவடையவில்லை. சரியாகச் செய்தோம் என்று எனக்கு மனநிறைவாக இல்லை.

இந்த நிலையில் நான் எழுதியுள்ளவைகளை கையில் எடுத்துக் கொண்டு பெரியார் திடலில் உள்ள கட்டிடத்தின் மேல் மாடிக்கு நானும் பொதுசெயலாளருமாகச் சென்றோம். என்னைப் படிக்கச் சொல்லவில்லை. அவரே படித்தார். நான் அமைதியாக இருந்து கொண்டு இந்த உரைக்குத் தொடர்பில்லாத ஒரு பொது மனிதன் கேட்பது போலக் கேட்டேன். பொதுச்செயலாளர் படிக்கப் படிக்க நான் கேட்டபோதுதான் சரியாகச் செய்துள்ளோம் என்ற எண்ணம் எனக்கு வந்தது.



அடுத்து ஒரு அதிர்ச்சியைத் தரும் செய்தியைப் பொதுச்செயலாளர் கூறினார்கள். ''கல்லூரி முதல்வராகிய உங்களுக்கு ஓய்வென்பது கிடையாது. நீங்கள் எப்போதும் கல்லூரி முதல்வராகவே இருங்கள் என்று கூறினார். எனக்கு வியப்பாகவும் அதிர்ச்சியாகவும் இருந்தது. நாம்தான் ஓய்வும் ஓய்வூதியமும் பெற்றுக்கொண்டு வெளியே வந்துவிட்டோம். மீண்டும் முதல்வர் பணியா என்று தடுமாற்றத்துடன் கேட்டேன். அவர் ஆமாம் என்றார். எனக்கு விளங்கவில்லை. என்ன சொல்லுங்கள் என்றேன். பெரியார் சிந்தனைகளை அஞ்சல் வழியில் நடத்தவேண்டும். அதற்கு நீங்கள் பொறுப்பேற்கவேண்டும் என்றார். மீண்டும் ஒரு அதிர்ச்சி ஏற்பட்டது. வேண்டாம் என்று கூறினேன். மீண்டும் வற்புறுத்தினார்கள். ஒருவாறு ஒப்புக்கொண்டேன். எவ்வாறு நடத்துவது என்பதை முடிவு செய்ய மதுரையில் யாதவர் கல்லூரியில் நண்பர் முனைவர், பேராசிரியர் தமிழ்க்குடி மகனார் முதல்வராக இருந்தபோது ஒரு கூட்டத்தைக் கூட்டினோம். மதிப்புக்குரிய பொதுச் செயலாளர், தமிழ்க்குடிமகனார் பேராசிரியர் முனைவர் இ.கி. இராமசாமி போன்றோர் கூடினோம். எல்லோரும் அவரவர்கள் எண்ணியதைக் கூறினார்கள். நான் ஒன்றும் கூறவில்லை. தடுமாற்றத்தோடு அமைதியாக இருந்தேன். எல்லோருமாக நாங்கள் எங்கள் கருத்தைக் கூறினோம். நீங்கள் முதல்வராக இருந்தவர்கள். தகுதி உடையவர்கள். நாங்கள் கூறியவைகளையும் எண்ணிநடத்துங்கள் என்று கூறிக் கூட்டத்தை முடித்து விட்டார்கள். பள்ளிகள் கல்லூரிகட்குரிய விடுமுறைக் காலம் முடிந்து தொடங்கும் காலத்தில் நாமும் தொடங்கி நடத்துவது என்று முடிவாயிற்று.

தந்தை பெரியாரால் எழுதப்பட்ட எல்லாவற்றையும் பாடமாக்க முடியாது. பெரியாருக்கெனத் தனித்தன்மையோடு அமைந்த கொள்கைகள், அறிக்கைகள், பேச்சுகள் ஆகியவற்றைத் தேர்ந்தெடுத்து அவைகளில் படிந்துள்ள நுட்பமான கருத்துகளை எடுத்துக் காட்டி தந்தை பெரியார் மறுத்து உரைக்கும் அல்லது எழுதும் வடிவங்களில் அமைந்துள்ள கருத்துக்களை விளக்கும் இடங்களைச் சுட்டி இப்படிப் பாடியதை அல்லது பேசியதைத்தான் பெரியார் மறுக்கின்றார் என்று அந்தந்த இடங்களை எடுத்துக் காட்டி விளக்குவேன்.

இந்த இரண்டு நிகழ்வுகளையும் என் வாழ்நாளில் மறக்கமுடியாத நிகழ்வுகளாக நினைக்கின்றேன். சுருக்கமாகச் சொன்னால் நமது பொதுச்செயலாளர் அவர்களிடம் நான் சிறப்பாக சிக்கிக்கொண்டேன்.

பொய்ம்மையை விற்றுப் பிழைப்பவர்கள்!

5. உங்களின் நண்பர்கள் தமிழ்ப் புலவர் குடும்பத்தினர் உங்களை எந்தக் கண் கொண்டு பார்க்கின்றனர்.

நல்ல புலமையாளர், தேர்ந்த கல்வியாளர், ஆனால் அவைகளைப் பயன்படுத்தி வாழத் தெரியாதவர் என்று பார்ப்பார்கள். ஆனால் நான், அவர்களை உண்மைகளை எடுத்துக் கூற மனவலிமை இல்லாமல் பொய்ம்மைகளை விற்றுப் பிழைப்பவர்கள் என்று கருதுவேன்.

6. பெரும் புலவராகிய தாங்கள் வரலாற்றில் தந்தை பெரியாருக்குரிய இடம் என்று எதைக் கருதுகின்றீர்கள்?

மனித இன வரலாற்றில் புத்தரைத்தான் மனித வாழ்க்கையை மனித அறிவுக்குட்

பட்ட நிலையில் எண்ணி அப்பாலைத் தத்துவத்தில் மனம் வைக்காமல் அறிவுறுத்தியவர் என்பார்கள். அதனால் கடவுள் மத நம்பிக்கையாளர் புத்தரைக் கடுமையாக எதிர்த்தார்கள். இவர் தம்முடைய அறிவுறுத்தல்களில் கடவுள் உண்டு என்றோ இல்லை யென்றோ கூறவில்லை. இந்த உலக நடைமுறைகளைப் பற்றிய தம் கருத்தையே வலியுறுத்தினார். அப்படியிருந்தும் இவரை நாத்திகர் என்று வெறுத்தார்கள். தந்தை பெரியார் புத்தரைப் போலப் பேசவில்லை. தன்னுடைய கருத்துகளை மட்டும் கூறவில்லை. தனக்கு எதிரானவர்களின் கருத்துகள் நடைமுறைகள் அவ்வளவையும் ஒன்றுவிடாமல் முற்றாக முழுவதுமாகக் கண்டித்தார். சுருக்கமாக சொன்னால் கடவுள் இல்லை. கடவுள் இல்லவே இல்லை. கடவுளைக் கற்பித்தவன் முட்டாள். கடவுளை பரப்புகிறவன் அயோக்கியன். வணங்குகிறவன் காட்டுமிராண்டி என்று வரையறுத்த பொன் மொழிகளை இந்த உலகிற்கு வழங்கியவர் பெரியார் ஒருவரே ஆகும். ஆகவே மனித இன வரலாற்றில் தந்தை பெரியார் புத்தரை விட உயர்ந்த இடத்தில் உள்ளார் என்பது என்னுடைய கருத்து.

6. தாங்கள் மேற்கொண்டுள்ள பணி, பெரியார் இயக்கப்பணி நிறைவளிக்கிறதா? காரணம் என்ன?

எனக்கு நிறைவளிக்காத எப்பணியிலும் ஒரு கணம் கூட நான் இருக்கமாட்டேன். நான் என்னுடைய நெஞ்சத்தை முன்னரேயே தந்தை பெரியார் ஏண்ணம் சொல் செயல் இவைகளில் பறிகொடுத்தேன் என்று சொல்லியிருக்கின்றேன். கல்லூரியில் என்னுடைய பணிக்காலத்திலும் இயன்ற அளவு பெரியார் கொள்கைக்கு ஏற்பவே நடந்து வந்திருக்கின்றேன். நான் தமிழ்க் கல்லூரிகளில் இல்லை யென்றால் நூற்றுக்கணக்கான பிற்படுத்தப் பட்ட தாழ்த்தப்பட்ட ஆண்கள் பெண்கள் படித்தே இருக்க முடியாது. இந்த இரண்டு இனங்களைச் சேர்ந்தவர் என்றாலே இவர்களெல்லாம் பெரியார் வழியிலான சிந்தனையாளர்களாகவே இருப்பார்கள் என்று மடத்திலுள்ளவர்கள் நினைத்துக் கொண்டிருந்தார்கள். மயிலம் கல்லூரி முதல்வரும் மடாதிபதிகளுக்கு உறவினருமான துரைசாமி அய்யா அவர்கள் நமதியக்கம் என்றாலே மிகவும் கடுமையாக எதிர்ப்பார். இதனைப் போன்றே திருப்பனந்தாள் மடத்தில் முதல்வராக இருந்த வேங்கடராமையா என்ற பார்ப்பனரும் மிகக் கடுமையாகவே நடந்துகொள்ளுவார். தருமபுர மடத்துக் கல்லூரி முதல்வர்கள் மாறிக்கொண்டிருந்தனர். தமிழ் உணர்வு தமிழின உணர்வு உள்ளவர்களும் இருந்திருக்கின்றார்கள். அங்கே சிக்கல் ஏற்பட்டால் அந்த மாணவரை முதல்வர்களே கடிதம் கொடுத்து என்னிடம் அனுப்பிவிடுவார்கள். பேரூர் மடத்துக் கல்லூரியிலிருந்து வருபவர் குறைவு - திருவையாற்றுக் கல்லூரியிலிருந்தும் அவ்வப்போது வருவார்கள். இவர்களுக்கு எல்லாம் புகலிடமாக நானிருந்த கல்லூரிகள் இருந்தன. இந்தச் செய்தி தந்தை பெரியாருக்குத் தெரியும். இதனால் நீங்கள் வெளியே வரவேண்டாம். அங்கேயே இருங்கள் என்று கூறுவார். ஓய்வு பெற்ற பின்னர் என்னை முழுமையாகப் பயன்படுத்திக் கொள்ளவேண்டுமென்ற எண்ணம் தந்தை பெரியாருக்கிருந்தது என்பது எனக்குத் தெரியும். கொள்கையளவில் பெரும்புலவர் பொன்னம்பலனார் அவர்களையும் புலமையும் கொள்கையும் என்ற அளவில் என்னையும்தான் எண்ணியிருந்தார் என்பது எனக்குத் தெரியும். அவர்தாம் பெரியார் - பார். என்ற பாடலைக் கேசட் செய்யும்போது பிழைபடாமல் இருக்கவேண்டும் என்பதற்காக எனக்குத்தான் எழுதினார்கள். நான்தான் அந்தப் பாடலை முழுமையாக எழுதிக் காரைக்குடியிலிருந்து அனுப்பி வைத்தேன். நமது மதிப்புமிக்க பொதுச்செயலாளர் கி. வீரமணியவர்கள் பெரியார் நெஞ்சத்தையே தமதாகக் கொண்டவர். ஆதலாலே முழுமையாக என்னைப் பயன்படுத்திக்கொண்டார் என்றுதான் நான் எண்ணுவேன். அஞ்சல் வழிக்கல்லூரிப் பணி எனக்குக் கை வந்த பணி. அதிலும் தந்தை பெரியார் சிந்தனை எழுத்து என்று எண்ணும்போது அது எனக்கு மேய்ச்சலுக்கு விடாமல் பட்டினியாய்க் கிடந்த மாட்டைப் புல் வெளியில் கொண்டுபோய்விட்டது போல இருக்கும். காலம் போவதே தெரியாது. நானாக முடியாமல் களைப்பு ஏற்படும் வரை எழுதுவேன் - படிப்பேன் - சிந்திப்பேன் மாறிமாறி அந்த நினைவாகவே இருப்பேன். பாடம் உருவாக்கி முடியும்வரை அந்த எண்ணத்துடனேயே இயங்குவேன். எனக்

உ.வே.சா.வே ஒப்புதல்!

உ.வே.சா.



பண்டிதமணி

தென் இந்தியாவிலுள்ள பிராமணர் ஒரு வகுப்பாராகவே இருந்து கொண்டு, தமிழைத் தாழ்த்தியடக்கியும், சமஸ்கிருதத்தை ஆதரித்து உயர்த்தியும் வருகின்றனர் எனவும், சென்னை, அண்ணாமலை என்னும் இரு பல்கலைக் கழகங்களிலும் பிராமணர் வலுத்த கட்சியாயிருந்து அத்துணை பலமாகத் தமிழுக்கத் தடை செய்து வருவதால், தமிழர்கள் தங்கள் தாய்மொழியின் நிலையை உயர்த்துவதற்கு ஒன்றுமே செய்ய முடியாதவராயிருக்கின்றனர். பார்ப்பனர்களில் ஒரு சிலர் தமிழுக்கு நீங்காத கடும் வைரிகளாக இருக்கின்றனர் என்று தம்மிடம் சாமிநாதய்யரவர்கள் சொன்னார் என்று வருந்தி கூறியமை ‘செந்தமிழ்ச் செல்வி’ சிலம்பு 47, பரல் 9 இல் காண்க.

(உ.வே. சாமிநாத அய்யர் இவ்வாறு பண்டிதமணி மு. கதிரேசன் செட்டியாரிடம் கூறிய செய்தியை ‘செந்தமிழ்ச் செல்வி’ இதழில் (ஏப்ரல் 1974) தெரிவிப்பவர் அவ்விதழ் ஆசிரியர் திரு. வ. சுப்பையா)

குக் கொடுத்துள்ள மேல் மாடி அறை மிக வசதியாக இருக்கின்றது. வெளியார் யாரும் எளிதில் ஏறி மேலே வரமாட்டார்கள். இளைஞர்களாக உள்ளவர்கள்கூட எப்படி ஏறிவருகின்றீர்கள்? மூச்சு வாங்குகின்றது என்பார்கள். நான் ஒருநாளைக்குப் பலதடவை ஏறி இறங்குகின்றேன். எனக்கு வேண்டிய தண்ணீரையும் நானே வாளியில் பிடித்துத் தூக்கிக் கொண்டு வந்துவிடுவேன். இவைகளை நான் சங்கடமாக நினைப்பதில்லை. உட்கார்ந்தே எழுதியும் படித்துக்கொண்டிருக்கும் எனக்கு இடையே ஒரு மாற்றமான வேலையாக எண்ணிக் கொள்வேன். கரும்பு தின்பதற்கு கூலி கொடுப்பது போல என்னுடைய செலவுக்கு நான் யாரையும் எதிர்பாராமல் பார்த்துக்கொள்ளும் அளவுக்கு பொருளுதவி செய்து வருவதும் மகிழ்ச்சிக்குரிய செய்தியாகக் குறிப்பிடுகின்றேன். ஆகையால் இயக்கப் பணி தந்தை பெரியார் பணி என்பது எனக்குச் சலிப்பளிக்காத ஒன்றாக இருக்கின்றது. எனக்கு எந்த நோயும் இல்லை. பசிக்கு உணவு - இரவில் உறக்கம் - இது இரண்டும் கட்டாயத் தேவைகள்; வெளியே அலைச்சல் என்பது கூடாது. எனக்கு நெருக்கமானவர்கள் என்னை நம்பி இருப்பவர்கள் யாரும் இல்லை. என்னுடைய மனைவியார் என்னுடைய நீண்ட வாழ்வில் மிக்க உதவியாக இருந்தார். அவர் குடும்பப் பொறுப்பை ஏற்றுக்கொண்டு திறம்படப் பார்த்துவிடுவார். எங்கட்குப் பிள்ளை இல்லை. இப்போது என்னுடைய தம்பி - தம் மனைவியார் பிள்ளைகளிடம் ஒப்படைத்து விட்டேன். அதுபற்றிய கவலையும் இல்லை. அவ்வப்போது ஊருக்குப் போகும்போது என்ன ஆயிற்று என்று கேட்டு இப்படி இப்படி செய்யுங்கள் என்று சொல்வதோடு முடிந்துவிடும்.

தந்தை பெரியாருக்குப் பின் இயக்க பணி!

தந்தை பெரியாருக்குப் பின்னர் இயக்கச் செயற்பாடுகள்பற்றித் தங்களின் கணிப்பு என்ன?

இதற்குச் சுருக்கமாக விடையளிக்க விரும்புகின்றேன்.

தந்தை பெரியாருக்குப் பிறகு இயக்கத்தின் பலமுகமான பணிகளின் விரிவைக்

கண்டு தமிழகம் மட்டுமன்று, இந்தியப் பெரு நிலப்பரப்பு மட்டுமன்று, விரிகடல் சூழ்ந்த வியனுலகமே வியப்படைகின்றது. எதனையும் காணாக் கண்ணருக்குக் காட்டவும் முடியாது. கேளாக் காதருக்குக் கேட்கவைக்கவும் முடியாது. ஆனால் மதுரையில் நடந்த இளைஞரணி மாநாடு காணாக் கண்ணரைக் காணவும் வைத்தது. கேளாக் காதரைக் கேட்கவும் வைத்தது. பீகார் முதல்வர் மாண்பு மிகு லல்லுபிரசாத் யாதவ் மட்டும் வந்திருந்தால் மிகப் பெரிய சாதனையொன்று இந்தியப் பெருநிலப்பரப்பே வியப்படையும்படி நடந்து முடிந்திருக்கும். அது இன்னும் நழுவிப் போகவில்லை. அடுத்து நம் மதிப்பு மிக்க பொதுச்செயலாளரின் அழைப்பை ஏற்று வரத்தான் போகின்றார். இவருடன் முன்னாள் பிரதமர் மாண்புமிகு வி.பி.சிங், சரத்யாதவ் அவர்களும் இராமவிலாஸ் பஸ்வான் அவர்களும் இணைந்து வந்துவிட்டால் தந்தை பெரியாரின் கொள்கை வழியிலான நம் மதிப்புமிக்க பொதுச்செயலாளரின் எண்ணங்கள் மக்களிடையே மிக்க வலிமை பெற்றுவிடும். இவ்வளவுக்கும் காரணம் அன்னை மணியம்மையாருக்குப் பின்னர்ப் பொறுப் பேற்றுக்கொண்ட நாள் முதலாக

> " மெய் வருத்தம் பாரார் பசி நோக்கார் கண்துஞ்சார்
> எவ்வெவர் தீமையும் மேற் கொள்ளார் - செவ்வி
> அருமையும் பாரார் - அவமதிப்பும் கொள்ளார்
> கருமமே கண்ணாயினார்.

என்று இப்பாடலில் கண்டுள்ளபடி நம்மதிப்புமிக்க பொதுச்செயலாளர் மெய்வருத்தம் பாராது, கண்துஞ்சாது, மற்றவர் தம்மை நோக்கிச் செய்யும் தீமைகளைத் தாம் அவருக்கு செய்யாமல், நாம் தந்தை பெரியார் வழியிலான பணியைச் செய்தற்கு இது ஏற்ற காலம், இது ஏலாத காலம் என்ற செவ்வியை எண்ணாமல், மற்றவர் சொல்லும் அவமதிப்புகளைப் பற்றிக் கவலைப்படாமல் தந்தை பெரியார் காட்டியுள்ள பணிகளாகிய தம்முடைய செயற்பாடுகள் என்கின்ற கருமங்களையே கண்ணாகக் கொண்டு திட்டமிட்டுத் தொடர்ந்து இயக்கத் தொண்டர்கள் பலரையும் சேர்த்துக்கொண்டு இந்தியப் பெருநிலப் பரப்பு முழுவதுமே ஆரியப் பார்ப்பன வல்லாண்மைக்கு எதிராக எழுந்து மிகப்பெரிய புரட்சியை நிகழ்த்தப்போகின்றது. இதனை நம் கண்ணாரக் காண்போம் என்று கூறி நேர் காணலை முடிக்கின்றேன்.



பார்ப்பனப் பெண்ணின் சாதி ஆணவம்

கல்லூரியில் பயின்று கொண்டிருந்த காலத்தே நீதிக் கட்சி இயக்கத்தின் சமுதாயச் சீர்திருத்தத்திலெல்லாம் பங்கு கொண்டேன். மேல்சாதி என்ற வேற்றுமையை அகற்ற வேண்டுமென்ற உணர்ச்சி உச்ச நிலையை அடைந்தது. எனது இல்லத்தின் பக்கத்தே அய்யர் குடும்பங்கள் பல இருந்தன. அய்யர் குடும்பப் பெண்கள் அனைவரும் பால்காரன் ஒருவனை ''அடா'' என்றே அழைத்து வந்தனர். எனக்கு இச்செயல் ஆத்திரமூட்டியது. நான் அந்தப் பால்காரனை அழைத்து ''இனிமேல் அவர்கள் உன்னை ''அடா'' என்று அழைத்தால் நான் உங்களை ''அடி'' என்று நாளைக்காலை அழைப்பேன் என்று ''நோட்டீசு கொடு'' என்றேன். அதன் முடிவு மறுநாள் காலை ''அடா'' என்ற சொல் ''வாப்பா'' என்று மாறியது.

''தெ.பொ.மீ. மணி விழா - மலரிலிருந்து

தெ.பொ.மீ.

With Best Wishes from

☎ 26363
49142

MPM

Muthu General Store

F.F.A., W.B. ROAD
TRICHY - 620 002

பகுத்தறிவு பகலவன் தந்தை பெரியார் 115-வது
பிறந்த நாள் மலருக்கு நல்வாழ்த்துக்கள்!

'இனமானப் பேரொளி' கி. வீரமணி தலைமையிலே
இனமான் தந்தை பெரியார் தம் பணிமுடிப்போம்!

ஜோதி போட்டோ ஸ்டுடியோ
&
வீடியோ கவரேஜ்

4C. கடலூர் சாலை, பண்ருட்டி - 607 106.

உரிமை: இரா. கோவிந்தசாமி (ஒன்றிய தி.க. தலைவர்)

கவுதமபுத்தர் பெரியார்

தந்தை பெரியார் அவர்கள் தம் கொள்கை நோக்கில் கவுதம புத்தரின் சிந்தனைகள் ஒத்து இருப்பதை அறிந்து அக் கொள்கைகளைப் பெரிதும் போற்றினார். வரவேற்றார், நாட்டு மக்கள் மத்தியிலும் பரப்பும் பணியைத் தம் தலையில் தூக்கிக் கொண்டார்.

''இன்றைய தினம் நாம் எவை எவைகளை நம் கொள்கைகளாகச் சொல்லி எவை எவைகளை அழிக்க வேண்டும் - ஒழிக்க வேண்டும் என்று சொல்லி வருகிறோமோ அந்தக் காரியங்களுக்குப் புத்தருடைய தத்துவங்களும் உபதேசங்களும், கொள்கைகளும் மிகவும் பயன்படும்'' - என்று 31.1.1954 அன்று சென்னையில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் தந்தை பெரியார் அவர்கள் குறிப்பிட்டார்கள். ('விடுதலை' 3.2.1954)

ஈரோட்டில் 1954 சனவரி 23-ல் புத்தர் கொள்கைப் பிரசார மாநாட்டைக் கூட்டினார்கள். மாநாட்டுக்கு உலக புத்தர் சங்கத் தலைவரும், சிலோன் பல்கலைக் கழக புத்தீஸ்டு கலாசாரத்துறைத் தலைவரும் பேராசிரியருமான டாக்டர் ஜி.டி.மல்லலசேகரா அம்மாநாட்டுக்குத் தலைமை வகித்தார். அனைத்திந்திய தாழ்த்தப்பட்டோர் சமுதாய சங்கத் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான பி.என். ராஜ் போஜ் மாநாட்டைத் திறந்துவைத்தார். கவுதமபுத்தரின் படத்தைத் திறந்து வைத்து தந்தை பெரியார் உரை ஆற்றினார்.

''நான் சொல்கிறேன் என்பதற்காக நீங்கள் ஏற்றுக்கொள்ளாதீர்கள். எதையும் யோசித்து ஏற்றுக் கொள்ளுங்கள்'' என்று தான் புத்தர் சொன்னார். அதையேதான் சுயமரியாதைக்காரர்களாகிய நாங்களும் 30 வருட காலமாகச் சொல்கிறோம்.

புத்தர் கொள்கைப் பிரச்சார மாநாடு

12

என்று நம் கூட்டினாலும் இதைப் பார்ப்ப னர்களுக்கு விரோதமாகக் கூட்டப்பட்ட மாநாடு என்று கருதினாலும் தவறில்லை. நம் கருத்தும் அதுதானே.. தோழர் ராஜ் போஜ் அவர்கள் குறிப்பிட்டதுபோல புத் தமதத்தை இந்த நாடுதான் தோற்றுவித் தது. ஆனால் அது வெளி நாடுகளுக்குச் சென்றுவிட்டது. அப்படி பவுத்தத்தை இந்த நாட்டை விட்டு விரட்டியவர்கள் பார்ப்பனர்கள்தான். இந்த நாட்டில் பவுத் தத்தை நாம் மீண்டும் உயிர்ப்பிக்க வேண் டும்'' என்று குறிப்பிட்டார் தந்தை பெரி யார்.

ராஜ்போஜ் எம்.பி., பாராட்டு

அகில இந்திய தாழ்த்தப்பட்ட ஃபெட ரேஷன் பொதுச் செயலாளரும், நாடாளு மன்ற உறுப்பினருமான பி.என். ராஜ் போஜ் அவர்கள், ஈரோட்டில் திராவிடர் கழகம் சார்பில் நடைபெற்ற புத்தர் கொள் கைப் பிரச்சார மாநாட்டைத் துவக்கி வைத்து ஆற்றிய உரை:

இரங்கூனில் உள்ள புத்தர் சிலை.

பாங்காக் (தாய்லாந்து) தங்கத்திலான புத்தர் சிலை.

புத்தமத வீழ்ச்சிக்குக் காரணம்

புத்த மத வீழ்ச்சிக்குக் காரணங்கள் சைவம் - வைணவம் வளர்ச்சிதான் என டாக்டர் பி. அம்பேத்கர் கூறுகிறார்.

முஸ்லீம்களின் இந்திய படையெடுப் பும் மற்றும் ஒரு காரணம் எனக் கூறலாம். அலாவுதீன் பீகாரில் நுழைந்தபொழுது அவன் ஆயிரக்கணக்கான புத்த பிட்சுக்க ளைக் கொன்றிருக்கிறான். எஞ்சியிருந்த புத்த மதக் குருக்கள் அடுத்தாற்போலி ருந்த சீனா, நேபாளம், திபேத் போன்ற நாடுகளுக்கு ஓடிவிட்டனர்.

புத்த மதத்தை மீண்டும் வேரூன்றச் செய்ய இந்தியாவிலுள்ள புத்தமதக்காரர் கள் முயற்சித்தனர். இதற்குக் காரணம் இந் தியாவிலுள்ள 90 சதவிகித புத்தமதத்தி னர் இந்துக்களாக மாறிவிட்டனர்.

புத்தர் மக்களுக்குள் அனைவரும் சமம் என்று வலியுறுத்திச் சொல்லியிருப்பது தாழ்த்தப்பட்ட மக்களுக்குச் சிறந்த உபதேசமாகக் காணப்படுகிறது.

இந்நாட்டிலுள்ள 7 கோடி தாழ்த்தப்பட்டவர்களும், இதைத்தவிர இந்நாட்டு மக்களில் பெரும்பான்மையோர் இவர்களனைவரும் பற்பல கொடுமைகளுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

இது எதைக் காட்டுகிறதென்றால் பார்ப்பனீயம் ஏதோ ஒரு முறையில் இந்நாட்டைப் பரம்பரைப் பரம்பரையாக ஆட்சி செலுத்துவதைக் காட்டுகிறது.

முற்காலத்தில் பார்ப்பனீயம் புத்த மதத்தால் முறியடிக்கப்பட்டதென்பது உண்மையே. அதற்குக் காரணம் புத்தமதம்



டாக்டர் மல்லலசேகரா, தந்தை பெரியார், ராஜ் போஜ் எம்.பி.

மனிதர் யாவரும் சமம் என்று கூறிப் போராடிற்று.

பார்ப்பனீயம்

பார்ப்பனீயம் இந்நாட்டில் சாதிபேத முறைகளை நிலைக்கவைத்துத்தான் நிலைத்து நிற்கவியலும். பார்ப்பனர்களால் தோற்றுவிக்கப்பட்டதுதான் அல்லது அவர்களது கொள்கையை ஆதரிப்பது போன்றதுதான் சைவமும், வைணவமும். இதன் காரணமாகவே பார்ப்பனீயம் இந்நாட்டை ஏகபோகமாக ஆட்சி செலுத்துகிறது.

இந்த நிலையை நீடித்திருக்க அனுமதிக்கிறவரையில் உயர்வு தாழ்வு ஒழியவே ஒழியாது. எல்லாத் தந்திர முறைகளிலும் பார்ப்பனீயம் இந்த உயர்வு தாழ்வை நிலைநிறுத்தவே இன்னும் பாடுபட்டு வருகிறது. இந்த நிலையை நர்மதைக்குத் தெற்கேயும் வடக்கே மலைப்பகுதிகளிலும் இன்றுங் காணலாம்.

பெரியார் ராமசாமி

தென்னாட்டினராகிய நீங்கள் உங்கள் அன்றாட வாழ்க்கையில் இந்த அநீதங்களை நன்கு காணுகிறீர்கள். அதன் பயனாக அதை எதிர்த்தொழிக்கத் தோன்றிய தலைவர்தான் பெரியார் ஈ.வெ.ராமசாமி. பார்ப்பனீயத்தை ஒழித்துக் கட்டுவதில் தென்னாட்டு மக்கள் அவரது தலைமையில் ஒன்று திரண்டு நிற்கின்றனர்.

பார்ப்பனீயத்தை ஒழித்துக் கட்ட நீங்கள் நடத்திய பலதிறப்பட்ட போராட்டங்கள் இந்நாட்டின் பற்பல பகுதிகளில் மட்டிலுமின்றி உலகிலேயே ஒரு உணர்ச்சியை எழுப்பியுள்ளது என்றால் அது மிகையல்ல.

டாக்டர் ஜே.பி. மல்லல சேகராவின் புகழுரை

இவ்வாண்டு நவம்பரில் மூன்றாவது உலக புத்தமத மாநாடு பர்மாவில் நடைபெறும். "உலக அமைதிக்கு புத்தமதக் கொள்கைகள் எந்த அளவு உதவியளிக்கும் என்ற விஷயங்கள் மாநாட்டில் பரிசீலிக்கப்படும்" என்று கொழும்பு உலக புத்தர் தோழமைக் கழகத் தலைவரும் ஈரோட்டு புத்தர் கொள்கைப் பிரசார

மாநாட்டுத் தலைவருமாகிய டாக்டர் ஜி.பி. மல்லல சேகரா ஓர் அறிக்கையின் மூலம் குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் கூறியிருப்பதாவது: உலகத்தில் புத்தமதக் கருத்துடையவர்கள் 5இல் 1 பகுதியினராக இருப்பினும் உலக மாநாடுகளில் புத்த மதத்தவர்களுடைய குரல்கள் சரிவர கேட்கப்படவில்லை.

சிலோனில் மட்டும் 12 ஆயிரம் புத்த பிட்சுகள் இருக்கின்றனர். இவர்கள் ''பிரிவேனா'' என்ற பள்ளிகளில் ஏற்றவகையில் பயிற்சி பெற்றவர்கள். இத்தகைய பயிற்சிப் பள்ளிகள் சிலோனில் 20 இருக்கின்றன.

1956-ல் புத்தக் கொள்கைகள் மறுமலர்ச்சி பெறும்.

கட்டுப்பாடான எதிர்ப்புகளுக்கிடையில் பெரியார் ஈ.வெ.ராமசாமி அவர்கள் சமூக திருத்தக் கொள்கைகளைப் பரப்பி வருவது மிகமிக பாராட்டுக்குரியது.

புத்தர் மாநாட்டுத் தீர்மானங்கள்

23.1.54-ந் தேதி ஈரோட்டில் நடைபெற்ற புத்தர் மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்:

1. ஆரியக் கடவுள்கள் 100-க்கு $97^{1}/_{2}$க்கு மேற்பட்டவைகள் ஆரியர்கள் திராவிடர்களை (சூத்திரர்கள் என்பவர்களை)க் கொல்லுவதற்கு ஆகவும் தலையெடுக்காமல் இருக்க சூழ்ச்சிகள் செய்வதற்கு ஆகவும், விபசாரம் முதலிய கூடா ஒழுக்கங்களில் ஈடுபடுவதற்கு ஆகவுமே கற்பிக்கப்பட்டவைகளாக இருப்பதாலும், அக்கடவுள்களை வழிபடுகிறவர்கள் ஒழுக்க



ஈரோடு புத்தர் மாநாடு - ஊர்வலம் - ஒரு பகுதி

சீலர்களாக இருக்க முடிவதில்லை என்பதோடு உள்ள ஒழுக்கத்தையும் இழக்க வேண்டியவர்களாயிருப்பதாலும், அக்கடவுள்களை திராவிடர்கள் வழிபடக் கூடாது என்று இம்மாநாடு தீர்மானிக்கிறது.

2. இக்கடவுள்கள் ஒழிபடும்படியாக நாட்டின் தீவிரமாக எல்லா வகையிலும் பிரசாரம் செய்யப்பட வேண்டுமென்றும், அவைகளுக்கு என்று பூசை, உற்சவம் முதலியவை நடைபெறாமல் இருக்கச் செய்யவேண்டுமென்றும், அதற்காக ஒரு காசு அளவும் செலவழிக்காமல் செய்யவேண்டுமென்றும் இம்மாநாடு தீர்மானிக்கிறது.

3. உருவ-(விக்கிரக) வழிபாடு என்பது உலகத்தில் இந்தியாவில் இந்துக்கள் என்பவர்களைத்தவிர வேறு எந்த நாட்டிலும், எந்த சமுதாயத்திலும் இல்லாததும் அது (விக்கிரக வழிபாடு) ஆரியர்களின் பிழைப்புக்கும் உயர்வுக்கும் ஆகவே இருந்து வருவதுடன், திராவிடர்களைக் காட்டுமிராண்டித்தனமாக முட்டாள்களாக்கப் பயன்பட்டு வருவதனால், 'விக்கிரக' அழிப்பு வேலை இன்றியமையாததாகி விட்டதால், அவ்வேலையைத் தொடர்ந்து மக்கள் ஆற்ற வேண்டுமென்று இம்மாநாடு தீர்மானிக்கிறது.

4. இந்துமத சாஸ்திர, புராண இதிகாசங்கள் என்பவைகள் சற்று ஏறக்குறைய எல்லாமுமே ஆரிய ஆதிக்கத்திற்கும் உயர்வுக்கும் திராவிடர் அடிமைத்தனத்திற்கும் மடமைக்கும் இழிவுக்குமே ஆரியரால் ஏற்பாடு செய்யப்பட்டு அந்தப்படியே பயன்பட்டு வருவதால் அவை அழிக்கப்பட வேண்டுமென்று இம்மாநாடு தீர்மானிக்கிறது.

5. புத்தர் கொள்கையானது கடவுள், ஆத்மா, மோட்சம், நரகம், விதி, மேல் லோகம், பூசை, சடங்கு தீர்த்தம், உற்சவம் முதலியவைகளின் பொய்யை விளக்கிக் காட்டி, மக்களுக்குள் பிறவியில் பேதம் அற்ற, சமத்துவத்தையும் அன்பையும் ஒருவருக்கொருவர் உதவி உபகாரம் செய்து வரவேண்டியதையும் முக்கியமாக வலியுறுத்துவதால், அக் கொள்கைகள் நாட்டில் பரவி, மனித சமுதாயத்தில் காரியத்தில் நடைபெறும்படி செய்ய தமிழ்நாட்டில் உள்ள எல்லா சமுதாய மக்களும், எல்லாகழகங்களும், ஸ்தாபனங்களும் பிரசாரம் செய்துவரவேண்டும் என்று இம்மாநாடு வேண்டிக் கொள்கிறது.

(''விடுதலை'' 25.1.54)

இரங்கூன் மாநாடு

பர்மா நாட்டின் தலைநகரமாகிய இரங்கூனில் நடைபெற்ற உலகப் புத்தர் மாநாட்டில் தந்தை பெரியார் (3.12.1954) அன்று உரையாற்றினார். மாநாட்டில் பர்மாவின் ஜனாதிபதியும் சொற்பொழிவாற்றினார். அங்கு உலக புத்தர் சங்கத் தலைவர் டாக்டர் மல்லலசேகரா, டாக்டர் பி.ஆர். அம்பேத்கர் போன்ற தலைவர்களைச் சந்தித்து உரையாடினார். இந்தச் சுற்றுப்பயணத்தில் இலங்கையையும் இணைத்துக் கொள்ள வேண்டும். இலங்கை மக்கள் தங்கள் வருகையை மிகவும் எதிர்பார்க்கிறார்கள் என்று தந்தை பெரியாரிடம் கேட்டுக் கொண்டார் டாக்டர் மல்லலசேகரா.

5.12.1954 அன்று ரங்கூனில் அம்பேத்கர் அவர்களுடன் ஒருமணி நேரத்திற்கும் மேல் தந்தை பெரியார் தனிமையில் பேசிக் கொண்டிருந்தார். உலகப் புத்தமாநாடு குறித்தும் எதிர்காலத்தில் தாங்கள் இருவரும் நாட்டுக்கு எப்படி வழிகாட்ட வேண்டும் என்பதுபற்றியும் முக்கியமாகக் கலந்து உரையாடினார்கள்.

தாம் பவுத்த மதத்தில் சேர முடிவு செய்துவிட்டதாகவும் பெரியாரையும் அதில் சேர அழைப்பு விடுத்தார் அண்ணல் அம்பேத்கர். அதற்கு தந்தை பெரியார் அவர்கள் உடன்படவில்லை. பவுத்த மதத்தில்

சேர்ந்துவிட்ட, இந்து மதத்தை விமர்சித்தால் வேற்றுமதக்காரன் நம்மதத்தை விமர்சிக்கிறான் என்று திருப்பி விடுவார்கள். எனவே இந்து மதத்தில் இருந்து கொண்டேதான் அதன் கொடுமைகளை எதிர்த்துப் போராடுவேன் என்று கூறி

டாக்டர் அம்பேத்கர், தந்தை பெரியார், ராஜ் போஜ்.

விட்டார் பெரியார். அம்பேத்கர் புத்த மதத்திற்குச் செல்ல விரும்பினால் பெருங் கூட்டத்தோடு இந்து மதத்திலிருந்து வெளியேறி அதில் இணையவேண்டும் என்ற தமது கருத்தையும் கூறினார் தந்தை பெரியார்.

புத்தரின் 2500வது ஆண்டு

புத்தரின் 2500 ஆண்டு பிறந்த நாள் விழாவை தமிழ்நாடெங்கும் கொண்டாட திராவிடர் கழகத்துக்கு ஆணை பிறப்பித்தார் தந்தை பெரியார் அவர்கள். இதுபற்றி 19.4.1956 நாளிட்ட 'விடுதலை'யில் தந்தை பெரியார் அவர்கள் குறிப்பிட்டு இருப்பதாவது:

வீரமணி

மதுரை-பெரியார் பிறந்த தினவிழா 21-9-47 மாலை 6 மணிக்கு நாடார் வித்தியாசாலைத் தெருவில் நடைபெறும். அவ்வமயம் கடலூர் தோழர் வீரமணி பெரியார் அவர்களின் உருவப்படத்தைத் திறந்து வைப்பார். கழகத் தோழர்கள் கருப்புச் சட்டையுடன் வரும்படியாகக் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

குறிப்பு: வீரமணி அப்போது 13 வயது சிறுவன் — *'விடுதலை' 18.9.1947 பக்கம்-3 பத்தி-4*

திராவிடர் கழகத் தோழர்களும் மற்றும் எல்லா ஸ்தாபனத் தோழர்களும் 'புத்தர் பிறந்தநாள் 2500-வது ஆண்டுவிழா' சென்னை உள்பட தமிழ்நாடு எங்கும் சிறப்பாய் நடைபெறவும், புத்தர் பிரான் அறிவுரைகள் மக்கள் யாவருடைய உள்ளத்திலும் பதியும்படியான பிரச்சாரம் செய்யவும் ஆன எல்லாவிதமான முயற்சியும் செய்யவேண்டுமாய் வேண்டிக் கொள்ளுகிறேன். நான் அறிந்தவரை புத்தர் அறிவுரையின் முக்கியத்துவமானது:

1. 'எதையும் உன் அறிவைக் கொண்டு நன்றாய் ஆராய்ந்து பார்.'
2. 'உன் அறிவுக்கு சரி என்று தோன்றியவைகளையே ஏற்றுக்கொள்.'
3. 'உனக்கு விளங்காத தன்மையில் கடவுள், ஆத்மா, தேவர், மேல் உலகம், கீழ் உலகம், மோட்சம், நரகம் என்றும், பிராமணன், சூத்திரன்-பஞ்சமன் என்றும் சொல்லப்படும் வெறும் கற்பனைச் சொற்கள் முதலியவைகளை நம்பாதே'. உலகில் உள்ள ஜீவன்களில் எல்லாம் மனிதன் எப்பொருளையும் ஆராய்ந்து பகுத்தறிந்து உணரும் உயர்ந்த அறிவுள்ள ஜீவன் ஆவான் - என்பதே ஆகும்.

'கடவுள் சொன்னார் என்றும், வேத சாஸ்திரம் சொல்லுகிறது என்றும்,

மகான் சொன்னது என்றும், வெகு பேர் பின்பற்றுகிறார்கள் என்றும், வெகு நாளாக நடந்து வருகிறது என்றும் கருதி எதையும் நம்பிவிடாதே;

உன் ஆராய்ச்சி அறிவு என்ன சொல்லுகிறதோ அதை நம்பு' என்றும் சொல்லியிருக்கிறார் என்று அறிக்கை வெளியிட்டார் தந்தை பெரியார்.

('விடுதலை' 19.4.1956)

வடநாட்டில் புத்தநெறிப் பிரச்சாரம்!

1959 பிப்ரவரியில் தந்தை பெரியார் வடநாட்டுச் சுற்றுப்பயணத்தை மேற்கொண்டார்கள். வடமாநிலங்களில் பல்லாயிரக்கணக்கான பொதுமக்கள் கூடி தந்தை பெரியார் உரையைச் செவிமடுத்தனர். அக்கூட்டங்களில் எல்லாம் புத்தரின் போதனைகளை எடுத்துரைத்தார்கள்.

கான்பூர், லக்னோவில் உரையாற்றும் போது கீழ்க்கண்ட கருத்துக்களை வலியுறுத்தினார்கள்.

இன்று பிற்படுத்தப்பட்ட மக்கள் என்பவர்களான சூத்திரர், பஞ்சமர்கள் என்பவர்களின் இழிதன்மை ஒழிய ஆரியர்களால் ஏற்படுத்தப்பட்ட சாதி, மதம், சாஸ்திரங்கள், கடவுள் இவைகளை ஒழித்தாக வேண்டும். இவைகளை வைத்துக் கொண்டு ஒருபோதும் சாதியை ஒழித்து விட முடியாது.

இதன் காரணமாகத்தான் அம்பேத்கர் அவர்கள் புத்த மதத்தில் சேர்ந்தார். அதோடு தன்னைப் பின்பற்றிப் பலரையும் புத்த மதத்தில் சேரும்படி செய்தார். ஆகவே, எல்லோரும் புத்த நெறியில் சேர்ந்தாவது இந்த இந்துமதத்தையும், கடவுளையும், அவைகளால் காக்கப்படுகின்ற சாதியையும் ஒழிக்க முன்வரவேண்டும் என்று குறிப்பிட்டார்.

('விடுதலை' 21.2.1959 பக்கம்3)

புத்தர் வணக்கம்

பவுத்தர்கள் தங்கள் வணக்கத்தில் கூறுகிற, கூறி வணங்குகிற விஷயங்கள் மூன்று அவை:

15.5.1957 மாலை சென்னை எழும்பூர் மகாபோதி சங்கத்தில் நடந்த 2501 ஆம்

ஆண்டுப் புத்தர் விழாவின் போது தந்தை பெரியார் கலந்துகொண்டு ஆற்றிய தலைமை உரை குறிப்பிடத்தகுந்ததாகும்.

1. புத்தம் சரணம் கச்சாமி
2. தர்மம் சரணம் கச்சாமி
3. சங்கம் சரணம் கச்சாமி

என்கிற பவுத்தர்களின் வாசக மொழிகளுக்கு தந்தை பெரியார் அளித்த விளக்கம் பவுத்தர்களுக்கே ஒரு புதிய வெளிச்சத்தைத் தந்தது என்றே சொல்லவேண்டும். தந்தை பெரியார் தந்த அறிவுஒளி விளக்கமாவது:

பவுத்தர்கள் தங்கள் வணக்கத்தில் கூறுகிற, கூறி வணங்குகிற விஷயங்கள் மூன்று. அவை:

1. புத்தம் சரணம் கச்சாமி
2. தர்மம் சரணம் கச்சாமி
3. சங்கம் சரணம் கச்சாமி

என்பனவாகும். இவற்றை முதலிலும், கடைசியிலும் சொல்லித்தான் அவர்களது சமயக் காரியங்களைத் துவக்கவும் முடிக்கவும் செய்வார்கள்.

இவ்வாக்கியங்களின் தத்துவம் என்ன வென்றால் புத்தம் (தலைவன்), தர்மம் (கொள்கை), சங்கம் (ஸ்தாபனம்) ஆகிய மூன்றுக்கும் வணக்கம் செலுத்துகிறேன் என்பதாகும். இது பவுத்தர்களுக்கு மாத்திரமல்லாமல் மற்றும் உலகிலுள்ள யோக்கியமான எந்த ஸ்தாபனத்திலுமிருக்கும் யாருக்குமே உண்மையான இன்றியமையாத கடமையாகும். எந்த ஒரு ஸ்தாபனத்திலும் ஈடுபட்டிருக்கிற ஒருவன் அதன் தலைவனைப் பற்றி நல்ல வண்ணம் சிந்தித்துத் தன்னை ஆட்படுத்திக் கொள்ள வேண்டும். பிறகு அந்தத் தலைவனை, அந்த ஸ்தாபனத்திலிருந்து விலகுகிற வரை தனக்குக் "குரு"வாக, ஆசானாகக் கருத வேண்டும்.



தலைவனைப் பெருமைப்படுவத்துவ தன் மூலம் ஸ்தாபன இலட்சியத்திற்கும், ஸ்தாபனத்திற்கும் தான் உண்மையான தொண்டு செய்தவனாகிறான்.

தலைவனிடம் மரியாதை, அன்பு, கீழ்ப்படியும் தன்மை இல்லாமல் ஒரு ஸ்தாபனத்தில் ஈடுபட்டிருப்பதாகக் கூறுவது ஈடுபட்டவனின் வயிற்றுப் பிழைப்பிற்கும், வாழ்விற்கும், சுயநலத்திற்குமாகத் தெரிந்தெடுக்கப்பட்ட வியாபார, தொழில்முறை என்பதாகத்தான் பொருள்படும். அதனால்தான், புத்தம் சரணம்' என்று சொல்லிக் காரியம் துவக்குவதாகும்.

அதுபோன்றே அடுத்த வணக்கமாகிய "தர்மம் (புத்த தர்மம்) சரணம் கச்சாமி" என்பதுமாகும். அதாவது ஒருவன் தான் ஈடுபட்டுள்ள ஸ்தானபத்தின் இலட்சியங்ளுக்கு நிபந்தனையற்ற அடிமையாகப் பின்பற்றுபவனாக இருக்கவேண்டும். கொள்கைகளில் ஒரு சிறிது தனக்கு ஒத்து வரவில்லையானாலும், அவன் யோக்கியனாக இருந்தால் உடனே ஸ்தாபனத்தை விட்டு விலகிவிட வேண்டும். "விலகிவிடச் சம்மதிக்கிறேன்" என்று சொல்வது போன்ற பிரமாண மொழியே யாகும் இது.

மூன்றாவதான "சங்கம் சரணம் கச்சாமி" என்பது ஒரு ஸ்தாபனத்தின் தலைவருக்கும், இலட்சியங்களுக்கும் எவ்வளவு ஆட்படத்தக்கதோ அதேபோன்று சங்கத்திற்கும் (ஸ்தாபனத்திற்கும்) அடிமையாய் இருந்து சங்கத்தைப் பாதுகாக்க வேண்டியதென்பதாகும். ஸ்தாபனத்திற்கு அடிமையாய் இல்லாமலும் பக்தி விஸ்வாசம் இல்லாமலும் ஸ்தாபனத்தில் அங்கத்தினனாக இருப்பது என்பது அந்த ஸ்தாபனத்திற்குச் செய்யும் மாபெ

ரும் துரோகமேயாகும். இம்மூன்று தத்துவங்களையும் முக்கியமானவையாகக் காட்டுவதற்காகவே பவுத்தக் கொள்கைகளை முதன்மையானவையாகவும், முக்கியமானவையாகவும் ஆக்கி பக்தி விஸ்வாச வணக்கத்தோடு ஏற்பாடு செய்து வந்த எல்லாப் பவுத்தர்களாலும் பின்பற்றப்பட்டு வருகிறது. எனவே,

புத்தம் சரணம் கச்சாமி,
தர்மம் சரணம் கச்சாமி,
சங்கம் சரணம் கச்சாமி.

என்ற வணக்கங்களின் தத்துவம் இது தான் என்பது எனது கருத்தாகும்.

புத்தர் விழாவில் பிள்ளையார் உடைப்பு

ஆரியர்கள் கற்பனை செய்த கடவுளர்களை வழிபடுவதனாலேயே, வீரத் திராவிடர்கள் பகுத்தறிவிழந்து, மதத்துறையில் மட்டுமன்றி, பொருளாதார இயல், சமூக இயல், அரசியல் முதலான எல்லாத் துறைகளிலும் ஆரியர்களின் ஆதிக்கத்துக்குட்பட்டு அடிமைநிலை எய்தலாயினர் என்பதை நன்கு உணர்த்துவதற்காகவே தந்தை பெரியார் அவர்கள் திராவிடரின் சிந்தனைச் செறிவை அமுக்கிப் பிடித்திருக்கும் மதப்பேயை விரட்ட விநாயகர் உடைப்புப் போராட்டத்தைத் துவக்கினார். புத்தர் விழாவைக் கொண்டாடி அன்று கணபதி பொம்மைகளை உடையுங்கள் என்று தந்தை பெரியார் உத்தரவிட்டார். அதன்படி 27.5.53 அன்று தமிழ்நாடெங்கும் பிள்ளையார் பொம்மைகள் ஏராளம் உடைபட்டன.

இச்சிலை வணக்க ஒழிப்புப் போர் துவக்கியதுதான் தாமதம், ஆரியர் கிடுகிடென நடுங்கி, தங்கள் ஆதிக்க ஆணிவேர் அறுபட்டுவிடுமேயென அஞ்சி, ஆங்காங்குள்ள 'விபீஷணர்களை' 'அனுமார்களை'த் தூண்டிவிட்டு எதிர்ப்புகளை பல்வேறு துறைகளிலும் செய்து பார்த்து வருகின்றனர்.

எதிர்ப் பிரசாரம், கொடும்பாவி எரித்தல் முதல் பலவகையிலும் முயன்று தோல்வியே கண்டனர். எனவே மற்றோர் வகையில் தன்மான இயக்கத்தை தடையுறச் செய்யலாமென மனப்பால் குடித்து கோர்ட்டிலும் வழக்குத் தொடர்ந்தனர். ஆனால் கண்டது தோல்வியே.

தந்தை பெரியார் அவர்கள், மத்திய திராவிடர் கழகத் தலைவர் தி.பொ. வேதாசலம், தன்மானப் பிரசாரகராம் நடிகவேள் எம்.ஆர். ராதா ஆகியோர் மீது, விநாயகர் சிலையை உடைத்து ஆஸ்திகர் மனதைப் புண்படுத்தினர் என்று குற்றம் சுமத்தினர். வழக்கை விசாரணை செய்த மாஜிஸ்திரேட் 'தாமே செய்து, தமக்குச் சொந்தமான ஒரு பொருளை அவர் உடைத்தெறிந்தது குற்றமாகா' தெனக் கூறி வழக்கைத் தள்ளிவிட்டார்.

வழக்குத் தொடர்ந்த திரு. வீரபத்திரர் மேலும் அப்பீல் செய்து தம் வாதத்தை நிலைநாட்ட எண்ணினார். வழக்கை விசாரித்த செஷன்ஸ் நீதிபதி மனுவைத் தள்ளி, கீழ்க்கோர்ட் தீர்ப்பை உறுதிப்படுத்தியுள்ளார்.

திருச்சி ஜில்லா நீதிபதி திரு. பி.டி. ராமன் நாயர், அய்.சி.எஸ். அவர்கள், பெரியார் ஈ.வெ.ரா. அவர்கள்மீதும், மத்திய திராவிடர் கழகத் தலைவர் திரு.தி.பொ. வேதாசலம், நடிகவேள் எம்.ஆர். ராதா ஆகியோர்மீதும் தாக்கல் செய்யப்பட்ட பிள்ளையார் உருவ உடைப்பு வழக்கில், டிவிஷனல் முதல் வகுப்பு மாஜிஸ்திரேட் அளித்த தீர்ப்பை எதிர்த்துச் செய்து

கொண்ட ரிவிஷன் மனுவைத் தள்ளித் தீர்ப்புக் கூறினார்.

கலைவாணர் வாழ்த்து

நம் நாட்டைப் பொறுத்தவரையில் செயற்கரிய செய்த பெரியார்கள் பலர்; அவர்களின் வரிசையிலே இடம் பெறத்தக்க ஒரு பெரியார் நமது தலைமுறையில் வாழ்ந்து கொண்டிருப்பது குறித்து நாம் பெருமை கொள்ளலாம்.

சிந்திப்பதே பாவம் - என்று எளியோரை வலியோர் அர்த்தமில்லாமல் வேத புராண இதிகாசங்கள் மூலமாக அடக்கி வருகின்றனர் என்று கருதப்படும் சூழ்ச்சியை ரகசியமாகவோ, தந்திரமாகவோ அல்லாமல், வெளிப்படையாகவே எதிர்த்து, ''யாவரும் சிந்திக்கலாம்'' என்ற புதிய பொது நிலையை உண்டுபண்ணி வைத்த ஒரே ஒரு பெரியார் நமது பெரியார் அவர்கள் தாம்!

பெரியாரை வாழ்த்தாத தமிழன் இருக்கமாட்டான், பெரியாரால் வாழ்த்துப் பெறாத தமிழனும் இருக்க முடியாது! தமிழகம் பெற்றிருக்கும் பொதுச் செல்வங்களில் அவரும் ஒருவர் - என்று போற்றும் அளவுக்கு ஆற்றல் பெற்றவர் - பூப்போன்ற நெஞ்சமுள்ளவர் - புகழுக்காகத் தம் போக்கை மாற்றிக் கொள்ளமாட்டார்; அவருக்காக வேண்டுமானால், புகழ்தான் தனது போக்கை மாற்றிக்கொள்ளவேண்டும்! புனிதமான மனிதர்! ''துணிவு'' என்னும் மூன்றெழுத்து முத்தமிழ்ப் பண்பை மனித உருவில் காணவேண்டுமாயின் அந்த உருவம் பெரியார்தாம்! காரணம் வேறு எதுவுமல்ல; அவரது உண்மையில், உயர்ந்த பண்பில், ஒழுக்கத்தில் அவருக்கு அவ்வளவு நம்பிக்கை!

ராஜதந்திரிகளையும் கவரும் அளவுக்குப் பொல்லாத அரசியல் மேதை! புரியமுடியாத பெரிய மூளை! பொறுமை மிகும் தலைவர்! சுருங்கக் கூறவேண்டுமாயின், தமிழ் இனத்தின் மெய்யான தந்தை! இன்று அன்னாரது பிறந்ததின விழாவைப் பெருமிதத்துடன் கொண்டாடுகிறோம்!

வாழ்க பெரியார்! ஏனெனில், தமிழினமும் அறிவும் இன்னும் எவ்வளவோ வளர வேண்டியதிருக்கிறது!

கலைவாணர் என்.எஸ்.கிருஷ்ணன்
-''விடுதலை'' தந்தை பெரியார் 78-ம் ஆண்டுப் பிறந்த நாள் மலர்

வழக்கு விவரம்

பெரியார் அவர்களும், மற்றவர்களும் பிரசாரஞ் செய்து, பிள்ளையார் சிலைகளை உடைத்தும், மற்றவர்களையும் உடைக்கத் தூண்டி வருவதால் மக்களின் மத உணர்ச்சியையும், உள்ளத்தையும் புண்படுத்தியுள்ளதாக நாஸ்திக ஒழிப்புக் கமிட்டிக் காரியதரிசி என்ற முறையில் திரு. வீரபத்திரச் செட்டியாரால் மாஜிஸ்திரேட் கோர்ட்டில் வழக்குத் தொடரப்பட்டு விசாரணைக்குப் பின் ''எவரும் வழிபட்டு வந்த உருவமல்ல உடைபட்டது; எனவே தாமே செய்த அல்லது தமக்குச் சொந்தமான சிலையை உடைப்பது குற்றமாகாதெனச் சொல்லி மாஜிஸ்திரேட் அளித்த தீர்ப்பின் மேல் வழக்குத் தள்ளப்பட்டது.

இந்தத் தீர்ப்பை எதிர்த்து திரு. செட்டியார் செஷன்ஸ் கோர்ட்டில் அப்பீல் செய்துகொண்டார்.

தீர்ப்பு விவரம்

''சம்பந்தப்பட்ட பிள்ளையார் உருவம் வழிபாட்டிலுள்ள கடவுள் உருவமல்ல; அது அவருடைய சொந்த சொத்தாகிறது. அதை அவரிஷ்டப்படி எப்படி வேண்டுமானாலும் உபயோகப்படுத்தவோ அல்லது அழிக்கவோ செய்ய உரிமையுண்டு'' என்று அப்பீல் மனுவை விசாரித்த செஷன்ஸ் நீதிபதி தமது தீர்ப்பில் குறிப்பிட்டிருக்கிறார்.

உயர்நீதிமன்ற தீர்ப்பு

இ.பி.கோ. 295ஏ பிரிவின்கீழ் வழக்குத் தொடர வேண்டுமானால் சர்க்கார் அனுமதி அவசியம். இந்த வழக்கில் அந்தப்படி சர்க்கார் அனுமதி பெறவில்லை. ஆகவே, கீழ்க் கோர்ட்டார் இக்குற்றம் தண்டனை விதிக்கக் கூடியதல்லவென்று கூறி புகாரை தள்ளுபடி செய்தது நியாயமான தேயாகும்.

இ.பி.கோ. 295 ஆவது பிரிவின்கீழ் இது குற்றமாகுமா என்று விசாரணை நடத்திய கோர்ட்டார் முதல் எதிரி

அவர்கள் படும் அல்லல்



முருகனும், கணபதியும்: (பிரமனை நோக்கி) அண்ட சரா சரங்களையும் படைத்த பிரம்ம தேவரே! யானை முகத்தையும் ஆறு முகத்தையும் தாங்கிக்கொண்டு நாங்கள் படும்பாடு உமக்குத் தெரியாதா? ஏன் இந்தச் சிரமம் எமக்கு?

பிரமதேவன்: மைந்தர்காள்! உங்களுக்குத்தானா அந்தக் கஷ்டம்? என்னைப் பாருங்கள், நான்கு தலைகளும், எட்டுக் கைகளுமாக நானுந்தான்......

என்ன செய்வது. எல்லாம் தலை எழுத்தப்பா, தலை எழுத்து!

நன்றி: ''திராவிட நாடு'' *(17.3.1946)*

உடைத்த களிமண்ணால் செய்யப்பட்ட கணேசர் உருவம் எந்த வகுப்பாரும் புனிதமாக பூஜித்து வந்த பொருளல்ல என்று குறிப்பிட்டிருக்கிறார். பூஜிக்கப்படும் கணேச விக்ரகம் போன்று அது தோற்றத்தைப் பெற்றிருந்தால் மட்டும் அது புனிதத் தன்மையைப் பெற்றதாகக் கருதமுடியாது. பூஜிக்க லாயக்கில்லையென்று மக்களால் ஒதுக்கித் தள்ளப்படும் கணேச விக்கிரகங்கள் எவ்வளவோ அவைகளின் புனிதத் தன்மையை இழந்து அசுத்தமான இடங்களில் கிடக்கின்றன என்று விசாரணைக் கோர்ட்டார் குறிப்பிட்டிருக்கின்றார்.

அவ்வாறு ஒதுக்கப்பட்ட கைவிடப்பட்ட இதுபோன்ற சிலைகளை - விக்கிரகங்களை ஒருவர் உடைப்பது குற்றமாகாது என்றும் ஆகவே களிமண் பிள்ளையார் உருவத்தை உடைத்தது இ.பி.கோ. 295ஆவது பிரிவின்கீழ் குற்றமாகாது என்றும் விசாரணைக் கோர்ட்டார் கூறியிருக்கிறார். மேற்படி குற்றத்தைப் புரியுமாறு இரண்டாவது மூன்றாவது எதிரிகள் முதல் எதிரியைத் தூண்டிவிட்டதாகக் கூறப்பட்டிருக்கிறது.

இப்பொழுதுள்ள இங்குள்ள பிரச்சினை இந்த மனுவில் கண்டுள்ள புகாரின்படி குற்றம் புரிந்ததாகக் கொள்ளப் போதுமான ஆதாரங்களிருக்கின்றனவா என்பதாகும்.

இ.பி.கோ. 295ஆவது பிரிவின் முக்கிய பகுதி ஒருவர்-ஒரு வகுப்பார் வழி

பாடு நடத்தும் இடத்தையோ அல்லது புனிதமாகக் கருதி வரும் ஒரு பொருளையோ (உருவத்தையோ) முதலில் அழிக்கவோ அல்லது நாசப்படுத்தவோ அல்லது அசூயைப்படுத்தவோ செய்திருக்க வேண்டும். இரண்டாவது அத்தகைய காரியத்தைச் செய்வதனால் எந்த வகுப்பாரின் மத உணர்ச்சியையாவது புண்படுத்தும் நோக்கம் கொண்டிருக்க வேண்டும். இவைகளில் ஒன்று நிரூபிக்கப்படாவிட்டாலும் குற்றம் செய்ததாகக் கொள்ள முடியாது. பொது இடத்தில் உடைக்கப்பட்ட கணேசர் விக்கிரகம் களிமண்ணால் செய்யப்பட்டது. இந்தக் களிமண் பிள்ளையாரை உடைத்தது மக்களில் யாராவது புனிதமாகக் கருதும் ஒரு விக்ரகம் என்று கூறமுடியுமா? கூறமுடியாதென்றே கருதுகிறேன். (இதற்கு ஆதாரமாக சில நீதிமன்றத் தீர்ப்புகளை எடுத்துக் காட்டினார் நீதிபதி அவர்கள்.)

ஒரு கோயிலிலுள்ள விக்கிரகத்தை உடைத்தாலோ அல்லது அதற்கு சேதம் விளைவித்தாலோதான் இப்பிரிவை உபயோகிக்கலாம், எந்த வகுப்பாரின் புனிதத்தன்மை வாய்ந்த எந்த பொருளும் உருவமும் என்பது கோயிலிலுள்ள விக்கிரகத்துக்குத்தான் பொருந்தும்; அல்லது உத்சவ காலங்களில் வெளியில் ஊர்வலமாக எடுத்துச் செல்லும் விக்கிரகத்திற்கும் பொருந்தும். இந்த நிலையில் இந்த வழக்கில் உடைத்ததாகக் கூறப்படும் கணேச உருவம் என்பதற்கும் கடையிலிருந்து எடுத்த ஒரு பொம்மையை உடைத்ததற்கும் அதிக வித்தியாசமிருக்க முடியாது. எதிர் மனுதாரர்களின் உள்நோக்கம் பெருவாரியான மக்களின் மத நம்பிக்கையை மத உணர்ச்சியை புண்படுத்த வேண்டும் என்பதாக இருக்குமானாலும் அந்தச் செய்கை அந்த விதிக்குட்பட்டு வராத வரையில் குற்றமாகக் கருதமுடியாது.

கடைகளில் இருக்கும் பொம்மைகளில் எவ்வளவோ கோயில்களில் உள்ள உருவங்களைப் போன்ற தோற்றமளிக்கலாம். ஆனால், அவைகள் எந்த வகுப்பாரும் வழிபடும் புனிதத் தன்மையுடைய விக்கிரகங்களாகக் கொள்ள முடியாது. இந்த நவீன சமூகத்தில் பல வீடுகளின் ஹால்களில் விக்கிரகங்கள் போன்ற பொம்மைகள் வைக்கப்பட்டிருக்கின்றன. இவை புனிதத்தன்மை வாய்ந்த வழிபடுவதற்கான விக்கிரகங்கள் என்று சொல்லமுடியாது. கோயில்களில் பிரதிஷ்டை செய்யப்பட்டு பின்னர் உற்சவங்களில் வெளியில் எடுத்துச் செல்லப்பட்டால்தான் அவை பூஜிக்கத் தக்கவையாகவும் புனிதத் தன்மை வாய்ந்தவையுமாகின்றன.

பிரஸ்தாப வழக்கில் உடைக்கப்பட்டதாகச் சொல்லப்படுவது வெறும் பொம்மை தவிர வேறொன்றுமில்லை. அதுவும் கடைகளில் வாங்கியதாகவோ அல்லது அதற்காகச் செய்யப்பட்டதாகவோ இருக்கலாம். எனவே அதற்கு புனிதத் தன்மை கிடையாது. ஆகவே, குற்றம் காணப்படாததால், இப்புகாரை தள்ளுபடி செய்தது நியாயமானதாகிறது.

ஆனால் இது குற்றமாகாவிட்டாலும் பொது இடத்தில் இத்தகைய செய்கையை எதிர் மனுதாரர்கள் (எதிரிகள்) செய்தது யோசனையற்றது விவேகமில்லாதது என்று கூற விரும்புகிறேன். இது போன்ற செய்கை செய்தவரின்பால் ஒரு வித வெறுப்பு உணர்ச்சியை உண்டாக்குமென்பதைத் தவிர அதனால் பயன் எதுவும் இல்லை.

(திருச்சி டவுன்ஹால் மைதானத்தில் **1953 மே 27ஆம் தேதி** தந்தை பெரியார் அவர்கள் களிமண் பிள்ளையாரை உடைத்ததற்காக அவர்மீது தொடரப்பட்ட வழக்கை தள்ளுபடி செய்து சென்னை உயர்நீதி மன்ற நீதிபதி என். சோமசுந்தரம் அவர்கள் **1954** அக்டோபர் **13** ஆம் தேதி வழங்கிய தீர்ப்பு.

பவுத்த பிக்கு அம்பேத்கர்

அண்ணல் அம்பேத்கர் பாசிச இந்து மதத்தைவிட்டு பவுத்த மார்க்கத்தைத் தழுவினார்.

இந்தத் திட்டத்தின் அரங்கேற்றம் 1956 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 14-ந் தேதி நாகபுரியில் நடைபெற்றது. 5 லட்சத்துக்கும் அதிகமான தாழ்த்தப்பட்ட மக்கள் அன்று அங்கே இந்து என்ற இழி பெயரை ஒழித்துவிட்டு பவுத்தர்கள் ஆனார்கள். அவர்களுக்கு தீட்சை அளித்தவர் டாக்டர் அம்பேத்கர்:

22 அம்சங்கள் அடங்கிய பிராமணத்தை அவர்கள் எடுத்துக் கொண்டார்கள். அந்த 22 பிராமணங்களும் வருமாறு:-

1. பிரம்மனையோ, விஷ்ணுவையோ, சிவனையோ நான் கடவுள் என்று கருதமாட்டேன்; அவர்களை வழிபாடு செய்யவும் மாட்டேன். 2. இராமனையோ, கிருஷ்ணனையோ நான் கடவுள் என்று கருதமாட்டேன்; அவர்களை வழிபாடு செய்யவும் மாட்டேன். 3. இந்துத் தெய்வங்களான கவுரி, கணபதி, அத்தியாதிகளை நான் கடவுள் என்று ஏற்கமாட்டேன்; அவர்களை வழிபாடு செய்யவும் மாட்டேன். 4. கடவுள் பிறவி எடுத்ததாகவோ, எந்தவொரு உருவத்தில் அவதாரம் செய்ததாகவோ நான் நம்பமாட்டேன். 5. பகவான் புத்தர் மகா விஷ்ணுவின் அவதாரம் என்பதை நான் நம்பமாட்டேன். அப்படிப் பிரச்சாரம் செய்வது விஷமத்தனமானது, தவறானது என்று நான் உறுதியாக நம்புகிறேன். 6. சாவு சம்பந்தப்பட்ட இந்து மதச் சடங்கான சிரார்த்தத்தை நான் ஒருபோதும் செய்யமாட்டேன்; இறந்தவர்களின் பெயரால் நான் பிண்டம் கொடுக்கவும் மாட்டேன்.

7. பவுத்தத்தின் கோட்பாடுகளுக்கு எதிராக நான் என்றுமே நடக்கமாட்டேன். 8. பார்ப்பனர்களால் நடத்தப்படும் சமஸ்காரங்கள் எதனையும் நான் என்றுமே ஏற்றுக்கொள்ள மாட்டேன். 9. அனைவரும் சமம் என்ற கொள்கையை நான் நம்புகிறேன். 10. சமத்துவத்தை

நிலைநாட்ட நான் முயல்வேன். 11. பகவான் புத்தர் காட்டிய எட்டு அம்ச வழியை நான் பின்பற்றுவேன். 12. தம் மதத்தின் 10 பரமிதங் களையும் நான் பின்பற்றுவேன். 13. எல்லா உயிர்ப் பிராணிகளிடத்தும் நான் கருணை காட்டுவேன். அவைகளைக் காக்க முயலு வேன். 14. நான் பொய் சொல்ல மாட்டேன். 15. நான் திருட மாட்டேன். 16. காமத்தில் நான் உழல மாட்டேன்; பாலுணர்வில் அத்து மீற மாட்டேன். 17. போதைக்குக் காரணமான குடியையோ, மதுவையோ நான் அருந்தமாட் டேன். 18. ஞானம், கருணை, அறிவுரை ஆகி யவற்றின் அடிப்படையிலான புத்தரின் போதனைகளுக்கு இணங்க என் வாழ்வை உருவாக்க நான் முயலுவேன். 19. பார்ப்பனர் தவிர்த்த பிற மனிதர்களை கீழான பிறவிகள் என்று கருதுவதும் சமத்துவமற்ற நிலையில் நம்பிக்கை உடையதும் மனிதர்களின் விடுத லைக்குக் கேடாக இருப்பதுமான இந்து மதத்தை நான் கைவிட்டுவிட்டு இன்று புத்த மதத்தைக் கைக்கொள்ளுகிறேன். 20. புத்த தம்மமே சிறந்த மார்க்கம் என்று நான் உறுதி யாக நம்புகிறேன். 21. நான் இன்று புதிய பிறவி எடுக்கிறேன் என்று நான் நம்புகிறேன். 22. புத்த தம்மத்துக்கு இணங்கவே இன்று முதல் நான் செயல்படுவேன் என்று நான் உறுதி கூறுகிறேன்.

தத்துவச் சொற்கள்!

ஒருவன் தான் ஈட்டிய பொருளை எல்லாம் தன்னுடைய மனைவி மக்களுக்கு உரியது என்று எண்ணி சேர்த்து வைப்பானேயானால் அது உண்மையிலேயே அவனுடையது ஆவ தில்லை.

அவன் பைத்தியக்காரத்தனமாக, முட்டாள் தனமாக எண்ணி, ஏமாறுகின்றான். அவன் இறந்தபிறகு அவனுடைய சொத்து அவன் எண்ணப்படியே அவனுடைய மனைவி மக்க ளுக்கு உரியதாகின்றது. அப்படி உரிமையா னது எத்தனை நாளைக்கு இவனுக்கு உரிமையு டையதாகின்றது?

அவனுடைய வீடு, வாசல் நிலபுலன்கள் எல்லாம் அவன் இறந்துபட்ட சில வருடங்கள் வரையில்தான். மக்கள் இது இன்னாருடைய

இன்னாருடைய தோட்டம் என்று வீடு, இது இப்படிக் கூறுவார்கள்.

சில ஆண்டுகள் கழிந்துவிடுமேயானால் அது அவனுடைய சொத்து, சுதந்தரம் என்று விளங்குவதற்குப் பதிலாக அவனது மகன் பெயரால்தான் விளங்கும்; இவன் பெயர் மறைந்துபோகும்.

இன்னொன்றுங்கூட. அவனுக்கு ஊதாரி யான மைனர் விளையாட்டில் ஈடுபடக்கூடிய பிள்ளைகள் பிறந்துவிடுமேயானால் இரண் டொரு வருடங்களில் அவன் தனக்கு என சம்பாதித்த சொத்து சுதந்தரங்களும் காலி ஆகி விடுவதும் அல்லாமல், அவனுடைய சொத்து சுகங்கள் எல்லாம் மற்றவனுக்கு உரிமையாகி விடுகின்றது; கடன் கொடுத்தவனுடையதாகி விடுகின்றது.

ஆகவே, தான் சம்பாதித்த சொத்துக்கள் பொது மக்களுக்காக பொதுத் தொண்டுக்காக என செலவு செய்ததுதான் இவனுக்கு என அமைந்து என்றும் இருப்பதாகும்.

-(13.3.'59 அன்று அனுமந்தப்பட்டியில் அவ் வூர் திராவிடர் கழகத் தலைவர் திரு. நல்லு சாமி அவர்களால் நடத்தப்படும் சேசாத்திரி உயர்நிலை துவக்கப்பள்ளியில் அளிக்கப் பட்ட வரவேற்பின்போது தந்தை பெரியார் அவர்கள் ஆற்றிய உரையிலிருந்து.)

-'விடுதலை', 24.3.1959

அன்றே சொன்னார் நம் பெரியார்

இன்றைக்கு நாட்டில் இந்து என்றும், முஸ்லிம் என்றும் சொல்லி கலவரத்தைத் தூண்டி நாடு பூராவும், தமிழகத்தைத் தவிர, கலவரத்தைப் பார்ப்பனர்கள் திட்டமிட்டு நடத்திவிட்டார்கள். பாபர் மசூதி கட்டடத்தை இடித்ததால், நம்மை நம்பி நம்முடனேயே இருக்க சம்மதித்த நம் இன சகோதரர்கள் - முஸ்லிம் தோழர்கள் - நம்பிக்கையை தகர்த்துவிட்ட குற்றத்தை பார்ப்பனர்கள் செய்தார்கள்.

பார்ப்பனர்களின் திட்டத்தை அன்றே அறிந்த நம் பெரியார் நம் மக்களுக்கு தெளிவாகவே சொல்லிவிட்டார்கள். பார்ப்பனர்கள் நம்மை அன்னியர்களாக நடத்திவருகிறார்களேயன்றி முஸ்லிம்கள் அல்ல. நம்மை தொட்டால் பார்ப்பானுக்கு தீட்டு. மற்றவர்களுக்கு அல்ல. மதத்தால் மாறுபடுவது அவனவன் உரிமை. நம் உடன் பிறந்த சகோதரன் கூட வேறு மதத்தில் இருக்கலாம். கணவன் ஒரு மதமாகவும், மனைவி வேறு மதமாகவும் இருக்கலாம். மதத்தை ஏற்றுக்கொள்ளாமலும் இருக்கலாம். அது அவரவர் தனிப்பட்ட பிரச்சினை. ஆனால், மனிதனை மனிதன் மதிப்பது; சமமாக நடத்துவது; சம உரிமை அளிப்பது யாவும் பொதுப் பிரச்சினை. இந்த பொதுப் பிரச்சினையில் ஒருவர் நடந்து கொள்வதைப்பற்றித்தான் நாம் கவலைப்பட வேண்டும். இந்த அளவுகோலில் பார்ப்பனர்கள் மட்டில்தான் தேறமாட்டார்கள்.

1938-லேயே பெரியார் சொன்னார்!

இதையெல்லாம் நன்கு சிந்தித்ததால் தான் நம் தலைவர் பெரியார் 1938-ல் நீதிக்கட்சித் தலைவராக பொறுப்பேற்ற சமயத்தில் தன் நிலையை விளக்கிய தந்தை பெரியார் தெளிவாக இந்து, முஸ்லிம், கிறிஸ்தவர், தாழ்த்தப்பட்டவர் ஒற்றுமையைப்பற்றிக் கவலைப்பட்டு சொன்னார்.

''புரோகித ஆட்சி ஒழியவேண்டுமானால் நம்மவர்களுக்குள் அபார ஒற்றுமையும், நல்ல பகுத்தறிவு ஆராய்ச்சியும் வேண்டும். நம் நாட்டில் உள்ள புரோகித ஆதிக்கம் நம்மையும், முஸ்லிம்களையும், கிறிஸ்தவர்களையும், தாழ்த்தப்பட்ட மக்களையும் ஒன்றுபோலவேதான் கருதி நடந்துவருகிறது.

கீழ்சாதி, சூத்திரன், மிலேச்சன், தொடக்கூடாதவன் என்கின்ற பெயர்கள் நம் எல்லோருக்கும் ஒன்றுபோலவே உண்டு. நம் பல்வேறு முயற்சிகளினால் சிறிது மாற்றமடைந்திருப்பதாகக் காணப்படுகிறது என்றாலும் அவர்களுக்கு வேண்டியபோது ஒன்றுபடுத்தித் தெளிவாக்கிக்கொள்ள அவர்களுக்குத் தெரியும்.

இந்த நாட்டைப் பொறுத்தவரை மேற்கூறிய நாம் எல்லோரும் ஒரு வகுப்பைச் சேர்ந்தவர்களாயிருந்தும் தொழிலால், பழக்கத்தால்,

கோ. சாமிதுரை எம்.ஏ., பி.எல்.,
துணைப் பொதுச்செயலாளர், திராவிடர் கழகம்.



மதவெறியைத் தூண்டும் காஞ்சி மாஜி சங்கராச்சாரி ஜெயேந்திர சரசுவதியைக் கைது செய்யக்கோரி, காஞ்சி மாநகரில் சங்கரமட முன் ஆர்ப்பாட்டத்துக்குச் சென்ற கழக துணை பொதுச்செயலாளர், மற்றும் கழக தோழர்கள் கைது செய்யப்பட்டனர். (20.12.92)

மன உணர்ச்சியால், மதம் சாதி முதலியவைக ளால் வெவ்வேறாகக் கருதிக்கொண்டிருக்கி றோம். நம் நாட்டு முஸ்லிம்களும், கிறிஸ்த வர்களும், திராவிடர்களேயாவார்கள். மத விஷயத்தில் மன மாற்றம் கொண்டவர்கள் பிறவியில் நம் சகோதரர்கள்தான். ஆதலால் நம் நான்கு கூட்டத்தாரிடையேயும் சிறிதுகூட வேற்றுமையுணர்ச்சி இருக்கக்கூடாது. ஒரு வித ஆராய்ச்சி ஏற்படும்வரை மத விஷயத் தில் ஒருவருக்கொருவர், அவர் அவர்கள் பழக்க வழக்க கலை விஷயங்களில் பிரவே சிக்க இவ்வியக்கத்தில் யாருக்கும் எவ்வித உரிமையுமில்லை. ஆதலால் புரோகித ஆதிக் கத்துக்கு, ஆட்சிக்கு, ஏமாற்றத்துக்கு இடம் கொடுக்காமல் இருக்க, நாம் ஒன்று கூடியே ஆகவேண்டும்.''

(''குடிஅரசு'' 29.12.1938)

இந்த இயக்கத்தின் பொறுப்பை ஏற்ற போது இதைச் சொல்லி பொறுப்பேற்று இன் றுவரையும் ஏன் நாளைக்கும் நம் வழியை அடையாளம் காட்டியிருக்கிறார் நம் தலைவர்.

ஆகவே இன்று ''விநாயகர் சிலை'' என்ற முகமூடியுடன் இந்த பார்ப்பனர்கள் (புரோகிதர்கள்) நம் இனத்தை சின்னாபின்ன மாக்க எண்ணுவதை கருவிலேயே அழிப் போம். இட ஒதுக்கீட்டையும் காப்போம்.

இதுவே நம் அறிவு ஆசான் பெரியார் பிறந்த நாள் சிந்தனையாக இருக்கட்டும்!

பன்னாட்டு தமிழுறவு மன்ற பெர்லின் மாநாடும் சில அனுபவங்களும்

நீதி அரசர் பெ. வேணுகோபால்

உலக அரங்கில் அன்றைய தமிழர்களின் நிலை

அறுசுவையில் மனிதர்கள் விரும்பும் ஒரு முக்கிய சுவை உறைப்பு! இன்று உறைப்புக்கு மிளகாய். அண்மைக்காலத்தில் அறிமுகமான ஒன்று. உலக அரங்கில் மிளகாய் அறிமுகம் ஆகாத காலகட்டத்தில் உறைப்பு சுவையை அளிக்கும் ஒரே பொருள் மிளகு. அந்த மிளகு இந்தியாவின் தென்பகுதியில் தான் கிடைத்தது. நங்கையர்களின் அணிகலன்களுக்கு முத்து தேவைப்பட்டது. அதுவும் தென்னகத்தில்தான் கிடைத்தது. மிளகு, முத்து பண்டமாற்றம் செய்ய அன்று நாகரீகத்தில் முதிர்ந்த நாடுகளான ரோம், கிரீஸ் போன்ற நாடுகளுடன் கடல் வாணிபம் செய்த பெருமை தமிழ்நாட்டிற்குண்டு. அதனால்தான் 'திரைகடல் ஓடியும் திரவியம் தேடு!' என்ற பழமொழி தமிழகத்தில் உருவாகியது. ''யாதும் ஊரே யாவரும் கேளீர்'' என்ற பொதுநோக்கு தொலைநோக்குடன் கவிதை பாட முடிந்தது தமிழனால்.

இன்று தமிழர்கள் நிலை

இன்றைய புள்ளி விவரங்களின்படி நாற்பத்திரண்டு நாடுகளில் நாலரைக் கோடி தமிழர்கள், தமிழ் வம்ச வழியினர் வாழ்ந்து வருகிறார்கள். மலேசியா, சிங்கப்பூர், ஈழம், ரீயுனியன் ஆகிய நான்கு நாடுகளில் தமிழ் ஆட்சிமொழியாக இருக்கிறது. இந்திய நாட்டின் எந்த மொழியும் (இந்தி உள்பட) அயல் நாடுகளில் ஆட்சிமொழியாக இல்லை. தமிழ் மொழிக்குத்தான் இந்த சிறப்பு. மலேசியா, ஈழம், மொரீஷியஸ், தென் ஆப்பிரிக்கா ஆகிய இந்த நாடுகளில் தமிழர்கள் அமைச்சரவையில் இடம் பெற்றுள்ளனர் - இது தமிழ் இனத்தின் தனிச் சிறப்பு!

மாநாடு நடைபெற முக்கியக் காரணம்

உலகின் பல்வேறு நாடுகளில் சிதறி வாழும் தமிழ் இனம் அறிவியல், பொருளியல், தொழிலியல், விஞ்ஞானம் இவைகளில் முன்னேறி வலிமைமிக்க, செல்வாக்குள்ள இனமாக மாறவேண்டும். உலக அரங்கில் நமது குரல் வலிமைமிக்க சக்தி வாய்ந்த குரலாக ஒலிக்கவேண்டும். பல்வேறு நாடுகளில் வாழும் தமிழர்கள் ஒருவருக்கொருவர் தொடர்புகொள்வதோடு தாயகத் தமிழர்களோடும் தொடர்புகொண்டு பாசம், பற்று உறவு ஏற்பட வகை செய்யவேண்டும். இதற்கு மொழியால், பண்பாட்டினால், கலாச்சாரத்தால் நாம் ஒரே இனம் என்ற உணர்வை ஏற்படுத்தவேண்டும். அதற்கு சாதி, மதம், அரசியலுக்கு அப்பாற்பட்ட ஒரு அமைப்பு தேவை என்று உணர்ந்து உருவாக்கப்பட்டதுதான் பன்னாட்டுத் தமிழுறவு மன்றம். இதனை உருவாக்கியவர் தமிழ் அறிஞர் பெருங்கவிக்கோ சேதுராமன். அவருடைய

அறிவாயுதங்களை உருவாக்குவோம்!
அய்யா பணியை நிறைவாக்குவோம்!

- கவிஞர் பல்லவன்

நல்வாழ்த்துகளுடன்...

மாணவர் நகலகம்

• ADYAR	Opp. Adyar Bus Terminus	Ph : 411358
• ANNASALAI	Near. Anand Theatre	Ph : 8251433
• ANNANAGAR WEST	Thirumangalam Junction	Ph : 6162764
• PONDY BAZZAR	Next. Nagesh Theatre	Ph : 446580
• NUNGAMBAKKAM	Near. Ganpat Hotel	Ph : 8278983
• TEYNAMPET	Opp. Anna Arivalayam	
• MYLAPORE	Opp. Jammi Building	
• GUINDY	Opp. Guindy Railway Station	

ADYAR
STUDENTS XEROX
Integrated Business Services

சம்புவராயர் மாவட்ட தி.க. தலைவர் பா. அருணாசலம் அவர்களின் 66-வது பிறந்த நாளினை முன்னிட்டு 6.11.92 அன்று சென்னை பெரியார் திடலில் விழாவாக கொண்டாடப்பட்டது. அன்று வல்லம் பெரியார் - மணியம்மை பொறியியற் கல்லூரி நிதியாக ரூ.25,000-த்தினை கழகப் பொதுச்செயலாளரிடம் வழங்கினார்.

பெருமுயற்சியால் பன்னாட்டுத் தமிழுறவு மூன்றாவது மாநாடு பெர்லினில் நடந்தேறியது. அந்த மாநாட்டிற்கு முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ., தமிழ்க்குடிமகன், பேராசிரியர் இறையன் போன்ற பல தமிழ் அறிஞர்களும், நானும் சென்ற ஆகஸ்ட் மாதம் பத்தாம் தேதி செவ்வாய்க்கிழமை புறப்பட்டுச் சென்றோம்.

பெர்லின் மாநாட்டுக்குச் செல்லுதல்

சென்னையிலிருந்து மதுரை போவதற்கு கும்பகோணம் தஞ்சாவூர் சுற்றுவழியாக 'பாசஞ்சர்' வண்டியில் பயணச்சீட்டு எடுத்துப் பயணம் செய்தால் எப்படி இருக்கும்? அதேபோல்தான் பத்தரை மணிநேரத்தில் பெர்லின் போவதற்குப் பதில் 36 மணி நேரம் விமானத்தில் பயணம் (அல்ல அல்ல சுற்றுப் பயணம்) செய்து, புதன் இரவு ஒன்பது மணிக்கு பெர்லின் நகரை அடைந்தோம். விமான நிலையத்தில் வரவேற்பு முடிந்து நாங்கள் தங்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்ட நண்பர் தங்கராசு இல்லத்தை அடைந்தபொழுது இரவு பத்து மணி. சிறுநீர் கழிக்க முடியவில்லை. ஏதோ அடைப்பு ஏற்பட்டது போன்ற உணர்வு. இரவு நேரமாகி விட்டபடியால் காலையில் மருத்துவரைப் பார்க்கலாம் என்ற முடிவுடன் படுக்கைக்குச் சென்றேன்.

உடல்நலம் பாதிக்கப்பட்டு மருத்துவமனை செல்லுதல்

விடியற்காலை நாலு மணி. தாங்கமுடியாத உபாதை. நண்பர் தங்கராசை எழுப்பினேன் - விடியற்காலை நான்கு மணிக்கு எழுப்பி 'என்னை ஒரு மருத்துவரிடம் அழைத்துப் போங்கள்' என்று. உரிமையுடன் மகனிடம் சொல்லலாம் அல்லது மகளிடம் சொல்லலாம். ஆறாயிரம் மைல்களுக்கு அப்பால் வந்துள்ள நான் யாரோ, அவர் யாரோ! அளவுக்கு மீறிய உரிமை எடுத்து உங்களை சங்கடத்துக்கு உள்ளாக்கும் என்னை மன்னிக்கவேண்டும். உங்களுக்கு எந்த வகையில் கைமாறு செய்யப்போகிறேன் என்று தெரியவில்லை என்று கூறினேன். அதற்கு

அந்த ஈழத் தமிழன் கூறிய பதில், ''அய்யா, நீங்கள் தமிழ் மொழியில் பேசுகிறீர்கள். அது ஒன்றே எங்களுக்கு போதும். எல்லா வகையிலும் உங்களுக்கு உதவ நான் கடமைப்பட்டுள்ளேன்.'' அந்த இளைஞனின் பதில் என்னை பெரும் வியப்பில் ஆழ்த்தியது. தமிழ் மொழிமீது, தமிழ் இனத்தின்மீது இப்படி ஒரு பற்றா! இவ்வளவு பாசமா! எல்லையற்ற மகிழ்ச்சியில் மிதந்தேன். உடல் உபாதைகூட ஒரு பொருட்டாக எனக்குத் தோன்றவில்லை.

இருபத்திநாலு மணிநேரமும் பணி செய்

13 வயதில் சிறுவன் வீரமணியின் கடிதம்

அய்யா,

நானும் எனது நண்பர்களும் 29-8-47ல் கடலூரில் இருந்து விருத்தாசலத்திற்கு இரவு 10 மணிக்கு வந்து சேர்ந்தோம். அங்கு உணவு அருந்த அய்.ஆர்.ஆர்.க்கு சென்றோம். அவ்விடம் சாப்பிடும் விடுதி இரண்டு இருப்பதில் ஒன்றில் ஜனங்கள் உட்கார்ந்து சாப்பிட்டுக் கொண்டும், மற்றொன்றில் ஒரு பார்ப்பனர் மட்டும் உட்கார்ந்து சாப்பிட்டுக் கொண்டும் இருந்தனர். நாங்கள் அந்த ஒருவர் உணவு

'எங்கே உங்கள் மானேஜர்? நான் தனியாக அல்லவா சாப்பாடு அருந்த இங்கு வந்தேன். இவர்களை ஏன் அனுமதித்தாய்? உடனே கம்பிளையின்ட் புஸ்தகத்தை எடுத்து வா' என்று உரக்கக் கத்தினார். அதற்கு அவர், 'எங்களுக்கு பார்ப்பனர்களுக்கு தனியாக உணவு அளிக்கும்படி உத்தரவு ஒன்றுமில்லை. வேண்டுமானால் எங்கள் மானேஜரை கேட்டுக் கொள்ளுங்கள்' என்று கூறிவிட்டுப் போய் விட்டார். உடனே மானேஜரும் வந்தார். உமது கம்பிளையின்ட் புத்தகத்தை எஸ்.எம். ரூமுக்கு எடுத்துவா என்று கூறிவிட்டு போய் விட்டார். அந்த மானேஜரும் பல்லை இளித்து அவர் பின் தொடர்ந்தார். இவர் ஒரு ரெயில்வே (வெல்ஃபேர்) இன்ஸ்பெக்டராம்.



அருந்தும் விடுதியில் உட்கார்ந்தோம். எங்களுக்கு சாப்பாடு போடப்பட்டது. நாங்கள் சாப்பிடும்போது அந்த பார்ப்பனர் எங்களை வெறிக்க வெறிக்க பார்த்துக் கொண்டே சாப்பிட்டார். சாப்பிட்டு முடிந்ததும் அவர் எழுந்து கூட கை அலம்பாமல் பக்கத்தில் குடித்தண்ணீர் வைத்திருந்த டபராவில் எச்சல் கையை அலம்பிவிட்டு எழுந்து பரிமாறினவரிடம்.

இவருக்கு உண்மையில் (வெல்பேர் இன்ஸ்பெக்டர் என்னும்) பெயர் பொருந்துமா? 'இந்து' நம்மை வகுப்புத் துவேஷிகள் என்கிறதே. யார் வகுப்புத் துவேஷிகள்? அதிகாரிகள் கவனிப்பார்களா! 'இந்து' உணருமா?

-விருத்தாசலம்
கி.வீரமணி

29.8.47 - 'விடுதலை',

யும் ஒரு மருத்துவமனைக்கு நண்பர் தங்கராசு தொலைபேசியில் பேசினார். நீதிபதியாக இருந்தவர். இங்கு ஒரு மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்ற வந்திருக்கிறார். சிறுநீர் கழிக்க முடியாமல் அவதிப்படுகிறார் என்று சொன்னதும், அந்த மருத்துவர் நோயாளியை மருத்துவமனைக்கு அழைத்து வரவேண்டாம்; நானே நோயாளியைப் பார்க்க வருகிறேன் என்று கூறி நான் தங்கி இருந்த இடத்திற்கு வந்துவிட்டார். நாம் அயல்நாடுகளுக்குச் செல்லும்பொழுது நோய்வாய்ப்பட்டால் பல சங்கடங்களை சந்திக்க நேரிடும். வைத்திய வசதி கிடைப்பதில் தாமதம் அசிரத்தை ஏற்படும் என்று பலர் சொல்லக் கேட்டிருக்கிறேன். இந்தியாவின் தலைமை நீதிபதியாக இருந்தவர் சப்யசாக்ஷி முக்கர்ஜி. சென்னை உயர்நீதிமன்றத்தின் நீதிபதியாக இருந்தவர் பக்கீர் முகம்மது. இவர்கள் அயல்நாடு சென்றபொழுது நோய்வாய்ப்பட்டு தக்க மருத்துவ வசதி கிட்டாத காரணத்தினால் இறந்துபோகும் நிலை ஏற்பட்டது. இதை எல்லாம் நினைவுபடுத்தி குழப்பத்தில் ஆழ்ந்திருந்த எனக்கு அந்த ஜெர்மன் மருத்துவர் நான் தங்கும் இடத்திற்கு வந்து வைத்தியம் செய்தது பெரும் வியப்பாக இருந்தது. இதற்கு காரணம் என்ன தெரியுமா? சுற்றுலா பயணியாக ஊர் பார்க்க வரவில்லை. மாநாட்டில் உரையாற்ற வந்துள்ளார். பொதுக் காரியத்திற்காக வந்த மனிதனுக்கு நாம் உதவி செய்யவேண்டும் என்ற எண்ணத்தில் அந்த ஜெர்மன் மருத்துவர் வீடு தேடி வந்தார். எனது பொதுநலத் தொண்டே அவர் வீடு தேடிவரக் காரணம். நான் வகித்த பதவி அல்ல என்று அவர் பேச்சிலிருந்து நான் உணர்ந்துகொண்டேன்.

அந்த ஜெர்மன் மருத்துவர் உடனே அறுவை சிகிச்சை செய்யவேண்டும். மருத்துவமனையில் சில தினங்கள் தங்கவேண்டும். அதற்கு பெரும் செலவு ஆகும். உடனடியாக உங்களுக்கு நிவாரணம் அளிக்க ஜெர்மன் மருத்துவ பல்கலைக் கழகத்தின் ஆய்வு கூடத்திற்கு பரிந்துரை செய்கிறேன். அவர்கள் ஆலோசனையின்படி நடந்துகொள்ளுங்கள் என்றார். காலை பத்து மணிக்கு சென்னையிலிருந்து மாநாட்டிற்கு வந்த பல் மருத்துவர் கண்ணப்பன், புதுவை பல்கலைக் கழகத்தின் தமிழ்த் துறைத் தலைவர் டாக்டர் அறவாணன், நண்பர் தங்கராசு இவர்களுடன் மருத்துவமனை சென்றேன். நோயாளிகள் இல்லை. மருத்துவர்கள் அங்குமிங்கும் போய்க்கொண்டிருந்தார்கள். நோயாளிகள் நிரம்பி வழியும் நம் ஊர் மருத்துவமனையும் நினைவில் வந்தது. சிறிதுநேரம் கழித்து மருத்துவ பரிசோதனை கூடத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டேன். வலி தெரியாமல் இருக்க ஊசிபோட்டு சிறுநீர் துவாரம் வழியாக குழாயினை பொறுத்தி சிறுநீர் கழிக்கும்படி செய்தார். பொருத்திய குழாய் பதினைந்து தினங்கள் இருக்கலாம். 'இன்பெக்ஷன்' வராமல் இருக்க மருந்து கொடுக்கிறோம். பத்துமணி இடைவெளியில் ஒரு மாத்திரை சாப்பிடவும். பிறகு இந்தியா சென்று மருத்துவர்கள் ஆலோசனைப்படி நடந்துகொள்ளுங்கள் என்று கூறினார். நான் கட்டி இருந்த வேட்டி இரத்தக் கறை படிந்துவிட்டதால் கட்டிக்கொள்ள மஞ்சள் நிறத்தில் மருத்துவமனை பெட்ஷீட் ஒன்றையும் கொடுத்தார். மாநாட்டில் கலந்துகொள்ள வந்த உங்களிடம் கட்டணம் வசூலிக்கவில்லை என்று சொல்லி வழி அனுப்பி வைத்தனர்.

மாநாட்டு நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ளுதல்

ஜெர்மன் மருத்துவமனையிலிருந்து நான் தங்கி இருந்த இடம் சுமார் இருபது மைல்கள் இருக்கும். அங்கிருந்து மாநாடு நடக்குமிடம் சுமார் இருபது மைல். மொத்தம் நாற்பது மைல்கள் செல்ல டாக்சி கட்டணம் ஒரு பெரும் தொகையாக இருந்தது. மாற்று வேட்டி கட்டுவதற்காக நான் தங்குமிடம் போகவேண்டியதில்லை. ஜெர்மன் மருத்துவமனை பெட்ஷீட்டை கட்டிக்கொண்டு மாநாட்டிற்கு வருகிறேன் என்று கூறி நேரே மாநாடு நடக்குமிடம் சென்றேன்.

தந்தை பெரியார் சொன்னதன் பொருள் விளங்குகிறது!

நான்கு நாட்கள் மாநாடு சிறப்பாக நடந்தது. நான்கு நாட்களும் மாநாட்டு நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டேன். காலை பத்து மணிக்கு வந்து மாலை ஏழு மணிக்கு வீடு திரும்பினேன். மாநாட்டில் கலந்துகொண்ட நண்பர்கள் அனைவரும் தவறாமல் எனக்கு விடுத்த வினா என்ன தெரியுமா? குழாய்

ஒன்றை பொருத்திக்கொண்டு துன்பத்தையும் பொருட்படுத்தாமல் மாநாட்டு நிகழ்ச்சிகளில் காலையிலிருந்து மாலை வரை கலந்துகொள்ளவேண்டுமா? சென்று ஓய்வு எடுத்துக்கொள்ளுங்கள் என்று கூறியதுதான். மாநாட்டில் உரையாற்றும்பொழுது மேடையில் நான் கூறிய பதில் இதுதான். ''தமிழகத்திலே தந்தை பெரியாரைப்பற்றி நிச்சயம் உங்களுக்கு தெரிந்து இருக்கும். சிறுநீர் கழிக்கமுடியாமல் குழாய்கள் போன்ற பல உபகரணங்களைப் பொருத்திக்கொண்டு மிகவும் அவதிப்படுவார். அத்தனைத் துன்பங்களுக்கிடையே சுற்றுப்பயணம் செய்து பல பொதுக்கூட்டங்களில் தொடர்ச்சியாகக் கலந்துகொள்வார். இந்த தள்ளாத வயதில் இத்தனை உபாதைகளுக்கிடையே இந்த சுற்றுப்பயணமும் பொதுக் கூட்டங்களும் தேவையா என்று கேட்டபொழுது பெரியார் சொன்னார்: ''என் உடல் நிலைக்கு எது உகந்தது என்று மருத்துவர்களைவிட எனக்குத்தான் தெரியும். சுற்றுப் பயணம், மக்களை சந்திப்பது, பொதுக்கூட்டங்களில் பேசுவது எனக்கு அதுதான் மருந்து. அது எனக்கு உடல் நலத்தையும், உற்சாகத்தையும் கொடுக்கும். என்னைத் தடுக்காதீர்கள்'' என்பார். நண்பர்களே, தந்தை பெரியார் சொன்ன பதிலின் பொருள் அன்று எனக்கு விளங்கவில்லை. ஆனால், இன்று இப்பொழுது எனக்கு விளங்கிக்கொண்டிருக்கிறது. இந்த மண்டபத்தை பார்க்கிறேன். உங்களைப் பார்க்கிறேன். உங்கள் இன உணர்வையும், தமிழ்ப் பற்றையும் பார்க்கிறேன். என் வலியை மறந்தேன். என்னையே மறந்துவிட்டேன். மகிழ்ச்சிப் பெருக்கில் மிதந்துகொண்டு இருக்கிறேன். அறைக்குப்போய் ஓய்வு எடு என்று என்னை துரத்தித் தனிமைப் படுத்தி விடாதீர்கள்.'' இது என் உரையின் ஒரு பகுதி.

தமிழ் நடை, உடைகள்!

பெர்லின் நகரில் சுமார் அம்பதாயிரம் தமிழர்கள் வசித்து வருகிறார்கள். இவர்களில் பெரும் பகுதியினர் ஈழத்திலிருந்து வந்தவர்கள். அரசியல் ரீதியாக ஜெர்மன் பிரஜா உரிமை பெற்று சிறப்புடன் வாழ்ந்து வருகிறார்கள். பலர் சொந்தமாக தொழில் நடத்தி வசதியுடன் வாழ்ந்து வருகிறார்கள். அதனால்தான் பெரும் பொருட் செலவில் நாலு நாட்கள் மாநாடு நடத்த முடிந்தது. பல கலை நிகழ்ச்சிகளை அற்புதமாக நடத்திக்காட்டினார்கள். துவக்க விழா அன்று நாதசுர இசையுடன் எங்களை வரவேற்று மேடைக்கு அழைத்துச் சென்றார்கள். மேடையில் இருந்த இரண்டு பெரிய குத்து விளக்குகள், நாதஸ்சுர இசை தமிழகத்தில் நடக்கும் விழா போன்ற பிரமையை ஏற்படுத்தியது. நாதசுர கலைஞர்கள் அனைவரும் ஜெர்மனியில் பணியில் உள்ளவர்கள். நாதசுரம் ஓய்வு நேரங்களில் அவர்கள் ஆற்றிவரும் கலைத் தொண்டு. மாநாடு துவக்க தினத்தில் பெண்கள் அனைவரும் காஞ்சிபுரம் பட்டு சேலை, தலை நிறைய பூ, அசல் தமிழ் பெண்களாக காட்சி அளித்தார்கள். ஆண்களில் சிலர் பட்டு வேட்டி, சில்க் ஜிப்பா, அங்கவத்திரம் (தமிழன் என்று அடையாளம் காட்டும் நமது உடையல்லவா அது) சகிதம் காட்சி அளித்தார்கள். மாநாட்டின் வரவேற்பு குழுத் தலைவர் குணரத்தினம் மயில் கண் வேட்டி, விசிரி மடிப்பு அங்கவத்திரத்துடன் மாநாட்டு நிகழ்ச்சிகளை கண்காணித்தபடி சுற்றி வந்து கொண்டிருந்தார். தமிழ்நாட்டில்கூட தமிழர்கள் நடத்தும் விழாவில் வேட்டி அங்கவத்திரத்துடன் தமிழர்களை பார்ப்பது அபூர்வம். அயல்நாடுகளில் வாழும் தமிழர்கள் தங்கள் குழந்தைகளுடன் ஆங்கிலத்தில் பேசுகிறார்கள். பெர்லினில் பார்த்த பல தமிழ்க் குடும்பங்களில் பெற்றோர்கள் குழந்தைகளுடன் தமிழில் பேசுகிறார்கள். நமது கலை, பண்பாடு இவைகளை மறந்துவிடாமல் வாழ்க்கை நடத்திவருகிறார்கள். இது மிகவும் போற்றத்தகுந்தது.

வெளிநாடுகளில் தமிழர்

பிரான்ஸ், ஜெர்மனி மற்றும் மேற்கு அய்ரோப்பிய நாடுகள் இன்று பலத்த பொருளாதார நெருக்கடியில் சிக்கியுள்ளன. வளர்ந்துவரும் நாடுகளிலிருந்து வேலை வாய்ப்பினைத் தேடி இங்கு பலர் வருவது பல புதிய சிக்கல்களை உருவாக்கியுள்ளது. குறைந்து வரும் வேலைவாய்ப்புகளை பங்குபோட வருகிறார்கள் என்ற வெறுப்புணர்ச்சி பரவி வருகிறது. வெளிநாட்டினர் (Inmigrants) ஜெர்மனியில் உள்ள பிராங்பர்ட் நகரின் ஜனத் தொகையில் இருபத்தாறு சதவிகிதம் உள்ளனர். பிரான்சில் வெளிநாட்டிலிருந்து வந்தவர்களை வெளியேற்றவேண்டும் என்று அரசியல் கட்சிகள் குரல் கொடுக்கத்

தொடங்கி இருக்கின்றன. அமெரிக்காவில் அதிக வருமானம் சம்பாதிப்பவர்கள் வெளி நாடுகளிலிருந்து வந்தவர்கள். நியூஜெர்சியில் ஒரு தெருவில் உள்ள வீடுகள் அனைத்தும் வெளிநாட்டிலிருந்து வந்தவர்கள் வாங்கி இருக்கிறார்கள். இது அளவு கடந்த வெறுப்புணர்ச்சியைத் தூண்டியுள்ளது. உலகின் பல நாடுகளில் வாழும் தமிழர்கள் இம் மாதிரியான சிக்கல்களிலிருந்து தங்களைக் காப்பாற்றிக்கொள்ள, நியாயமான உரிமைகளைப் பெறவும், பெற்ற உரிமைகளைப் பாதுகாக்கவும் அவர்கள் ஒருங்கிணைந்து செயல்படவேண்டும். அரசியல் ரீதியாக சில பிரச்சினைகளில் தீர்வுகாண தாயகத் தமிழ்நாட்டுடன் தொடர்பு வைத்துக்கொள்ளவேண்டும். இதனை பன்னாட்டுத் தமிழர்கள் உணர இம்மாநாடு ஓரளவு உதவி இருக்கிறது. உலகத் தமிழர்கள் ஒன்றுபட்டு ஒரு இனமாக செயல்படவேண்டும் என்ற கருத்தை இம்மாநாடு உருவாக்கியுள்ளது. தமிழக அரசின் ஆதரவோ அரவணைப்போ இல்லாமல் இத்தகைய வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த இம்மாநாட்டினை நடத்திய உயர் திரு குணரத்தினம், அவருக்கு உதவிக்கரமாக இருந்து செயலாற்றிய தங்கராசு மற்றும் பல நண்பர்கள், நமது பெருங்கவிக்கோ சேதுராமன் போன்ற இவர்கள் நமது மனப்பூர்வமான பாராட்டுதலுக்குரியவர்கள்.

ஆகஸ்ட் பதினைந்தாம் தேதி பெர்லினில் மாநாடு முடிந்தது. பதினாறாம் தேதி காலை பெர்னிலிருந்து புறப்பட்டு அன்றைய இரவு பம்பாய் வந்து சேர்ந்தேன். பதினேழாம் தேதி காலை ஒன்பது மணிக்கு புறப்பட்டு பதினோரு மணியளவில் சென்னை வந்து சேர்ந்தேன். குழாயினைப் பொருத்திக் கொண்டு வலியுடன் தனிமையில் பயணம் செய்ய துணிவும், தன்னம்பிக்கையும் எப்படி இந்த வயதில் உங்களுக்கு ஏற்பட்டது என்று நண்பர்கள் பலர் கேட்டார்கள். நான் அவர்களுக்குப் பதில் சொல்லவில்லை. அந்த துணிவுக்கும், தன்னம்பிக்கைக்கும் மனோதிடத்திற்கும் காரணம் என்ன தெரியுமா? கடந்த எட்டு ஆண்டுகளாக தந்தை பெரியாரின் இயக்கத்திலும், அதற்குமுன் இளம் வயதில் தந்தை பெரியார் அவர்களிடத்திலும், கொள்கைகளிலும் என்னை ஈடுபடுத்தி செயல்பட்டுக் கொண்டிருப்பதே அதற்குக் காரணம் என்பதை நமது இயக்கத் தோழர்களுக்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். பெரியாரியல் ஒரு வாழ்க்கை நெறி, வாழும் முறை என்று கூறுவதற்கு இதுவே காரணம்.

தந்தை பெரியார் மீது முதல் வழக்கு

1916-இல் தந்தை பெரியார் ஈரோட்டில் பாட்டுக்கச்சேரி நடத்தினார். அந்தக் கச்சேரிக்கு கச்சேரி ஈரோடு நகர மன்றத் தலைவரையும் சில அதிகாரிகளையும் சொந்த வருத்தம் காரணமாக அழைக்கவில்லை. அதை மனதில் வைத்துக்கொண்டு லைசென்சு இல்லாமல் கச்சேரி நடத்தக்கூடாது என்று ஆணை பிறப்பித்து, காவல் துறையினரை அனுப்பித் தடுக்கும்படி செய்தனர். யாரும் போகவேண்டாம் என்றும் விளம்பரம் செய்தனர். ஆனால் அதைப்பற்றி எல்லாம் பொருட்படுத்தாமல் மல் திட்டமிட்டபடி கச்சேரியை நடத்தி முடித்து விட்டார். பெரியார், அனுமதியில்லாமல் கச்சேரி நடத்தியதற்காக பெரியார்மீதும், அவரது தமையனார்மீதும் சப்-மாஜிஸ்டிரேட் கோர்ட்டில் வழக்குத் தொடுக்கப்பட்டது. நகரமன்ற தலைவரும், உள்ளூர் அதிகாரிகளும் சேர்ந்து இந்த வழக்கைத் தொடுத்துள்ளதால் வேறு நீதி மன்றத்துக்கு வழக்கை மாற்றவேண்டும் என்று பெரியார் கேட்டுக்கொண்டார். மாவட்ட ஆட்சித் தலைவர் மறுத்துவிட்டார். அதனால் இம் மன்றத்தில் நீதி கிடைக்காது; எதிர் வழக்காட விரும்பவில்லை என்று கூறிவிட்டார் பெரியார்.

இந்தப் பிரச்னை சட்டமன்றத்தில் கிளப்பப்பட்டது அரசு உடனே வழக்கை வாபஸ் வாங்கிக்கொள்ளக் கூறவே மாவட்ட ஆட்சித் தலைவர் அதன்படி நடந்துகொண்டு விட்டார்.

-'குடி அரசு' 19-8-1928

தொழிலாளர்கள் பிரச்னை - பெரியாரின் சிந்தனை வெளிச்சம்!

1. பாட்டாளி மக்களே பெரிதும் சுரண்டப்படுகிறார்கள்; முதலாளி வர்க்கத்தாலும் புரோகித வர்க்கத்தாலும்.

2. தொழிலாளர் கிளர்ச்சிகளின்போது பொருளாதாரப் பிரச்சினையை மட்டுமே கவனித்தால் போதும் என்று எண்ணுகிறார்களேயொழிய, புரோகிதப் பிடியிலிருந்து விடுபடும் முயற்சியைப் புறக்கணித்து விடுகின்றனர்.

3. திராவிட இனத்திலே, மிகமிகப் பெரும் பகுதியினர் பாட்டாளிகளே. ஆரிய இனமோ, பாடுபடாத பிறவி முதலாளி வர்க்கம். ஆகவே ஆரிய-திராவிடப் போர் என்பது, அடிப்படையிலே பார்த்தால், பொருளாதார பேத ஒழிப்புத் திட்டந்தான்.

4. ஜாதிமுறை, சடங்குமுறை என்பனவெல்லாம், தந்திரமாக அமைக்கப்பட்ட, பொருளாதாரச் சுரண்டல் திட்டமேயாகும். ஆகவே ஜாதி முறையை ஒழிப்பதும், சமதர்ம திட்டந்தான்.

5. தொழிலாளர்கள், ஆரிய ஆதிக்கத்தை அகற்றாமல், பொருளாதாரத் துறையிலே எவ்வளவு முன்னேறினாலும், அவர்களுடைய வாழ்வு மலரமுடியாது. ஆகவே, அவர்கள், ஆரிய ஆதிக்கத்தை அகற்ற வேண்டும்.

6. பாட்டாளிகள் என்றால், ஆலைத் தொழிலிலே ஈடுபட்டு, சங்கம் அமைத்துக் கொண்டு கூலி உயர்வு, குடி இருக்கும் வீட்டு வசதி, சுகாதார வசதிகள் ஆகியவைகளுக்காகக் கிளர்ச்சிகள் நடத்துபவர்கள் மட்டுமல்ல, பண்ணை வேலை செய்பவன், கல் உடைப்பவன், கட்டை வெட்டுபவன், குப்பை கூட்டுபவன் போன்ற சங்கமோ, கிளர்ச்சி செய்யும் உணர்ச்சியோ கூடப் பெறாமல், சிதறி, வாழ்க்கையைச் சிதைத்துக் கொண்டுள்ள கோடிக் கணக்கான தொழிலாளர்களையே குறிப்பதாகும்.

7. தொழிலாளர்கள் அவல வாழ்வு பெற்றிருப்பதற்குப் பெரிதும் காரணமாக இருப்பதும், அவர்கள் எழுச்சி பெற்று, உரிமைப் போருக்கான வகை தேடிக்கொள்ளாமலிருப்பதற்கும் காரணமாக இருப்பது, மதத்தின்பேரால் அவர்கள் மனதிலே திணிக்கப்பட்டுள்ள மூட நம்பிக்கைகளே ஆகும். ஆகவே, அவற்றினின்றும் விடுபடுவது தொழிலாளர்களின் விடுதலைக்கு முக்கியமான முதற் காரியமாகும். இதனைச் செய்யாமற்போனால், இன்று தொழிலாளர்களின் மனதிலே குடி கொண்டுள்ள பழைய கால நம்பிக்கைகளை உபயோகப்படுத்திக் கொண்டு, தந்திரக்காரத் தன்னல அரசியல் கட்சிகள், புரோகித வகுப்பாரின் கூட்டுறவுடன் தொழிலாளரை நசுக்கி விட முடியும்.

8. 'திராவிட நாடு திராவிட ருக்கு' ஆக வேண்டுமென்று கூறும்போது, பாடுபடும் இனத்தைப் பாடுபடாத இனம் சுரண்டும் கொடுமையும், பாடுபடும் இனம் தன்னுடைய மனதிலே பூட்டிக்கொண்ட தளைகளால், அடிமைப்பட்டுக் கிடக்கும் கேடும் ஒழிய வேண்டும் என்ற எண்ணத்தையேதான், வேறு வார்த்தைகளால் கூறுவதாகப் பொருள். சமதர்ம நாடு, சமூக சமதர்மம் என்ற அடிப்படைமீது கட்டப்பட்டால்தான் நிலைக்கும். இந்த ஒரு அம்சம் இந் நாட்டுக்கு மட்டுமே உள்ளது. வேறு இடங்களில் ஜாதியின் பேராலே, பொருளாதாரச் சுரண்டல் முறை ஏற்பட்டிருக்கவில்லை.

9. தன்னாட்சி பெற்ற திராவிட நாட்டிலே, ஆரிய ஆதிக்கம் இராது என்றால், தந்திரத்தால் ஏழைகளையும் உழைப்பாளரையும் ஏமாற்றி, உழைக்க வைத்து, மதத்தின்பேரால் கட்டிவிடப்பட்ட கற்பனைகளைக் காட்டி ஏமாற்றித் தங்களை மேல்ஜாதி என்று காட்டிக் கொண்டு, பாடுபடாமல் வாழும் சுரண்டல்காரர்களின் கொட்டம் இராது என்றே பொருள்.

10. திராவிட நாட்டிலே உற்பத்திச் சாதனங்கள், பெரிய தொழிற்சாலைகள், போக்குவரத்துத் தொழில், இலாவாதேவி முதலிய பெரும் இலாபம் தரும் தொழில்கள், தனிப்பட்ட முதலாளிகளிடம் இராது சர்க்காரே நடத்தும். ஆகவே, முதலாளித்வம் இராது.

-'திராவிட நாடு', 5.5.1946

எதிரிகள் யார்?

பெரியார் சொல்லும் உதாரணம்



கணினியில் வரைந்த ஓவியம்
ஆக்கம்: கே.ஆர். கண்ணன்

பெரியார் சொல்லும் உதாரணம்

உங்களுக்கும் சொல்லவேண்டியது இன்னொன்றும் உண்டு. அனேக மக்கள் தாழ்த்தப்பட்ட மக்களில் தவறாக நினைக்கிறார்கள், பார்ப்பனரல்லாத மக்கள்தான் தங்கள் எதிரிகள் என்றும் பார்ப்பனர்கூட அல்லவென்றும்! இது மிகவும் தவறான எண்ணமாகும். இதற்குக் காரணம் பார்ப்பன ஆட்சியில் பல அதிகாரங்களும் பணவினியோகமும் இருப்பதால் பார்ப்பானுக்கு நல்ல பிள்ளையாகவும் அவனது விஷமப் பிரச்சாரத்தை நம்புவதும் ஆகும். நாங்கள் வேறு என்றும் நீங்கள் வேறு என்றும் எண்ணக்கூடாது. சூத்திரர்கள் ஒரு இனமாக இருந்தால் தங்களுக்கு ஆபத்து என்று கருதி பல இனம் ஆக ஆக்கிவிட்டார்கள்.

ஆகவே, இப்படியெல்லாம் உங்களை எண்ணும்படி வைப்பது பார்ப்பனர்கள் சூழ்ச்சிதானே யொழிய வேறில்லை. இப்படிப்பட்ட கருத்தைப் பார்ப்பனர்கள் தான் தூண்டிவிடுகிறார்களே யொழிய வேறில்லை. இதையெல்லாம் உண்மை என்று நீங்கள் நம்பவேண்டாம்.

பார்ப்பான் எதை எதைச் செய்கிறானோ அதையெல்லாம் இவன் அவனைப் பார்த்து அதேபோல் இவனும் செய்கிறானே தவிர வேறில்லை. ஆகவே, அவன் (பார்ப்பான்) அதைச் செய்யவில்லை என்றால் மற்றவர்கள் அதைச் செய்யமாட்டார்கள்.

ஒரு உதாரணம் சொல்ல விரும்புகிறேன். ஈரோட்டில் எங்கள் தெருவில் தண்ணீர் குழாய் இருக்கிறது. அதில் எல்லோரும் தண்ணீர் எடுக்க வருவார்கள். ஒரு பார்ப்பார பெண் வந்தால், அவள் கையில் ஒரு சொம்பில் கொஞ்சம் தண்ணீர் கொண்டு வந்து அதை அந்த குழாய்க்குமேல் ஊற்றி கழுவிவிட்டு பிறகுதான் குடத்தை வைத்துத் தண்ணீர் பிடிப்பாள். அதைப் பார்த்து நம்மளவன் வீட்டுப் பெண்பிள்ளையும் அப்படியே செம்பில் தண்ணீர் கொண்டு வந்து ஊற்றி விட்டு பிறகுதான் குடத்தை வைத்து தண்ணீர் பிடித்துக் கொண்டு போவாள். அதைப் பார்த்து எங்கள் பக்கத்து வீட்டு (முஸ்லீம்) சாயபு பொம்பளையும் சொம்பில் கொஞ்சம் தண்ணீர் கொண்டுவந்து குழாய்மேல் ஊற்றி கழுவி விட்டுத்தான் குடத்தை வைத்து தண்ணீர் பிடிக்கிறாள்.

முதலாவது பார்ப்பார பொம்பளை தண்ணீர் ஊற்றுவது - மற்ற சாதிக்காரர்கள் குழாயைத் தொட்டு விட்டார்களே, தீட்டுப்பட்டு விட்டதே என்பதற்காக ஊற்றிக் கழுவுகிறாள்.

இதைப் பார்த்து அதை அப்படியே காப்பி அடித்துச் செய்கிற மற்ற பொம்ப



ளைகளுக்கு நாம் எதற்காக இப்படிச் செய்கிறோம் என்று தெரியாமலேயே செய்துகொண்டு வருகிறார்கள். அதுபோலத் தான் பார்ப்பனரல்லாதாரில் சாதி வெறியும் பிற்போக்கு மனப்பான்மையும் கொண்டுள்ளவர்கள் நிலைமை. அவர்களது இந்த மாதிரியான நடத்தைக்குக் காரணம் அறியாமையும் பார்ப்பானைப் பார்த்து காப்பி அடிப்பதுமே தவிர அகம்பாவம் (பார்ப்பனர்களைப் போல்) கிடையாது. சொல்லிக் கொடுக்கும் வாத்தியாரைச் சரிப்படுத்தினால் மாணவன் தானே சரிப்பட்டு விடுவான்! ஆகவே, இதற்காக நீங்கள் பெரும் அளவு உங்கள் நேரத்தை செலவழிக்க வேண்டியதில்லை.

(15-2-1959 அன்று டில்லியில் அம்பேத்கர் பவனம் சார்பில் அளிக்கப்பட்ட வரவேற்பின்போது தந்தை பெரியார் அவர்கள் ஆற்றிய உரையிலிருந்து.)

- 'விடுதலை', 22.2.1959

தந்தை பெரியார் 115-வது ஆண்டு
பிறந்த நாள் மலருக்கு எங்களது வாழ்த்துக்கள்

வசந்தம் டிம்பர் மார்ட்

110, மில் ரோடு, கோயமுத்தூர் - 641 001.

தொலை பேசி அலுவலகம்: 44164; 47944 வீடு: 573354

பெரியார் சொற்பொழிவும் - "சுதேசமித்திரன்" கணிப்பும்!

— முனைவர் பு. இராசதுரை

1924 - உலகில் மாபெரும் மனித உரிமைப் போர் நடந்த ஆண்டு! 1920 -களில் வெள்ளையர்களால் ''கறுப்பர்கள்'' தென்னாப்பிரிக்காவில் ஒடுக்கப்படுகிறார்கள் - அவமானப்படுத்தப்படுகிறார்கள் என்று ''மஹாத்மாக்கள்'' கப்பலேறி அங்கு சென்று மாபெரும் போராட்டம் நடத்தினார்கள் என்று வாய் இனிக்கப்பேசும் பார்ப்பன அரசியல்வாதிகளையும் அவர்தம் தொண்டரடிப் பொடிகளையும் இன்றும் காண்கிறோம். தேசீயத் திருவாளர்கள் தென்னாப்பிரிக்காவில் கறுப்பர்களுக்கு ஆதரவாக வெள்ளையரை எதிர்த்துப் போராடச் சென்றபோது இந்த இந்திய நாட்டில் தாழ்த்தப்பட்டவர்கள் நாயினும் கீழாய்ப் பார்ப்பனராலும் அவர்தம் பாதந்தாங்கிகளாலும் நடத்தப்பட்டார்கள்; தெருக்களில் அவர்கள் நடக்கக்கூடாது என்றார்கள். பள்ளிக்கூடங்களில் அவர்கள் நுழையக்கூடாது என்றார்கள்; பொதுக் கிணறுகளை அவர்கள் பயன்படுத்தக்கூடாது என்றார்கள்.

தாழ்த்தப்பட்டோர் அல்லாத பிற்படுத்தப்பட்ட மக்கள் பார்ப்பனர்களால் இழிவாக நடத்தப்பட்டார்கள். உண்டிச்சாலைகளில் ''சூத்திரர்'' சாப்பிடத் தனியிடங்கள் இருந்தன. கல்வி நிலையங்களிலும் அரசு அலுவலகங்களிலும் பார்ப்பனர்களுக்கும் பார்ப்பனர் அல்லாத பிறருக்கும் குடிநீர்ப் பானைகள் தனித்தனியே வைக்கப்பட்டிருந்தன.

இந்நிலையில் ''கூரை ஏறிக் கோழி பிடிக்க'' விரும்பாத காங்கிரஸ்காரர்கள் நிறவெறியை எதிர்த்துப் போராடத் தென்னாப்பிரிக்கா சென்றார்களாம்! குரலற்றவர்களாகவும் செயலற்றவர்களாகவும் ஆமைபோல் அடங்கிக் கிடந்த தாழ்த்தப்பட்டவர்களை உயர்ந்த - அவர்தம் உரிமைகட்குப் போராட - நீதிக்கட்சி முன்வந்தது; தன் பதினாறு ஆண்டுகால ஆட்சியில் மாபெரும் உதவிகளை அது தாழ்த்தப்பட்டவர்கட்கு அளித்தது;

25-9-1924 அன்று,

(அ) ''எந்த நகரிலோ, சிற்றூரிலோ எந்தப் பொதுச்சாலை அல்லது தெரு அல்லது பாதையில் எந்த வகுப்பு அல்லது எந்தச் சாதியைச் சேர்ந்தவரும் நடப்பதற்கு எவ்விதத் தடையும் இல்லை என்பதையும்,

(ஆ) பொது அலுவலகம், கிணறு, குளம் அல்லது பொது தங்குமிடம் இவற்றிடம் செல்லவோ பொது அலுவல்கள் நிகழும் எவ்விடங்களுக்கும் எக்கட்டடங்களுக்கும் நாட்டிலுள்ள சாதி இந்துக்களின் பிரிவினர் எந்த மாதிரியும் எந்த அளவிலும் செல்கின்றார்களோ அவ்வாறு செல்வதற்குத் தடையில்லை என்பதையும் அரசாங்கத்தின் கொள்கையாக உறுதியாக ஏற்கவேண்டும் என்றும் இக்கவுன்சில் அரசாங்கத்திற்குச் சிபாரிசு செய்கிறது''

என்ற இரு தீர்மானங்களையும் நீதிக்கட்சியைச் சேர்ந்த ஆர். சீநிவாசன் என்ற உறுப்பினர் முன்மொழிய இவை நிறைவேறி அரசாங்கத்தாலும் ஏற்கப்பட்டன.

இதேபோன்ற தீர்மானத்தை ஷ.பு.அ. சவுந்தரபாண்டியன் அவர்கள் அதற்கு மூன்று ஆண்டுகட்கு முன் 4.8.1921 அன்று சென்னைச் சட்டமன்றத்தில் முன்மொழிந்தார். அன்று அவர் தீர்மானத்தை வழிமொழிந்து பேசிய ஜி.வந்தனம்,

''குடியேற்ற நாடுகளில் வாழும் இந்தியர்கள் சமஉரிமை பெறுவதற்குத் திரு. கோகலேயும் திரு. காந்தியும் முயன்று

With Best Compliments from

கட்டிடனார்களுக்கு உற்றதோர் துணை Ph: 21376

ஸ்ரீ லெட்சுமி
ஹார்டுவேர்ஸ்

(இரும்பு வர்ண வியாபாரம்)
சாந்தி & கமலா எதிர்புறம்,
தஞ்சாவூர்.

Stockist:
Asian Paints
Super Snowcem
Sandtex Matt
Nerolac Paints
Addisons Paints

Iron Fittings
Aluminium Fittings
Brass Fittings
Bolts, Nutts & Screws
Amar Brushes, Locks.
Palish & all others
Building Meterials

Prop: R. SURIYAKUMAR B.Sc.,

கொண்டிருந்தமைபற்றி நாம் ஏராள மாகப் படித்திருக்கிறோம். எல்லா மக் களும் அந்த உரிமைகளைப் பெறுவ தற்கு அந்தப் பெரிய மனிதர்கள் தம் சொந்த நாட்டிலும் தொண்டாற்ற வேண்டியது எவ்வளவு வேண்டப்படு வது என்று நாம் இந்த நாளிலும் வியப் புறுகிறோம்'' என்றார்.

ஆம்! தென்னாப்பிரிக்காவில் நிறவெறியை எதிர்த்துப் போராடச் சென்ற காங்கிரஸ்க் காரர்கள் இங்குள்ள சாதிவெறியை உயர்சாதி ஆதிக்க வெறியைப் போக்க ஏன் போராட வில்லை என்று சென்னைச் சட்டமன்றத்தி லேயே இப்படி ஜி. வந்தனம் 4.8.1921 அன்று வினவினார்.

கேரளத்தில்

கேரளத்திலும் அந்நாளில் தாழ்த்தப்பட் டவர்கள் இழிவாக நடத்தப்பட்டார்கள். வைக்கம் கோவிலைச் சுற்றியுள்ள சாலைக ளில் தாழ்த்தப்பட்டுக்கிடந்த ஈழவர்களும் தீயர்களும் புலையர்களும் நடக்கக்கூடாது என்று பார்ப்பனர்களும் அவர்கட்குப் ''பாத பூஜை'' செய்து கிடந்த உயர்சாதி இந்துக்க ளும் அவர்களைத் தடுத்துத் தாக்கினார்கள். கேரளக் காவல்துறையில் பணியாற்றிய பிச்சு மணி அய்யர் என்ற கொடியோன் தம் உரி மைக்காகப் போராட முனைந்த தாழ்த்தப்பட் டவர்களையும் இத்தாழ்த்தப்பட்டவர்களுக் காகப் போராட வந்த பிற இன மக்களையும் மிருகத்தனமாக அடித்து நொறுக்கிக்கொண் டிருந்தான்.

ஈரோட்டு எரிமலை

இந்த உயர்சாதி ஆணவத்தை ஒடுக்கத் தீக்குழம்பைப் பீறிட்டுக்கொண்டு ''ஈரோட்டு எரிமலை'' கேரளத்திற்குச் சென் றது. ஆதிக்கக்காரர்களும் ஆணவக்காரர்க ளும் வீணர்களும் சூதர்களும் கொடுங்கோ லர்களும் குலைநடுக்கம் கொண்டனர். ஆம்! ஈ.வெ.ரா. அன்று வைக்கம் நகரில் போர்க்க ளத்தில் நின்றுகொண்டு விடுத்த வினாக்க ளுக்கு அவர்களால் அன்று பதில் சொல்ல இயலவில்லை; இன்றைக்கும் அவர் விடுத்த வினாக்களுக்கு ஆதிக்கபுரியினரால் பதில் சொல்ல இயலாது.

''தாழ்த்தப்பட்டவன் இழிதொழில் செய்கின்றான்; எனவே அவன் தாழ்ந்த வன்; தாழ்ந்தவனாகிய அவன் கோவி லுக்குள் நுழையக்கூடாது'' - இப்படி உயர்சாதியினர் சொன்னபோது ''உன் இடதுகை தாழ்ந்த தொழில் செய்கி றதே அதை வெட்டி வீட்டில் வைத்து விட்டா கோவிலுக்குப் போகிறாய்?'' என்ற அன்றைய அவரது குண்டு வீச்சை அவர்கள் தாங்க முடிய வில்லை; ''நல்ல செயல் செய்யும் உன் வலதுகை உயர்ந்தது என்கிறாய்; இழி தொழில் செய்யும் உனது இடதுகை தாழ்ந்தது என்கிறாய்! அப்படியானால் உன் வலதுகை பார்ப்பானுக்கும் இட துகை தாழ்த்தப்பட்டவனுக்குமா பிறந் தன?'' என்ற அவரது வினாக்களை அவர்களால் செரிக்க இயலவில்லை.

வைக்கத்தை உள்ளடக்கிய திருவாங்கூர் நாடு முழுவதும் ஈ.வெ.ரா. உரை என்னும் புயல் வீசிற்று. எனவே திருவாங்கூர் அரசாங் கம் ஈ.வெ.ரா.வுக்கு வாய்ப்பூட்டுச் சட்டம் விதித்தது. பதினைந்து நாட்களுக்கு அவர் திருவாங்கூர் சமஸ்தானத்தின் எப்பகுதியி லும் பேசக்கூடாது என்று ஆணையிட்டது. ஈ.வெ.ரா. பேசினால் வகுப்புகளுக்கு இடையே பகைமை ஏற்படும் என்று அந்த ஆணை சொல்லிற்று.

சநாதன தர்மத்திற்கும் வர்ணாசிரம தர் மத்திற்கும் தன்னைப் படைத்துக்கொண்ட ஆரியப் பார்ப்பன அய்யங்காரின் தமிழ் ஏடா கிய ''சுதேசமித்திரன்'' கூட இந்த ஆணை யைக் கண்டித்து அன்று எழுதியது; ஈ.வெ.ரா. வின் பேச்சு சாதிப் பகைமையை வளர்க்காது என்று அது கூறியது.

''சுதேசமித்திரன்'', 30.4.1924

''திருவாங்கூர் சமஸ்தானத்தில் பதி னைந்து நாட்களுக்குப் பேசக்கூடாது என்று ஈ.வெ.ராமசாமி நாயக்கர் மற்றும் இருவர் மீது திருவாங்கூர் மாவட்ட மாஜிஸ்திரேட் விதித்திருந்த தடை உத்தரவைச் சுட்டிக்காட் டிச் ''சுதேசமித்திரன்''*30.4.1924* அன்று எழுதி யதாவது:

தமிழர் தலைவர்
தந்தை பெரியார்
பிறந்தநாள் 'விடுதலை'
மலருக்கு வாழ்த்துக்கள்

கங்கா தேவி சிட்பண்ட் (பி) லிட்

தேவி சிட் பண்ட்

49, கான்சா மேட்டுத் தெரு,
(முதல் மாடி), மதுரை - 1

ரூ. 10,000 முதல் 1 லட்சம் வரை
ஏலச் சீட்டுக்களை நடத்தும் நிறுவனங்கள்

''அதிகாரிகளால் பிரசாரத்திற்கு வாய்ப் பூட்டுப் போடப்பட்டாலும் அவர்களால் உணர்த்தப்பட்ட உண்மைக்கு வாய்ப்பூட்டுப் போட எவராலும் முடியாது. திரு. இராம சாமி நாயக்கரும் மற்றவரும் பேசிய பேச்சுக் கள் வகுப்புகளுக்கிடையே பகையை உண் டாக்குமென்றும் பொது அமைதிக்கு ஊறுவி ளைக்கும் என்றும் அதிகாரிகள் மீது வெறிப் புக்கொள்ளச் செய்யும் என்றும் இந்தத் தடை உத்தரவுகளைப் பிறப்பித்ததாகத் தோன்று கின்றது.

தாம் எழுதியதை அவர் (ஈ.வெ.ரா.) மீண்டும் குறிப்பிட்டிருக்கிறார். ஆனால் உண் மையில் இத்தகைய தீய விளைவுகள் அவர் பேச்சினால் ஏற்படும் என்பதற்கு ஆதாரம் உண்டா? கடந்த சில நாட்களாகவே அவர் கள் வைக்கத்தில் சொற்பொழிவு ஆற்றிக் கொண்டு வருகிறார்கள். பகை உணர்ச்சி யைத் தூண்டும் எந்தச் சொல்லையும் அவர் பயன்படுத்தவில்லை. அத்தகைய விளைவு களை ஏற்படுத்த வல்லனவும் அல்ல அச் சொற்கள். தீண்டப்படாதவர்களின் சட்ட அடிப்படையிலான உரிமைகளைப்பற்றியே அவர் பேசினார். அவைகளை மேல்சாதியார் அளிக்கவேண்டும் என்றும் கூறினார்'' என்ப னவே ''சுதேசமித்திரன்'' எழுதிய கருத்துக் கள். ஆம்! இவையே ''சுதேசமித்திரன்'' ஏடு - வைக்கம் வீரர் பெரியாருக்கு அளித்த நற் சான்று!

தேசத் துரோகிகளும் - தேச பக்தர் களும்

இவ்வாறு தாழ்த்தப்பட்டவர்களின் உரி மைக்குப் போராடிய ஈ.வெ.ரா.வுக்கும் அவ ருடன் பணியாற்றியவர்களுக்கும் தாழ்த்தப் பட்டவர்களைக் கொடுமைப்படுத்திய மேல் தட்டுக்காரர்கள், கொடுத்த பெயர் ''தேசத்து ரோகிகள்''! ''வகுப்புவாதிகள்!'' தாழ்த்தப் பட்டவர்கள் தமிழ்நாட்டில் எல்லாத் தெருக்க ளிலும் நடமாட உரிமை பெற்றுத் தந்த நீதிக் கட்சி இவர்தம் பார்வையில் ''தேசத்துரோகக் கட்சி''. இந்தியாவில் தம் தெருக்களிலும் கோவில்களிலும் தாழ்த்தப்பட்டவர்களை யும் பிற்படுத்தப்பட்டவர்களையும் நுழைய விடாமல் இறுகுப்பிடி போட்டுக்கொண்டு தென்னாப்பிரிக்காவில் கறுப்பர்களுக்காகப் போராடச் சென்றவர்களுக்கு இந்நாட்டுப் பார்ப்பன வரலாற்றாசிரியர்களும் பத்திரிகை களும் அவர்தம் அடிமைகளும் அளிக்கும் பெயர் ''தேசபக்தர்கள்''!

புத்துலக அநுமர்கள்

இந்த வரலாறுகளையெல்லாம் ஆதாரங் களுடன் - எழுத்துச் சான்றுகளுடன் - வர லாற்று ஏடுகளிலிருந்தும் ஆவணங்களிலிருந் தும் எடுத்துத்தந்தால் - எடுத்து எழுதினால் - எடுத்துப் பேசினால் புத்துலக அநுமர்களாகச் செயல்படுவோர் ''சரித்திரம் ஆட்டம் காண் கிறது'' என முகாரி பாடுகிறார்கள். சரித்தி ரத்தை எழுத்தெண்ணிப் படித்த மேதையல் லரோ இவர்கள்!

தமிழா, மோசம் போகாதே!

தமிழா! இது கடந்தகால வரலாறு என்று எண்ணி, விட்டுவிட்டு, மோசம் போகாதே! 1921 ஆம் ஆண்டு ''மாடல்'' தேசபக்தப் போர் வையைப் போர்த்திக்கொண்டு அத்வானிக ளும் கோவிந்தாச்சாரிகளும் தமிழ்ப் பூங்கா வில் விரியன் பாம்புகளாக நுழைந்துகொண் டருக்கிறார்கள்! இவர்களுக்குப் பச்சைத் தமி ழர்கள் சிலர் சிவப்புக் கம்பளம் விரித்துக் கொண்டிருக்கிறார்கள்! எச்சரிக்கையாயிரு! நாள்தோறும், மணிதோறும், மணித்துளிதோ றும் எச்சரிக்கையாக இருத்தல்வேண்டும் என்று மற்றவர்களுக்கும் அறிவித்துக் கொண்டே இரு!



நாடார்கள் கவனத்துக்கு...

திருமணங்களுக்குப் பார்ப்பனர்களைப் புரோகிதம் பார்க்க அழைப்பவர்கள் பொறையாறு நாடார் மாநாட்டில் நாடார்கள் சுயமரியாதைத் திருமணங்களையே மேற்கொள்ளவேண்டும் என்ற தீர்மானத்திற்கு முரணாக நடப்பவர்களே.

— முனைவர் பு. இராசதுரை ''சுயமரியாதை இயக்கத்துக்கு நாடார்கள் ஆற்றிய தொண்டு'' நூல் பக்கம், 270.

With the Best Compliments from



M.P.V. டெக்ஸ்டைல்ஸ்

காம்ப்ளக்ஸ், அனைத்து ஜவுளிகள் கிடைக்குமிடம்

M.P.V. டெக்ஸ்டைல்ஸ்

M.P. வெங்கடாசலம், திராவிடர் கழகம்

M.P.V. பாக்கிய நிலையம்

தந்தை பெரியார் நகர்
தர்மபுரி மாவட்டம், அரூர் 636 903



பொதிகை மலையை அடுத்த காடு. அதன் பெயர் பொங்கக் காடு. அந்தக் காட்டில் முகிலி என்ற யானை, அரசு செலுத்தி வந்தது. அந்தக் காட்டி லிருந்த விலங்கு, பறவைகளுக்கெல் லாம் அந்த அரசனிடம் மதிப்பு மிகுதி.

அந்தக் காட்டில் ஒரு பெரிய ஓடை, அந்த ஓடையை அடுத்தாற்போல் புல் அடர்ந்து 'மெத்' தென்றிருக்கும் ஓர் அகன்ற வெளி. அந்த வெளியின் நடுவிலோர் பாறையும், நிழல் தருகின்ற வாகை மரமும் இருக்கும். அங்குதான் முகிலியரசன் நாடோறும் வந்த அமர்ந்து விலங்கு, பறவைகள் சொல் லும் வழக்குளைக் கேட்டுத் தீர்ப்பு கூறுவான். இது இப்படியிருக்க, ஒரு நாள் காலையில் கடப்பாறை மூக்கன் என்னும் காக்கை இறைதேடப் பொதிகை மலைச்சாரலில் இருந்த வீட் டின் இறைப்பில் குந்தியிருந்தது. அவ் வீட்டின் கூடத்தில் ஒரு தமிழ்ப் புலவர் மற்றொருவரிடம் பேசிக்கொண்டிருக் கையில்,

''கல்மனப் பார்ப்பார் தங்களைப்
படைத்துக்
காகத்தை என் செயப் படைத்தாய்''

என்ற அடியைச் சொன்னார். அதைச் சொன்னார் என்றால் எதற்காகச் சொன் னார் என்பதல்லவா கேள்வி. காக் கைக்கு மிக்க வருத்தம் வந்துவிட்டது. அந்தப் புலவரின் விரிவுரையைக் கேட் டபோது யாரையோ பற்றிய பேச்சுக்கி டையில் நம் இனத்தை இழுத்துப் போட்டுப் பேசுவதாவது!





மணியம் இன்ஜினியரிங்

புலிவலம் - 610 109. திருவாரூர்

முதன் முதலில் தென்னை மட்டையிலிருந்து நார் பிரித்தெடுக்கும் 'மணியம்' தானியங்கி இயந்திரங்களையும் மற்றும் சுருள் நார் தயாரிக்கும் இயந்திரங்களையும் உருவாக்கி தென்னகத்தில் அறிமுகப்படுத்தி சுமார் 25 வருடங்களுக்கு மேலாக இயங்கிவரும் முன்னோடி நிறுவனம் ''மணியம் இன்ஜினியரிங்''. தரமான இயந்திரங்களை குறைந்த விலையில் சிறப்பான முறையில் வழங்கி வருவது எங்களது ''மணியம் இன்ஜினியரிங்'' நிறுவனம். இதுவரை எங்களது நிறுவனம் தமிழகத்தில் சுமார் 500 இயந்திரங்களுக்கு மேலாக விற்பனை செய்துள்ளது. இது தவிர பிற மாநிலங்களிலும் சுமார் 100 இயந்திரங்களையும் சப்ளை செய்துள்ளோம். தொழில் முனைவோர்கள் நல்ல தரமான கயர் இயந்திரங்களுக்கு தொடர்பு கொள்ள:



Curling



De-Fibring

எஸ்.எஸ். மணியம்,

நிர்வாக பங்குதாரர்,

நாகை-காயிதே மில்லத் மாவட்ட தி.க. தலைவர்

புலிவலம் - 610 109. திருவாரூர்

தொலைபேசி: வீடு: 2468; பாக்டரி: 3208; அலுவலகம்: 3148

சுந்தரமுத்து கயர் தொழிற்சாலை,

புலிவலம் - 610 109. திருவாரூர்

திரி மெத்தை, தலையணை போன்ற ரப்பரைஸ்டு கயர் பொருட்கள் தயாரிக்க தேவையான தரமான சுருள் கயிறு (CURLED COIR) தயாரிப்பாளர்கள்:

காக்கை மிக்க எரிச்சலோடு இறை கூடத் தேடாமல் தன் அரசனிடம் ஓடியது.

அரசே நான் இந்தக் காட்டுக்குடி. என் பெயர் கடப்பாறை மூக்கன். நான் என் தனிமுறையிலும், என் இனத்தின் தலைவன் என்ற முறையிலும் வழக்கிடுகிறேன்.

எனக்கும் என இனத்திற்கும் ஏற்பட்டதாக நான் எண்ணும் மானக் குறைவுக்காக எதிரியை ஒறுக்கவேண்டும் என விண்ணப்பித்துக் கொள்ளுகிறேன்.

யானை-வழக்கு இன்னதென்றே கூறவில்லை உம் படபடப்பில்! அமைதியாகக் கூறும்.

கடப்பாறை - மன்னிக்கவும். பொதிகைமலைச் சாரலில் ஒரு வீட்டில் ஒரு புலவர்க்கும் மற்றொருவர்க்கும் பேச்சு நடந்தது. பேச்சுக்கிடையில்,

கல்மனப் பார்ப்பார் தங்களைப்
படைத்துக்
காகத்தை என் செயப் படைத்தாய்

என்று புலவர் சொன்னார். என்னையும் என் இனத்தையும் குறைவு படுத்தினார். எங்கள் ஒழுக்கம் தாழ்ந்தது என்பது அவர் சொற்களில் ஒலிக்கிறது. யானை-பார்ப்பனரின் செயல் பண்புகளும் உங்கள் இனத்தின் செயல் பண்புகளும் ஒரே தன்மை வாய்ந்தவை என்று கூறியுள்ளார் புலவர்.

கடப்பாறை-ஆம் அரசே. எம் செயல் பண்புகள் தாழ்ந்தவைகளா? நாங்கள் காலையில் குளிக்கிறோம். உண்ணும்போது உறவினை அழைக்கிறோம். இதனால் உலகுக்கு நாங்கள் நல்ல வழிகாட்டிகள். மேலும் ஊரைத் தூய்மை செய்கிறோம். ஆதலினால் பிறர் நலம் பேணும் அறவோர் இல்லையா நாங்கள்?

யானை-நீங்கள் அறவோர். அதுபற்றிப் பேச்சில்லை. இருக்கட்டும். நாளை தீர்ப்புச் சொல்கிறேன். களைப்புத் தீர நீர் சற்றே உட்கார்ந்திருந்து போம். இன்று என்ன உணவு உண்டீர்?

கடப்பாறை-வழியில் ஒரு சிறியவன் அப்பம் வாங்கிக்கொண்டு போனான். அதை அப்பிக்கொண்டு போய் ஒரு மரக்கிளையில் வைத்து உண்டது தவிர வெறும் பட்டினி கிடக்கிறேன்.

காக்கை போய்விட்டது. மறுநாள் காலையிலேயே முகிலி அரசனின் தீர்ப்பைக் கேட்க வந்துவிட்டது. முகிலி அரசன்-என்ன காக்கையாரே காலையில் வந்துவிட்டீர். உணவுண்டீரா?

காக்கை-ஆம் அய்யா. சிட்டுக்குருவி ஒன்று, தன் இரு குஞ்சுகளையும் விட்டு நகர்ந்தது. நல்லவேளை என்று அவ்விரண்டு குஞ்சுகளையும் கொன்று தின்றுவிட்டேன். இனித்தான் தக்க இரைதேட வேண்டும். தீர்ப்புக் கூறுங்கள்.

யானை-காக்கையாரே, உன் வழக்குப் பற்றிய தீர்ப்பை நாளைக்குத்தான் கூறமுடியும். போய் வாரும்.

காக்கை போய் மறுநாள் காலை யானையாரிடம் வந்து தீர்ப்புக்குக் காத்திருந்தது.

யானை-என்ன காக்கையாரே உண்டீரோ?

காக்கை-ஆம் அரசே. அங்கு மிகுதியாகச் சோறு கறி கண்டேன். என் இனத்தையெல்லாம் அழைத்தேன். அனைவரும் உண்டோம்.

யானை-உங்கள் சோறும் உங்கள் கறியுமா?

காக்கை-இல்லை இல்லை திருமண வீட்டார் எறிந்தவை.

முகிலி என்னும் அரச யானை-தன் தீர்ப்பைச் சொல்லுகிறது:

காக்கையாரே,



தமிழ்நாடு அரசு அங்கீகாரம் பெற்ற

கங்கை மருத்துவத்
தொழில் நுட்ப கல்வி நிலையம்

கங்கை மருத்துவ மனைகள், நெய்வேலி - 607 802.

தமிழ்நாடு அரசின் அங்கீகார அரசு ஆணை:

G.O. Ms. No. 155 Dt: 10-2-1993 & G.O. M.s. No. 586 Dt: 7-5-1993

நிறுவனர்: டாக்டர் வெ. குழந்தைவேலு, MD (Gen. Med)., MD (Tb & Chest. Dis)., Phd., DLitt., FCCP., Ex.M.P.,

ஓராண்டு அரசு மருத்துவ டிப்ளமோ வகுப்புகளுக்கு

மாணவர் சேர்க்கை

தமிழ்நாடு அரசு நடத்திடும் தேர்விற்கான

1. **MEDICAL LABORATORY TECHNICIAN GRADE-1 COURSE**
   20 Seats *(கிரேடு-1 லேப் டெக்னீஷியன் கோர்ஸ்)*
2. **CERTIFIED COURSE IN RADIO GRAPHIC ASSISTANT**
   (CRA) - 20 Seats *(எக்ஸ்-ரே டெக்னீஷியன் கோர்ஸ்))*

வகுப்புகளுக்கு மாணவர் சேர்க்கை

கல்வித் தகுதி: Plus Two Pass with Science Subjects

சிறப்பு அம்சங்கள்

- பெரிய, கங்கை மருத்துவ மனையோடு கல்லூரிக்கான சிறப்பு லேப்கள், எக்ஸ்-ரே, ஈ.சி.ஜி. நிலையங்கள் இணைந்த கல்வி நிறுவனம்.
- மருத்துவ பேராசிரியர்கள், டாக்டர்கள், சிறப்பு டெக்னீஷியன்கள் பங்கேற்று நடத்திடும் தமிழ்நாடு அரசு பாட திட்டங்கள்.
- அரசு மருத்துவக் கல்லூரிகளில் கூடுதலான பயிற்சிகள்.
- பயிற்சி முடிந்ததும் அரசு, பொதுத்துறை, மற்றும் தனியார் துறைகளில் உடனடி வேலை வாய்ப்புகள்.

நேரடி தேர்வும், மாணவர் சேர்க்கையும் (Admission) நடைபெறுகிறது.

ஆகஸ்ட்டில் வகுப்புகள் ஆரம்பம்

PRINCIPAL

நீரும் உம் இனமும் அறவோர் என்கின்றீர் இருக்கலாம். ஆயினும், நீர் ஒருபிள்ளை ஏமாந்தபோது அப்பத்தைப் பிடுங்கியதாகக் கூறினீர். சிட்டுக்குஞ்சுகளைத் தின்றதாகக் கூறினீர். ஊரார் வீட்டுச் சோறு கறிக்கு உறவினரை அழைத்ததாகக் கூறினீர் இதனால் தெரிவதென்ன எனில்,

நீங்கள் ஏமாந்தவர்கள் துடையில் கயிறு திரிப்பவராகவும், எளியோரை வஞ்சிப்பவராகவும், ஊர்ச்சொத்தை உண்ண ஒற்றுமையாய்க் காலையில் எழுந்து வருபவராகவும், இருக்கின்றீர். உம் இனமும் இவ்வாறு. அறவோர் என்னினும் மறவோர் ஆதலின் தமிழ்ப் புலவர் சாற்றியது தக்கதே உம் வழக்கை ஏற்றுக்கொள்ள முடியாது.

புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் 'குயில்' 15.7.1948

மூவகைச் சுரண்டல்கள்!

சுரண்டல் தடுப்பு என்றால் என்ன? யார் சுரண்டுகிறார்கள்? யார் தடுக்க வேண்டியவர்கள்? இவைகளைச் சிந்திக்கவேண்டும். இன்றைய தினம் நம்முடைய நாடும், சமுதாயமும், ஆரியத்தினால், அரசியலின் பெயரால், கலைகளின் பெயரால், சாமியின் பெயரால், கலைகளின் பெயரால் கல்வியின் பெயரால் சமுதாயத்தின் பெயரால், மதத்தின் பெயரால், கடவுள்களின் பெயரால் சுரண்டப்படுகிறது. மேலே சொன்ன ஒன்றுகூட நமக்குச் சொந்தமாகவோ, நமக்குப் பலன் உள்ளதாகவோ இல்லை. எல்லாம் அந்நியனுக்குப் பயன் உண்டாகும்படியான அளவுக்குப் பயன்பட்டுவிட்டது.

அரசியலிலே நாம் சுரண்டப்பட்டு விட்டோம். நம்முடைய நாடு அந்நியன் ஆதிக்கத்தில் இன்றைய தினம் இருக்கிறது. மதத்திலே நாம் சுரண்டப்பட்டு விட்டோம். நம்முடைய மதம் என்று நாம் சொல்லுவது அந்நியனுடைய உயர்வுக்கு, நம்முடைய இழிவுக்கு, நம்முடைய கடவுள்கள் என்று நாம் சொல்லுவது அந்நியனை வளர்ப்பதற்கு ஏற்ற கடவுள்கள். அவைகள் நம்மை அடக்கி ஒடுக்க ஏற்படுத்தப்பட்டவை. இத்தனைத் துறைகளில், இவ்வளவு தொல்லைகளில் இருந்து வருகிற சுரண்டலை ஒழிக்கவேண்டும்.

-தந்தை பெரியார், 'விடுதலை' 18.4.1951)

மூவகைக் கொள்கைகள்!

"மூன்று கொள்கைகளைக் கொண்டது திராவிடர் கழகம். ஒன்று, மனித சமுதாயத்தில் மனிதன் மானம் உள்ளவனாக, அறிவு உள்ளவனாக, சமத்துவம் உடையவனாக இருக்கவேண்டும் என்பது.

அடுத்தாற்போல இந்த திராவிட நாட்டிற்கு சரித்திர காலமுதல் இருந்து வருகிற பெருமைகள் இன்றைய தினம் அழிந்து நாட்டுமக்கள் அடிமைகளாக இருப்பதால் நாடு விடுதலை பெற்று மக்கள் சுதந்திரம் அடைய வேண்டும் என்பது.

அடுத்தது வகுப்புரிமை. சாதியும் வகுப்பும் இருக்கிறவரையில் நம்முடைய ஜாதி விகிதாசாரம் நமக்கு உரிமை கிடைப்பதற்கும் போராட வேண்டும் என்பதாகும்".

-தந்தை பெரியார்

('விடுதலை' 17.4.1951)

★ தரத்திற்கு ★ நியாய விலைக்கு ★ சரியான அளவிற்கு

திருமண விழாக்களா!

சிறப்பு விருந்துகளா!

இல்லத்து நிகழ்ச்சிகளா!

நாடிடுவீர்.....

To Serve at Your Door

Ph: 77422

VENNILA'S

A SELF SERVICE DEPARTMENTAL STORES
12, South Mada Street, Mylapore, Madras-600 004.
Sunday Holiday [9.00 to 1.00; 3.30 to 9.00]

நிறுவனர் அறுபத்தோராம் ஆண்டு
நிறுவனம் 9 ஆம் ஆண்டு விழா காணும்
இந்நாளில் எங்களின்
வாடிக்கையாளர்கள் வளம்பெற
வாழ்த்துக்கள்!

மார்டின் லூதர் பெரியார்

(சென்னை இராயபுரம் இராபின்சன் பூங்காவில் நடைபெற்ற தந்தை பெரியார் அவர்களின் 73ஆவது ஆண்டு பிறந்தநாள் விழாவில் தலைவர்கள் ஆற்றிய உரையிலிருந்து... 'விடுதலை' 18.9.1950)

எஸ். ராமனாதன்

"உலக அறிவு இயக்கப் பிரசாரத் தலைவர்களில் மிகச் சிறந்தவர் நம் பெரியார்தான். அவர் காங்கிரசில் இருக்கும்போதே, காங்கிரஸ்காரர்கள் வெள்ளையனுடைய ஏகாதிபத்தியத்தை எதிர்க்க முற்பட்டபோது பெரியார் அவர்கள் அதைவிட முக்கியமாக காங்கிரசில் தேசீயம் என்ற பெயரால் ஒரு கூட்டம் மக்களை ஏய்த்து, இந்நாட்டு மக்களை முட்டாள்களாக்கி இநநாட்டின் சர்வ சுதந்திரங்களையும் தாங்களே அனுபவித்து வருவதை எதிர்த்து, அதன் காரணமாக காங்கிரசை விட்டு வெளியே வந்தார்.

"அவர் எந்தக் கொள்கையை 30 ஆண்டுகளுக்கு முன் கண்டித்தாரோ அதே கொள்கையை இன்று எல்லா மக்களும் சரி என்று கண்டிக்கும் அளவுக்கு நிலைமை ஏற்பட்டு விட்டது. பெரியார் என்றாலே உழைப்பவர் என்ற பொருளுக்கு ஏற்ப உழைத்துக் காட்டியவர். அவருடைய முற்போக்குக் கொள்கைகள் உலக மக்களால் ஒத்துக்கொள்ளக் கூடியவை. அவருடைய பிரசாரங்கள் உலக அறிவியக்கத் தலைவர்களால் போற்றப்படுபவை. அவர் இந்நாட்டு மக்களுக்கு அறிவு இயக்கப் பிரசாரத்தை முதன்முதலில் எல்லோரும் புரியும்படி பிரசாரம் செய்து காட்டியவர்; காட்டி வருபவர். கொள்கைகளில் பிடிவாதம் காட்டி, தான் சொன்னதை நிலைநாட்டுபவர்".

'சண்டே அப்சர்வர்' ஆசிரியர் தோழர் பி. பாலசுப்ரமண்யம்

"பெரியார் அவர்கள் திராவிட நாட்டு மக்களைத் தட்டியெழுப்பி திராவிடர்

என்ற உணர்ச்சியை ஊட்டியவர். இந் நாட்டில் பார்ப்பனர்களின் ஏகபோக சர்வாதிகாரத்தன்மையை மக்களிடம் பச்சையாக பாமரரும் புரியுமாறு எடுத்துக் கூறியவர் பெரியார் ஒருவர்தான். அதன் காரணமாக அவர் எவ்வளவோ துன்பங்களுக்கு ஆளாகினார்.

பெரியார் அவர்கள் திராவிட நாட்டின் தலைவர். அவர் ஒருவருக்குத்தான் திராவிடத்தின் இறுதி விடுதலைப்போரை நடத்தி வெற்றிகாணும் சக்தி இருக்கிறது. அவரின் தலைமையின்கீழ்தான் திராவிட மக்கள் ஒன்றுதிரண்டு திராவிடத்தை சுரண்டி கொழுத்துவரும் பார்ப்பனீய எதேச்சதிகாரத்தை அழிக்க முடியும். எல்லா திராவிடர்களும் அவர் தலைமையின்கீழ் ஒன்று திரளவேண்டும்''.

சாமி சிதம்பரனார்

''பெரியார் ஒரு சீர்திருத்தத் தலைவர். சீர்திருத்தவாதிக்கு என்ன என்ன குணங்கள் இருக்கவேண்டும் என்று நாம் சரித்திரத்தின் வாயிலாகத் தெரிந்து கொண்டுள்ளோமோ, அவையனைத்தும் பெரியார் பெற்றுள்ளார்.

எப்படி ஜெர்மனியில் ஒரு மார்டின் லூதர் சீர்திருத்தக் கருத்துக்களைப் பரப்பி வந்தாரோ அதுபோல் இன்று பெரியார் அவர்கள் தமிழகத்தில் சீர்திருத்தக் கருத்துக்களை பரப்பி வருகிறார்கள். வள்ளுவர் ஒரு தலைவனுக்கு என்ன குணங்கள் இருக்க வேண்டும் என்று கூறினாரோ அதே குணங்களைப் பெற்றிருக்கிறார்.

ராமலிங்க சுவாமிகள் மதத்தைப் பற்றி என்ன என்ன கருத்துக்களைக் கொண்டிருந்தாரோ அவைகளைப் பெற்றிருக்கிறார் நமது பெரியார். புத்தர் எந்தக் கருத்துக்களை மக்களிடை பரப்பி வந்தாரோ, அந்தக் கருத்துக்களை மக்களிடை பரப்பி வருகிறார் நமது பெரியார்''.

பெரியார் ஒரு பிறவி சீர்திருத்தவாதி; சீர்திருத்தவாதிக்கு இருக்க வேண்டிய கொள்கையில் பிடிவாதம் காண்பித்தல் என்னும் உயரிய கொள்கை பெரியாரிடம் உள்ளது. எத்தகைய எதிர்ப்பு இருப்பினும் சளைக்காமல் மக்களிடம் எடுத்துக்காட்டி, கடைசியில் தன் கொள்கையில் வெற்றி காணுபவர் நமது பெரியார். பெரியார் எதிர்ப்பிலே வளர்ந்தவர்; சமீபத்தில் நடந்த திருமண நிகழ்ச்சியில் அவருக்கேற்பட்ட எதிர்ப்பை சமாளித்த தன்மை எதிர்கால சரித்திரத்தில் அவரை ஒரு பெரும் சீர்திருத்தத் தலைவராக்கி விட்டது''.

பார்ப்பனர்கள்பற்றி திரு.வி.க.

எங்களை விடுத்துத் தனியே உணவு கொள்ளச் சொல்லும் பழக்கம் எம்.கே. ஆச்சாரியாரிடத்தும் இருந்தது... சிறையில்கூடப் பார்ப்பனர்கள் சமையல் செய்யப் பார்ப்பனர்களை நியமித்துக் கொண்டனர் தங்களுக்கு. இதுபோலவே ஆரணி சுப்பிரமணிய அய்யர் என்பவரைப்பற்றியும் திரு.வி.க. குறிப்பிடும் செய்தி இது.

''ஆரணி சுப்பிரமணிய சாஸ்திரியார் வடஆர்க்காடு ஜில்லா காங்கிரஸ் தலைவராக இருந்தவர். என் உயிர்த் தோழர்களில் குறிப்பிடத்தக்கவர். அந்நாளில் யான் வேலூர் போதரும் போதெல்லாம் எனக்குச் சாப்பாடு வசதி பெரிதும் அவரே செய்வார். ஆனால் அவர் தன்னுடன் அமர்ந்து சாப்பிடுவதில்லை''

(நூல்: ''திரு.வி.க. வாழ்க்கைக் குறிப்புகள்)

பெரியார் பிலாசபி

எ.ஜி. கஸ்தூரி ரெங்கன்



''வெறும் கூலி, வயிற்றுப்பாடு என்கிற ஒரு வட்டத்திலிருந்து மாறி, உரிமைப் பிரச்சினைகள், கல்விப் பிரச்சினைகள், வேலை வாய்ப்புப் பிரச்சினைகள், ஆண் - பெண் சமத்துவச் சிந்தனை, பிறவியில் உயர்வு-தாழ்வு என்கிற வருணாசிரமச் சிக்கல்கள் இவற்றிலும் சிந்தனைகள் கிளர்ந்து எழும் காலகட்டத்தில், தந்தை பெரியார் பிலாசஃபியைத் தாங்கி நிற்கும் திராவிடர் கழகம் கொழு கொம்பாக நின்றுதானே தீரும்''.

நாகை காயிதே மில்லத் மாவட்ட திராவிடர் விவசாய தொழிலாளர் சங்கத்தின் செயலாளர் ஏ.ஜி.கஸ்தூரிரெங்கன் கூறுகிறார்.

முன்பு ஒரு கட்டத்தில் இது கம்யூனிஸ்டுகள் பகுதி-இங்கே காற்றுக்கூட நுழையமுடியாது என்று குறிப்பிட்ட பகுதிகளைச் சுட்டிக்காட்டும் காலம் எல்லாம் மலையேறிவிட்டது. எல்லாக் கட்சிகளும், எல்லாப் பகுதிகளிலும் என்கிற நிலைமை உருவாகிவிட்டது.

திராவிடர் விவசாயப் பகுதிகளிலும் பல்வேறு கால கட்டங்களில் ஆட்சிப் பொறுப்புக்கு வந்த அரசியல் கட்சிகள் அதிகாரபலம், ஆட்சி செல்வாக்கு முதலியவற்றையும் பயன்படுத்தி அசைக்கப் பார்த்தன; ஊடுருவப் பார்த்தன. தற்காலிக வெற்றிகள் கிடைத்ததுபோலத் தோற்றம்கூடத் தென்பட்டன. ஆனால் அது நிலைக்க முடியவில்லை. கழகம் விவசாயிகளின் பகுதிகளில் மேலும் வேர் ஊன்றிவருகிறது. அதற்குக் காரணம் தந்தை பெரியார் என்கிற 'பிலாசஃபி' (Philosophy) எல்லோரையும் ஆளுமைப்படுத்தும் உயர்ந்த நிலை என்று குறிப்பிடுகிறார் தோழர் ஏ.ஜி.கே.

வெறும் கூலிப் போராட்டம்தான் வாழ்க்கை என்கிற கம்யூனிஸ்டுகளின் உணர்வுகள் நாளும் நலிந்து வருகின்றன. தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்த ஒருவரை குடிஅரசுத் தலைவராக்கு என்று கழகம் கொடுத்த குரல் பெரும்பாலும் தாழ்த்தப்பட்ட மக்களாக இருக்கும் விவசாயிகளிடையே ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்தியுள்ளது. சமூக அமைப்பில் இருந்துவரும் இந்தக் கண்ணுக்குத் தெரிந்த ஏற்ற தாழ்வுகளைக் கண்டுகொள்ளாமல் கற்பனைவாசம் பண்ணும் அரசியல் கட்சிகள் மீது அவர்களுக்கு அதீதமான வெறுப்பு ஏற்பட்டு வருகிறது என்றும் திராவிடர் விவசாய தொழிலாளர் சங்கத்தின் மாவட்ட செயலாளர் தோழர் கஸ்தூரிரெங்கன் கூறுகிறார்.

ஒரு எடுத்துக்காட்டை அவர் கூறினார்: கடந்த 8.7.1992 அன்று திருவாரூர் வட்டாட்சியர் முன் விவசாய ஊதிய நிர்ணயம்பற்றி மனு கொடுக்கப்பட்டது. திராவிடர் கழகம், தி.மு.க., ஜனதா தளம், இந்தியக் கம்யூனிஸ்டுக் கட்சி, இந்தியக் கம்யூனிஸட்டுக் கட்சி(மார்க்ஸிஸ்ட்) முதலிய கட்சிகள் ஊர்வலமாக சென்றன.

''ஆண்-பெண் பேதம் பார்க்காதே - சமஊதியம் நிர்ணயம் செய்!'' என்ற முழக்கம் திராவிடர் கழக விவசாயிகளின் பகுதிகளில் இருந்து மட்டுமே வந்தது. இது மற்ற அமைப்பு விவசாயிகள் பக்கமும் பாதிப்பை ஏற்படுத்தியது என்றே கூறவேண்டும் என்று சொன்னார்.

வெறும் கூலி, வயிற்றுப்பாடு என்கிற ஒரு வட்டத்திலிருந்து மாறி உரிமைப் பிரச்சினைகள், கல்விப் பிரச்சினைகள், வேலை வாய்ப்புப் பிரச்சினைகள், ஆண்-பெண் சமத்துவச் சிந்தனைகள், பிறவியில் உயர்வு-தாழ்வு என்கிற வருணாசிரமச் சிக்கல்கள் இவற்றிலும் சிந்தனைகள் கிளர்ந்தெழும் காலகட்டத்தில் தந்தை பெரியார் பிலாசஃபியைத் தாங்கி நிற்கும் திராவிடர் கழகம் கொழுகொம்பாக நின்றுதானே தீரும். அந்த நிலை நாளும் வளர்ந்து வருகிறது என்று தெம்பான குரலில் கூறுகிறார் தோழர் கஸ்தூரிரெங்கன்.

''வெறும் கூலி, வயிற்றுப்பாடு என்கிற ஒரு வட்டத்திலிருந்து மாறி, உரிமைப் பிரச்சினைகள், கல்விப் பிரச்சினைகள், வேலை வாய்ப்புப் பிரச்சினைகள், ஆண்-பெண் சமத்துவச் சிந்தனை, பிறவியில் உயர்வு-தாழ்வு என்கிற வருணாசிரமச் சிக்கல்கள் இவற்றிலும் சிந்தனைகள் கிளர்ந்து எழும் காலகட்டத்தில், தந்தை பெரியார் பிலாசஃபியைத் தாங்கி நிற்கும் திராவிடர் கழகம் கொழுகொம்பாக நின்றுதானே தீரும்''.

பெரியாருக்கு முன்பு...

தென்னாடு உடைய சிவனே போற்றி!
எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி!!
பெற்றதாய் தனை மக மறந்தாலும்
பிள்ளையைப் பெறுந்தாய் மறந்தாலும்
உற்ற தேகத்தை உயிர் மறந்தாலும்
உயிரை மேவிய உடல் மறந்தாலும்
கற்ற நெஞ்சகங் கலை மறந்தாலும்
கண்கள் நின்றிமைப் பது மறந்தாலும்
நற்றவத்தவர் உள்ளிருந் தோங்கும்
நமச்சிவாயத்தை நான் மறவேனே!

பெரியாருக்குப் பின்பு...

தென்னாடு உடைய பெரியார் போற்றி!
எந்நாட்டவர்க்கும் தலைவா போற்றி!
பெற்றதாய் தனைமக மறந்தாலும்
பிள்ளையைப் பெறுந்தாய் மறந்தாலும்
உற்ற தேகத்தை உயிர் மறந்தாலும்
உயிரை மேவிய உடல் மறந்தாலும்
கற்ற நெஞ்சகங் கலை மறந்தாலும்
கண்கள் நின்றிமைப்பது மறந்தாலும்
நற்றவத்தவர் உள்ளிருந் தோங்கும்
நம் **பெரியாரை** நான் மறவேனே!

தகவல்: வ.வேம்பையன், கல்பாக்கம்.

பெஞ்சில் உட்கார வைத்தார்கள்!

மண்டல்குழுப் பரிந்துரைகளை அமுல் படுத்தக்கோரி டெல்லி பாராளுமன்ற முன் மறியல் போராட்டத்தில் தோழர் உத்திராபதி கைது (7-10-1986)

திருவாரூரை அடுத்த காவாலகுடி வட்டாரம் கழக விவசாயிகளின் பாடி வீடு! அங்கேயுள்ள விடயபுரத்தில்தான் தந்தை பெரியார் அவர்கள் உலக மானிடத்துக்குக் கடவுள் மறுப்பு வாசகத் தத்துவத்தை 1967-ல் வழங்கினார்கள்.

அந்தப் பகுதியிலே கண்கொடுத்தவனிதம் என்ற கிராமம் கழகத்திற்குக் கண்மணியான கிராமம். அந்த ஊரைச் சேர்ந்த 67 வயது நிறைந்த அ.உத்திராபதி விடயபுரம் ஏரியா தலைவராக இருந்து இயக்கப்பணி ஆற்றி வருகிறவர்.

முதல் வகுப்பிலேயே பள்ளிப் படிப்புக்கு முற்றுப்புள்ளி வைக்க நேர்ந்த அந்த சோகக் கதையைச் சொல்லுகிறார்.

கீற்றுக் கொட்டகையில் ஒரு பள்ளிக்கூடம். வாத்தியார் பார்ப்பனர். சாயத் துண்டை இடுப்பில் கட்டிக்கொண்டு குடுமித் தலையுடன் நான்- கடைசி மூலையில் எனக்கு இடம். 'ஏய் ஒட்டா!'- இப்படித்தான் அந்த வாத்தியார் கூப்பிடுவார். சிலேட்டைத் தூக்கிக் காட்டுவேன். தம் மூக்கில் துணியை வைத்து மூடிக்கொண்டு 'அ' என்று என் சிலேட்டில் எழுதுவார். ஒருமுறை சிலேட்டுத் தவறி வாத்தியார் காலில் விழுந்துவிட்டது. இரத்தம் பீறிட்டது. மற்ற மாணவர்கள் எல்லாம் என்னை அடித்து விரட்டினார்கள். கடைசியில் எனக்கு அபராதம் விதிக்கப்பட்டது. எல்லோர் முன்னிலையிலும் என் அம்மாவையும் அடித்தார்கள். அதை இன்று நினைத்தாலும் என் நெஞ்சம் குமுறுகிறது. அத்தோடு என் படிப்புக்கு முற்றுப்புள்ளி. பிறகு கூலிவேலைதான்.

காவாலகுடியில் ஒரு கோடையில் பெரியார் அய்யா கூட்டம் ஆற்றில்

நடைபெற்றது. பார்ப்பனக் கொடுமை-சாதிக் கொடுமை இவற்றைப்பற்றி எல்லாம் எல்லோருக்கும் புரியும்படிப் பேசினார்கள். என் உள்ளத்தில் நன்கு தைத்தது - இந்தப் பார்ப்பான்களுக்கு இவர்தான் சரியான வேட்டு என்று அப்பொழுதே திடமாக மனதில் பதித்துக்கொண்டேன். பெரியார் கட்சியில் சேர்வது என்று முடிவு செய்துகொண்டேன்.

கண்கொடுத்தவனிதத்தில் நடேச நாடார் என்பவர் கழகத்தில் முக்கியமாக இருந்தார். ஒருநாள் கட்சிக்காரர்களின் கமிட்டிக் கூட்டம் நடைபெற்றது. அக்கூட்டத்திற்கு மாவட்டத் தலைவர் நீடாமங்கலம் அ.ஆறுமுகம், திருவாரூர் வி.எஸ்.பி.யாகூப், முத்துக்கிருஷ்ணன், சிங்கராயர் முதலியோர் வந்திருந்தனர்.

அந்தக் கூட்டத்திற்கு நானும் சென்றேன். நான் ஒட்ட சமூகத்தைச் சேர்ந்தவன் என்று தெரிந்திருந்தும் என்னைப் பெஞ்சில் உட்கார வைத்தார்கள். நான் தயங்கினேன். என்னை வற்புறுத்தி உட்கார வைத்தார்கள். நான் மெய்சிலிர்த்துப் போனேன்.

பார்ப்பன வார்த்தியார் காலில் தவறி சிலேட்டு விழுந்துவிட்டதால் என்னையும், என் தாயாரையும் அடித்த அதே ஊரில் இப்படி ஒரு மரியாதையா? அதற்கு ஒரு இயக்கமா என்று எண்ணி என்னை அதனிடம் ஒப்படைத்துக் கொண்டு இன்றுவரை-ஏன் என் உயிர் மூச்சு உள்ளவரை அர்ப்பணித்துக் கொண்டுவிட்டேன் என்று உணர்ச்சி பொங்கக் கூறினார்.

1961-ல் உள்ளூர் மிராசுதார் ஏவலால் போலீஸ் அடக்கு முறை எங்கள்மீது ஏவப்பட்டது. போலீசார் துப்பாக்கிச் சகிதமாக வந்தார்கள். ஊரே ஒன்றுகூடிப் போலீசாரை விரட்டி அடித்தோம். மடபுரம் செகந்நாத செட்டியார் மகன் வக்கீல் சங்கரன் எங்களுக்காக கோர்ட்டில் வாதாடினார்.

இராமர் படம் எரிப்புமுதல் இன்று வரை எல்லா போராட்டங்களிலும் ஈடுபட்டுள்ளேன். பொதுச் செயலாளர் அவர்களோடு டில்லிவரை சென்று போராட்டத்தில் ஈடுபட்டுள்ளேன். என்றைக்குப் போராட்டம் அறிவித்தாலும் முதல் ஆள் நானாக இருப்பேன் என்று உற்சாகத்துடன் கூறுகிறார் 67 வயது நிறைந்த இந்த 'இளைஞர்'!.

விவசாய தொழிற் சங்கத்தில் கம்யூனிஸ்டுகள் எங்களுக்குப் போட்டியாக இருந்தாலும் பெரியார் கொள்கைகளுக்கு முன் அவர்கள் ஜம்பம் பலிப்பதில்லை. திராவிடர் விவசாய சங்கம் மிகக் கட்டுப்பாடானது. அதனால் பல உரிமைகளையும் எளிதாகப் பெற்றுவிடுகிறோம். அதே நேரத்தில் அவர்களால் அவ்வாறு வெற்றி பெற முடியவில்லை. மேலும் ஜாதியின் காரணமாகவே உடலுழைப்புத் தொழிலாளர்களாக இருக்கும் மக்களுக்குப் பெரியார் கொள்கைதான் சரியானதே தவிர கம்யூனிஸ்டுக் கொள்கையல்ல என்று முதல் வகுப்பே படித்த இந்தப் பெரியார் தொண்டர் தத்துவ மழையாகவே பொழிந்து தள்ளுகிறார்.

எனக்கு ஒரு மகன் இரண்டு மகள்கள். மகளைத் திருமணம் செய்து கொண்டவர் சரியில்லை. உடனே விவாகரத்து செய்ய வைத்து மறுமணம் செய்து கொடுத்துவிட்டேன். இந்தத் தைரியமெல்லாம் அய்யா பெரியார் கொடுத்தது என்று நெஞ்சு நிமிர்த்திக் கூறினார்.

ஒட்டன் என்று எங்கள் சமூகத்தவரை ஒதுக்கி வைத்திருந்தார்கள். அதே ஊரில் ஊராட்சி மன்ற துணைத் தலைவராக வந்தேன் - இது திராவிடர் கழகத்தின் சாதனை என்று அவர் சொன்னபொழுது நன்றி உணர்வால் கண்கள் குளமாயின.

பெரியார் இயக்கம் மனிதராக்கியது

குடவாசல் வட்டம் நார்சிங்கம்பேட்டையைச் சேர்ந்த விவசாயத் தொழிலாளர் கா.கணபதி 65 வயது நிறைந்தாலும் வளமான தோற்றப் பொலிவு கொண்டவர். நன்னிலம் வட்ட கழக அமைப்பாளராகவும், குடவாசல் வட்டார செயலாளராகவும், மாவட்ட தொழிலாளரணி அமைப்பாளராகவும் பணியாற்றிய அவர் நாகை காயிதே மில்லத் மாவட்ட திராவிடர் கழக துணை செயலாளராகவும் பணியாற்றி வருகிறார்.

1948-ல் இந்தியை தமிழ் நாட்டில் காங்கிரஸ் கட்சி திணித்த காலகட்டத்தில் தான் இவர் இயக்கத்துக்கு வந்து சேர்ந்தார். 7-வது வரை படித்தவர். தந்தையார் காத்தமுத்து-வயது 90. தந்தையார் ஆரம்பகாலத்தில் அப்பகுதியில் இயக்க ஈடுபாடு கொண்டவர். தனக்குக் குழந்தைகள் ஆறு என்றபோது கொஞ்சம் தலை குனிந்தார்; இந்த வகையில் தந்தை பெரியார் கருத்தைக் கடைபிடிக்கத் தவறிவிட்டேனே என்று சங்கடப்பட்டார். ஆனாலும் எல்லாப் பிள்ளைகளும் கொள்கைப் பிடிப்பு உள்ளவர்கள் என்று பெருமையுடன் குறிப்பிட்டார்.

தமது துணைவியார் 5ஆம் வகுப்பு படித்தவர். கழகக் கொள்கையில் தீவிரமானவர் என்று கூறும் இவர் கும்பகோணத்தில் தந்தை பெரியார் பேச்சைக் கேட்டு சிறுவயதிலேயே இயக்கத்திற்கு ஈர்க்கப்பட்டவர்.

இவர் சொந்த ஊரான நார்சிங்கம்பேட்டையைச் சுற்றியுள்ள ஊர்கள் சேங்காலிபுரம், மஞ்சக்குடி, செம்மங்குடி என்றால் நிலைமையைப் புரிந்து கொள்ளலாம். இந்த ஊர்கள் எல்லாம் அக்கிரகார வாசிகளின் ஆதிக்கப் பேரூர்கள் என்பது பிரசித்தம்.

இந்தச் சூழ்நிலையில் எங்கள் கிராமப் பகுதிகளில் எந்தத் தன்மையில் இருந்திருக்கும் பாருங்கள் என்று நம்மை நோக்கிக் கேள்விக் கணைகளை வீசுகின்றார்.

அக்கிரகாரத்தில் தாழ்த்தப்பட்டவர்கள் வண்டி ஓட்டிக்கொண்டு போகமுடியாது. அப்படியே வண்டி ஓட்டிக்கொண்டு போக நேர்ந்தாலும் வண்டியில் உட்கார்ந்துகொள்ளாமல் மாட்டோடு மாடாகத்தான் நடந்து செல்ல வேண்டும்.



கோடைக்காலத்தில் தண்ணீர்ப் பந்தல் வைப்பார்களாம். மூங்கில் குழாயில் சுவற்றுக்கு உள்ளே இருந்து தண்ணர் ஊற்றுவார்களாம். மஞ்சக்குடியில் டீக்கடைகளில் தாழ்த்தப்பட்டவர்களுக்குத் தடுப்புச் சுவராம்.

சேங்காலிபுரத்தில் தந்தை பெரியாரை அழைத்து பெரிய ஊர்வலம் நடத்திய பிறகுதான் ஊரிலேயே ஒரு விழிப்பு ஏற்பட்டது. டீக்கடைகளில் தாழ்த்தப்பட்டவர்களைத் தனிமைப்படுத்தும் தடுப்புச் சுவர்களை இடித்தோம் என்று இறுமாப்புடன் கூறினார்.

சுற்று வட்டாரத்தில் பணம் படைத்த பார்ப்பனர்கள் இயக்கத்தவர்களுக்கு கொடுத்த தொல்லைகள் சொல்லி மாளாது.

பொய்வழக்கு, நம் தமிழர்களையே தூண்டிவிட்டு அடிதடி, வைக்கோல் போரை தாங்களே கொளுத்திவிட்டுக் கொண்டு கறுப்புச் சட்டைக் காரர்கள் தான் செய்தார்கள் என்று போலீசில் புகார் - இவ்வளவு தொல்லைகளையும் வழக்குகளையும் சமாளித்துதான் கழகத்தை எங்கள் பகுதிகளில் கட்டினோம். அதன் மூலம் ஒடுக்கப்பட்ட மக்கள் மத்தியில் உரிமை உணர்வுகளை ஏற்படுத்தினோம் என்று கூறுகிறார் தோழர் கணபதி.

ஜாதி திமிர் பிடித்த பார்ப்பன பணக்காரர்களோடு சேர்ந்துகொண்டு கம்யூனிஸ்ட்டுகள் கொடுத்த தொல்லையும் கொஞ்சநஞ்சமல்லவாம்.

இதன் காரணமாக 1953-ல் திராவிடர் விவசாய தொழிலாளர் சங்கம் அப்பகுதியில் ஏற்படுத்தப்பட்டது.

ஜாதிப்பிரச்சினை, ஜாதியின் அடிப்படையிலே கூலியிலும்கூட வித்தியாசம். இவற்றையெல்லாம் முற்றாக ஒழித்தோம் என்று பெருமையுடன் குறிப்பிட்டார்.

கம்யூனிஸட்டுத் தொழிற் சங்கங்களைப் பொறுத்தவரையில் கூலி உயர்வு பற்றிபேசுவார்களே தவிர ஜாதிப்பிரச்சினைகள், மூடநம்பிக்கைகள் இவற்றில் மிராசுதார்கள் பக்கம்தான் இருப்பார்கள்.

திராவிடர் விவசாய சங்கம் ஏற்படுத்தி பாடுபட தொடங்கி இவற்றையெல்லாம் முறியடித்துக் காட்டினோம் - இது திராவிடர் கழகத்தின் சாதனை என்று குறிப்பிடும் இவர் கழகம் நடத்திய பல்வேறு போராட்டங்களிலும் பங்கு கொண்டு சிறை சென்றவர் ஆவார். வடநாட்டுச் சுரண்டல் தடுப்பு மறியல் போராட்டத்தில் ஈடுபட்டு 3 மாதமும், அரசியல் சட்ட எரிப்புப் போராட்டத்தில் ஈடுபட்டு 6 மாதமும் (திருச்சி, புதுக்கோட்டை சிறைகளில்) சிறைதண்டனை பெற்றவராவார்.

பெரியார் இயக்கம்தான் எங்களை மனிதர்களாக்கியது. இன்று எங்கள் பகுதியில் இயக்கம் இளைஞர்களின் பாசறையாக இருந்துவருகிறது. அதற்குக் காரணம் நமது பொதுச்செயலாளர் அவர்களின் அணுகுமுறைகள்தான் என்று குறிப்பிட்டார்.

தரும சாத்திரம்?

ஸ்நா தமஸ்வம், கஜமத்தம்
ரிஷபம் காம மோஹிதம்
சூத்தர மக்ஷர சம்யுகதம் தூரதப்
பரிவர்ஜ்ஜையேல்

பொருள்: குளிப்பாட்டிய குதிரையையும், மதங் கொண்ட யானையையும், காம விகாரத்தால் கொண்ட காளை மாட்டையும், எழுத்துத் தெரிந்த சூத்திரனையும் பக்கத்தில் சேர்க்கக்கூடாது.

With Best Compliments from

குமரன் ஹார்டுவேர்ஸ்

இரும்பு & வர்ண வியாபாரம்

டீலர்: ஏஷியன் பெயிண்ட்ஸ்

919, கீழவாசல், தஞ்சாவூர்-613 001

☎ 23445

Off:
Resi: 33853

Residence:
47, Moolai Kollai Street,
Tennur, Trichy - 17

Easwari Industries

47, Meenkara Street
Tennur, Trichy - 620 017

எங்களிடம் மரம் சம்பந்தப்பட்ட வேலைகள், டேபிள், சேர், பெஞ்ச், பீரோ, நிலை, சன்னல், இரும்பு சம்பந்தப்பட்ட பீரோ, கட்டில், டேபிள், பெஞ்ச், ஸ்டூல், கிரில் வேலைகள்
சோபா கம்பெட், மெத்தை மற்றும் வாஷிங் மெஷின், வெட் கிரைண்டர் இவைகள் மொத்தமாகவும், சில்லரையாகவும் தயார் செய்து தரப்படும்.



குல தரும ஒழிப்பு மாநாட்டில் காவிக் கொடி எரிப்பு - சென்னை - 18.4.93



மதுரை - சமூகநீதி மாநாடு - பேரணி 21.8.93



திராவிடர் கழக இளைஞரணி மாநில மாநாடு, மதுரை - 20.8.93



மதுரை - திராவிடர் கழக இளைஞரணி மாநாட்டில் கழகக் கொடி ஏற்றுதல்

மதுரை - சமூக நீதி மாநாட்டுப் பேரணியில் சென்னை மாவட்ட இளைஞரணி

திராவிடர் மகளிர்
விடுதலை மாநாடு
(10.4.93)

பெரியார் மணியம்மை மகளிர் பொறியியல் கல்லூரி வல்லம் -
முதலாம் பட்டமளிப்பு விழா - 27.4.93

With Best Compliments from

SUNDARAM AGENCIES SUNDARAM AGENCIES SUNDARAM AGENCIES SUNDARAM AGENCIES
SUNDARAM AGENCIES SUNDARAM AGENCIES SUNDARAM AGENCIES SUNDARAM AGENCIES

SUNDARAM AGENCIES

SUNDARAM AGENCIES SUNDARAM AGENCIES SUNDARAM AGENCIES SUNDARAM AGENCIES
SUNDARAM AGENCIES SUNDARAM AGENCIES SUNDARAM AGENCIES SUNDARAM AGENCIES
SUNDARAM AGENCIES SUNDARAM AGENCIES SUNDARAM AGENCIES SUNDARAM AGENCIES

GLASS MERCHANTS

DEALERS IN :

* Colour Glass,

* * Safty Glass,

* * * Plain Glass,

* * * * Wire Glass

* * * * * &

* * * * * * Frames Tin Sheet

* * * * * * * Extra

1760, Manojiappa Street,

THANJAVUR - 613 009.

அய்யா உலகில்

ஆசிரியர் பணி முடிப்போம்

☎ பி.பி. 481191



பூம்புகார்

பல்பொருள் அங்காடி

30, அழகர் கோவில் சாலை,

தல்லா குளம், மதுரை-2



தமிழர் நலன் காக்க

தமிழினக் காவலர்

தலைமையில் அணி திரள்வோம்

ஆர்.ஆர். பாகயம்

உந்து காப்பீட்டு முகவர்

ஓட்டுநர் பயிற்சிப் பள்ளி

7.அ, எசு.எம்.சி. நிலையம்

வடக்கு வடம் போக்கித்தெரு

மதுரை - 1

தந்தை வழியில் வருவாய் இன்றே!

(கருவை இராவண ஒன்னார்)

காலில் வீழ்ந்து பதவி பெற்று
காசு சேர்க்கும் கயமை புத்தி
ஆளைப் பிடித்து கூட்டிக் கொடுக்கும்
அவல நிலையோ அதைவிட சிறப்பு
பெரியார் கருத்தை எதிர்க்கும் எவனும்
பிறப்பால் முழுமை பெறாதவ னாவான்
ஆரியம் பின்னே செல்லும் தமிழன்
வீரியம் இல்லா வித்துக் கொப்பாம்

பெரியார் கொடியை எரித்த மூடா
புரிந்தா செய்தாய்? புவியில் நீயும்
மனிதனாய் வாழ மார்க்கம் கண்ட
புனிதனின் கொடியடா புரிந்து கொள்ளடா
இனிஒரு முறைநீ இப்படிச் செய்தால்
துணிவுடன் சொல்வேன்; துவைத்து எடுப்பேன்
இந்தா நீயும் 'பந்தா' விட்டு
தந்தை வழியில் வருவாய் இன்றே!

PLR

வாழ்க பெரியார்; வளர்க தமிழினம்

சங்கரகாசி வாட்டர் டிரில்லர்ஸ்

பக்கத்துளை நேர்த்துளை போட நம்பிக்கை நாணயம் மிக்க நிறுவனம்

4. காமராசர் சாலை, கரூர் - 639 001, தமிழ் நாடு

குரல் அழைப்பு: 21167 அலுவலகம்; 23367 இல்லம்

உரிமை: பி.எல்.ஆர்.

தந்தை பெரியார் 115-வது பிறந்த நாளில்

அவர் தம் கொள்கைகளை நிறைவேற்ற உறுதி கொள்வோம்

தொலைபேசி: தொழிற்சாலை: 2508

இல்லம்: 2634

கிருஷ்ணா பிஸ்கட் பாக்டரி

உரிமையாளர்: ஆர்.பி. சாரங்கன்

234, பெரிய கடை வீதி,

மன்னார்குடி, தஞ்சை மாவட்டம்.



தந்தை பெரியார் அவர்களின் 115 ஆவது
ஆண்டு பிறந்த நாள் மலர்
சிறப்படைய வாழ்த்துகின்றோம்



திண்டுக்கல் டிரான்ஸ் போர்ட்ஸ் குஜிலியம் பாறை டிரான்ஸ் போர்ட்ஸ் V.K. அரவிந் டிரான்ஸ் போர்ட்ஸ் கரூர்

குறிப்பு: எங்களிடம் சுற்றுலாச் செல்லவும் திருமணம் மற்றும் விசேஷங்களுக்குச் செல்லவும் கோச் பஸ்கள் குறைந்த வாடகைக்கு கிடைக்கும்

V.K. ஆறுமுக கவுண்டர் & சன்ஸ்

3A. கோவை ரோடு, கரூர் - 639 002.
தொலைபேசி: 21969

தன்மானச் சிங்கம் தந்தை பெரியார்
அவர்களின் 115 ஆவது ஆண்டு
பிறந்த தின விழா மலர்
சிறக்க வாழ்த்துகிறோம்.

ஸ்டார் நிட்டிங் கம்பெனி

1/204/3, பழனியப்பா தெரு, கரூர் - 639002

Star Lion



தயாரிப்பாளர்கள்:

ஸ்டார் லயன் பனியன்கள்

தொலைபேசி: 22496



ஒரு நூற்று பதினைந்து ஆண்டு காணும்
பகுத்தறிவுப் பகலவன் பெரியாருக்கு
சிறப்புமலர் அவர்தம் கொள்கைதனை
ஏற்று வெளிவரும் இம்மலருக்கு
எங்கள் வாழ்த்து

நிறுவனர்
அனார் திரு. K. கந்தசாமி கவுண்டர் அவர்கள்

அனார் பேப்ரிக்ஸ்

கைத்தறி பெட்சீட்கள் மேஜை விரிப்பு தலையணை உறைகள் மேட்டி கேஸ் மெண்ட்
துணிகள் ஜெக்கார்டு விரிப்புகள் துவாலைகள் முதலியன. திரை சீலைகள்
உயர்ந்ததாகவும் உத்திரவாத சாயம் எண்ணற்ற டிசைன்கள்

தயாரிப்பாளர்கள்

K. முத்துச்சாமி கவுண்டர் & கோ

7, செங்குந்தபுரம், 2-வது கிராஸ், கரூர்-639 002, தமிழ் நாடு தொலைபேசி: 21172

தந்தை பெரியார் 115 ஆவது ஆண்டு
பிறந்தநாளில் மலரும் விடுதலை
சிறப்பு மலர் வெகு சிறப்புடன் வெளிவர
வாழ்த்துகிறோம்.



தரமான மேட்டி கேஸ் மெண்ட் பிரிண்டட் பெட்சீட்கள்
துண்டுகள் வாங்க சிறந்த இடம்

ஸ்ரீ ஜெயந்தி டெக்ஸ்டைல்ஸ்

2, செங்குந்தபுரம் கரூர், தொலைபேசி: 21374, 21453.

JAGUL FABRICS
SRI JAYANTHI TEXTILES
JEENATH FABRICS

2, Sengunthapuram, 2nd Cross Street,
Karur - 639 002.

தமிழர் நலன் காக்கும்
தமிழர் நாளிதழ்
விடுதலைக்கு வாழ்த்துக்கள்

யூனிட்டி அசோசியட்சு

சேது இல்லம்
தியாகராயர் நகர், அம்பாத்துறை
திண்டுக்கல் வட்டம்
அண்ணா மாவட்டம்-624 309

பழனி ஆறுமுகா

மேல அனுப்பானடி,
மதுரை - 9

முருகன் திரையரங்கு

செய்இந்துபுரம்
மதுரை - 11

சில்லரை, மொத்த
விற்பனைக்கு நம்பிக்கையான
நிறுவனம்

கிட்டங்கிக் கடை

327, வடக்கு மாசி வீதி, மதுரை - 1

☎ 30945

பிரியாணி மற்றும் புலால் உணவுகள்
ஆர்டரின் பேரில் சிறப்பாக செய்து கொடுக்கப்படும்

உரிமை: அருணாசலம் சன்சு

சிறந்த நகை வணிகத்திற்கு

☎ 35461

இந்திரா ஜுவல்லர்ஸ்

தங்க நகை வியாபாரம்
49, கான்சா மேட்டுத் தெரு,
மதுரை - 1

Thanthai Periyar 115th year
Birthday Malar

WITH BEST COMPLIMENTS
FROM

ARASEE LODGE A/C

781, Jawahar Bazar, KARUR - 639 001
Trichy Dt., Tamil Nadu (opposite to Head Post Office)
Phone No : 22663, 22763, 23663, 23763

* * *

For Comforts & Rayal Hospitality - Spacious Room Located in the Middle of the town. A/c Rooms, Non A/c Rooms and Deluxe Rooms, Provided with separate Phone connection for each rooms. Colour Television and Radio Facilities also available.

Please Step in for comfortable stay

Prop : K.C. PALANISAMI
EX. VICE-CHAIRMAN, KARUR MUNICIPALITY, KARUR

With Best Compliments From **Phone : 28423**

SCIENTIFIC EQUIPMENT CO.,

SCIENTIFIC EQUIPMENT CO.,
SCIENTIFIC EQUIPMENT CO.,

B-19, 10th Cross,
Further Western Extension,
Thillai Nagar, Tiruchirapalli - 620 018.

Suppliers of all Chemicals, Microscopes, Glass Wares, Balances, Gas Plants, Etc.,

Authorised Stockist	:	SDS Chemicals
Authorised Dealer	:	Systronics & B.B. Chemicals.

Prop. T.S. JAYARAMAN B.A.,

கடந்த பெரியார் ஆண்டில்

கழக டைரி

17.9.92

தலைநகரில் அய்யா விழா

வழமைப்படி இவ்வாண்டும் தலைநகர் சென்னையில் தந்தை பெரியார் 114 ஆம் பிறந்த நாள் விழா சிறப்புடன் நடந்தது.

சென்னையின் பல்வேறு பகுதிகளில் உள்ள அய்யா சிலைகளுக்கு ஆங்காங்குள்ள கழகக் குடும்பத்தினரால் மாலைகள் அணிவிக்கப்பட்டு இனிப்புகள் முதலியன வழங்கப்பட்டன.

17ஆம் தேதி காலை 10 மணியளவில் சென்னை பெரியார் திடலில் உள்ள அய்யா சிலைக்கு கழகக் குடும்பங்கள் சூழ மாலை அணிவித்த கழகப் பொதுச் செயலாளர்-

அய்யா, அம்மா நினைவிடங்களிலும் மலர் வளையங்களிட்டு மரியாதை செலுத்தி அய்யா வழி தொண்டாற்ற உறுதிமொழி மேற்கொண்டார். நிகழ்ச்சியில் முன்னாள் உச்சநீதிமன்ற நீதிபதி ஏ. வரதராசன் உட்பட பலர் பங்கேற்றனர்.

பெரியார் திடலில் உள்ள தந்தை பெரியார் பகுத்தறிவு நூலகம்-ஆய்வகத்திற்கான புதிய இணைப்புப் பகுதியை பட்டம்மாள் பாலசுந்தரம் திறந்து வைத்தார்.

பெரியார் சுயமரியாதைப் பிரச்சார நிறுவன வெளியீடுகள் விற்பனைப் பிரிவை பெரியார் பெருந்தொண்டர் நெல்லிக்குப்பம் மு. சுப்பிரமணியம் திறந்து வைத்தார்.

சென்னை பெரியார் திடலில் இயங்கும் பெரியார் நகர குடும்ப நல மய்யத்தில் பிறந்த முதல் குழந்தைக்கு பெரியார் செல்வம் எனப் பெயர் சூட்டிய கழகப் பொதுச் செயலாளர்-

இக்குழந்தையின் பெற்றோரான ஸ்டெல்லாமேரி - சவுரிமுத்து தம்பதிக்கு இயக்க சார்பில் ரூ.150 அன்பளிப்பாக வழங்கினார்.

இதேபோல் தமிழகம் மற்றும் வெளிநாடுகளிலும் அய்யா விழாக்கள் சிறப்புறக் கொண்டாடப்பட்டன.

21.9.92

எழுத்துரிமை பறிப்புக்கு எதிராக... 'முரசொலி' ஏட்டிற்கு ஆதரவாக...

'முரசொலி' நாளேட்டின் ஆசிரியர் செல்வம், சட்டமன்றக் கூண்டில் ஏற்றப்படுவதன் மூலம் எழுத்துரிமை தமிழ்நாடு அ.தி.மு.க. அரசால் பறிக்கப்பட்டதற்கு 'விடுதலை' கடும் கண்டனம் வெளியிட்டது. இதன் அடையாளமாக செப்டம்பர் 21 'விடுதலை'யின் இரண்டாம் பக்கத்

எங்கள் நல்வாழ்த்துக்கள்

R.C. No:349377 Ph: 27942

மல்லிகா ஸ்டோர்ஸ்

மளிகை & ஜெனரல் மெர்ச்செண்ட்ஸ்

83, பிஷப் ரோடு, புத்தூர், திருச்சி - 17

தரமான சாமான்கள் நியாயமான விலை

தமிழர்களுக்காகவே பிறந்து வாழ்ந்து மறைந்த தந்தை பெரியாரே!

தங்களின் 115-வது பிறந்தநாளில் 'விடுதலை'க்கு எங்கள் இனிய நல்வாழ்த்துக்கள்!

P. SUBRAMANIAM & CO.

Mfrs. of Real Madras Hand Kerchiefs

81-A, 4th Seerangam Street,
Dadagapatti, Salem - 6

தலையங்கப் பகுதியை வெற்றிடமாக வெளியிட்டது 'விடுதலை'.

28.9.92
சிறையிலிருந்தோரை...

சென்னை மத்திய சிறையில் அடைக்கப்பட்டுள்ள தமிழர் தேசிய இயக்கத் தலைவர் பழ. நெடுமாறன், பா.ம.க. தலைவர்களில் ஒருவரான நெல்லிக்குப்பம் கிருஷ்ணமூர்த்தி மற்றும் பா.ம.க. வைச் சேர்ந்த பாஸ்கரன், முத்துக்குமரன், தமிழ்த்தேசப் பொதுவுடைமைக் கட்சி அமைப்பாளர் மணியரசன், 'விடுதலைக் குயில்கள்' அமைப்பைச் சேர்ந்த பேராசிரியர் சுப. வீரபாண்டியன் ஆகியோரை கழகப் பொதுச் செயலாளர் சந்தித்துப் பேசினார்.

28.9.92
வங்கியில் யாகமா?
எதிர்த்து மழையில் ஆர்ப்பாட்டம்

சென்னை ரிசர்வ் வங்கியில் பணியாற்றும் பார்ப்பன அலுவலர்கள் தீட்டுக் கழிப்பதென்ற பெயரில் நடத்தவிருந்த யாகத்தை எதிர்த்து கழகம் இன்று எழுச்சி மிகு ஆர்ப்பாட்டம் நடத்தியது. கடும் மழை கொட்டிய நிலையிலும், கழகத் தோழர்களும், தாய்மார்களும் அணிவகுத்து ஊர்வலத்திலும், ஆர்ப்பாட்டத்திலும் பங்கேற்றனர்.

சென்னை ரிசர்வ் வங்கி சுரங்கப்பாதையின் வடமுனைவரை அனுமதிக்கப்பட்ட இந்த ஆர்ப்பாட்ட இறுதியில் எழுச்சியுரையாற்றினார் இனமானப் பேரொளி கழகப் பொதுச்செயலாளர்.

மீண்டும் தந்தி எச்சரிக்கை

ரிசர்வ் வங்கிக்குள் நடத்தத் திட்டமிடப்பட்டுள்ள ஹோமமும், யாகமும் நிறுத்தப்படாவிடில் போராட்டம் மேலும் தொடரும்; சட்டரீதியான நடவடிக்கை மேற்கொள்வோம் என எச்சரித்து ரிசர்வ் வங்கி ஆளுநருக்கு கழகப் பொதுச் செயலாளரால் செப்டம்பர் 28இல் தந்தி ஒன்றும் தரப்பட்டது.

28.9.92
ஆசிரியர் பயிற்சியக சாதனை

திருச்சியில் உள்ள பெரியார் ஆசிரியர் பயிற்சி நிறுவனத்தில் பயின்ற 40 மாணவர்களும் தேறினர். தேர்வு விகிதம் 100க்கு 100. தேர்வு பெற்ற அனைவருமே முதல் வகுப்பு.

40 பேரும் மிகக் கூடுதல் மதிப்பெண் பெற்று சிறப்புத்தேர்ச்சி பெற்றுள்ளனர்.

திருச்சியில் உள்ள நாகம்மை ஆசிரியர் பயிற்சி நிறுவனத்தில் தேர்வு எழுதிய 40 பேரில் 32 பேர் தேர்ச்சி பெற்றுள்ளனர். தேர்வு விழுக்காடு - 92 புள்ளி 5. தேர்ச்சி பெற்ற அனைவருமே முதல் வகுப்பு. இதில் 12 பேர் கூடுதல் மதிப்பெண் பெற்று சிறப்புத் தேர்வு பெற்றுள்ளனர்.

2.10.92
வங்கி யாகம் ரத்து

ரிசர்வ் வங்கிக்குள் யாகம், ஹோமம் நடத்த கழகம் எதிர்ப்புத் தெரிவித்ததன் எதிரொலியாக இந்தப் பார்ப்பனக் கூத்துகள் அரவமின்றி ரத்தாயின.

சென்னையில் உள்ள ரிசர்வ் வங்கி மேலாளரான ராமச்சந்திர ராஜூ என்பவரை செய்தியாளர்கள் இதுபற்றி இன்று கேட்டதற்கு-

''வங்கி நிர்வாகத்திற்கும் இதற்கும் எந்த விதத் தொடர்பும் இல்லை; அதற்கு அனுமதியும் அளிக்கவில்லை'' என்று கூறி நழுவிவிட்டார்.

சூத்திரர்கள் கடவுளைக் கும்பிட்டால்...

ஜபஸ்தபத் தீர்த்தயாத்ரா, ப்ரவ்ரஜ்யா
மந்த்ர சாதனம்
தேவதாராதனம் சைவ, ஸ்திரீ சூத்திர
பதனானிஷ்ட அத்ரிசம்ஹிதை

பொருள்: ஜபம், தவம், தீர்த்தயாத்திரை, மந்திரம் ஜெபித்தல், சித்தியடைதல், கடவுளை வணங்குதல் முதலான கர்மங்களை சூத்திரர்களும், பெண்மக்களும் செய்தல் கூடாது. செய்தால் அவர்கள் அதோகதி (நாசம்) அடைவார்கள்.

தமிழர் தந்தையே! உலக மனித இன விந்தை நாயகனே!
தங்களது 115-வது பிறந்த நாளில்
நல்வாழ்த்துக்களை வழங்குகிறேன்.

சாரதா ஏஜென்சீஸ்

மடக்குக் கட்டில், ஒயர் சேர் உற்பத்தியாளர்கள்
No.27, கருங்கல்பட்டி, East First Street,
குகை, சேலம் - 6

"அறிவை நாடுவோர் நாடுவது கனி வகைகளே"
"பெரியார் உலகு பிறக்கட்டும் -
பெருமைகள் எங்கும் நிலைக்கட்டும்"

மார்க் K.A.

தமிழ்நாடு கனி வணிகம்

6/504 A. கடலூர் நெடுஞ்சாலை,
நெய்வேலி - 607 802

குறிப்பு: திருமணம் மற்றும் சிறப்பு நிகழ்ச்சிகளுக்கு குறைந்த விலையில் தரமான கனி வகைகள் எங்களிடம் கிடைக்கும்.

நெய்வேலி சந்தை: வட்டம் 30 - ஞாயிறு, வட்டம் 13 - செவ்வாய், வட்டம் 3 - வியாழன்.

வடலூர் சந்தை: சனி. ஆகிய இடங்களில் எங்கள் வியாபாரம் உண்டு.

உரிமை: கி. அய்யனார் (தி.க., நெய்வேலி - 2)

1.10.92

பெரியார்-மணியம்மை மகளிர் பொறியியல் கல்லூரி

வல்லத்தில் இயங்கும் பெரியார் மணியம்மை மகளிர் பொறியியல் கல்லூரி மாணவியரால் இன்றுமுதல் அக்டோபர் 10 வரை நாட்டு நலப் பணித் திட்ட சிறப்பு முகாம் பிள்ளையார் பட்டியில் சிறப்புற நடந்தது.

5.10.92

கழகக் குடும்ப விழா

சென்னை நகர ப.க. சார்பில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த தந்தை பெரியார் பிறந்த நாள் குடும்ப விழா பெரியார் திடலில் சிறப்புற நடந்தது.

நிகழ்ச்சித் தலைமை பெரியார் சிந்தனை அஞ்சல் வழிக் கல்லூரி முதல்வர், பெரியார் பேருரையாளர் ந. இராமநாதன்.

நூற்றாண்டு விழா நாயகர் ராவ்பகதூர் என். சிவராஜ் அவர்களின் படத்தினை திறந்து வைத்த கழகப் பொதுச் செயலாளர் - துவக்கத்தில், மறைந்த சிவராஜ் அவர்களின் 2ஆம் மகன் போதி சந்தருக்கு சால்வை போர்த்தினார்.

பார்ப்பனர் செல்வாக்கும் ஆதிக்கமும்

தற்போது பார்ப்பனர்களின் நிலை சற்று பலவீனமுற்றிருக்கிறது என்பது உண்மையே. தென் இந்தியாவில் பார்ப்பன இயக்கம் பரவி, புரோகிதர்கள் பொதுமக்களைச் சுரண்டி வருகின்றனர் என்ற குற்றச்சாட்டு வலுத்து, புரோகிதர்களைக் குருபீடமாகக் கொள்ளுவதற்கு எதிர்ப்பு உணர்ச்சி உண்டாகிவிட்டது. இப்படி இருந்தபோதிலும் பார்ப்பனர்களின் மந்திராலோசனைக்கு மதிப்பும் பிடிப்பும் தளரவில்லை. வைதீகத்தின் ஆதிக்கம் வலுவுடன் இருந்து வருகிறது.

(Modern India and the West, P.797)

நூற்றாண்டு விழா நாயகர் ஆர்.கே. சண்முகம் (செட்டியார்) படத்தை நீதிபதி பி.வேணுகோபால் அவர்கள் திறந்து வைத்தார். பெரியார் பேருரையாளர் அ. இறையனாரை நடுவராகக் கொண்டு நடந்த பட்டிமன்றத்திற்குப் பின் புலால் விருந்து வழங்கப்பட்டது.

இனஎழுச்சி ஒலி நாடா தொடர்பாளர்களான பிரபாகர், தேனிசை செல்லப்பா, கவிஞர் காளமேகம், அ. சவுரிராசன் ஆகியோர் பொதுச் செயலாளரால் சிறப்பிக்கப்பட்டனர்.

கழக இளைஞரணியின் தெரு நாடகங்கள் நடந்தன.

7.10.92

மயிலையில் அய்யா விழா

தென் சென்னை மாவட்ட தி.க. சார்பில் தியாகராயர் நகரிலிருந்து மாபெரும் மூட ஒழிப்பு ஊர்வலம் புறப்பட்டது. மயிலையில் கொட்டும் மழையில் அய்யா பிறந்த நாள் விழாப் பொதுக்கூட்டம் தொடர்ந்தது.

சாதி ஒழிப்புப் போராட்டத்தில் (சட்ட எரிப்புப் போராட்டம் 1957) சிறை சென்ற சென்னை, செங்கை - எம்.ஜி. ஆர்., தாம்பரம் மாவட்டக் கழகத் தோழர்கட்கு விருதுகளும், சான்றிதழ்களும் தரப்பட்டன.

26.10.92

'தடா' தோழர் விடுதலை

பத்மநாபா கொலை வழக்கில் குற்றம் சாட்டப்பட்டு 'தடா' சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்ட திருச்சி கழகத் தோழர் ஆனந்தராஜ் ஜாமீனில் விடுதலை செய்யப்பட்டார். 74 வயதான இவர் ஓராண்டாக சிறையில் அடைக்கப்பட்டிருந்தார்.

28.10.92

'தடா'வை எதிர்த்து வழக்கு

மனித உரிமைக்கு எதிரான 'தடா' சட்டத்தை ரத்து செய்யக்கோரி சென்னை

With Best Compliments from

Ceylon Dason Confectionary

FOR QUALITY BAKERS



CEYLON DASON BAKERY

2912, Railady

Thanjavur-613 001

☎ 21706

உயர்நீதி மன்றத்தில் கழகப் பொதுச்செயலாளர் வழக்குத் தொடர்ந்தார். பொதுச் செயலாளர் சார்பில் வழக்கறிஞர் சந்துரு இந்த வழக்கு மனுவைத் தாக்கல் செய்தார்.

6.11.92

பெண்ணுரிமை பற்றிய அய்யாவின் கருத்துகள்

'எமரால்டு' பதிப்பகத்தார், தந்தை பெரியாரின் பெண்ணுரிமைக் கருத்துகளைப் புத்தக வடிவில் தொகுத்துள்ள - "Periyar on Women's Right" என்ற ஆங்கில நூல் வெளியீட்டு விழாவை சென்னையில் எத்திராஜ் மகளிர் கல்லூரி கலை அரங்கில் நடத்தினர். சிறப்புரை - கழகப் பொதுச் செயலாளர். தலைமை - நீதிபதி வேணு கோபால். நூல் மொழிபெயர்ப்பாளர் - பேராசிரியர் ஆர். சுந்தரராசு. நூல் வெளியீட்டாளர் - கால்நடை மருத்துவப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் டாக்டர் வே. ஞானபிரகாசம். முதல் நூலைப் பெற்றவர் - டாக்டர் யசோதா சண்முகசுந்தரம்.

15.11.92

அய்யாபற்றி தெலுங்கில்

ஆந்திர மாநிலத்து நிடமாருவில் நவம்பர் 15 முதல் 17 வரை நாத்திகர் விழா நடந்தது.

இந்திய நாத்திகர் சங்கத் தலைவர் விசாகை டாக்டர் ஜெயகோபால் தெலுங்கில் எழுதிய "பெரியார் ஈ.வி.ஆர். ஜீவிதம்; சமாஜிகா போராட்டலு" (பெரியார் ஈ.வெ.ரா., வாழ்வும், சமுதாயப் போராட்டங்களும்) என்ற நூலை தமிழ்நாடு ப.க. துணைத்தலைவர் கரூர் வழக்கறிஞர் பி.ஆர். குப்புசாமி 15ஆம் தேதி வெளியிட்டார்.

23.11.92

பொதுச் செயலாளருக்கு குவிந்த பாராட்டு

மண்டல்குழு பரிந்துரைகள் பற்றிய இந்திய உச்சநீதி மன்றத் தீர்ப்பையடுத்து

பெரியாரின் பத்துக் கட்டளைகள்

பார்ப்பானை ஏற்காதே!
மதத்தை மதியாதே!
ஜனநாயகத்தை நம்பாதே!
சினிமாவை நினையாதே!
எதை விரும்பியும் கடவுளை நாடாதே!
சாதியில் சாயாதே!
புராணத்தைப் படிக்காதே!
தீண்டாமை வேண்டாதே!
கோயிலுக்குப் போகாதே!
ஒழுக்கத்தை இழக்காதே!

(தொகுத்தவர்: எஸ். ராமகிருட்டினன், புதுடில்லி)
-'விடுதலை', 30.3.1959

கழகப் பொதுச் செயலாளருக்குப் பாராட்டுகள் குவிந்த வண்ணமுள்ளன.

அமெரிக்கா வாழ் தமிழர்களான பல்துறை வல்லோர் கூட்டாகக் கையெழுத்திட்டு பொதுச் செயலாளருக்கு அனுப்பினர்.

அவர்கள் விவரமாவது:-

டாக்டர் சோம. இளங்கோவன், - சிகாகோ
வ.செ. பாபு, - சிகாகோ, தமிழ்ச்சங்கத் துணைத்தலைவர்.
ந. விசுவநாதன் - சிகாகோ, பொறியாளர்
டாக்டர் திருநாவுக்கரசு - செயின்ட் லூயிஸ், விஞ்ஞானி
டாக்டர் தண்டபாணி - செயின்ட்லூயிஸ், விஞ்ஞானி
டாக்டர் அய்யனார் - செயின்ட் லூயிஸ், விஞ்ஞானி
டாக்டர் இளங்கோவன் - செயின்ட்லூயிஸ், விஞ்ஞானி
டாக்டர் ஏ.எம். இராசேந்திரன் - பாசுடன், விஞ்ஞானி
திரு.மோகனம் - OHIO (வழக்கறிஞர்)
டாக்டர் தணி. சேரன் - North Carolina (பொறியாளர்)
டாக்டர் தேவ் - Tennfsse (விஞ்ஞானி)
டாக்டர் குமார், பேட்டன் ரூச் - New Orleans (பேராசிரியர்)
டாக்டர் இலக்குவன் தமிழ் - Dallas Texas (பேராசிரியர்)

4.12.92

கமிஷனர்மீது வழக்கு

கழகத்தின் சுவரெழுத்துக்களை அழித்து கலவரத்திற்கு வித்திடும் ஆர். எஸ்.எஸ்.கள் மீது புகார் கொடுத்தும்

தந்தை பெரியாரின் 115 ஆவது பிறந்தநாளில்
எங்களது இனிய நல்வாழ்த்துக்கள்

"செலக்ஷன்"

20, முதல் அக்ரகாரம், சேலம் - 1

தரமான ரெடிமேடு ஆடைகளும்,
தபால் பெட்டி மார்க் கைலிகளும்
நியாயமான விலையில் விற்பவர்கள்.

தமிழர்கள் அனைவருக்கும் தந்தை பெரியார்
115 வது பிறந்தநாள் வாழ்த்துக்கள்!





நல்லபெருமாள் டெக்ஸ்டைல்ஸ்,

மொத்த ஜவுளி வியாபாரம், கேப்ரோடு,
நாகர் கோவில் - 629 001

இந்தியாவில் ஏழைகள்

இந்தியாவில் வறுமைக் கோட்டுக்குக் கீழே வாழ்பவர்கள் எண்ணிக்கை எவ்வளவு தெரியுமா? 4 கோடியே 18 லட்சம் பேர். இது 1987-88ஆம் ஆண்டு நடத்தப்பட்ட தேசிய மாதிரி ஆய்வில் தெரியவந்தது. இவர்களில் 20 சதவீதம் பேர் நகர்ப்புறங்களில் வசிக்கிறார்கள்.

நடவடிக்கை எடாத சென்னை நகர போலீஸ் கமிஷனர்மீது கழக சார்பில் வழக்குத் தொடரப்பட்டது. எழும்பூர் காவல்துறை இன்ஸ்பெக்டர்மீதும் தொடரப்பட்ட இவ்வழக்கினை தென் சென்னை மாவட்ட கழக இளைஞரணி தலைவர் எம்.பாலகுரு சார்பில் கழக சட்டத்துறை செயலாளர் வழக்கறிஞர் செ. துரைசாமி சென்னை உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்தார்.

6.12.92

தடைமீறிக் கைது

புதுவையில் நடக்க இருந்த ராவண லீலா விளக்கக் கூட்டத்திற்குப் புதுவை அரசு திடீரென தடை விதித்தது. கழகப் பொதுச் செயலாளர் தலைமையில் தடைமீறிக் கைதாயினர் தோழர்கள். பின் அனைவரும் விடுதலையாயினர்.

6.12.92

கழக மத்திய நிர்வாகக் குழு

புதுவை லட்சுமி திருமண நிலையத்தில் கழக மத்திய நிர்வாகக் குழுத் தலைவர் சிதம்பரம் கு.கிருட்டிணசாமி தலைமையில் நடந்த கழக மத்திய நிர்வாகக் குழுவில் நிறைவேற்றப்பட்ட முக்கிய தீர்மானங்கள் சிலவற்றின் சாரம்:

* மண்டல் குழு பரிந்துரை தொடர்பான உச்சநீதிமன்ற தீர்ப்பை உடன் மத்திய அரசு அமுல்படுத்தவேண்டும்.
* புதுவை மாநிலத்திலும் பிற்படுத்தப் பட்டோர்க்கு இட ஒதுக்கீடு தேவை.
* ராவண லீலாவை டிசம்பர் 25இல் சென்னை பெரியார் திடலில் எழுச்சியுடன் நடத்துவோம்.

20.12.92

காஞ்சியைக் குலுக்கிய மாபெரும் ஆர்ப்பாட்டம்

இடிக்கப்பட்ட பாபர் மசூதியை மீண்டும் கட்டக்கூடாதென விஷமத்தனமான அறிக்கை வெளியிட்ட ஜெயேந்திர சரஸ்வதியைக் கண்டித்தும், கைது செய்ய வலியுறுத்தியும் காஞ்சியில் மாபெரும் ஆர்ப்பாட்டம் நடந்தது.

ஆயிரத்திற்கும் மேற்பட்ட தோழர்கள் கைதாகி விடுதலையடைந்தனர்.

முன்னதாகக் காஞ்சி சங்கர மடம் முன் உள்ள அய்யா சிலைக்கு மாலை அணிவித்தார் - கழகத் தலைமை நிலையச் செயலாளர் கலி.பூங்குன்றன்.

24.12.92

அய்யா நினைவுநாள்

தலைநகரிலும், தமிழகம் முழுக்கவும் தந்தை பெரியார் 19ஆம் நினைவு நிகழ்ச்சிகள் சிறப்புற நடந்தன.

பெரியார் திடலில் இயங்கும் பெரியார் நகர நல வாழ்வு நிலையத்தில் அறுவைச் சிகிச்சைப் பிரிவை எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக்கழக துணைவேந்தர் டாக்டர் பி.பி. ராஜன் திறந்து வைத்தார்.

முன்னதாக அய்யா - அம்மா நினைவிடங்களில் கழகக் குடும்பங்கள் புடைசூழ மலர் வளையங்களிட்டு மரியாதை செலுத்தினார் பொதுச்செயலாளர்.

சொற்பொழிவாளர்

இன்று பகல் பெரியார் திடலில் கழகப் பேச்சாளர் கலந்துரையாடலும் நடந்தது.

With
Best
Compliments
From

Phone : 31248

Mark : G.R.

GEETHA RANI

Vegetables Merchant & Supplier

Gate No. 2, Gandhi Market,
Trichy - 620 008.

***

Prop. : P. MANI

With Best Compliments From

R.C. No. 348945

Phone - Resi : 48089

SANKAR MOSAIC

PERIYAR MALIGAI, PUTHUR, TRICHY - 17

Prop. K.R. Palaniyappan

MOSAIC
KUNIKKAL
MARBLES
SAHABADH WORKING
CUDAPPAH
VINOTEX

25.12.92

வி.பி. சிங்கிற்கு...

தீவிர சுற்றுப்பயணமாய் தமிழகம் வந்த வி.பி. சிங்கிற்கு பொதுச்செயலாளர் தலைமையில் கழக சார்பில் உற்சாக வரவேற்பு தரப்பட்டது.

28.12.92

திருச்சி கல்வி வளாகத்தில்

திருச்சியில் பெரியார் கல்வி வளாகத்தில் கழக சார்பில் உற்சாக வரவேற்பைப் பெற்ற வி.பி.சிங்கும், பஸ்வானும், பின்னர் தந்தை பெரியார் நூற்றாண்டு கல்வி வளாக நிகழ்ச்சிகளில் பங்கேற்று மகிழ்ந்தனர்.

3.1.93

மதவெறியை மாய்ப்போம்
மனித நேயம் காப்போம்

''மத வெறியை மாய்ப்போம்; மனித நேயம் காப்போம்'' என்ற முழக்கத்துடன் கழகப் பொதுச்செயலாளர் மேற்கொண்ட சூறாவளி சுற்றுப் பயணத்தின் முதல் கட்டம் நாகர்கோயிலில் இன்று தொடங்கியது.

தனித் தனிக் குழுக்களாகப் பிரிந்து கிராமம் கிராமமாகச் சென்று ஆர்.எஸ்.எஸ்., பார்ப்பன மதவெறி சக்திகளின் முகத்திரையைக் கிழித்தது கழகப் பிரச்சாரப் படை.

பிரச்சாரப் படை இரு குழுக்களாகப் பிரிந்து சென்று கருத்து மழை பொழிந்தன.

இரவு நாகர்கோயிலில் நடந்த வட்டாரக் கழக மாநாட்டில் எழுச்சியுரையாற்றினார் கழகப் பொதுச் செயலாளர்.

குமரி மாவட்டம் முழுக்க மனித நேயப் பயணத்திற்கு உற்சாக வரவேற்பு.

19.1.93

தமிழிசை விழா

தமிழிசை மன்றத்தின் சார்பில் தமிழிசை விழா சென்னை பெரியார் திடலில் சிறப்புடன் துவங்கியது. டி.எல். மகராசன் இசை மழை பொழிந்தார். மதுரை நாதசுரக் கலைஞர் பொன்னுத்தாய் அம்மையாருக்கு திரைப்பட இயக்குநர் பாரதிராஜா பொன்னாடை போர்த்த, தந்தை பெரியார் தமிழிசை மன்ற சார்பில் பொற்கிழி வழங்கினார் பொதுச்செயலாளர். மகராசனுக்கு ''தமிழிசைப் பாணர்'' விருதை பொதுச்செயலாளர் வழங்கினார்.

20.1.93

இசைவிழா - 2ஆம் நாள்

தந்தை பெரியார் தமிழிசை மன்ற சார்பில் தமிழ் இசை விழா 2ஆம் நாள் நிகழ்ச்சிகள் எழுச்சியுடன் துவங்கின. இசை விருந்தளித்த தாராபுரம் சுந்தரராசனுக்கு ''தமிழிசைப் பாணர்'' எனும் பெரியார் விருதை வழங்கினார் பொதுச்செயலாளர். விழாக்குழு சார்பில் இசைக் கலைஞர்களான திருப்பூர் சகோதரர்கள் எஸ்.பி. ராமு, எஸ்.பி. சாரதா ஆகியோருக்கு பொற்கிழி வழங்கப்பட்டது.

வ.உ.சி, கருத்து

இந்து சமயம் என்பதன் பொய்களையும், புரட்டுகளையும், ஆபாசங்களையும், அச்சமயப் பெயரால் செய்யப்படும் சடங்குகளின் வாயிலாகப் பிராமணரல்லாதாரின் பொருள்கள் கொள்ளையிடப்படுவதையும், பிராமணரல்லாதார் தாழ்த்தப்படுவதையும், அக்கொள்கைகளின்றும் தாழ்வினின்றும் பிராமணரல்லாதார் தப்புவதற்குரிய அவசியத்தையும் வழிகளையும் எல்லோருக்கும் விளங்க வைக்க வேண்டியது நமது முக்கிய கடமையாகும்.

-வ.உ. சிதம்பரனார்
7.10.1927
('விடுதலை', 30.7.1947)

WITH BEST COMPLIMENTS FROM



Phone : 23917

L.S.R. WELDING WORKS

Steel fabricators, Grill and Truss Works etc.

63-A Bishop Road, Puthur,
Tiruchy - 17

With Best Compliments From

TNGST : 552403
CST : 351403
TNETA : 616 / W / VLR
IAC 5 01 01

Phone Off : 23745
Res : 21375

Dt. 8-7-92

ELANGO OIL REFINERIES

DOUBLE REFINED EDIBLE OIL

M G S

34/A, RAMURHTY STREET
MULLIPALAYAM
VELLORE - 632 008
N.A.A. DISTRICT, TAMILNADU

21.1.93

தமிழிசை விழா - 3ஆம் நாள்

இசை விருந்து அளித்த டி.கே.எஸ். கலைவாணனுக்கு ''தமிழிசைப் பாணர்'' எனும் பெரியார் விருதை வழங்கிய கழகப் பொதுச் செயலாளர், இசைப் புலவர் ஏ.கே. காளிஸ்வரனுக்குப் பொற்கிழியும் வழங்கினார்.

25.1.93

இந்தித் திணிப்பை எதிர்த்து டி.வி. நிலையங்கள் முன் ஆர்பாட்டம்

தொலைக்காட்சியில் நடக்கும் இந்தித் திணிப்பு, மதவெறிப் பிரச்சாரம் முதலியவற்றை எதிர்த்து சென்னை தொலைக்காட்சி நிலையம் முன் கழக சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் நடந்தது. இதேபோல் குடந்தை, நெய்வேலி, புதுவை, கொடைக்கானல், ஊட்டி, கோவை, பாளையங்கோட்டை, கடலூர், தர்மபுரி ஆகிய ஊர்களின் தொலைக்காட்சி அஞ்சல் நிலையங்கள் முன்பும் ஆர்ப்பாட்டங்கள் நடந்தன.

சென்னை ஆர்ப்பாட்டத் தலைமை- கழக தலைமை நிலையச் செயலாளர் ஆனூர் ஜெகதீசன்

26.1.93

மதவெறி மாய்ப்போம்: 2-ஆம் கட்ட பிரச்சாரம்

''மதவெறியை மாய்ப்போம்; மனித நேயம் காப்போம்'' எனும் கொள்கை முழக்க இரண்டாம் கட்ட சுற்றுப்பயணத்தைக் கரூரில் துவக்கினார் கழகப் பொதுச் செயலாளர்.

பிரச்சாரக் குழுக்கள் சென்ற இடங்களிலெல்லாம் மக்கள் பேராதரவு நல்கினர்.

கரூரில் நடந்த வட்டாரக் கழக மாநாட்டில் எழுச்சியுரையாற்றினார் கழகப் பொதுச்செயலாளர். புதுக்கோட்டை மாவட்டத்தில் இது முடிந்தது.

2ஆம் நாள் சுற்றுப் பயணம் திண்டுக்கல் - அண்ணா மாவட்டத்தின் மூலை முடுக்குகளிலெல்லாம் நடந்தன. வட்டார மாநாடு திண்டுக்கல்லில்.

3ஆம் நாள் பயணம் - இராமநாதபுரம் மாவட்டத்தில்.

எல்லா மாவட்டத் தலைநகரங்களிலும் நடந்த வட்டார மாநாடுகளில் கழகப் பொதுச்செயலாளர் உரை கேட்க மக்கள் திரண்டனர்.

3.2.93

அண்ணா நினைவுநாள்

பேரறிஞர் அண்ணாவின் 24ஆம் நினைவு நாள் இன்று. சென்னை அண்ணா சதுக்கத்தில் கழக சார்பில் மலர் வளையங்கள் வைக்கப்பட்டன. சேலத்திலிருந்து பொதுச்செயலாளர் அங்குள்ள அண்ணா சிலைக்கு மாலை அணிவித்தார்.

8.2.93

உள்ளிக்கோட்டை மாநாடு

கழக வட்டார மாநாடு மன்னை வட்டம் உள்ளிக்கோட்டையில் எழுச்சியுடன் நடந்தது. அய்யா முழு உருவச்சிலையைத் திறந்தார், கழகப் பொதுச்செயலாளர்.

10.2.93

இந்தி எழுத்து அழிப்பு

தமிழ்நாடு முழுவதும் தொலைக்காட்சியில் இந்தித் திணிப்பை எதிர்த்து போராட்டக்களம் சென்ற கழகத் தோழர்கள் கைது செய்யப்பட்டனர். சென்னையில் பொதுச் செயலாளர் கைதானார்.

முதலாளி பாட்டாளி நிலை!

பொருளாதார தன்மையில் முதலாளி, பாட்டாளி (தொழிலாளி) என்கிற பிரிவும், மக்களிடத்தில் மக்களுக்கு ஒற்றுமை அன்பு ஏற்பட வளர இடமில்லாமல் குரங்காட்டிக்கும் குரங்குக்குமுள்ள சம்பந்தம்போல், ஒருவருக்கொருவர் உஷாராய்ப் பிழைக்க வேண்டியதிருக்கிறது.

-தந்தை பெரியார்

('குடியரசு' 15.6.46 பக்கம் 42)

WITH BEST COMPLIMENTS FROM

M. KARUNAMURTHY

(Union Organiser, D.K. Youth Wing)

Electrical Contractor P.W.D. & N.L.C

15/22, Reddiyar Street, Vadalur - 607 303, S.A. Vallalar Dt.

Best Compliments From



HOTEL DURAI

S.S. SUBBARAYAN BUILDING

17, IMPERIAL ROAD

CUDDALORE-607 002

கழக தலைமை நிலையச் செயலாளர் கலி.பூங்குன்றன், தார் சட்டி மற்றும் ப்ரஷை பொதுச் செயலாளரிடம் அளித்தார்.

ரயில் நிலையங்கள் மற்றும் அஞ்சல் நிலைய இந்தி எழுத்துக்கள் அழிக்கப்பட்டன.

21.2.93

மதவெறியை மாய்ப்போம்: மூன்றாம் கட்ட பயணம்

இந்த 3ஆம் கட்டப் பயணம் இன்று துவங்கி 25 வரை நீடித்து எழுச்சியை ஏற்படுத்தியது. திருச்சி கிழக்கு, அரியலூர், தென்னாற்காடு தெற்கு, தென்னாற்காடு வடக்கு, திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டங்களில் பிரச்சாரப் படையினர் எழுச்சியோடு நிகழ்ச்சிகளை நடத்தினர். அய்ந்து மாவட்டங்களிலும் முறையே திருச்சி வெல்லமண்டி, அரியலூர், விருத்தாசலம், திருக்கோயிலூர், திருவண்ணாமலை ஆகிய இடங்களில் நடந்த கழக வட்டார மாநாடுகளில் கழகப் பொதுச் செயலாளர்மீது மக்கள் பாசமழை பொழிய, கருத்து மழை பொழிந்தார் பொதுச்செயலாளர்.

27.2.93

நோய் பரிசோதனை மய்யம்

பெரியார் மருத்துவ அறப்பணிக் கழக சார்பில் லாப நோக்கற்ற அறப்பணிமய்யமாக சென்னை பெரியார் திடலில் பெரியார் நோய் பரிசோதனை மய்ய துவக்க விழா நடந்தது. கழகப் பொதுச்செயலாளர் வரவேற்புரையாற்ற, விழாத் தலைமை - எஸ்.ராசரத்தினம். மய்யத்தைத் துவக்கி வைத்தார், டாக்டர் மதன கோபால்.

7.3.93

உலகத் தமிழர் மாநாட்டில்

மார்ச் 5 முதல் 7 வரை சென்னை தேனாம்பேட்டை காமராசர் நினைவகத்தில் உலகத் தமிழர் மாமன்றத்தின் சார்பில் உலகத் தமிழர் மாநாடு நடந்தது. மாநாட்டு நிறைவு நாளில் 15 மணித் துளிகளே எழுச்சியுரையாற்றினார் கழகப் பொதுச்செயலாளர். அந்த 15 மணித்துளிகளும் ஒரே எழுச்சிமயம். பல தரப்பினரும் கரவொலி எழுப்பி பொதுச் செயலாளர் உரையை வரவேற்றனர்.

8.3.93

திருச்சி பெரியார் மாளிகை வளாகத்தில் அய்யா சிலை

திருச்சி பெரியார் மாளிகையில்-

பெரியார் ஆசிரியர் பயிற்சி நிறுவனத்தின் சார்பில் அமைக்கப்பட்டிருந்த தந்தை பெரியார் முழு உருவச்சிலையை கழகப் பொதுச்செயலாளர் திறந்துவைத்தார்.

10.3.93

அம்மா 74-ஆம் பிறந்தநாள்

அன்னை மணியம்மையார் 74 ஆம் பிறந்தநாள் விழா நாடு முழுக்க இன்று சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

சென்னை பெரியார் திடலில் அலங்கரிக்கப்பட்டிருந்த அம்மா படத்திற்கு கழகப் பொதுச் செயலாளர் மாலை அணிவித்தார்.

13.3.93

காவிக்கொடிகள் எரிப்பு

மதவெறி மாய்ப்போம் என்ற முழக்கத்தோடு பொதுச்செயலாளர் மேற்கொண்டுவரும் தீவிரப் பிரச்சாரப் பயணத்தை ஒட்டி கழக வட்டார மாநாடு கோவையில் இன்று மக்கள் கடல் அலையடிக்க நடந்தது.

சூத்திரர்கள் நிலை

''நவ இந்தியாவைவிட பண்டைய இந்தியா சிறந்து விளங்கிற்கு என்று எண்ணம் கொள்வதே தவறு; அன்றைய இந்தியாவில் 70 விழுக்காடு உள்ள மக்கள் சூத்திரர்களாகவே, முன்னேற்றத்திற்கு வாய்ப்பில்லாமல் இருந்து வந்தார்கள். ஆனால் இன்றோ ஒவ்வொருவருக்கும் முன்னேறும் வாய்ப்பு இருந்து வருகிறது.''

நீதிபதி ஏ.எஸ்.பி, அய்யர்

(பாலக்காட்டில் 4.2.1959ல்)

''குலதர்ம எதிர்ப்பு மாநாடு, காவிக் கொடி எரிப்பு'' எனும் திட்டத்தை இம்மா நாட்டில் அறிவித்தார் பொதுச்செயலா ளர்.

14.3.93

தாராபுரம் மாநாடு

நான்காவது கட்ட மனித நேயபிரச்சா ரத்தின் மூன்றாவது வட்டார மாநாடு தாரா புரத்தில் எழுச்சியோடு நடந்தது. மதவெ றிக் கும்பலின் விஷமத்தனமான துண்ட றிக்கைக்குக் கழகப் பொதுச் செயலாள ரின் உரை பதிலடியாக விளங்கியது.

15.3.93

ஓமலூரில் கழக மாநாடு

''மத வெறி மாய்ப்போம்'' பெரும் பய ணத்தின் நான்காவது கட்ட பிரச்சார நான் காவது வட்டார மாநாடு சேலம் மாவட் டக் கழக சார்பில் ஓமலூரில் சிறப்பாக நடந்தது. பொதுச்செயலாளருக்கு உற் சாக வரவேற்பளிக்கப்பட்டது.

16.3.93

அம்மா நினைவுநாள்

அன்னை மணியம்மையார் நினைவு நாளான இன்று காலை, சென்னை பெரி யார் திடலில் அன்னை மணியம்மையார் உருவப்படத்திற்கு கழக மகளிரணி மாநி லச் செயலாளர் க.பார்வதி, மலேசிய கழக முன்னோடி ''திருச்சுடர்'' கே.ஆர்.ஆர். ஆகியோர் மாலைகள் அணிவித்தனர்.

அன்னை மணியம்மையார் நினைவி டத்தில் கழக தலைமை நிலையச் செயலா ளர் கலி. பூங்குன்றன் மலர் வளையம் வைத்து மரியாதை செய்தார். கழகக் குடும்பங்கள் உறுதிமொழி எடுத்தனர்.

16.3.93

கிருட்டிணகிரி மாநாடு

மதவெறி மாய்ப்போம் நான்காம் கட்ட பிரச்சாரத்தின் கடைசி வட்டாரக் கழக மாநாடு கிருட்டிணகிரியில் எழுச்சியுடன் நடந்தது.

பொதுச் செயலாளர் பேசி முடித்ததும் மக்கள் திரள் கலைய வெகு நேரமானது.

27.3.93

தாம்பரத்தில் வட்டார மாநாடு

''மதவெறியை மாய்ப்போம்; மனித நேயம் காப்போம்'' கழக தீவிர பிரச்சார 5ஆம் கட்ட மூன்றாம் நாள் மாநாடு தாம்ப ரம் மாவட்டக் கழக சார்பில் தாம்பரத்தில் எழுச்சியுடன் நடந்தது.

பொதுச்செயலாளர் உரைகேட்க பல் லாயிரமாய் மக்கள் திரண்டிருந்தனர்.

29.3.93

ஆசிரியர் பயின்ற பள்ளி

தான் படித்த கடலூர் ''தூய தாவீது மேனிலைப் பள்ளி''க்கு சுமார் 45 ஆண் டுகள் கழித்து இன்று கழகப் பொதுச் செயலாளர் சென்றார்.

திருச்சி ''வீகேயென்'' ஸ்ட்ரக்சுரல் உரி மையாளர் எல்.கண்ணப்பனால் உரு வாக்கப்பட்ட ''வீரமணி அறக்கட்டளை'' சார்பில் இப்பள்ளிக்கு நிரந்தர வைப்பு நிதியாக ரூ.25 ஆயிரம் வழங்கப்பட்டது. இதற்காக தொழிலதிபர் கண்ணப்பனுக்கு பாராட்டுவிழா பள்ளியில் நடந்தது.

30.3.93

மறியல் போராட்டம்

இடஒதுக்கீடு உரிமைகளை வலியு றுத்தி மாவட்டத் தலைநகர டில்லி அரசு அலுவலகங்கள் முன் மறியல் போராட் டத்தை ஏப்ரல் 23ஆம் தேதி நடத்துவ தென சென்னையில் பொதுச் செயலாளர் தலைமையில் கூடிய ஒடுக்கப்பட்ட சமூக அமைப்புகள் கூட்டத்தில் தீர்மானிக்கப் பட்டது.

30.3.93

ஆவடியைக் குலுக்கிய மாநாடு

'மதவெறி மாய்ப்போம்' கழக தீவிர பிரச்சார பயணத்தின் இறுதி வட்டார மாநாடு ஆவடியில் எழுச்சியோடு நடந் தது.

புதிய அகராதி

'குடி அரசு', 3-6-1928



மந்திரவாதி

ஏமாந்த சோணகிரிகளிடம் பணம் பறிக்கும் எத்துக்காரன்.

வைத்தியர்

உலகில் அதிக ஜனங்கள் நிறைந்து விடாதபடி தடுப்பதற்குத் தோன்றிய உத்தியோகஸ்தர்கள்.

ஜோஸ்யன்

புத்தியுள்ளவனையும் குருடனாக்க வந்த ஜகஜால புரட்டன்.



பால்ய விதவை

இரக்கமற்ற பாவிகள் பலர் இருக்கிறார்கள் என்பதைக் காட்டிக்கொள்ள ஏற்படுத்திய உருவச்சிலை.

— "திராவிடன்" —

பிராமணரல்லாதார் முன்னேற்றம் அடைய வழி.

"குடி அரசு"

மூட நம்பிக்கையையும் குருட்டு பழக்க வழக்கங்களையும் பார்ப்பனரின் தரகையும் ஒழிக்க வழிகாட்டி.



பஞ்சாங்கக்காரன்

எல்லாருடைய இழவு, கலியாணம், கருமாதி ஆகிய எல்லாவற்றிலும் கலந்துகொண்டு பாவ மூட்டை கட்டி அனுப்புகிற தபால் அதிகாரி.

சத்திய வாக்குப் பிரமாணம்

பொய் பேசப் பழகுதற்கு கண்டுபிடிக்கப்பட்ட குறுக்கு வழி.



திருவிழா

தனித்தனியாகப் பிரிந்து நின்ற பஞ்சமா பாதகங்களும் கூடுவதற்கான கான்பரன்ஸ்.



சீட்டுக்கட்டு

பொழுது சீக்கிரம் தொலைவதற்கு சோம்பேறிகளால் கண்டுபிடிக்கப்பட்ட ஒருவித குட்டைப் புராணம்.

பிள்ளைக்கு முடிவைத்தல்

பெண் ஊர் பயணம் போவதற்காகக் கண்டுபிடித்த குறுக்குவழி.



காபி கிளப்

சில தடி பிராமணரால் ஏற்படுத்தப்பட்ட பகிரங்க கள்ளுக் கடை; குருட்டு பிராமண ஆசாரத்தை உடைத்தெறிய 'கடவுளால்' அனுப்பப்பட்ட காதகன்.

பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியார்
115-வது பிறந்த நாள்
"விடுதலை" சிறப்பிதழ் சிறக்க
நல்வாழ்த்துகள்

* * *

சென்னை பெருநகர்
மதுரை மாநகர்
பெங்களூர் அருகில்
ஓசூர் புதுநகரில்

அரசு அங்கீகாரம் பெற்ற சிறந்த வீட்டு மனைகள் குறைந்த விலையில் வாங்க நம்பகமான நிறுவனம்

LEO HOUSING (P) LTD

லியோ

ஹவுசிங் (பி) லிட்
&
லியோ ரியல் எஸ்டேட்ஸ்
HO 8/1, மேட்லி ரோடு
தியாகராயர் நகர், சென்னை - 17.
போன்: 442881 & 443979

கிளைகள்

184/15, 5th மெயின் ரோடு
4-வது பிளாக்
ஜெயநகர், பெங்களூர் - 11
போன்: 635623

27/1, T.P.K. ரோடு
(போலீஸ் கிளப் கட்டடம்)
மதுரை - 1
போன்: 38449

சாபமோ சாபம்!

அக்னி : தேவேந்திரா, கடலுக்குள் ஒளிந்து கொண்டிருக்கும் அசுரரை அழிக்கும் பொருட்டு உன் சொற்படி கடலினை வற்றச் செய்வேனேயானால் தேவாம்சம் பொருந் திய பல கடலுயிர்கள் மாண்டு விடுமே?

இந்திரன் : என் சொல்லை மீறும் அக்னியே, நீ பூவுலகில், (அகத்தியனாய்) கும்பத்திற் பிறந்து கடல்நீர் முழுவதும் குடிப்பாயாக !

(அக்னி புராணம்)

கவுதமமுனி : என்போல் உருக்கொண்டு கள்ளத்தனமாய் என் மனைவியைப் புணர்ந்து விட்டு பூனையாகி ஓடும் இந்திரனே, உன் ஆண் குறி அற்று விழட்டும் ! ஆயிரம் பெண் குறிகள் உன் உடம்பெங்கும் உண்டாகட்டும்.

(வான்மீகி இராமாயணம்)

பார்வதி : குமார சம்பவ நெடுங்கலவியின போது என் நடுக்கத்தால் கழன்றோடிய சிலம்பிலிருந்து தோன்றிய நவமணிப் பெண்களே, சிவமூர்த்தி உங்களைப் பார்த்த நொடியிலேயே கருக்கொண்டு விட்டீர்களடி ! ...... கருக்கள் உருக்கள் ஆகாதழிக !

(குமார சம்பவம்)

இராதை : அடி, திருடி! தட்சிணாதேவி, நானில்லா நேரத்தில் என் கிருஷ்ணனிடம் வந்து ரமித்துக் கொண்டா இருக்கிறாய்? இனி, நீ கோகுலத்தில் இருந்தால் பஸ்பமாகக் கடவாய் !

(அபிதான சிந்தாமணி)



பிரமன் : மரீசி ரிஷிக்கும் ஊர்ணைக்கும் பிறந்த குறும்பு மக்காள் ! நான் என் மகளுடன் புணர்ந்ததைக் கண்டு சிரிக்கவா செய்தீர்கள்? நீங்கள் அறுவரும் அசுர யோனியில் பிறப்பீர்களாக !

(பிரமபுராணம்)



ஊர்வசி : காலகேயர் வதத்திற்காக இந்திரனால் வரவழைக்கப்பட்ட அர்ச்சுனா, என்னைப் புணர மறுத்த நீ பேடியாகக் கடவாய் !

(வியாச பாரதம்)

மதுசூதனன்: அவந்தி நாட்டரசன் சுலபா ! நான் யாசித்தல் கண்டு எள்ளி நகையாடிய நீ எருதாகுக!

சுலபை: என் கணவனைப் பொறுத்தருள மறுத்த நீ கழுதையாகுக !

(அபிதான சிந்தாமணி)



வசிஷ்டன்: வெங்கொடுமைகளால் அரிச்சந்திரனைத் துடிக்கவிட்ட விசுவாமித்திரா, நீ கொக்காகக் கடவது !

விசுவாமித்திரன்: வம்புக்கார வசிஷ்டா, நீ ஆமையாகுக !

(அரிச்சந்திரபுராணம்)

கடந்த சனவரி 3 முதல் கன்னியாகுமரியில் மனித நேயப் பிரச்சாரப் பெரும் பயணம் துவங்கியது. முதல் வட்டார மாநாடு நடந்த இடம் நாகர்கோயில். 25ஆவது வட்டாரக் கழக மாநாடு ஆவடியில் தனி முத்திரை படைத்தது.

2.4.93

தஞ்சை தமிழில் பல்கலைக்கழகம்

தஞ்சாவூரில் உள்ள தமிழகப் பல்கலைக்கழகத்திற்கு வருகை தந்த கழகப் பொதுச்செயலாளருக்கு-

பல்கலைக்கழக துணை வேந்தர் டாக்டர் அவ்வை நடராசன், பதிவாளர் ரங்கன் மற்றும் ஊழியர்கள் உற்சாக வரவேற்பளித்தனர்.

3.4.93

இசைக்கு ஓர் அந்தி

தந்தை பெரியார் தமிழிசை மன்ற சார்பில் 'இசைக்கு ஓர் அந்திப் பொழுது' எனும் தமிழிசை நிகழ்ச்சி சிறப்பாக நடைபெற்றது. பொதுச் செயலாளர் தலைமையில் நடந்த நிகழ்ச்சி இது. இசை விருந்தளித்தவர் - தமிழ்நாடு இசைக்கல்லூரி முதல்வர் திருப்பாம்பரம் சண்முகசுந்தரம்.

3.4.93

மறைமலை நகர் மோசடி

செங்கை எம்.ஜி.ஆர். மாவட்டம் மறைமலை நகரில் திடீர் நரசிம்மசாமி என்றும்; பூமிக்குள்ளிருந்து பொத்துக் கொண்டு வெளியில் வந்தது என்றும் புரளியைக் கிளப்பி மக்களிடையே மோசடி வியாபாரம் ஒன்றை பார்ப்பனர் ஒருவர் நடத்த ஆரம்பித்தார்.

இந்த மோசடியை விளக்கி காட்டாங்கொளத்தூர், மறைமலை நகர் ஆகிய இடங்களில் குடுகுடுப்பை வேடம் அணிந்து சென்னை மாவட்ட திராவிடர் கழக அமைப்பாளர் இனமான நடிகர் எம்.ஏ.கிரிதரன் 3.4.93 முழுவதும் பிரச்சாரம் செய்தார். தலைமை நிலையச் செயலாளர் ஆனூர் ஜெகதீசனும் ஆங்காங்கே பிரச்சாரம் செய்தார். இரவு மாபெரும் பொதுக்கூட்டம் காட்டாங்கொளத்தூரில் நடந்தது.

5.4.93

தில்லை வில்லாளன்

திராவிடர் இயக்க எழுத்தாளர் வழக்கறிஞர் தில்லை வில்லாளனின் 65ஆம் பிறந்த நாள் விழா பெரியார் திடலில் சிறப்புற இன்று நடந்தது.

பெரியாருக்கு காமராசர் அழைப்பும்

''இனிமேல் நம் நாட்டில் கட்சி வேற்றுமை கூடாது. நமது நாட்டில் உள்ள எல்லா மக்களும் ஒன்றுபட்டு விட வேண்டும். திரு. ஈ.வெ.ரா. கூட இனி காங்கிரசில் சேரலாம். காங்கிரசில் சேரும்படி அவரை நான் கேட்டுக் கொள்கிறேன்''

திருநெல்வேலியில் காமராசர் பேச்சு. (விடுதலை 5.7.1947)

பெரியார் பதிலும்

''காங்கிரஸ் வடநாட்டாரின் ஆயுதமாகவும் அந்த ஆயுதம் இங்குள்ள பார்ப்பனர்களுக்கு மாத்திரமே பயன்படக்கூடிய வகையில் அமைக்கப்பட்டதாகவும் இருப்பதனால், அது நமக்கு அவ்வளவு பயன்படாது என்றும் சொல்லுவதோடு அப்படிப் பயன்படும் என்று சொல்லப்படுவதானால், குறைந்த அளவு வடநாட்டார் சம்பந்தமாவது, அவர்கள் ஆதிக்கமாவது, இல்லாதிருக்குமானால், அதாவது வடநாட்டார் பிணைப்பிலிருந்து காங்கிரஸ் விடுபடுமானால் நான் உடனே சேருவதில் ஆட்சேபணை இல்லை''

-தந்தை பெரியார்
(விடுதலை 5.7.1947)

6.4.93

திடீர் கடவுளை எதிர்த்து எழுச்சியான ஆர்ப்பாட்டம்

மறைமலைநகர் திடீர் நரசிம்மசாமியை அப்புறப்படுத்தக் கோரும் கண்டன ஊர் வலத்தை தலைமை நிலையச் செயலாளர் கலி.பூங்குன்றன் துவக்கிவைத்தார். மறைமலை நகரில் இந்த ஆர்ப்பாட்டம் எழுச்சியூட்டியது.

8.4.93

பட்டுக்கோட்டை மாநாடு

மதவெறி மாய்ப்பு வட்டார மாநாடு தஞ்சை மாவட்டக் கழக சார்பில் பட்டுக் கோட்டையில் எழுச்சியுடன் இன்று நடந் தது.

கழகப் பொதுச்செயலாளர் எடைக்கு எடை நாணயம் வழங்கப்பட்டது. கழகத் தின் சார்பிலான 26ஆம் வட்டாரக் கழக மாநாடாக இது பொலிந்தது.

10.4.93

திராவிடர் மகளிர் விடுதலை மாநாட்டின் எழுச்சிப் பேரணி

நாகை காயிதேமில்லத் மாவட்ட திராவி டர் மகளிர் விடுதலை மாநாட்டுப் பேரணி இன்று காலை எழுச்சியுடன் துவங்கியது, எங்கு நோக்கினும் மகளிர் மயம்.

முதல் நிகழ்ச்சி-முற்பகல் 11 மணியள வில் நாகை புத்தூரில் கழகப் பொதுச்செய லாளர் தந்தை பெரியார் சிலையைத் திறந்து வைத்தார்.

ஊர்வலத்தின் முன் யானைமீது கழகக் கொடியை கம்பீரமாக ஏந்தி பெண்களே அமர்ந்து வந்தனர். தொடர்ந்து வந்த குதி ரைகளின்மீதும் பெண்களே கழகக் கொடிகளை ஏந்தி அமர்ந்து வந்தனர். பெண்களே வீரவிளையாட்டுகளையும் நடத்தி வந்தனர்.

நாகை நீதிமன்ற வாயிலுக்கு எதிரே அமைக்கப்பட்டிருந்த தனி மேடையில் இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க பேரணி யைப் பார்வையிட்டார் பொதுச் செயலா ளர்.

இந்த மாநாட்டில் கழகப் பொதுச்செய லாளர் அவர்களுக்கு "இனமானப் பேரொளி" பட்டம் பெண்களால் வழங் கப்பட்டது.

11.4.93

அரையபுரம், தேரெழுந்தூர்: அய்யா சிலை

இன்று மாலை அரையபுரத்தில் தந்தை பெரியார் சிலையைப் பொதுச்செயலா ளர் திறந்து வைத்தார்.

தேரெழுந்தூரில் மூட ஒழிப்பு ஊர்வல மும், அய்யா சிலை திறப்பு மற்றும் கழகக் கூட்டம் சிறப்புற நடந்தன.

அய்யா சிலையைக் கழகப் பொதுச்செ யலாளர் திறந்து வைத்தார்.

12.4.93

கல்வி நெறிக் காவலர்

கல்வி நெறிக் காவலர் என்.டி. சுந்தரவ டிவேலு இன்றிரவு மரணமடைந்தார். இறுதி நிகழ்ச்சிகளுக்கான ஏற்பாடுகளை கழக சார்பில் செய்வித்தார் கழகப் பொதுச் செயலாளர்.

14.4.93

அம்பேத்கர் பிறந்த நாள்

டாக்டர் அம்பேத்கர் பிறந்த நாளை யொட்டி சென்னை நேரு விளையாட்டு அரங்கு வாயிலில் அமைந்துள்ள அண் ணல் அம்பேத்கர் சிலைக்கு கழகக் குடும் பங்கள் சூழ பொதுச்செயலாளர் மாலை அணிவித்தார்.

18.4.93

குலதரும ஒழிப்பு மாநாடு: காவிக் கொடிகள் சாம்பல்

சென்னை பெரியார் திடல் பட்டம் மாள் பாலசுந்தரம் அரங்கில் கழக சார்பில் "குலதரும ஒழிப்பு மாநாடு" எழுச்சிக் கோலத்துடன் துவங்கியது.

அய்யா சிலைக்கு மாலை அணிவித்தார் பொதுச்செயலாளர். கழகக் கொடியை ஏற்றியவர் - கழக இளைஞரணி செயலாளர் உரத்தநாடு இரா.குணசேகரன். மாநாட்டுத் தலைமை - கழக மத்திய நிர்வாகக் குழு தலைவர் சிதம்பரம் கு.கிருஷ்ணசாமி.

கருத்தரங்கு நடந்தது. தலைமை - பெரியார் பேருரையாளர் ந.இராமநாதன்.

பல்வேறு நிகழ்ச்சிகளோடு இடைவேளையின்றி தொடர்ந்தது மாநாடு.

மாலை ஆறே முக்கால் மணிக்குப் பொதுச் செயலாளரின் உரை நிறைவுற்றது.

கழக மத்திய நிர்வாகக் குழு உறுப்பினர் திருப்பத்தூர் ஏ.டி.கோபால் கொண்டு வந்த 10 ஆயிரம் சரம் பட்டாசுகள் தொடர்ந்து 10 நிமிடங்கள் வெடித்தன.

காவிக்கொடியைக் கொளுத்த பெரியார் திடலில் நடுநாயகமாக அமைக்கப்பட்டிருந்த சிறப்பு மேடைக்கு கழக இளைஞர்கள் புடைசூழ பொதுச் செயலாளர் வந்த காட்சி சிலிர்க்க வைப்பதாக இருந்தது.

மாநாட்டுத் தொண்டர் படைத் தலைவர்கள் கி.இராமலிங்கம், மு.பாலகுரு ஆகியோர் தீப்பந்தம் தர ஆதிக்கச் சின்னமான காவிக் கொடிக்குகழகப் பொதுச்செயலாளர் அவர்களால் தீயிடப்பட்டது.

தொண்டர் படைத் தலைவர் ஆவடி இரா. மனோகரன் தீப்பந்தத்தை தர மற்ற கழக முன்னணியினர் காவிக் கொடிகளைப் பொசுக்கினர்.

இம்மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் முதல் சில வரிகள்:

''(அ) குலதர்ம அணியான ஆர்.எஸ்.எஸ்., விசுவ இந்து பரிஷத், பாரதீய ஜனதா, பஜ்ரங்தள், இந்து முன்னணி மற்றும் இந்த வகை அமைப்புகளுடன் நேரடியாகவோ, மறைமுகமாகவோ உறவு கொள்ளும், ஆதரிக்கும் எந்த அமைப்புகளும், நபர்களும், - தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட, சிறுபான்மை மக்கள், பார்ப்பனர் அல்லாத மக்கள் அனைவருக்கும் ஒட்டுமொத்தமான எதிரிகளே என்று இம்மாநாடு பிரகடனப்படுத்துகிறது.''

பெரியாரைக் கத்தியால் குத்த ஏற்பாடு!

''பினாங்கில் இறங்கியவுடன் பலவிதமான விஷயங்கள் காதுக்கு வந்தன. அவற்றுள் ஒன்று நம்மைக் கத்தியால் குத்துவதற்கு ஒரு நபருக்கு 500 வெள்ளி பேசி ஏற்பாடு செய்திருப்பதாகவும், நாம் போகும் இடங்களிலெல்லாம் கலகம் செய்வதற்கும், துண்டுப் பிரசுரங்கள் போட்டு வழங்கி வருவதற்கும் 500 வெள்ளி பேசி பலரை நியமித்து இருப்பதாகவும், மற்றும் கிறிஸ்துவுக்கு விரோதமாய்ப் பேசினதாகவும், சொன்னதாகவும், முகம்மது நபிக்கு விரோதமாகப் பேசினதாகவும், இந்து மதத்தை ஒழித்து இந்துக்களை முகம்மதிய மதத்தில் சேர்ப்பிக்க முகம்மதியரிடம் பணம் வாங்கிக் கொண்டு மலாய் நாட்டிற்கு வருவதாகவும், பிரிட்டிஷ் அரசாங்கத்திற்கு விரோதமாய் ஒத்துழையாமைப் பிரச்சாரம் செய்ய வருவதாகவும், போல்ஷிவிசம் பிரச்சாரம் செய்ய வருவதாகவும், இன்னும் பலவிதமாகத் துண்டுப் பிரசுரங்கள் மூலமாகவும், பத்திரிகை மூலமாகவும் பிரச்சாரம் செய்திருந்த விஷயம் நேரில் பார்த்தோம்.

தவிரவும் அவ்விடத்திய ஓர் ஆங்கில தினசரிப் பத்திரிகை, அரசாங்கத்திற்கும், சட்டசபை அங்கத்தினர்களுக்கும் நாம் பெரிய கலகக்காரர் என்றும், நம்மை மலாய் நாட்டில் விட்டால் ஜனசமூகத்தின் சாந்த இனம் கெட்டு, சர்க்காருக்குத் தொல்லை ஏற்படுமென்றும், எச்சரிக்கை செய்வதாக ஒரு வாரம் தவறாமல் தலையங்கமும், உபதலையங்கமும் எழுதி வந்தது.

இது நிற்க. 'தமிழ்நேசன்' பத்திரிகைக்காரரான ஓர் அய்யங்கார், ஊர் ஊராகச் சுற்றிப் பிரச்சாரம் செய்ததுடன், தனது பத்திரிகையில் கடவுளுக்கும் மதத்துக்கும் ஆபத்து என்று தினப்படி எழுதிக்கொண்டே வந்தார்.

தவிர இவ்வளவும் பேசாமல், திரு.வரதராசுலு நாயுடுவின் பேப்பரும், மருந்து விற்கும் ஆட்களும், கூலிகளும் விஷமப் பிரச்சாரம் அதாவது, 'தோட்டக் கூலிகளைக் கிளப்பிவிட்டுத் தோட்டக்காரருக்குத் தொல்லை விளைவிப்பான்' 'இவன் காந்தி, மனிதன்' என்று சொல்லி வந்தார்களாம்.''
(9.2.30 'குடி அரசு' தலையங்கத்தின் ஒரு பகுதி)

இப்பயணம் அயல் மண்ணில் வாழ்கின்ற தமிழர்களிடம் மட்டுமல்லாமல் அங்கு வாழ்ந்த சீனர், ஜப்பானியர் முதலானவர்களிடமும் சுயமரியாதை இயக்கத்தை அறிமுகம் செய்வித்தது.

-ந.க. மங்கள முருகேசன் எழுதிய 'சுயமரியாதை இயக்கம்' நூலிலிருந்து
(பக்.304-305)

19.4.93

தில்லை வில்லாளன்

பெரியார் இலவச சட்ட உதவி மய்யத் தலைவர் பொறுப்பை வழக்கறிஞர் ஆர். தில்லை வில்லாளன் ஏற்றார்.

23.4.93

மண்டல் கமிஷனுக்காக மறியல்

மண்டல் குழு பரிந்துரைகளை அமுல் படுத்துதல், பதவி உயர்விலும் இட ஒதுக் கீடு கோருதல், இட ஒதுக்கீடு 50 சதவீதத் திற்கு மேல் போகக்கூடாது என்கிற உச்ச நீதிமன்ற தீர்ப்பை மாற்றுதல், பிற்படுத் தப்பட்டோர்களுள் பொருளாதார அளவு கோல் காட்டி இட ஒதுக்கீடு பெற முடியா மல் ஆக்கும் உச்சநீதிமன்ற தீர்ப்புக்குத் திருத்தம் செய்தல் இவற்றை உள்ளடக் கிய கோரிக்கைகளுடன் திராவிடர் கழகம், தாழ்த்தப்பட்ட - பிற்படுத்தப்பட்ட சமூக அமைப்புகள் இணைந்து இன்று தமிழ் நாடு முழுவதும் மாவட்ட தலைநகரங்க ளில் மத்திய அரசு அலுவலகம் முன் மறி யல் போராட்டத்தில் ஈடுபட்டது.

இன்று முற்பகல் 11 மணிக்கு சென்னை பெரியார் திடலிலிருந்து கழகப் பொதுச் செயலாளர் தலைமையில் ஊர்வலம் புறப்பட்டது.

வன்னியர் சங்கத்தின் மாநிலத் தலை வர் சா.சுப்பிரமணியம் அய்.ஏ.எஸ்., (ஓய்வு) ஊர்வலத்தைத் துவக்கி வைத் தார்.

ஊர்வலம், சென்னை மாநகராட்சி கட் டடமான ரிப்பன் பில்டிங்கோடு நிறுத்தப் பட்டு ஏராளமான தோழர்கள் கழகப் பொதுச் செயலாளரோடு கைது செய்யப் பட்டனர்.

மாவட்டத் தலைநகர்களிலும் இந்தக் கிளர்ச்சி நடந்தது.

காலையில் கைதானோர் மாலையில் விடுவிக்கப்பட்டனர்.

23.4.93

பிரதமருக்குத் தந்தி

காஞ்சி மடத்திற்கு வரும் திட்டத்தைக் கைவிட வலியுறுத்தி பிரதமர் நரசிம்மரா விற்குத் தந்தி அனுப்பினார் பொதுச்செய லாளர்.

27.4.93

தியாகராயர் பிறந்த நாள்

வெள்ளுடைவேந்தர் சர்.பிட்டி. தியாக ராயரின் 142ஆவது பிறந்தநாளான இன்று காலை, சென்னை மாநகராட்சி மன்ற வளாகத்தில் அமைந்த தியாகராயர் சிலைக்கு கழக சார்பில் கழக தலைமை நிலையச் செயலாளர் கலி.பூங்குன்றன் மாலையணிவித்தார்.

27.4.93

பெரியார்-மணியம்மை பொறியியற் கல்லூரி பட்டமளிப்பு

பெரியார்-மணியம்மை மகளிர் பொறி யியற் கல்லூரியின் முதலாம் பட்டம ளிப்பு உரையை, அண்ணா பல்கலைக்க ழக துணைவேந்தர் டாக்டர் மு. அனந்த கிருட்டினன் நிகழ்த்தினார்.

28.4.93

புரட்சிக் கவிஞர் விழா

புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் விழா, சென்னை, கலைஞர் கருணாநிதி நகர் பார திதாசன் குடியிருப்பில் தமிழர் கலை பண் பாட்டுப் புரட்சி விழாவாக எழுச்சியுடன் துவங்கியது.

அடையாறு மாணவர் நகலக உரிமை யாளர் அருணாசலம், 'இலக்கிய வீதி' இனியவன், மு.வே. கங்காதரன் ஆகி யோரின் பொதுநல உணர்வைப் பாராட்டி கழகப் பொதுச்செயலாளரால் சால்வைகள் அணிவிக்கப்பட்டன.

29.4.93

புரட்சிக் கவிஞர் சிலைக்கு

புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் பிறந்த நாள் இன்று. சென்னை காமராசர் சாலை

'குடிஅரசு' பற்றி சிங்காரவேலனார்



தோழர் சிங்காரவேலர் 30.4.1933 அன்று 'குடிஅரசி'ல் 'சமதர்ம விஜயம்' என்னும் தலைப்பில் ஓர் தலையங்கம் தீட்டினார். அதில்,

''நமது 'குடிஅரசு' யாதொரு சுயநலமும் கருதாது, தேச நலத்திற்கே உழைத்து வந்ததின் முக்கிய பயன்களில், நமது நாடு முழுமையும் சமதர்மப் போரொலி முழங்குவதே பெரும் பயனாகும்'' என்று பாராட்டினார்.

இந்தியப் பொதுவுடைமை இயக்கத்தின் முன்னோடிகளில் ஒருவரான அவர் மேலும் கூறுவதைக் கேட்போம்.

''ஒரு காலத்தில் உலகம் முழுமையுமே பரவப்போகிற சமதர்ம இயக்கத்தைத் தமிழ நாட்டில், இவ்வளவு சிறிய காலத்தில் நாடு முழுமையும் விளங்கச் செய்து வருவது 'குடிஅரசி'ன் மகத்துவமேயாகும். நமது காலத்தில் இதற்கு இணை இல்லையென்றே சொல்லலாம்.

''தேசிய பத்திரிகைகளும் அயல்நாட்டார் பத்திரிக்கைகளும் ஒரு கூட்டத்தார் நலத்தைக் கோரி, அவர்களை ஆதரித்து வந்திருக்க 'குடி அரசு' ஒன்றே ஏழைத் தொழிலாளர்பாலும் விவசாயிகள்பாலும் திக்கற்றவர்பாலும் தாழ்த்தப்பட்டவர்கள்பாலும் பரிந்து பேச வந்திருக்கின்றது. சுருங்கச் சொல்ல வேண்டுமானால் பாமர மக்களை ஆதரித்துப் பேச தமிழ்நாட்டில் 'குடிஅரசு' ஒன்றே உள்ளது.

''எங்கும் பல்லாயிரம் மக்களது அறிவை விசாலப்படுத்தியும் பகுத்திறிவைத் தூண்டியும் மதப் பற்றையும் மத வைராக்கியத்தையும் குறையச் செய்து வந்திருக்கிறது. உயர்ந்த சீர்திருத்தங்களுக்கெல்லாம் உதவியாக நின்று வருவது நம் 'குடிஅரசு'.

''மதங்களின் மேல் வைத்துள்ள பற்று 'குடிஅரசி'ன் கட்டுரைகளால் குறைவு பெற்று வருவதற்கு சந்தேகமில்லை.

''இன்று நமது இயக்கம், தமிழ்நாட்டிற்கு ஒரு பெரிய் சண்டமாருதமெனக் கருதும்படி ஆயிற்று.''

நூல்: பெரியாரும் சமதர்மமும், பக்.60
ஆசிரியர்: நெ.து. சுந்தரவடிவேலு

யில் உள்ள புரட்சிக் கவிஞர் சிலைக்கு கழகப் பொதுச் செயலாளர் மாலை அணிவித்தார்.

29.4.93
புரட்சிக் கவிஞர் விழா: 2 ஆம் நாள் நிகழ்ச்சிகள்

புரட்சிக் கவிஞர் விழா 2 ஆம் நாள் நிகழ்ச்சிகள் பெரியார் திடலில் துவங்கின. நாட்டுப்புறக் கலை வல்லுநர் புஷ்பவனம் குப்புசாமிக்கு கழகத் துணைப் பொதுச் செயலாளர் வழக்கறிஞர் கோ. சாமிதுரை சால்வை போர்த்தினார்; அய்யா உருவம் பொறித்த தஞ்சாவூர் தட்டினை வழங்கினார். அடுத்து ''வளர் தொழில்'' பத்திரிகை ஆசிரியர் செயகிருட்டிணனுக்கு கழக சட்டத்துறை செயலாளர் வழக்கறிஞர் செ. துரைசாமி சால்வை போர்த்தி தஞ்சாவூர் தட்டு தந்தார்.

அடுத்து 'எமரால்டு' கோபாலகிருட்டிணனுக்கு தலைமை நிலையச் செயலாளர் ஆனூர் ஜெகதீசன் சிறப்பு செய்தார். வானொலியில் 'இன்றொரு தகவல்' தொகுப்பாளர் தென்கச்சி கோ. சாமிநாதனுக்கு பொறியாளர் சோ. ஞானசுந்தரம் சால்வை போர்த்தி நினைவுப் பரிசினை வழங்கினார். திரைப்பட இயக்குநர் வி. சேகருக்குத் 'சீர்திருத்த ஒளி' என்ற விருதும், நடிகர் 'காகா' ராதாகிருட்டிணனுக்கு 'நகைச்சுவை நாயகம்' விருதும், நடிகர் சத்தியராஜுவிற்கு 'இனமுரசு' விருதினையும் பொதுச் செயலாளர் வழங்கினார்.

30.4.93
பெரம்பூரில் புரட்சிக் கவிஞர் விழா

சென்னை பெரம்பூர் வடிவேல் தெருவில் புரட்சிக் கவிஞர், டாக்டர் அம்பேத்கர் பிறந்தநாள் விழாக்கள் பொலிந்தன.

சிறப்புரை - தமிழினக் காவலர் கி. வீரமணி.

4.5.93

வாடிப்பட்டியில் மாநாடு

கழக வட்டார மாநாடும், மூட நம்பிக்கை ஒழிப்பு ஊர்வலமும் எழுச்சியுடன் நடந்தன. பெரியார் பெருந்தொண்டர் வாடிப்பட்டி சுப்பையா கல்வெட்டினை கழகப் பொதுச் செயலாளர் திறந்து வைத்தார்.

6.5.93

எய்ட்ஸ் நோய் தடுப்பு மய்யம்

பெரியார் மருத்துவ அறப்பணிக் கழக சார்பில் எய்ட்ஸ் நோய் தடுப்பு மய்யத் துவக்க விழா சென்னை பெரியார் திடலில் இன்று மாலை நடந்தது.

எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் டாக்டர் பி.பி. ராசன் இந்த மய்யத்தை துவக்கி வைத்தார்.

7.5.93

பிரதமருக்கு கறுப்புக் கொடி

காஞ்சிபுரம் சங்கராச்சாரி நூற்றாண்டு விழாவில் பங்கேற்க பிரதமர் நரசிம்மராவ் வருவதை எதிர்த்து இரண்டாயிரத்திற்கும் அதிகமான கழகத் தோழர்கள் கருப்புக் கொடி காட்ட திரண்டனர்.

பகல் ஒன்றரை மணிக்கு ஆனூர் ஜெகதீசன் தலைமையில் கண்டன ஊர்வலம் புறப்பட்டது.

சங்கர மடத்துக்கு எதிரே உள்ள தந்தை பெரியார் சிலைக்குத் தலைமை நிலையச் செயலாளர் கவிஞர் கலி.பூங்குன்றன் மாலை அணிவித்தார்.

சங்கராச்சாரி விழாவில் பிரதமர் பங்கேற்பதை எதிர்க்கும், கண்டன முழக்கங்களுடன் கருப்புக்கொடி ஏந்தி ஊர்வலமாகப் புறப்பட்டுச் சென்று தோழர்கள் கிழக்கு ராஜவீதியை அடைந்தபோது காவல்துறையினர் கைது செய்தனர்.

10.5.93

ஓடிப்போன 'திடீர் கடவுள்'

மறைமலை நகரில் பார்ப்பனர் ஒருவர் உருவாக்கிய திடீர் கோயில், கழகத்தின் போராட்டத்தால் அகன்றது. சிலைகளைத் தூக்கிக்கொண்டு ஓட்டம் பிடித்தார் பார்ப்பனர்.

10.5.93

பெரியார் பழகு முகாம்

பெரியார் இளைஞர்-குழந்தைகள் பழகு முகாம், வல்லம் பெரியார் நூற்

தந்தை பெரியாரின் கருத்துச் சொல்லும் முறை

சொல்லாக்கம் எப்படிச் செய்வது என்பதுபற்றி ஒருமுறை ஒரு விவாதம் வருகிறது. ஹைட்ரஜன் என்பதற்கு ஆப்ஜனகம் என்ற ஒரு சொல்லைப் போடலாம் என்று முடிவு செய்கிறார்கள். அது பெரியதொரு விவாதமாகி எவ்வித முடிவுக்கும் வரவில்லை. நீரகம் என்ற இன்னொரு சொல்லைப் போடலாம் என்கிறார்கள்.

ஆப்ஜனக ஆதரவுக் குழு அங்கே வரிசையாக நிற்கிறது. தேசியவாதக் குழு, ஆப்ஜனகம் என்று போட்டால் இந்தியாவில் எல்லோருக்கும் விளங்கும். நீரகம் என்று போட்டால் விளங்காது. அதனால் ஆப்ஜனகம்தான் போடவேண்டும் என்கிறது.

இந்த விவாதம் முற்றும்பொழுது பெரியாரிடம் வருகிறது. அப்பொழுது பெரியார் சுருக்கமாகச் சொல்லுகிறார். 'நீரகம் என்றால் எங்களுக்குப் புரியும்; ஆப்ஜனகம்தான் வேண்டுமென்று சொன்னால் அதற்கு ஹைட்ரஜன் என்றே இருந்துவிட்டுப் போகட்டுமே. அது எங்களுக்குக் கொஞ்சம் பழக்கமான வார்த்தையாகவும் இருக்கிறது' என்பது இவருடைய வாதம். விவாதம் முடிந்துவிட்டது.

தந்தை பெரியார் கருத்துகளைச் சொல்கிற முறை இருக்கிறதே, அது ஈடு இணையில்லாதது. அது நுட்பமான மதியின் புலப்பாடு. அதற்கு மேல் எதிரிகள் பேசவே முடியாது அல்லவா?

-டாக்டர் பொன். கோதண்டராமன் (பொற்கோ)'
சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறைத் தலைவர்.
(நூல்: 'தமிழ் வரலாற்றில் தந்தை பெரியார்' பக்கம் 46-47)

றாண்டு மகளிர் தொழில் நுட்பக் கல்லூரியில் சிறப்பாகத் துவங்கியது. பல்வேறு மாவட்டங்களிலிருந்தும் குழந்தைகள், சிறுவர், சிறுமியர் 50 பேர் இம்முகாமில் பங்கேற்றனர். 16ஆம் தேதி முகாம் முடிந்தது.

18.5.93

கோவையில் கழகக் கொடி எரிப்பு மிரட்டல் தவிடுபொடி

18.5.93 அன்று தி.க. கொடியை எரிப்போம் என இந்து முன்னணி கோவையில் கூக்குரல் எழுப்பியிருந்தது. கழகத் தோழர்களும் பதிலடியாக இந்து முன்னணிக் கொடியை எரிப்போம் என அறிவித்திருந்தனர்.

இதையடுத்து இருதரப்பிற்கும் போலீஸ் தடை விதித்தது. கழகக்கொடி எரிக்கும் இந்து முன்னணி முயற்சி பிசுபிசுத்தது.

6.6.93

'விடுதலை'க்கு

இனமான நாளேடாம் 'விடுதலை' இன்று 59ஆம் ஆண்டில் அடியெடுத்து வைத்தது.

16.6.93

நாட்டுப்புற நல்லிசை

தந்தை பெரியார் தமிழிசை மன்றத்தின் அய்ந்தாவது நிகழ்ச்சியாக புஷ்பவனம் குப்புசாமி குழுவினரின் நாட்டுப்புற நல்லிசை நிகழ்ச்சி சிறப்புடன் நடந்தது.

26.6.93

குற்றாலம் பயிற்சி முகாம்

பெரியாரியல் பயிற்சி முகாம் குற்றாலத்தில் எழுச்சியுடன் இன்று தொடங்கியது. 5 நாள் முகாமான இதில் பங்கேற்க ரயில் மூலம் தென்காசி வந்த பொதுச் செயலாளருக்கு உற்சாக வரவேற்பு தரப்பட்டது. 5 நாள் முகாம் இது.

30.6.93

காமராசர் மாவட்ட மாநாடு

இன்று முற்பகல் 11 மணிக்கு பிளவக்கல் அணையில் காமராசர் மாவட்டக் குடும்ப விருந்தும் மாலை பொதுச்செயலாளர் கலந்து கொண்ட வட்டார மாநாடு வத்ராயிருப்னும் சிறப்பாக நடைபெற்றது.

2.7.93

அய்யா அருங்காட்சியகத்தில் ஆர். வெங்கட்ராமன்

முன்னாள் அமைச்சர் ஜி. விசுவநாதன் மகன் திருமண விழாவில் பங்கேற்க முன்னாள் குடியரசுத் தலைவர் ஆர். வெங்கட்ராமன் இன்று காலை பெரியார் திடலுக்கு வந்தார். பெரியார் அருங்காட்சியகம் வந்த ஆர்.வி.க்குப் புத்தாடை போர்த்தி வரவேற்றார் பொதுச் செயலாளர்.

2.7.93

ஆர்.எஸ்.எஸ். காலித்தனம்

முத்துப்பேட்டை கழகக் கூட்டத்தில் பங்கேற்க மன்னை மற்றும் தஞ்சையிலிருந்து வேன்மூலம் சென்ற கழகத் தோழர்களை, மாலை 6 மணி அளவில் அதிராம் பட்டினத்தை அடுத்த பரத்தலாக் கோட்டை அருகில் ஆர்.எஸ்.எஸ்., இந்து முன்னணி, பா.ஜ.க. காலிகள் சாலையின் இருபக்கத்திலும் உள்ள கருவைக் காடுகளில் கோழைத்தனமாக ஒளிந்திருந்து, அரிவாள், கத்தி, சுளுக்கி முதலிய கொலைக் கருவிகளுடன் தாக்கினர். தோழர்கள் சிலருக்கு மண்டை உடைந்தது; பலர் காயமடைந்தனர்.

9.7.93

டாக்டர் ராமதாசிற்கு

'இனி' என்ற தலைப்பிலான ஏட்டில் பா.ம.க. நிறுவனர் டாக்டர் ராமதாஸ் எழுதியவற்றுக்கு ஆணித்தரமான மறுப்பு அளித்து ''மின்சாரம்'' எழுதிய கட்டுரை ஒன்று ''விடுதலை''யில் வெளியானது.

14.7.93
எம்.பி.,களுக்குக் கடிதம்

காவிரிப் பிரச்சினையில் தமிழக-புதுவை எம்.பி.,க்கள் அனைவரும் ஒன்றுபட்டு உரிமைக்குக் குரல் கொடுக்க வேண்டும் என்று மக்களவை மற்றும் மாநிலங்களவை உறுப்பினர்களுக்குக் கடிதம் எழுதினார் கழகப் பொதுச் செயலாளர்.

15.7.93
காமராசர் சிலைக்கு மாலை

காமராசரின் 91ஆம் பிறந்த நாள்; சென்னை அண்ணாசாலையில் உள்ள காமராசர் சிலைக்கு கழகக் குடும்பத்தினருடன் சென்று மாலை அணிவித்தார் பொதுச் செயலாளர்.

17.7.93
காவிரிக்காக ரயில் நிறுத்தம்

இன்று முற்பகல் மத்திய நிர்வாகக் குழுத் தலைவர் கு. கிருட்டினசாமி தலைமையில் கழக மத்திய நிர்வாகக் குழு கூடியது.

காவிரி நீர் உரிமை கோரி காவிரி பாசனப் பகுதிகளில் ரயில் நிறுத்தக் கிளர்ச்சி நடத்துவதெனவும், தமிழக மீனவர் உரிமைக்காக ஆர்ப்பாட்டம் நடத்துவது எனவும், தந்தை பெரியார் பிறந்தநாளை தமிழின தேசியத் திருவிழாவாக நடத்த அறிவுறுத்தியும் தீர்மானங்கள் நிறைவேறின.

30.7.93
'சங்கரா குரல்' திட்டம்

சங்கராச்சாரியின் கருத்துகளைப் பரப்புவதற்கு தொலைபேசித் துறை துணை போவதை எதிர்த்து சென்னை உயர்நீதி மன்றத்தில் வழக்குத் தொடர்ந்தார் கழகப் பொதுச்செயலாளர்.

பொதுச்செயலாளர் சார்பில் வழக்கை தாக்கல் செய்தார் வழக்கறிஞர் தில்லை வில்லாளன்.

12.8.93
சேஷன் கொடும்பாவி எரிப்பு

தான்தோன்றித்தனமாகவும், அதிகார வெறியோடும், மக்கள் வரிப் பணத்தைப் பாழ் செய்யும் தன்மையிலும் அடாவடித் தனமாகச் செயல்பட்டுவரும் தேர்தல் கமிஷன் செயலாளர் டி.என். சேஷனின் கொடும்பாவி, சென்னை அண்ணா சாலை பெரியார் பாலம் அருகில் உள்ள தந்தை பெரியார் சிலை முன் கழகத் தோழர்களால் எரிக்கப்பட்டது. போராட்டத் தலைமை-தென்சென்னை மாவட்டக் கழக இளைஞரணித் தலைவர் மு. பாலகுரு. முன்னிலை - வட சென்னை மாவட்ட திராவிடர் கழக இளைஞரணித் தலைவர் கி.இராமலிங்கம்.

20.8.93
மதுரையில் கழக இளைஞரணி மாநில மாநாடு துவக்கம்

கழக இளைஞரணி மாநில மாநாடு இன்று காலை மதுரை தமுக்கம் திடலில் எழுச்சியுடன் துவங்கியது.

முன்னதாக பாண்டியன் எக்ஸ்பிரஸ் ரயில் மூலம் வந்த பொதுச் செயலாளருக்கு உற்சாக வரவேற்பு தரப்பட்டது.

மாநிலம் முழுவதிலிருந்தும் குடும்பம் குடும்பமாக கழகத்தவர் திரண்டிருந்தனர். மாநாட்டுத் தலைமை - கொளத்தூர் தா.செ. மணி. திறப்பாளர் - மாநில இளைஞரணி செயலாளர் ஒரத்தநாடு இரா. குணசேகரன். கொடியேற்றியவர் - செங்கை எம்.ஜி.ஆர். (வடக்கு) மாவட்டக் கழகச் செயலாளர் ஆவடி இரா. மனோகரன். வரவேற்புரை - மாநில இளைஞரணிச் செயலாளர் துரை. சந்திரசேகரன்.

நடுவர் மன்ற ஆணைப்படி 205 டி.எம்.சி. காவிரி நீர் தமிழகம் பெற மத்திய அரசு ஆவன செய்யாவிடில் வரி கொடா இயக்கம் நடத்தப்படும் என டில்லி அரசை எச்சரித்தும்-

கிடப்பில் போடப்பட்ட சேது கால்வாய்த் திட்டத்தை உடனே நிறைவேற்றக் கோரியும் தீர்மானங்கள் இம்மாநாட்டில் நிறைவேற்றப்பட்டன.

கழகப் பிரச்சார செயலாளர் துரை. சக்கரவர்த்தி தலைமையில் கருத்தரங்கம் நடைபெற்றது. பெரியார் பேருரையாளர் பேராசிரியர் அ.இறையன் கவிஞர் செ.வை.ர.சிகாமணி, தோலி. ஆர்.சுப்பிரமணியம், வழக்கறிஞர் சேலம் அருள்மொழி நெய்வேலி இரா. கனகசபாபதி, அதிரடி அன்பழகன், தஞ்சை காமராஜ் ஆகியோர் கருத்தரங்கில் உரையாற்றினர்.

தந்தை பெரியார், அன்னை நாகம்மையார், அன்னை மணியம்மையார், புரட்சிக்கவிஞர் பாரதிதாசன், அறிஞர் அண்ணா, ''சுயமரியாதைச் சுடரொளிகள்' உருவப் படங்கள் திறக்கப்பட்டன. திராவிடர் கழக மத்திய நிர்வாகக் குழுத் தலைவர் சிதம்பரம் கு. கிருட்டிணசாமி, இராசலட்சுமி மணியம், பெரியார் பேருரையாளர் பேராசிரியர் ந. இராமநாதன், கவிஞர் கலி. பூங்குன்றன், ஏ.பி.ஜே. மனோரஞ்சிதம் முறையே திறந்து வைத்தனர்.

மாநாட்டு அரங்கிற்கு சுயமரியாதை இயக்க முன்னணித் தலைவர் ஊ.பு.அ. சவுந்தர பாண்டியனார் நூற்றாண்டு நினைவு அரங்கம் என்றும், மாநாட்டுப் பந்தலுக்கு அகில இந்திய தாழ்த்தப்பட்டோர், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மை ஒன்றியத்தின் தலைவர் முன்னாள் மத்திய அமைச்சர் (ஜனதா ஆட்சியில்) சவுத்ரி பிரம்பிரகாஷ் பெயரும் சூட்டப்பட்டிருந்தது. டாக்டர் நெ.து. சுந்தரவடிவேலு, பம்பாய் என். சோமசுந்தரம் ஊற்றங்கரை அ. பழனியப்பன், காரைக்குடி ஆர். சுப்பிரமணியம் ஆகியோர் பெயரில் நுழைவாயில் அமைக்கப்பட்டிருந்தது.

மாநாட்டின் நிறைவுரையை எழுச்சி உரையாக கழகப் பொதுச் செயலாளர் மானமிகு. கி. வீரமணி வழங்கினார். முன்னதாக கழகப் பொருளாளர் தஞ்சை கா.மா. குப்புசாமி, துணைப் பொதுச் செயலாளர் வழக்கறிஞர் கோ. சாமிதுரை, சட்டத்துறை செயலாளர் வழக்கறிஞர் செ. துரைசாமி ஆகியோர் உரையாற்றினர்.

இரவு கலைமாமணி கவிஞர் நா.மா. முத்துக்கூத்தன் குழுவினரின் ''பெரியார் புகழ் பரணி'' என்னும் கதாகாலட்சேபம் சிறப்பாக நடைபெற்றது. மாநாட்டுத் துவக்கத்தில் கொளத்தூர் முத்தமிழ் பகுத்தறிவு இன்னிசைக் குழுவினரின் இசை நிகழ்ச்சியும் இடைவேளையில் எழுச்சிப் பாடாக தேனிசை செல்லப்பா குழுவினரின் இசை நிகழ்ச்சியும் சிறப்பாக நடைபெற்றன.

21.8.93
சமூகநீதி மாநாடு

சமூக நீதி மாநாடு எழுச்சியுடன் காலையில்துவங்கியது. கருத்தரங்கத்தலைமை- பேராசிரியர் கு.வெ.கி. ஆசான். பங்கு கொண்டோர் நம். சீனிவாசன், வழக்கறிஞர் வை. பாண்டிவளவன், 'விடுதலை' கி. இராசேந்திரன், முனைவர் பு. இராசதுரை ஆகியோராவர். பிற்பகலில் ஒடுக்கப்பட்ட சமூக அமைபபுகள் பலவற்றுடன் கழகக் குடும்பங்கள் பங்கேற்ற மகத்தான பேரணி மதுரையைக் குலுக்கியது. திராவிடர் கழகத்தில் கட்டுப்பாடுமிக்க இளைஞர்கள் எவ்வளவுப் பெரிய எண்ணிக்கையில் இருக்கிறார்கள் என்பதை அறிவிக்கும் ஒரு எழுச்சிப் பேரணியாக அமைந்திருந்தது - கண்டவர் வியந்தனர் - மனம் விட்டுப் பாராட்டவும் செய்தனர்.

பேரணியின் முடிவில் தமுக்கம் மைதானத்தில் திறந்தவெளி மாநாடாக சமூக நீதி மாநாடு நடைபெற்றது. கழகப் பொதுச் செயலாளர் மானமிகு கி. வீரமணி தலைமையேற்றார். பெரியார் சுயமரியாதை பிரச்சார, நிறுவனத் தலைவர் வழக்கறிஞர் இரா. சண்முகநாதன் வரவேற்புரை ஆற்றினார். இந்திய யூனியன் முஸ்லீம் லீக் தமிழ் மாநிலத் தலைவர் அ.க.அ. அப்துல் சமது மாநாட்டைத் திறந்து வைத்தார். பாதிரியார் டாக்டர் எஸ்றா சற்குணம், ஜனதாதள தமிழ் மாநில செயலாளர் ஜான்மோசஸ், தமிழ்நாடு தலித்சேனா தலைவர் சந்திர நேசன் மற்றும் பல்வேறு ஒடுக்கப்பட்ட சமூக அமைப்புகளின்

தலைவர்கள் எழுச்சி உரை ஆற்றினார்கள். பல முக்கியமான தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

மாநாடு சிறப்பாக அமைவதற்குக் காரணமாக இருந்த மதுரை மாநகர மாவட்ட திராவிடக் கழகச் செயலாளர் மதுரை பி. வரதராசன் மற்றும் தோழர்களுக்கு கைத்தறி ஆடைகள் போர்த்திப் பாராட்டினார் கழகப் பொதுச்செயலாளர் அவர்கள்.. இறுதியாகக் கழகப் பொதுச் செயலாளர் உரை ஆற்றிட வரலாற்றுச் சிறப்புமிக்க மதுரை மாநாடுகள் நிறைவுறபெற்றன.

22.8.93
பூதலூரில் அய்யா சிலை

பூதலூரில் மாபெரும் மூட நம்பிக்கை ஒழிப்புப் பேரணி, வட்டாரக் கழக மாநாடு நடந்தன. இவற்றில் பங்கேற்ற கழகப் பொதுச் செயலாளர், தந்தை பெரியார் சிலையினைத் திறந்து வைத்தார்.

1.9.93
உச்ச நீதிமன்ற தீர்ப்பு எரிப்பு

தமிழ் நாட்டில் நடைமுறையில் உள்ள 69 விழுக்காடு இட ஒதுக்கீட்டை முடக்கும் வகையில் உச்சநீதிமன்றத்தில் நீதிபதிகள் எம்.என்.வெங்கடாசலய்யா மற்றும் அகர்வால் ஆகியோர் அளித்த இடைக்கால தடை ஆணையைக் கொளுத்தி அதன் சாம்பலை உச்ச நீதிமன்றத்திற்கு அனுப்பும் போராட்டம் இன்று தமிழ்நாடெங்கும் திராவிடர் கழகத்தின் சார்பில் அனுப்பப்பட்டது. இப்போராட்டத்தில் தமிழ்நாடு எங்கும் 15 ஆயிரம் திராவிடர் கழகத் தோழர்கள் கைது செய்யப்பட்டு, மாலை விடுவிக்கப்பட்டனர். சென்னையில் கழகப் பொதுச்செயலாளர் தலைமையில் 500 பேர் கலந்து கொண்டனர். 200 பேர் கைது செய்யப்பட்டனர். 34வது முறையாகப் பொதுச் செயலாளர் கைது செய்யப்பட்டார்.

★ ★ ★

இராமசாமி ஏன் பெயரை மாற்றிக் கொள்வில்லை?



(17.8.1947 அன்று அரூர் தோழர் விநாயகம் அவர்களின் ஆண்குழந்தைக்கு வீரத் திராவிடன் என்று பெயரிட்டு தந்தை பெரியார் அவர்கள் ஆற்றிய உரை.)

தோழர்களே! தாய்மார்களே! குறிப்பு தெரிவதற்காக குழந்தைகளுக்கு பெயரிடுவது அவசியந்தான். அது காலத்திற்கேற்பவும், அந்தந்த காலத்திய தத்துவத்திற்கேற்பவும், அந்தந்த காலத்திய உணர்ச்சிக்கேற்பவும், அவரவர்களுடைய கொள்கை அல்லது மதம், லட்சியத்திற்கேற்பவும் இடப்படுவது வழக்கம். ஆரியத் தொடர்பு ஏற்பட்டதிலிருந்து சமீபகாலம் வரை திராவிட மக்களின் பெயர்கள் யாவும் ஆரிய மதத்தத்துவங்களை அடிப்படையாகக் கொண்டு இடப்பட்டு வந்தன. அதற்குமுன் திராவிடர் பண்பு லட்சியம் ஆகியவைகளைக் கொண்டதாகவும் இருந்தன. நமது இயக்கம் ஆரம்பிக்கப்பட்டு, மதத்திலுள்ள கெடுதிகள் - அதனால் இனத்திற்கு ஏற்பட்ட இழிவுகள் விளக்கப்பட்ட பிறகு பண்டைத் தமிழர்களின் பெயர்களையும் அவர்களது வீரத்தின் பண்பு பெயர்களையும் தம் குழந்தைகளுக்கு இட ஆரம்பித்தார்கள். பலர் தம் பெயர்களை மாற்றிக் கொண்டார்கள். எனக்கு அவ்விதமே மாற்றிக்கொள்ள ஆசையிருந்தாலும் நீண்டநாள் ஆகிவிட்டதால் மாற்றிக்கொள்வதில் உள்ள அசௌகரியங்களை முன்னிட்டு பெயரை மாற்ற முடியாவிட்டாலும் கருத்தை மாற்றிவிட்டேன்.

புராண இதிகாசங்களை வெறுப்பவர்கள் இராவணன், இரணியன் என்று (வேறு மொழியாய் இருந்தாலும்) பெயர் வைத்துக்கொள்வதையும், பொது உடைமையில் விருப்பமுள்ளவர்கள் ரஷ்யா, ஸ்டாலின், லெனின் என்று பெயர் வைத்துக் கொள்வதையும் மூட நம்பிக்கையை வெறுப்பவர்கள் இங்கர்சால், சாக்ரடீஸ், ரூஸோ, பெர்னாட்ஷா என்று பெயர் வைத்துக் கொள்வதையும் நாம் தற்போது பார்க்கிறோம். அதேபோல் நமது இழிநிலை சமூகத்தில் பிறவியின் காரணமாக ஏற்பட்ட இழிநிலை, திராவிடன் ஒருவன் மகாராஜாவானாலும் கோடீஸ்வரனாயிருந்தாலும், ஸ்ரீலஸ்ரீ பண்டார சன்னிதியானாலும் அவன் நாலாம் ஜாதி, அய்ந்தாம் ஜாதியாகக் கருதப்படுவானேயல்லாது முதல் ஜாதிக்காரனாக முடியாது என்ற இழிநிலை நீக்கப்பட வேண்டும் என்பதை ஞாபகப்படுத்த திராவிடன் என்றும், அதைச் சந்திக்க வீரம் வேண்டும் என்பதைக் குறிக்க வீரத்திராவிடன் என்றும் இக்குழந்தைக்குப் பெயரிடுகிறேன்.

பிறவியினால் நம் மக்களுக்கு ஏற்பட்டுள்ள இழிநிலை நீங்கி உலக மக்களுக்குள் நாமும் சரிசமானமாக வாழ நாம் பாடுபடுவோம். அதுவே நமது முதல்வேலை. அதை வீரத்தோடு செய்வோம் என்பதைக் குறிப்பிடவும் நம் மக்கள் யாவரும் வீரத்திராவிடர்களாய் வாழ வேண்டுமென்பதைக் குறிப்பிடவும் உங்கள் ஆமோதனையின் பேரில் இக்குழந்தைக்கு 'வீரத்திராவிடன்' என்று பெயரிடுகிறேன். இது வீரத் திராவிடனாகவே திகழ வேண்டும் என்று ஆசைப்படகிறேன்.

(விடுதலை, *18.8.1947.*)

கடந்த பெரியாராண்டில் பொதுச் செயலாளர் அறிக்கை

(கடந்த பெரியார் ஆண்டில் கழகப் பொதுச் செயலாளர் அவர்கள் 'விடுதலை' வாயிலாக வெளியிட்ட அறிக்கைகள் வெளிவந்த நாளும் - அறிக்கைகளின் தலைப்புகளும்)

17.9.92	-	அத்தியாவசியப் பொருள்கள் விலை உயர்வு
19.9.92	-	பா.ம.க. வினரை விடுதலை செய்க.
29.9.92	-	பா.ம.க. வைத் தடை செய்வதால்...
22.10.92	-	சிவகங்கை இராமச்சந்திரனார் பெயர்
26.10.92	-	சென்னையில் இராவண லீலா
6.11.92	-	அமெரிக்க அதிபர் தேர்தல்
7.11.92	-	முதல்வர் கவனத்திற்கு
11.11.92	-	விஞ்ஞானத்தின்முன் மண்டியிட்ட மதம்; '92இல் தலைசிறந்த செய்தி.
14.11.92	-	மு.லீக் இணைப்பு
17.11.92	-	27% ஒதுக்கீடும் காலக் கெடுவும்
18.11.92	-	நீதிபதி ரத்தினவேல் பாண்டியன் தீர்ப்பு
24.11.92	-	'கரசேவை'க்கு தமிழக முதல்வர் ஆதரவு தரலாமா?
3.12.92	-	முதல்வர் கருத்தை நியாயப்படுத்துவதா?
7.12.92	-	மத்திய அரசின் திறமையின்மை
8.12.92	-	முழுஅடைப்பிற்கு ஆதரவு (மற்றும்) கழகப் பேச்சாளர்களுக்கு...
9.12.92	-	இஸ்லாமிய சோதரர்களே...
10.12.92	-	மதவெறி சக்திகளை...
11.12.92	-	தடை - ''ஏட்டுச் சுரைக்காய்' ஆகிடக்கூடாது.
12.12.92	-	டிச. 20-ல் காஞ்சி மடம் முன் ஆர்ப்பாட்டம்.
14.12.92	-	ராவண லீலா தள்ளிவைப்பு
16.12.92	-	பா.ஜ.க. ஆட்சிகள் டிஸ்மிஸ் சரியே.
17.12.92	-	பெரியார் என்ற பேராசான்
19.12.92	-	ராமன் பொம்மையை அகற்றி பூசைக்குத் தடை
22.12.92	-	தமிழக அரசின் அணுகுமுறை மாறவேண்டும்.
31.12.92	-	காங்கிரசின் அத்வானித்தனம்
5.1.93	-	டி.வி. நிலையம் முன் ஆர்ப்பாட்டம்
ஜன-25, 20.1.93	-	கிட்டுவின் மரணமும், சரித்திரப் பழியும்.
21.1.93	-	''சிறுதுளி, பெருவெள்ளம்''
2.2.93	-	ரயில் நிலைய இந்தி அழிப்பு
11.2.93	-	அமைதிப் பூங்காவான...
27.2.93	-	மத்தியில் பி.ஜே.பி.
2.3.93	-	ஏமாற்றத்தைத் தரும் மத்திய அரசு பட்ஜெட்
9.3.93	-	பா.ஜ.க. பேரணியை அனுமதிக்கக்கூடாது.
10.3.93	-	தன்னல மறுப்பின் சின்னம் அம்மா
17.3.93	-	பம்பாய் குண்டு வெடிப்பு
18.3.93	-	பேருந்து நிலைய இட மாற்றங்கள்
19.3.93	-	பா.ஜ.க. உறவுபற்றி முதல்வர்
23.3.93	-	3 ஆம் கட்ட அறப்போர் (மற்றும்) ஒதுக்கீட்டில் நுழையும் பொருளாதார அளவுகோல்.

29.3.93	-	மறைமலை நகர் திடீர் நரசிம்மசாமி
31.3.93	-	தமிழறிஞர்களை முதல்வர் புறக்கணிப்பதா?
1.4.93	-	சட்டசபை நிகழ்ச்சிகள்
6.4.93	-	சங்கராச்சாரிக்கு தொலைபேசித் துறை துணை போவதா?
12.4.93	-	புகளூர் துப்பாக்கிசூடு
13.4.93	-	தமிழர் நீதிபதிகளைப்...
14.4.93	-	தை முதல் நாளே-தமிழ்ப் புத்தாண்டு
15.4.93	-	ஆரிய குல தருமத்தை... (மற்றும்) எஸ்.எஸ். ராமசாமியார் மாவட்டம்
20.4.93	-	திராவிடர் கழகத்தின் அடுத்தகட்ட போராட்டம்
22.4.93	-	சட்டசபைகள் சண்டைசபைகளாவது...
23.4.93	-	காஞ்சியில் கறுப்புக் கொடி
29.4.93	-	ஊன்றிப் படித்து உண்மையை உணருங்கள்
30.4.93	-	கறுப்புக் கொடி காட்ட காஞ்சி நோக்கித் திரள்க!
3.5.93	-	தமிழக சிறைகளில் டில்லியின் உளவு
6.5.93	-	ஈழத் தமிழர் பிரச்சினையில்...
7.5.93	-	பழனி இடைத்தேர்தல்
10.5.93	-	புதுவை பல்கலைக்கு சங்கராச்சாரி பெயரா?
12.5.93	-	வீராணம்: தமிழக அரசின் வரவேற்கத்தக்க முடிவு
13.5.93	-	பெரியார் பெண்கள் தொழில் நுட்பப் பல்கலைக் கழகம்
10.5.93	-	நினைவை விட்டு அகலாத பழகுமுகாம்
1.6.93	-	பயணம் இனி 10 நாளே
4.6.93	-	பார்ப்பன பனியாக்களின் நெருக்கம்
5.6.93	-	ஆர்.எஸ்.எஸ். தடை ரத்தும், டில்லி அரசின் இரட்டை வேடமும்
16.6.93	-	நான்கு முக்கிய பிரச்சினைகள்
17.6.93	-	பா.ஜ.க.: ஓநாய் சைவமாகிறது.
18.6.93	-	நந்தனாருக்குக் கோயிலா?
22.6.93	-	தமிழக அரசின் வரவேற்கத்தக்க 'திருத்தம்'
23.6.93	-	தக்கவருக்கு வழிவிட்டு பிரதமர் பதவி விலகுவதே சரி
5.7.93	-	இளைஞர்களுக்கு ஓர் செயல்திட்ட மாநாடு
6.7.93	-	சட்டம் - ஒழுங்கு: முதல்வர் செய்யவேண்டியது
7.7.93	-	நரசிம்மராவ் ஆட்சியின் இரட்டை வேடம்
12.7.93	-	தமிழக அரசின் கவனத்திற்கு
15.7.93	-	தமிழக மீனவர்கள் சித்ரவதை: கிளர்ச்சிக்குத் தயாராவோம்.
19.7.93	-	நடுவர் மன்றத் தீர்ப்பை அமுல்படுத்துக.
22.7.93	-	காவிரி: மத்திய அரசிற்கு மெத்தனம் கூடாது.
27.7.93	-	இட ஒதுக்கீடை ரத்து செய்தது முரண்பாடு
29.7.93	-	இது தோல்விக்குச் சமமான வெற்றி
4.8.93	-	80ஆம் அரசியல் சட்டத் திருத்தம்-சமூக நீதி அமைப்புகளை தடை செய்யும் கறுப்புச் சட்டம்
9.8.93	-	ஆர்.எஸ்.எஸ். அலுவலகத்தில் வெடி குண்டு
12.8.93	-	ஆர்.எஸ்.எஸ். அலுவலகத்தில் பயிற்சியின்போது...
14.8.93	-	மதுரை மாநாட்டுக்கு
19.8.93	-	குண்டு வெடிப்பு: நீதி விசாரணைக்கு உத்தரவிடுவதே சரி
23.8.93	-	மத ஊர்வல நிறுத்தம்: நிர்ப்பந்தங்களுக்குப் பணிய வேண்டாம்
24.8.93	-	முதல்வர் பேச்சில் குற்றமென்ன
26.8.93	-	செப்டம்பர் 1-ல் உச்சநீதி மன்ற ஆணைக்குத் தீ!
30.8.93	-	உச்சநீதி மன்றத் தடை ஆணை எரிப்பு அனைத்துக் கட்சியினரும் ஒரே குரலில்! தமிழக அரசு பயன்படுத்திக் கொள்ளட்டும்.
31.8.93	-	உச்சநீதிமன்றத்தில் திராவிடர் கழகம் இணைத்துக் கொள்ளும்!
3.9.93	-	தமிழனின் தேசிய திருநாள் பெரியார் பிறந்தநாள்.

8.9.'93

மண்டல் பரிந்துரை ஒதுக்கீடு: அமுல் படுத்தியது டில்லி அரசு

மண்டல் குழு பரிந்துரையின்படி பிற் படுத்தப்பட்ட மக்களுக்கு டில்லி அரசு பதவிகளில் 27 சதவிகித இட ஒதுக்கீடு உடனடியாக மத்திய அரசால் அமுல்ப டுத்தப்படுவதாக-

மத்திய சமூக நலத்துறை அமைச்சர் சீத்தாராம் கேசரி செய்தியாளர்களிடம் டில் லியில் இன்று அறிவித்தார்.

தமிழினக் காவலரின் வரவேற்பு: அமைச்சர் கேசரிக்குப் பாராட்டு

ம்ண்டல் குழு பரிந்துரை அமுலாக்கச் செய்தி வெளியானதை அடுத்து - சென் னையில் இருந்த கழகப் பொதுச் செய லாளர் டில்லியில் இருந்த மத்திய அமைச் சர் சீத்தாராம் கேசரி அவர்களைத் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு பாராட்டு தெரிவித்தார். இட ஒதுக்கீடு அமுல் தொடர்பான மத்திய அரசு ஆணையில் உள்ள குறைபாடுகளை யும் சுட்டிக்காட்டிய பொதுச்செயலா ளர்-

"எப்படியோ! கதவு திறக்கப்பட்டது" எனக் கூறி அமைச்சர் கேசரியிடம் மகிழ்ச்சி தெரிவித்தார்.

பொதுச்செயலாளர் அறிக்கை

மண்டல் குழு அறிக்கை அமுல்பற் றிய டில்லியின் ஆணை வெளியான சில நிமிடங்களில் - இதனை வரவேற்று கழ கப் பொதுச்செயலாளர் ஒரு அறிக்கை ("விடுதலை" — 9.9.'93) வெளியிட் டார். டில்லியின் ஆணை, சமூக நீதிப் போராட்டத்திற்குக் கிடைத்த வெற்றி என குறிப்பிட்டிருந்த கழகப் பொதுச்செ யலாளர்—

"மண்டல் குழு பரிந்துரைகளை மேலும் கிடப்பில் போடாமல் நடப்பில் கொண்டுவந்ததற்காக பிரதமரையும், மத்திய சமூக நலத்துறை அமைச்சர் கேசரி; இதனை விரைவுபடுத்த தன் வாழ்வையே தியாகம் செய்ய முன் வந்த சமூக நீதிக்காவலர் வி.பி.சிங் ஆகியோ ருக்கு தனது பாராட்டுகளையும் நன்றிக ளையும் தெரிவித்தார்.

15.9.93

சவுந்தர பாண்டியனார் நூற்றாண்டுவிழா

சுயமரியாதை இயக்கத் தலைவராக இந்த பட்டிவீரன் பட்டி ஊ.பு.அ. சவுந்த ரபாண்டியனார் நூற்றாண்டுவிழா திராவி டர் கழகத்தின் சார்பில் திண்டுக்கல்லில் மூடநம்பிக்கை ஒழிப்பு ஊர்வலத்துடன் சிறப்பாக நடைபெற்றது. கழகப் பொதுச்செயலாளர் கலந்துகொண்டு, சவுந்தர பாண்டியனார் உருவப்படத் தைத் திறந்துவைத்து சிறப்புரையாற்றி னார்.

திருக்குறள்

திருக்குறள்தான் தமிழ் நூல்களில் அதிகம் மொழி பெயர்க்கப்பட்ட நூலாகும். இந்திய மொழிகள் 10, ஆசிய மொழிகள் 5, அய்ரோப்பிய மொழிகள் 11; மொத்தம் 26 மொழிகளில் திருக்குறள் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது.

மறைந்தார்களே!

சு. பூவராகனார்



டாக்டர் நெ.து. சுந்தரவடிவேலு

பட்டம்மாள் பாலசுந்தரம்



பம்பாய் சோமசுந்தரம்

ஊத்தங்கரை பழனியப்பன்

காரைக்குடி சுப்பிரமணியம்



திட்டக்குடி நாராயணன்

குடந்தை ஏ.டி. இராமலிங்கம்



மதுரை அங்கப்பன்

With

Best

Wishes

From

NANDHINI HOTELS (P) LTD

626/1, COVAI ROAD, KARUR - 639 002

Grams : NANDHINI Tel : 22020, 40400

- THE ONE AND ONLY STAR HOTEL OF KARUR
- THE ONE AND ONLY BAR A/C (PERMIT ROOM) OF KARUR
- THE ONE AND ONLY SWIMMING POOL OF KARUR

- *WELL APPOINTED ROOMS AND SUITES*
- *VEG-NON VEG MULTICUISINE RESTAURANTS*
- *EXCLUSIVE POOL SIDE GARDEN SERVICE*
- *24 HOURS ROOM SERVICE*
- *SATELLITE T.V.*
- *DOCTOR ON CALL*
- *LAUNDRY SERVICE*
- *CONFERENCE HALLS*
- *TRAVEL DESK*
- *ISD/STD FACILITIES*
- *CENTRALISED COMPUTER BILLING*
- *BEAUTY PARLOUR FOR LADIES*
- *GENT'S SALOON*
- *CHECK OUT TIME - 24 HOURS*
- *AMPLE CAR PARKING SPACE*



"ENJOY THE THREE STAR AMBIENCE AT AN AFFORDABLE TARIFF"

H.O. Tiruturaipoondi

Ph: 23658

T A L C GURUSAMY NADAR & CO

Dealers : Hardware
Stockist : Sankar Cement
Dealers : Plywood & Laminated Sheet

38, Sambanthamoorthy Street
Madurai - 625 001

Mfrs. of *Mono* fine Shirts
T 122, Avvai Street, Thirunagar,
Jafferkhanpet, Madras - 600 083.

Sarveey Garments

வட்டார மாநாடுகள்

ஆம்பூர் வட்டார மாநாட்டில் பொதுச்செயலாளருக்கு வீரவாள் (24.3.93)

பட்டுக்கோட்டை வட்டார மாநாட்டில் எடைக்கு எடை ரூபாய் நாணயம் - 8.4.93

ஓமலூர்
வட்டார மாநாட்டில்
தேனிசை செல்லப்பா
குழுவினரின் இசை
15.3.93

பெரம்பலூர்
வட்டார
மாநாட்டை யொட்டி



திருச்சி — புத்தூர்
பகுதியில் (21.2.93)

செங்கற்பட்டில் வட்டார மாநாடு (25.3.93)

விருத்தாசலத்தில் வட்டார மாநாட்டையொட்டிப் பிரச்சாரம்
(23.2.93)



18.7.93 அன்று புதுவையில் கம்பன் கலையரங்கத்தில் நடைபெற்ற வட்டார மாநாட்டில் கழகப் பொதுச்செயலாளர் உரையாற்றும்போது (கூட்டத்தின் ஒரு பகுதி)



இரயில்வே நிலையங்களில் இந்தி அழிப்பு 10.2.1993



கோவை

போடிநாயக்கனூர் வட்டார மாநாடு (7.1.93)

இரயில்வே நிலையங்களில் இந்தி அழிப்பு 10.2.1993

திருத்தணி

காட்பாடி

தாம்பரம்



வாணியம்பாடி

தாசம்பட்டி

திருநெல்வேலி



விருதுநகர்

"எல்லாம் இந்தக் கொள்கையால்தான்!"

திராவிடர் கழகப் பொருளாளர் தஞ்சை கா.மா. குப்புசாமி அவர்கள், திராவிடர் கழகத்திற்கு இரண்டாவது பொருளாளர் ஆவார். பழைய கோட்டை பட்டக்காரர் அர்ஜுனன் கழகத்தின் முதல் பொருளாளர் ஆவார். தந்தை பெரியார் காலத்தில் அப்பொறுப்பில் அவர் இருந்தார். அதற்குப் பிறகு அன்னை மணியம்மையார் அவர்கள் தலைமை ஏற்ற காலத்தில் சென்னையில் நடைபெற்ற திராவிடர் கழக மத்திய நிர்வாகக் குழுக் கூட்டத்தில் (25.12.1977) கா.மா. குப்புசாமி அவர்கள் அம்மா அவர்களால் கழகத்தின் பொருளாளராக அறிவிக்கப்பட்டார்.

15 வயது முதற்கொண்டே தந்தை பெரியார் அவர்களின் கொள்கை மீது நாட்டம் கொண்டவர். அவரது பள்ளி ஆசிரியர் இராசகோபால் பிள்ளைதான் இத்துறையில் அவருக்கு குருநாதர். தீபாவளி ஆனந்தவிகடன் மலர் வாங்கச் சென்றார் சிறுவன் குப்புசாமி. அப்பொழுது பள்ளி ஆசிரியர் இராசகோபால் பிள்ளை ஈழத்து அடிகள் எழுதிய பெரிய புராண ஆராய்ச்சி நூலையும் அவருக்குக் கொடுத்தார். சிறுவன் படித்த முதல் நூல் அதுதான். அந்நூலை படித்து முடித்த அந்த சிறுவன், தன் நெற்றியில் தீட்டியிருந்த திருநீற்றுப் பட்டையை அழித்தான். அன்று முதல் பெரியார் சீடரானான்.

"தந்தை பெரியாரின் பகுத்தறிவுக் கொள்கையால் தன்னம்பிக்கை ஏற்படுகிறது. மூட நம்பிக்கைக்கு இடமில்லை. அதன் காரணமாகத் தேவையற்ற செலவுகள் மிச்சம். மற்றவர்களுக்கு உதவவேண்டும் என்கிற மனிதாபிமான எண்ணம் ஏற்படுகிறது. எல்லா வகையிலும் திராவிடர் கழகத்தின் கொள்கை மிக உயர்ந்து நிற்கிறது. இன்னும் இதனை நம் மக்கள் முழு அளவில் உணர்ந்துகொள்ளவில்லையே என்பதுதான் எனக்கு வருத்தம்".

அவரது தந்தையாரோ மகா பக்திமான். அவர் உயிரோடு இருந்தவரை தன் கொள்கையை வெளிப்படையாகவே காட்டிக் கொள்ள முடியவில்லை. அவர் மறைந்த ஒரு மாதத்திற்கெல்லாம் தந்தையார் பீரோவில் இருந்த அத்தனை சாமி படங்களுக்கும் விடை கொடுத்தார். அவரின் அம்மா ஏதோ சொல்லிப் பார்த்தார்கள். 'என் கொள்கை இது!' என்று ஒரே வார்த்தையில் பதில்.

7-வது வகுப்போடு பள்ளிப் படிப்புக்கு முற்றுப்புள்ளி. அவர் தந்தையார் நடத்தி வந்த வெற்றிலைக் கமிஷன் மண்டிக்குப் போய்விட்டார். அப்பொழுது அவருக்கு வயது 13. தொடர்ந்து தமது ஆசிரியர் இராசகோபால் பிள்ளை அவர்களிடம் இயக்கச் செய்திகளை அடிக்கடி கேட்டுத் தெரிந்து கொண்டு வந்தார்.

அவர் முதன் முதலாகச் சென்ற மாநாடும் - தந்தை பெரியார் அவர்களை நேரில் பார்த்ததும் 1946-ல் மதுரையில் நடைபெற்ற கருப்புச்சட்டை மாநாடுதான்.

காங்கிரஸ்காரர்களும், பார்ப்பனர்களும் நடந்து கொண்ட முறை, இயக்கத்தின் பால் அவருக்குக் கெட்டியான பிடிப்பை ஏற்படுத்தியது. தொடர்ந்து எல்லா மாநாடுகளுக்கும் செல்ல ஆரம்பித்தார். அவரது அத்தை மகன் நாராயணசாமிதான் அவருக்கு சகா. அவருடன் எல்லா மாநாடுகளுக்கும் சென்றார்.

1947-ல் கடலூரில் நடைபெற்ற திராவிட நாடு பிரிவினை மாநாட்டுக்கு சென்று திரும்பும்போது இரயிலில் நண்பர்களுடன் வந்தார். கோவை சுப்பையா



தந்தை பெரியாருடன் கழகப் பொருளாளரும் அவரது குடும்பத்தினரும்.

என்கிற காங்கிரஸ்காரர் அந்தப் பெட்டியிலே வந்தார். வைத்தீஸ்வரன் கோயிலில் ஒரு பார்ப்பனர் அந்தப் பெட்டியில் ஏறினார். அந்தப் பார்ப்பனர் கோவை சுப்பையா அவர்களுடன் பேச ஆரம்பித்தார். பல்வேறு அரசியல் பேச்சுகள், அதனூடே ராமசாமி நாயக்கர் தான் இன்றைக்குப் பிரச்சினைக்குரியவர்! அவரைச் சரிக்கட்டி விட்டால் எங்களுக்கு ஒன்றும் தொல்லையில்லை! என்று கூறினார். இதைக் கேட்ட எனக்கு பார்ப்பனர்களைப்பற்றி சரியாகத் தெரிந்து கொள்ளும் மனநிலையை உண்டாக்கியது என்கிறார் பொருளாளர் குப்புசாமி.

தந்தை பெரியாருக்கு எடைக்கு எடை ரூபாய் நாணயம்

''தஞ்சையில் நண்பர் இராசகோபால் தீவிரமாகக் கழகப் பணி ஆற்றிக்கொண்டிருந்தார். எனக்கு உற்ற நண்பர். அவர் பேருந்து நிலையத்தில் உணவு விடுதி நடத்தி வந்தார். மாலை நேரத்தில் சிற்றுண்டி சாப்பிட அங்கு செல்வேன். அப்பொழுது ஒருமுறை அவரிடம் சொன்னேன்: அய்யா அவர்களுக்கு எடைக்கு எடை ரூபாய் நாணயம் தஞ்சாவூரில் கொடுத்தால் என்ன.. ஏற்பாடு செய்யுங்கள். நான் ஆயிரம் ரூபாய் தருகிறேன் என்றேன். அவர் நல்ல அளவு முயற்சி செய்தார். அதுதான் 1957 நவம்பரில் தஞ்சாவூரில் நடைபெற்ற பெருவிழாவாகும்.

தமிழ்நாட்டில் முதன் முதலாக ஒரு தலைவருக்கு எடைக்கு எடை ரூபாய் நாணயம் வழங்கப்பட்டது என்பது அதுதான் முதலாவதாகும். பல லட்சக் கணக்கில் கூடிய திருவிழா என்று கூட சொல்லலாம். தூத்துக்குடி மாநாட்டுக்குச் சென்ற பொழுது நான் பார்த்த கூட்டத்தைவிட பெரிய கூட்டமாகும்.

பெரியாருக்கு வீட்டில் விருந்து

அதற்கு முன்னதாக 1952 ஆம் வருடம்! அய்யா அவர்களை எங்கள் வீட்டுக்கு அழைக்க வேண்டும் என்ற ஆசை. தஞ்சை இராசகோபாலிடம் கூறினேன். அவரும் ஏற்பாடு செய்து கொடுத்தார். அப்பொழுது நகரமன்ற தேர்தல் நடந்த சமயம். அய்யா பிரச்சாரத்தால் பெரிய காங்கிரஸ்காரர்கள் எல்லாம் தோற்ற நேரம். கிட்டத்தட்ட 300 பேர்களை (வெற்றி பெற்ற நகரமன்ற உறுப்பினர்கள் உட்பட) அழைத்து விருந்து கொடுத்தேன். அய்யாவுக்கு மிகுந்த மகிழ்ச்சி. என்னுடைய தந்தையார் பெரியார் வந்ததும், வெளியில் திண்ணையில் போய் உட்கார்ந்து கொண்டுவிட்டார். விருந்து முடிந்தவுடன் பெரியார் அவர்கள் எனது தந்தையாருக்கு எதிரே போய் உட்கார்ந்து, 'நல்ல விருந்து கொடுத்தீர்கள். உங்கள் காலம் எப்படியோ போய்விட்டது; உங்கள் பிள்ளைகளை எங்கள் பக்கம் விட்டு விடுங்கள்'' என்று கூறினார்கள். பெரியார் அவர்களின்

கழகப் பொருளாளர்

தஞ்சை கா.மா. குப்புசாமி

பிறந்த நாள்: 8.1.1927
பெற்றோர்: மாரியப்ப (செட்டியார்) - கமலத்தம்மாள்
உடன் பிறந்தோர்: கோவிந்தராசன், தங்கவேலு, வேதவல்லி, ராஜலட்சுமி.

துணைவியார்: ஞானாம்பாள்.

மகன்கள்: சந்திரமோகன், வடுகநாதன், லோகநாதன், பன்னீர் செல்வம்.

மகள்: மங்கையர்க்கரசி.

வெற்றிலைக் கமிஷன் மண்டி (1940 - 57)
லேவாதேவி
காமராஜ் மார்க்கெட் குத்தகை
மருந்துக்கடைகள்
காளிமார்க் சோடா
ஏஜென்சி (1969 முதல் இன்றுவரை)
மாரியப்பா பஸ் உரிமை; மூன்று பேருந்துகள் (1975 - 87)

என்று பல வர்த்தக நிறுவனங்களை நடத்தி இருக்கிறார்.

தோற்றப் பொலிவைக் கண்ட எங்கள் தகப்பனார் வாயடைத்துப் போய்விட்டார். அன்று மாலை எங்கள் குடும்ப டாக்டர் இராசமாணிக்கம் வீட்டுக்கு வந்தார். அவரிடம் எங்கள் வீட்டுக்கு இன்று பெரியார் வந்தார் என்று பெருமையாகக் கூறினார். 'என்னைக் கூப்பிட்டு இருக்கக் கூடாதா?' என்று டாக்டர் ஆதங்கப்பட்டார்.

1957 நவம்பர் 26-ல் சாதிக்கு ஆதரவு அளிக்கக் கூடிய இந்திய அரசியல் சட்டம் எரிப்புப் போராட்டத்தை தந்தை பெரியார் அறிவித்தார்கள். 'நீ போராட்டத்தில் கலந்து கொள்ளவேண்டாம்; வெளியில் இருந்து காரியத்தைப் பார்!' என்று கட்டளையிட்டார் அய்யா.

தஞ்சை நகர திராவிடர் கழகத் தலைவராக ஆளவந்தார் இருந்தார். அப்பொழுது தஞ்சை நகர கழகப் பொருளாளராக இருந்தேன். ஆளவந்தார் மறைவுக்குப் பிறகு தஞ்சை நகர கழக நிர்வாகி என்று போட்டார் அய்யா. இராசகோபால் செயலாளர்.

திருவையாற்றில் பெரு வெள்ளம் ஏற்பட்டு பலத்த சேதம்! மக்களைப் பார்த்து ஆறுதல் சொல்ல வந்தார் அய்யா. அங்கு வந்துவிட்டு எங்கள் வீட்டுக்கு வந்தார்கள். கழகத்துக்குத் தஞ்சையில் ஒரு கட்டடம் வேண்டும் என்று ஒரு கோரிக்கையை அய்யாவிடம் வைத்தோம்.

'நீ ஒத்துக்கிறீயா?' என்று கேட்டார். 'சரி' என்றேன். அன்றே ஒரு வீட்டைக் காட்டினோம்; அப்பொழுதே பேசி முடிக்கப்பட்டது. ஓட்டு வீடு; மண் சுவர். ரூ.10,700/-க்கு முடிக்கப்பட்டது. (அதுதான் இப்பொழுது உள்ள பெரியார் இல்லம்).

அதன்பின் அதை இடித்து வீட்டை நல்ல கட்டடமாகக் கட்டவேண்டும் என்று முடிவு செய்யப்பட்டது. தந்தை பெரியார் 8000 ரூபாய் கொடுத்தார். மீதி பணத்தை பொது மக்களிடம் வசூல் செய்தோம். 10 ஆயிரம் ரூபாய் என் சொந்தப் பணத்தை செலவழித்தேன். சாமி நாகராசன் ஆயிரம் ரூபாய் கொடுத்தார்.

1966-ல் திறப்பு விழா நடைபெற்றது; தந்தை பெரியார் அவர்களே வந்திருந்து சிறப்பித்தார். சட்டமன்ற உறுப்பினர் பரிசுத்தம் அந்தக் கட்டடத்திற்கான மின் இணைப்புச் செலவை ஏற்றுக்கொண்டார். நகர கழகத் தலைவராக அப்பொழுது இருந்தேன். பெரியார் இல்லம் சிறப்பாகக் கட்டி முடிக்கப்பட்டதில் அய்யாவுக்கு மிகவும் மகிழ்ச்சி.

தந்தை பெரியார் அவர்களுடன் பம்பாய் பயணம்

1969-ல் தஞ்சையில் தந்தை பெரியாருக்குச் சிலை வைத்தோம். அப்பொழுது மாவட்டச் செயலாளராக இருந்தேன். தோலி ஆர். சுப்பிரமணியம் மாவட்டத் தி.க. தலைவர். 1973 ஆகஸ்டு 19-ல் தந்தை பெரியாருக்கு வேன் அளிக்கும் பெருவிழாவை தஞ்சையில் நடத்தினோம். அய்யா அவர்கள் தஞ்சையில் கலந்து கொண்ட கடைசி நிகழ்ச்சி அதுதான்.

1970-ல் (28.10.70 - 7.11.70) தந்தை பெரியார் பம்பாய் சென்றார்கள். எனக்குக் கடிதம் வரைந்து என்னையும் அந்த சுற்றுப்பயணத்தில் வரச் சொன்னார்கள். எனது காரை எடுத்துக்கொண்டு அந்த சுற்றுப் பயணத்தில் நானும் எனது துணைவியாரும் பங்கு கொண்டோம். தந்தை பெரியார் நூற்றாண்டு விழாவின்போதும் கழகப் பொதுச்செயலாளருடன் பம்பாய் செல்லும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது.

பொதுவாழ்க்கை என்றால் சில நேரங்களில் சில கருத்து வேற்றுமைகள் வரும். பொறாமை எண்ணங்கள் எல்லாம் ஏற்படும். அய்யாவிடம் சென்று சிலர் என்னைப்பற்றிக் குறை சொன்ன பொழுது 'அவர் எவ்வளவோ செய்திருக்கிறார். பாராட்ட மனம் இல்லாவிட்டாலும் குறை கூறாமலாவது இருக்கக்கூடாதா?'

என்று அவர்களிடம் முகத்துக்கு நேராகக் கூறிவிட்டார்கள்.

அய்யா அவர்களின் மறைவுக்குப் பிறகு அம்மா அவர்களின் தலைமை ஏற்றுப் பணியாற்றினோம். நீடாமங்கலம் காளாச்சேரியில், நமது நிறுவனத்திற்கு இருந்த நிலத்தில் சில சிக்கல் ஏற்பட்டது. அம்மா, புலவர், நான், சோமு ஆகியோர் நேராக அங்கு சென்று நிலத்தில் இறங்கினோம். பல பிரச்சினைகளை சந்தித்து அந்த நிலங்களை மீட்டோம்.

தந்தை பெரியார் நூற்றாண்டு நிறைவு விழாவை 1979-ல் தஞ்சாவூரில் சிறப்பாக நடத்தினோம். பாபநாசத்தில் நடைபெற்ற மாவட்ட திராவிடர் கழக நிர்வாகக் கூட்டத்தில் அய்யா நூற்றாண்டு விழாவின் போது மாவட்டத்தின் சார்பில் 100 பவுன் அளிப்பதாக முடிவு செய்தோம். அதன்படி அய்யா நூற்றாண்டு விழாவின் போது பொதுச்செயலாளரிடம் அளித்தோம். அந்த 100 பவுனை முதல் மூலதனமாகக் கொண்டுதான் பெரியார் நூற்றாண்டு மகளிர் தொழில் நுட்பக் கல்லூரி தஞ்சையில் துவக்கப்பட்டது. 15.8.80 அன்று தஞ்சை நகரில் ஒரு பழைய வாடகைக் கட்டடத்தில் துவக்கப்பட்ட பாலிடெக்னிக், வல்லத்தில் இன்றைய தினம் நல்ல கட்டட வசதிகளுடன் சிறப்பாக இயங்கி வருகிறது. அதற்கான கட்டுமான பணிகளை என்னிடம் பொதுச்செயலாளர் ஒப்படைத்தார். அவர் மன நிறைவு கொள்ளும் வகையில் அந்தப் பணிகளை முடித்தோம். இன்று அதன் தாளாளராகவும் இருந்து பொதுச்செயலாளர் ஆணைகளை ஏற்றுச் செயல்பட்டுக்கொண்டு இருக்கிறேன்.''

பொதுச் செயலாளரின் பணிகள்

கேள்வி: தந்தை பெரியார், அன்னையார் மறைவுக்குப் பிறகு கழகப் பணிகள் எப்படி இருக்கின்றன?

பொருளாளர்: எதிரிகள் நினைத்தார்கள் - பெரியாருக்குப் பிறகு கழகம் இருக்காது என்று பேசினார்கள். அவர்கள் எல்லாம் வாயடைத்துப் போகும் அளவுக்கு பொதுச்செயலாளரின் தலைமையில் பணிகள் தீவிரமாக நடைபெறுகின்றன. தி.மு.க. பிரிந்த நேரத்தில் திராவிடர் கழகத்தில் இளைஞர்கள் இல்லை என்கிற நிலைமைதான். இன்றைய தினம் எடுத்துக்கொண்டால், இளைஞர்கள் இருக்கும் உயிருள்ள இயக்கமே திராவிடர் கழகம் தான். அண்மையில் நடைபெற்ற மதுரை மாநாட்டுக்கு வந்திருந்தவர்களுக்கு இந்த உண்மை விளங்கும்.

தந்தை பெரியார் அவர்களின் கொள்கைகளை உலகம் முழுவதும் சென்று பரப்பக் கூடியவர் நமது பொதுச்செயலாளர். உல



பெண்கள் கொளுத்த வேண்டாமா மனுநூலை?

இந்த உலகில் ஆண்களைக் கற்பழிக்கும் இயல்பைப் பெண்கள் பெற்று இருப்பதனால்தான் புத்திசாலிகள் பெண்கள் மத்தியில் தற்காப்புடன் இருக்கவேண்டியவர்களாகிறார்கள்.

— மனுதர்ம சாத்திரம் அத்தியாயம் 2 சுலோகம் 213.

ஆர்.எஸ்.எஸ். போற்றும் மனுதர்ம இந்து மதத்தில் பெண்களைப்பற்றிய கணிப்பு இதுதான்.

இந்தி அழிப்புப் போராட்டத்தில் பொருளாளர் கைது. (தஞ்சாவூர் 10.2.1993)

கம் முழுவதும் உள்ள தமிழர்கள் நமது பொதுச்செயலாளரிடம் மிகுந்த மரியாதையும் அன்பும் செலுத்தி வருகிறார்கள். பொதுச்செயலாளருடன் இங்கிலாந்து, பிரான்சு, பெல்ஜியம், ஆஸ்திரேலியா, மேற்கு ஜெர்மனி, இத்தாலி, சுவிட்சர்லாந்து முதலிய நாடுகளில் 35 நாட்கள் சுற்றுப் பயணம் செய்யும் பெரிய வாய்ப்பு 1983-ல் எனக்குக் கிடைத்தது!

இந்தியாவை எடுத்துக் கொண்டாலும் சமூக நீதிக் கொள்கைக்கு ஒரு பெரிய முக்கியத்துவத்தை ஏற்படுத்திக்கொடுத்தவர் நமது பொதுச்செயலாளர் அவர்கள்தான். இந்தியா முழுமையும் உள்ள தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்த மக்கள் தமது தலைவராக நமது பொதுச்செயலாளர் அவர்களைத்தான் கருதுகிறார்கள்.

தந்தை பெரியார் அவர்களிடம் அறிஞர் அண்ணா, குத்தூசி குருசாமி போன்றவர்கள் எல்லாம் இருந்தாலும் நமது ஆசிரியர் வீரமணி அவர்கள்தான் அய்யாவுடன் கடைசிவரை இருந்ததோடு மட்டுமல்லாமல், அவர்களின் மறைவுக்குப் பிறகும் இந்த இயக்கத்தையும், இலட்சியத்தையும் உண்மையாக நடத்திச் செல்லுகிறார்.

எனது 66 வயதில் 56 ஆண்டுகள் தந்தை பெரியார் தொண்டராகக் கழித்துவிட்டேன்; 1946 முதல் விடாமல் 'விடுதலை' படித்துவருகிறேன். ஒருநாள் அதைப் படிக்காவிட்டால்கூட பெரும் குறையாகத் தோன்றும். கழகம்தான் எல்லாம் எங்களுக்கு. இனி எஞ்சியிருக்கும் காலமும் அப்படித்தான் இருக்கும். என் கண்களை கொடையாகத் தர எழுதிக்கொடுத்துவிட்டேன். நான் இறந்தபின் உடலை லாரியில்

ஏற்றி ஊர்வலமாக எடுத்துச் செல்லவேண்டும் என்று என் பிள்ளைகளிடம் கூறியிருக்கிறேன். கடவுள் இல்லை என்று சொன்ன ஒரு பெரியார் தொண்டர். பெருமையுடன் மறைந்தார் என்ற செய்தி மக்களுக்குத் தெரிய வேண்டும். அதனால் நம் கொள்கைக்கும், இயக்கத்துக்கும் பெருமை என்பது என்னுடைய கருத்து. என்னுடைய துணைவியார் வைதிகக் கருத்துக் கொண்டவராக இருந்தார். பின்னால் என் கொள்கைகளுக்குத் தொந்தரவு கொடுக்காமல் உடன்பட்டவராக வாழ்ந்து வருகிறார்.

தாலி அகன்றது!

அவர்கள் கையிலே அணிந்திருந்த வளையல் உடைந்துவிட்டது. கூட பவுன் போட்டு மாற்றவேண்டும் என்று கூறினார்கள். கழுத்தில் உள்ள தாலியைக் கழற்றி அந்த தங்கத்தை பயன்படுத்திக் கொள்ளலாமே என்றேன்; தாலி அகலவேண்டும் என்பது என் கருத்து; அதற்கும் என் துணைவியார் ஒத்துக்கொண்டார்கள். அன்று கழற்றிய தாலிதான்!

என்னுடைய தம்பி தங்கவேலுவுக்கு 1962-லும், பெரிய மகனுக்கு 1967-லும் மகளுக்கு 1973-லும் தந்தை பெரியார் தலைமையில் திருமணம் நடைபெற்றது. 1974-ல் அம்மா அவர்களின் தலைமையில் எனது மகன் வடுகநாதனுக்குத் திருமண ஏற்பாடு. அம்மாவுக்கு உடல் நலம் இல்லை. அதனால் வர இயலவில்லை. ஆசிரியர் வந்து நடத்தி வைத்தார்கள். மறுநாள் பெண் - மாப்பிள்ளையை திருச்சிக்கு வரவழைத்து புதிய துணிகளை மணமக்களுக்கு வழங்கினார்கள். அதற்குப் பின் எங்கள் வீட்டில் நடக்கும் அத்தனைத் திருமணங்களும் நமது பொதுச்செயலாளர் அவர்களின் தலைமையில் தான் நடைபெற்றன.

எனது பேரன் சித்தார்த்தனுக்கும், தம்பி மகன் காமராசுக்கும் சாதி மறுப்புத் திருமணங்கள் நடைபெற்றன. விதவையர்கள் மாலை எடுத்துக் கொடுத்துதான் எங்கள் வீட்டுத் திருமணங்களை நடத்தி வருகிறேன்.

வீட்டில் பிள்ளைகள் அனைவரும் கொள்கைவாதிகள் - தம்பி மகன் காமராஜ் கழகச் சொற்பொழிவாளனாக இருந்து வருகிறான். அவன் முழுமையும் இயக்கப்

ஒரு பார்ப்பனரின் பூரிப்பு

தந்தை பெரியார் அவர்கள் 1958-ல் சென்னை பொது மருத்துவமனையில் இருந்தார்கள். அவர்களைப் பார்க்க நான் சென்று இருந்தேன். அப்பொழுது தமது சொந்த காரியமாக சென்னை வந்த தஞ்சையைச் சேர்ந்த வக்கீல் குமாஸ்தா சீனிவாச தாத்தாச்சாரி, பெரியாரைத் தானும் பார்க்க விரும்புவதாகக் கூறினார். 'சரி' என்று அவரையும் அழைத்துச் சென்றேன். அய்யாவுடன் சிறிது நேரம் பேசிக்கொண்டு இருந்துவிட்டு விடை பெற்றோம். அய்யா அந்த அய்யரைப் பார்த்துச் சொன்னார். 'அவர் குப்புசாமி என் கட்சிக்காரர். என்னைப் பார்ப்பது சாதாரணம். ஆனால் நீங்கள் என்னைப் பார்க்க வந்தது - எனக்கு மிகவும் பெருமை!' என்று சொல்லி எழுந்து நின்று வழியனுப்பி வைத்தார்.

வெளியே வந்த வக்கீல் குமாஸ்தா பார்ப்பனர் மிகவும் அதிர்ந்து போய் விட்டார். 'நான் என்னவோ நினைத்திருந்தேன். உண்மையிலேயே பெரிய மகான்! ஞானி! அவர் முகத்தில் இருக்கும் 'தேஜஸ்' ஏ, அப்பா... உண்மையிலேயே பெரிய மனுசர்! என்ன மரியாதை... என்ன மரியாதை... என்று என் கையைப் பிடித்துக்கொண்டு சொன்னார்! மறுநாள் தஞ்சாவூர் கோர்ட்டில் தன்னைச் சந்தித்தவர்களிடத்தில் எல்லாம் சொல்லியிருக்கிறார்.

பணியில் ஈடுபட வேண்டும் என்கிற வகையில் ஏற்பாடுகளைச் செய்து இருக்கிறேன். அவன் இந்த அளவு வளர்ச்சி அடைந்ததற்குக் கூடக் காரணம் நமது பொதுச்செயலாளர் அவர்கள் தான்.

பொதுச்செயலாளருடன் சுற்றுப் பயண உதவிக்காக சில ஆண்டுகள் அவனை அனுப்பி வைத்திருந்தேன். அந்த அனுபவம்தான் அவனை நல்ல அளவு உருவாக்கியது.

எல்லாம் இந்தக் கொள்கையால்தான்

கேள்வி: இந்த இயக்கத்தில் இருப்பதால் உங்களுக்கு மன நிறைவு உள்ளதா?

பதில்: என்னைவிட தஞ்சாவூரில் பெரிய பணக்காரர்கள் இருக்கிறார்கள். பதவிக்காரர்கள் இருக்கிறார்கள். நான் சாதாரண ஏழாம் வகுப்பு படித்தவன். என்னை கட்சிக்கு அப்பாற்பட்ட தன்மையில் அனைவரும் பெரிதும் மதிக்கிறார்கள். இந்த மரியாதை எனக்கு எங்கிருந்து வந்தது? இந்த இயக்கம்தான்; இந்தக் கொள்கைதான்; இந்தக் கருப்புச்சட்டைதான்!

இந்தக் கொள்கையை ஏற்றுக்கொள்ளாதவர்கள்கூட 'இந்தக் கொள்கைக்காரர்கள் அதன்படி வாழ்கிறார்கள்; நாணயமாக இருக்கிறார்கள்!' என்று சொல்லுவதை நாம் கேட்கும்பொழுது, நமக்கு எவ்வளவுப் பெருமையாக இருக்கிறது. இதற்கு ஈடான பதவியும், சுகமும் ஒன்று இருக்க முடியாது என்பது என் கருத்து.

தந்தை பெரியாரின் பகுத்தறிவுக் கொள்கையால் தன்னம்பிக்கை ஏற்படுகிறது. மூட நம்பிக்கைக்கு இடமில்லை. அதன் காரணமாக தேவையற்ற செலவுகள் மிச்சம். மற்றவர்களுக்கு உதவவேண்டும் என்கிற மனிதாபிமான எண்ணம் ஏற்படுகிறது. எல்லா வகையிலும் திராவிடர் கழகத்தின் கொள்கை மிக உயர்ந்து நிற்கிறது. இன்னும் இதனை நம் மக்கள் முழு அளவில் உணர்ந்து கொள்ளவில்லையே என்பதுதான் எனக்கு வருத்தம்.

நாணயம்

தஞ்சாவூர் சட்டமன்ற தொகுதிக்கு காங்கிரஸ் சார்பில் பரிசுத்தம் அவர்கள் நின்றார். தந்தை பெரியார் கட்டளைப்படி காமராஜ் கைகளைப் பலப்படுத்த காங்கிரசை ஆதரித்த நேரம். அதன்படி அவரை ஆதரித்துத் தேர்தல் பணியாற்றினோம். 9000 ரூபாய் திராவிடர் கழகத்தின் மூலம் செலவு செய்யப்பட்டது. தேர்தலில் அவர் குறைந்த வாக்குகளில் தோல்வி அடைந்தார். தேர்தல் முடிந்தவுடன் கணக்குகளை எழுதி மீதிப்பணம் ரூ. இருநூறையும் அவர் வீட்டுக்குச் சென்று கொடுத்தேன். அவர் மிகவும் ஆச்சரியப்பட்டுப் போனார்! உலகத்திலே உங்களைப்போன்ற தொண்டர்களைப் பார்க்கமுடியாது என்று திருப்பித் திருப்பிச் சொன்னார். 'நீங்கள் பணத்தைத் திருப்பிக் கொடுக்கிறீர்கள். அதோ வெளியில் நிற்கிறார்களே - அவர்கள் இன்னும் பணம்வேண்டும் என்று கேட்டுக்கொண்டு இருக்கிறார்கள் என்றார். நமது கழகக் கமிட்டிக் கூட்டத்துக்கே வந்து பாராட்டிச் சொன்னது மட்டுமல்ல; 'உங்கள் ஆதரவு இல்லை என்றால் நான் 'டெபாசிட்' இழந்திருப்பேன்!' என்றார்.

அறிவின் தந்தை

எப்படி பெரிய ரோட்டு உருளையானது, ரோட்டில் பரப்பப்பட்டுள்ள சிறுகல், பெருங்கல் அனைத்தையும் பளுவால் சரி மட்டமாக்குகிறதோ, அப்படித் தன் அறிவுருளையாய் அனைத்தையும் சமமாக்கித் தந்தார் நமது அறிவின் தந்தை பெரியார்.

— அஞ்சாநெஞ்சன் அழகிரி

மலேசியாவில் பெரியாரின் தாக்கம்

'திருச்சுடர்' கே. ஆர். ஆருடன் நேர்காணல்

மலேசியா திராவிடர் கழகத்தின் முன்னணித் தலைவராகிய "திருச்சுடர்" கே.ஆர். இராமசாமி அவர்களுடன் ஒரு பேட்டி (சென்னை, 7-9-93).

மலேசியாவில் தமிழர்கள் பொருளாதார நிலையில் மகிழ்ச்சியுடன்தான் வாழ்கிறார்கள். ஆனாலும் மூடநம்பிக்கை, தன்னம்பிக்கையின்மை, தலை விதித் தத்துவம் என்று வரும்பொழுது இன்னும் பிற்போக்கு எண்ணங்கள் தலை தூக்கிதான் நிற்கின்றன.

கேள்வி : பொருளாதார வளம் உள்ள மக்களாக வாழும் மலேசியாவில் தந்தை பெரியார் அவர்கள் கருத்துகள் எந்த அளவுக்குத் தேவைப்படுகின்றன?

பதில் : தந்தை பெரியார் கருத்துக்களை கொள்கைகளாகக் கொண்டு வாழ்வது மூலமாகத் தான் அவர்கள் முழு மனிதர்களாக வாழ்வார்கள். வாழ்வு என்பது நல்ல வீடு, நல்ல உடை, ஆடம்பரமான வாழ்க்கை இத்தோடு முடியக் கூடியதல்ல. இவை எல்லாம் இருந்தும் தந்தை பெரியாரின் பகுத்தறிவுச் சிந்தனைகளைக் கடைப்பிடிக்கும் பொழுதுதான் மனித நேயம், பண்பாடு, பொது ஒழுக்கம், அறிவார்ந்த அணுகு முறைகள் அவர்களுக்கு ஏற்பட முடியும்.

கேள்வி : மக்களின் பிற்போக்குத் தனங்களை எதிர்த்து திராவிடர் கழகம் பாடுபடவில்லையா?

பதில் : பாடுபடுகிறது ; ஆனாலும் அரசியல் வாதிகள், தகவல் தொடர்பு சாதனங்கள் நமக்கு மாறாக செயல்படுகிறார்கள். இன்ஷூரன்ஸ் ஏஜண்டுகளாக இருக்கக்கூடிய நமது தோழர்கள் அண்மைக்காலத்தில் ஒரு புதிய முயற்சியை மேற் கொண்டார்கள்.

அந்த அமைப்பு மூலம் நாடெங்கும் கருத்தரங்குகளை நடத்தினார்கள். தன் முனைப்புத் தூண்டல், பணமா - பாசமா? வாழ்வில் முன்னேறுவது எப்படி? என்கிற தலைப்புகளில் அக்கருத் தரங்குகள் அமைந்தன. இதன் மூலம் இளைஞர்கள் மத்தியில் அந்த பெரியாரின் தன்மான - தன்னம்பிக்கைக் கருத்துக்களைப் பரப்ப முடிந்தது.

கேள்வி : அரசாங்கம் திராவிடர் கழகத்தை எப்படி நோக்குகிறது?

பதில் : வெளிப்படையாக நம் கொள்கைகளுக்குப் பச்சைக் கொடி காட்டவிட்டாலும், நமது பிரச்சாரத்தை அவர்கள் விரும்புகிறார்கள். நம் பிரச்சாரத்தைப் பற்றி அரசுக்குப் பலரும் புகார்கள் செய்தாலும், அரசு கண்டு கொள்வதில்லை.

சுயமரியாதைத் திருமணத்தைச் செல்லுபடியாக்கியுள்ளார்கள். அண்மையில் தந்தை பெரியாரின் தமிழ் எழுத்துச் சீர்திருத்தத்தை ஏற்றுக் கொண்டு சட்டமாக்கியுள்ளார்கள்.

சில ஆண்டுகளுக்கு முன் நமது கழகத்தின் சார்பில் மகளிர் விடுதலைக் கருத்தரங்குகளை நடத்தினோம். அம்மாநாட்டில்

தமிழர்களுக்காகவே பிறந்து வாழ்ந்து மறைந்த தந்தை பெரியாரே!
தங்களின் 115 வது பிறந்த நாளில் எங்களது இனிய நல் வாழ்த்துக்கள்

நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள், பேசப்பட்ட கருத்துகளுக்கு ஒரு விளைவு ஏற்பட்டுள்ளது. பெண்கள் முன்னேற்ற சம்பந்தமாக சட்டங்களை இயற்றுவதில் அரசு கவனம் செலுத்தி வருகிறது. கணவன் இறந்துவிட்டால் மனைவிக்கு முக்கால்பங்கு சொத்து சேர வேண்டும் என்கிற சட்டம் நிறைவேற்றப்பட இருக்கிறது.

அண்மையில் தகவல் துறை அதிகாரிக்கு ஒரு பயிற்சி நடைபெற்றது. அதில் அவர்களிடம் ஒரு கேள்வி கேட்கப்பட்டது. திராவிடர் கழகக் கூட்டம் என்றால் பொதுமக்கள் அதிகம் கூடுவதற்கே காரணம் என்ன என்பதுதான் அந்தக் கேள்வி.

அந்த அலுவலர்கள் பொது மக்கள் மத்தியிலே அதுபற்றி நேரிடையாகவே சென்று தகவல்களைச் சேகரித்தனர், அதற்குக் கிடைத்த பதில் : திராவிடர் கழகக் கூட்டங்களில் தமிழுணர்வு, பகுத்தறிவு உணர்வு, மனிதநேய கருத்துகள் பேசப்படுகின்றன. அதுதான் அதற்குக் காரணம் என்று அவர்கள் அறிக்கை கொடுத்துள்ளார்கள்.

கேள்வி : தந்தை பெரியாரின் கருத்துகள் எந்த அளவுக்குத் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளன?

பதில் : பக்தி உணர்வு எப்படி இருந்தாலும், சாதி உணர்வில் ஆழம் குறைந்திருக்கிறது. சாதி ஒழிப்பு, மத ஒழிப்புத் திருமணங்கள் நாளும் பெருகிக் கொண்டுள்ளன. காதல் திருமணங்கள் மிக ஏராளம்! ஆரம்பத்தில் சாதி, மத உணர்வு காரணமாக எதிர்ப்புத் தெரிவித்த பெற்றோர்கள் எல்லாம் இன்று வரவேற்கிறார்கள். தந்தை பெரியாரின் கொள்கைக்கும் திராவிடர் கழகப் பிரச்சாரத்துக்கும் கிடைத்த மிகப் பெரிய வெற்றி என்று இதனைச் சொல்லவேண்டும்.

மண்டலறிக்கையிலிருந்து....

4.26. மூவாயிரம் ஆண்டுகளுக்கும் மேலாக நிலைபெற்று மேற்கண்ட சமுதாயக் கட்டுக்கோப்பு முறையானது, பல்வேறு சாதி விரிவிலும் வளர்ச்சியிலும் அநேக வகைகளில் விளைவுகளை ஏற்படுத்தியது. உதாரணமாக, உயர்ந்த அறிபொருளின் ஒட்டுமொத்தப் பாதுகாவலர்களாக இருந்த பார்ப்பனர்கள், அறிவுத் துறைகளில் ஒரு தனி ஆர்வத்துடன் கூடிய மிகவும் பண்பட்ட ஒரு சமுதாயத்தினராக வளர்ச்சி அடைந்தனர். அதற்கு எதிரிடையாக, சூத்திரர்கள், சமுதாய கல்வி பண்பாட்டு பொருளாதாரத் துறைகளில் எல்லாவகை நெருக்கடிகளுக்கும் இடைவிடாமல் ஆளாக்கப்பட்டமையால், எழுத்து வாசனையில்லாப் பாமரருக்கே உரிய கவர்ச்சியற்ற தனித்தன்மைகளை அடைந்தார்கள்.

- மண்டல் குழு அறிக்கையிலிருந்து

பளிச்சிடும் வெண்மைக்கு ''இருமலர் சோப்''

50 ஆண்டுகளுக்கு மேலாக சோப்பு தயாரிப்பில் அனுபவம் பெற்றவர்கள் தயாரிக்கும் ''இருமலர் சோப்'' உங்கள் ஆடைகளின் அழுக்கை விரட்டி தூய வெண்மை அளிப்பதுடன் ஆடைகளின் நூல் இழைகளையும் பாதுகாப்பதால் உங்கள் துணிகள் நீண்ட நாள் பாதுகாக்க கேட்டு வாங்குங்கள் ''இருமலர் சோப்'' எல்லா கடைகளிலும் கிடைக்கும்.

தயாரிப்பாளர்கள்:-

முத்து சோப் ஒர்க்ஸ்,

புலிவலம் (அஞ்சல்), திருவாரூர் - 610 109

☎ Off: 3148; Res: 2468

நிர்வாக பங்குதாரர்:-

எஸ்.எஸ். மணியம், தலைவர்,

திராவிடர் கழகம், நாகை.

''இருமலர் சேமியா''

உயிர்சத்து நிறைந்த ''இருமலர் சேமியா'' கலப்படம் இல்லாத முழுவதும் கோதுமை மாவினால் புதிய சுகாதார முறையில் தயாரிப்பதால் குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை அனைவருக்கும் ஏற்ற உணவு ''இருமலர் சேமியா''. வறுக்க வேண்டியது இல்லை. அய்ந்தே நிமிடங்களில் உணவு தயாரித்துவிடலாம். சுவை நிறைந்தது ''இருமலர் சேமியா'' என்று கேட்டு வாங்குங்கள்

ஏஜெண்ட் இல்லாத ஊர்களுக்கு டெப்பாசிட் கட்டக்கூடிய ஏஜெண்டுகள் தேவை:-

தயாரிப்பாளர்கள்:-

எஸ்.எஸ்.எம். சேமியா பேக்டரி,

புலிவலம் (அஞ்சல்),

திருவாரூர் - 610 109.

நிர்வாக பங்குதாரர்:-

எஸ்.எஸ். மணியம், தலைவர்

திராவிடர் கழகம்,

நாகை காயிதே மில்லத் மாவட்டம்

பெரியாரின் பெண்ணுரிமைச் சிந்தனைகள்

டாக்டர் தாயம்மாள் அறவாணன்
பேராசிரியர், கந்தசாமி மகளிர் கல்லூரி, கடலூர்

நீண்ட காலமாகப் பெண்கள் அடிமைகளாக நடத்தப்பட்டனர். வாய் இருந்தும் ஊமையராய் வாழ்ந்தனர். வாய்ப்பு இருந்தும், வசதி இருந்தும் வாழ்வு இழந்து உழன்றனர். அறிவு இருந்தும் சிந்தனை தவறினர். உடைமை இருந்தும் உரிமையற்று அடிமையாயினர். பெண்களின் இத்தகைய இழிநிலையை யாரும் எண்ணிப் பார்க்கவில்லை. ஒரு சிலரே மிகப் பிற்காலத்துக் குரல் கொடுக்கத் தொடங்கினர். அக்குரல் ஓங்கிய குரலாக இருந்தமையாலே இன்று, பெண் அடிமை நிலை என்னும் கட்டு மெல்ல அவிழ்ந்து வருகிறது. பல வேலைகளில் ஆணுக்குப் பெண் இங்கே இணை என்ற நிலை உருவாகி வருகிறது.

அக்குரல் யாருடைய குரல்? ஈரோட்டு வேந்தர் தம் சிங்கக் குரல் அது. இருள் மண்டிய பெண்டிர் சமுதாயத்திற்கு ஒளி வெள்ளம் பாய்ச்சிய பெரியாரின் குரல். பெண்ணுக்கு உரிமை தேடித்தரும் வழிகளையெல்லாம் கண்டறிந்தார். பெண்ணியம் பேசியதால், பெரியார் என்ற பட்டமும் பெண்கள் மாநாட்டில் பெற்றார்.

பெண்ணுரிமை, தேவதாசி ஒழிப்பு முறை, விதவை மணம், சுயமரியாதைத் திருமணம், பெண்கள் சொத்துரிமை, ஆண்களோடு ஒத்துரிமை, பெண்களுக்கு தற்காப்பு, காதல் மணம், பெண் கல்வி, குடும்பக் கட்டுப்பாடு, நகைப்பித்து, சிசுமணம், பெண் கற்பு, வரதட்சணை, மாதர் மாநாடு, பெண்களின் மூட நம்பிக்கை இவ்வாறான பல தலைப்புகளில், கருத்துகளில் புதுமையான சிந்தனைகளைச் சிந்தித்தார், அச் சிந்தனைகளால் பல சோதனைகளைச் சந்தித்தார். ஆண்டாண்டு தோறும் பழக்கப்பட்ட அடிமை மனம் மீட்சியுற்று எழுச்சி பெற முதலில் முன் வரவில்லை. இருப்பினும் சோர்வுறாது பெண்ணியச் சிந்தனைகளைப் பேசியும் எழுதியும் முழங்கியும் வந்தார் பெரியார். இதனால் வெற்றி பெற்றார். இன்னும் பெண்டிர் எழுச்சி பெறவில்லையென்றார்.

ஒன்றா, இரண்டா?

பெண்டிருக்கு இள வயதில் மணவினை முடிக்கப் பெற்றுக் குடும்பப்பாரம் சுமத்தப்பட்ட நிலை ஒரு காலகட்ட நிலை. இன்று வயதுக்கு வந்த பின்னர் பல ஆண்டுகள் சென்று மணம் முடிக்கும் நிலை.

★ விதவை என்ற சொல்லுக்கு இணையான ஆண்பாற் சொல் இல்லை. விதவைத் திருமணம் வேண்டும் என்றார் பெரியார். ஆணைப்போல் பெண்ணும் மறுமணம் செய்துகொண்டு வாழ்வதை இன்று பார்க்கலாம்.

★ ஆணைப்போலவே பெண்ணுக்கும் சொத்துரிமை, மணவிலக்கு உரிமை ஆகியவை இன்று பெண்ணுக்கு கிடைத்துள.

★ தற்காப்பு முறைகளைப் பெண்களுக்குக் கற்றுத்தரவேண்டும் என்ற பெரியாரின் கருத்து நடைமுறைப்படுத்தப்பட்டது.

சென்னை மாநகராட்சி

'எழில்மிகு சென்னை — 2000'
வெற்றி நடை தொடர்கிறது...



மெரீனா & எலியட்ஸ் கடற்கறைகள் அழகுபடுத்துதல்



சாலைகள் & வீதிகள் மேம்படுத்துதல்

பாலங்கள் கட்டுதல் & அகலப்படுத்துதல்

உங்கள் நலனே
எங்கள் குறிக்கோள்



தெரு விளக்குகள் & நடைபாதைகள் அமைத்தல்



மழைநீர் வடிகால் கட்டுதல்

பொது நல சுகாதாரத்துக்காக திட்டங்கள்

ஆணையாளர்
சென்னை மாநகராட்சி

DIPR/ 667 /DIS/93/Bright.

காவல்துறையில் பணியாற்றுபவளாக, வண்டி ஓட்டுநளாக இன்று பெண்கள் பணி யாற்றுதற்குப் பெருமைப்படவேண்டும்.

★ ஆரம்ப ஆசிரியராகப் பெண்கள் அமர்த்தப்படவேண்டும் என்ற அவர் சிந் தனை நிறைவேறியுள்ளதே.

★ ஒன்று இரண்டு பிள்ளைகள் மட்டுமே பெற்றுக்கொள்ளும் இக்காலப் பெண்ணின் விழிப்புக்கு விதை இட்டவர் பெரியாரே.

★ ஒவ்வொரு பெண்ணும் தானும் ஏதா வது சம்பாதிக்கும் தகுதிக்குத் தக்கபடி ஒரு தொழில் கற்றிருக்கவேண்டும்; இதனால் எந் தக் கணவனும் அடிமையாய் நடத்தமாட் டான்; வாழ்விலும் சம இன்பம் இருக்கமுடி யும். இது பெரியாரின் போதனை! அவர் கருத்து வெற்றியடைந்து வருவதற்கு இக்கா லப் பெண்கள் பலர் வேலைக்குச் செல்வதே சான்று.

★ பெண்களுக்குக் கல்வி வேண்டும். முதலில் பெண்களைப் படிக்க வைக்கவேண் டும். பெண் படித்துவிட்டால் ஆண்கள் ஒழுக்க சீலர்களாக இருப்பார்கள். இப்பொ ழுது ஆண்கள் இவ்வளவு அயோக்கியர்க ளாக இருப்பதற்குக் காரணம் பெண்கள் படித்து அறிவு பெறாமல் இருப்பதுதான்! இது பெரியாரின் பெண் கல்விச் சிந்தனை.

பெண்கள் பலர் படித்து, பட்டம் பெற்று, அறிவாளியாக விளங்குகிறார்கள். பகுத்து அறியும் திறனோடு பணிபுரிந்தும் வருகிறார் கள்.

★ தேவதாசி ஒழிப்பு முறைக்கு ஓங்கிய முழக்கம் இட்டவர் பெரியாரே. இன்று அத்த கைய முறை இல்லாமல் போய்விட்டதே, பெரியாரின் சிந்தனைக்கு சான்று.

பெண்கள் தங்களைச் சிங்காரித்துக்கொள் வதில் நேரத்தையும் கவலையையும் செலுத் துவதோடு பணச் செலவையும் செய்கிறார் கள். இது ஒரு அடிமை மனப்பான்மையல் லவா! அதிகமாக அலங்காரம் செய்துகொள் வது விகாரமாகக் காணப்படுவதில்லையா! இது பெரியார் கூற்று. இதைப் பல பெண்டிர் ஏற்றுக்கொண்டு வருகின்றனரே.

பெரியாரின் சிந்தனையில் பட்டுத் தெறித்த முத்துக்கள் ஏராளம். அவற்றைத் தாராளமாக உலகுக்கு வழங்கினார். அவற்றையெல்லாம் பொறுக்கிக் கோர்த்து மாலையாக ஆக்கி அணிந்து மகிழ்வு அடையலாம்; பெரும் முத்து வணிகம்கூடச் செய்யலாம். ஏற்றுமதி செய்து அனுப்பலாம். எல்லாவற்றினும் பயன் உண்டு; பயன் அடைந்தவர் பலர் மேலும் பலரும் உண்மை உணர்ந்து பயன் பெற்று உய்வோம்.

சுதந்திரமா?

இந்திய யூனியனின் கவர்னர் - ஜனரலாக மவுண்ட் பேட்டன் பிரபு இருக்கும்வரையில், இங்கிலாந்து மன்னர் தன்னை இந்திய யூனிய னின் சக்கரவர்த்தியென அழைத்துக் கொள் ளும்வரையில், நமக்குச் சுதந்தரம் கிட்டிவிட்ட தாகாது. நாம் போராடி வந்த முழு விடுதலை இதுவல்ல.

சமூக அநீதியும், வகுப்பு வேற்றுமையும் இல்லாத, ஏழை மக்களின் சுயராஜ்யத்தை நாம் இனிமேல்தான் நிறுவியாக வேண்டும்.''

-செயப்பிரகாஷ் நாராயண்

(கூர்ச்சரம் கல்லூரி நிகழ்ச்சியில் பேசியது)

-'விடுதலை' 11-8-1947



இந்தியன் வங்கியின்
பிக்சட் டெபாசிட் திட்டம்.

உங்கள் வளமைக்கு வழிகாட்டி.

பாதுகாப்பு
உடனடி பணம் பெறும் வசதி
அதிக வருமானம்

இந்தியன் வங்கியின் பிக்சட் டெபாசிட் திட்டத்தின் கீழ் உங்கள் டெபாசிட்டின் மீது உங்களுக்கு மூன்று மாதத்திற்கொருமுறை வட்டி கிடைக்கிறது. மாத வட்டியும் பெறலாம் — ஆனால் சற்று குறைந்த விகிதத்தில்.

உங்கள் பணம் பத்திரமாக இருக்கும். மேலும், டெபாசிட் முதிர்ச்சி அடையும் காலத்திற்கு முன்பே பணம் தேவைப்பட்டால், விதிகளின்படி கணக்கிடப்பட்ட வட்டியுடன் டெபாசிட் தொகையைப் பெறலாம். 75% வரை கடனாகவும் பெறலாம்.

தனிப்பட்ட கவனம் மற்றும் சிறப்பான சேவையில் புகழ்பெற்ற இந்தியன் வங்கி, வளமைக்கு வழிகாட்டி வாழ்வுக்கு ஒளியூட்டுகிறது.

இந்தியன் வங்கி
உங்கள் செல்வச் செழுமைக்கு உதவும் வங்கி
31, இராஜாஜி சாலை, சென்னை - 600 001.

தந்தை பெரியார் கேட்கிறார்!
அசோகச் சின்னத்தை வைத்துக்கொள்ள யோக்கியதை உண்டா?

உலகத்திலுள்ள பித்தலாட்டங்களில் எல்லாம் பெரிய பித்தலாட்டம் இந்த கொள்ளைக்கார பச்சை வர்ணாசிரம மனு தர்ம ஆட்சியை 'ஜனநாயகம்' என்பதாகும். அதைவிடப் பெரிய பித்தலாட்டம் இந்த ஆட்சிக்காரர்கள் தங்கள் கொடியைப் போட்டிருப்பதாகும். கேட்டால் அசோகச் சின்னம், தர்ம சக்கரம் - அதை உலகுக்கு எடுத்துக்காட்டத்தான் போட்டிருக்கிறோம் என்பான்! தேசீயக் கொடியில் சும்மா பேரளவில் வெளிநாட்டாரை ஏமாற்ற அசோகச் சின்னத்தையும் தர்ம சக்கரத்தையும் போட்டிருக்கிறானேயொழிய நடத்தையில், உண்மையில் இவன் ஆட்சிக்கும் அசோகனுக்கும் புத்த கொள்கைக்கும் ஏதாவது கடுகளவாவது சம்பந்தம் உண்டா?

புத்தரும் அசோகனும், சாதியும் கடவுளும் பித்தலாட்டம் என்பதை வெளிப்படையாக மக்களுக்கு எடுத்துக் கூறியவர்கள். புத்தர் கொள்கை முத்திரை போட்டு நடத்துகிற இந்த ஆட்சியில் நடப்பது என்ன? அசல் வர்ணாசிரம தர்மத்தை அமுல் நடத்துவதைத் தவிர வேறு என்ன? சாதியை ஒழிக்க விரும்பி சாதிக்குப் பாதுகாப்பளிக்கும் சட்டம் வேண்டாம் என்றால் 3 வருடம் கடுங்காவல் தண்டனை.

இப்படிப்பட்ட நிலையில் புத்தர் சின்னத்தையும் அசோகர் ஆட்சிச் சின்னங்களையும் பொறித்துக் கொள்ள இன்றைய ஆட்சிக்கு என்ன யோக்கியதை இருக்கிறது?

முதலாவது இந்த மூவர்ணக் கொடியான தேசீயக் கொடி எப்படிப் படிப்படியாக மாறியது என்பதும் இன்று அது எப்படி இருக்கிறது என்பதும் உங்களில் பலபேருக்குத் தெரியாது.

முதன்முதலாக மூன்று வர்ணங்களைக் கொண்ட இந்தக் கொடிக் கருத்தை அன்னிபெசன்ட் அம்மையார்தான் ஏற்பாடு செய்து தந்தார்கள். மைனாரிட்டியாக இருந்த கிருஸ்துவர்களுக்கு அடையாளமாக வெள்ளை; அதை மேலே போட்டு அதற்கு அடுத்து பெருபான்மையோராக உள்ள முஸ்லீம்களைக் குறிக்க பச்சையும், இவர்கள் இருவரையும் தாங்குவதாக மெஜாரிட்டியாக இருக்கும் இந்துக்களுக்கு அடையாளமாக மஞ்சள் அல்லது ஆரஞ்சுகலரும் போடப்பட்டதாகும். இதுதான் பெசன்ட் அம்மையார் காலத்தில் ஏற்பட்ட கொடியாகும்.

ஆனால், இப்போது இது மாற்றப்பட்டுவிட்டது. மெஜாரிட்டியாக உள்ள இந்துக்களுக்கு உரிய அடையாளமான ஆரஞ்சு (அல்லது மஞ்சள்) மேலேயும், வெள்ளை நிறம் - மைனாரிட்டி கிறிஸ்தவர்களைக் குறித்த நிறம் அதற்கடுத்தும், இஸ்லாமியர்களைக் குறித்த பச்சைநிறம் அதற்குக் கீழேயும் போடப்பட்டு இருக்கிறது.

அதாவது காந்தியார் பித்தலாட்ட சகாப்தம் ஏற்பட்ட பிறகுதான் இப்படி தலைகீழாக மாற்றப்பட்டுவிட்டது. கிறிஸ்துவனையும் துலுக்கனையும் நம் கடவுள்கள் செய்கிற மாதிரி கீழேபோட்டு மிதித்துக் கொண்டு அசல் இந்துமத வர்ணாசிரம தர்மமுறைப்படி ஆளுகிறோம் என்று சொல்லுவதற்கு ஒப்பாகத்தான் இந்தக் கொடியும் அக்கிரமமான ஆட்சியைக் காட்டுகிறது.

-(வடநாடு சென்று திரும்பிய தந்தை பெரியார் அவர்களை வரவேற்று திருச்சி, தர்மபுரி ஆகிய ஊர்களில் நடந்த பொதுக்கூட்டங்களில் (7, 8-3-59) தந்தை பெரியார் அவர்கள் ஆற்றிய உரையிலிருந்து)

- 'விடுதலை', 16.3.1959

தமிழர் தலைவர்
தந்தை பெரியார்
பிறந்தநாள் வாழ்த்துக்கள்

எச்சல் பட்டு முறுக்காலை

13.சி/1-1/9 சீவா நகர், 2 வது தெரு,
செய்இந்துபுரம், மதுரை-11



குறிஞ்சி நிறுவனம்

49/2 வி.கே.பி. கூட்டமைப்பு
கான்சா மேட்டுத் தெரு, மதுரை-1

தொடர் வைப்புக் கணக்கு, வைப்புக் கணக்கு
பாதுகாப்பான நிறுவனம்

இந்தத் தலைமையின் காலத்திலேயே...

இனநலம்

''இதை மாற்றியாகனும். பெரிய விஷயந் தான்! பெரிய முயற்சி பண்ணனும்; பெரிய முயற்சி பண்ணனும்''-

தம் மூச்சடங்குவதற்கு முன்பாக நிகழ்த்திய இறுதிப் பேச்சில் இனமான மீட்பர் தந்தை பெரியாரவர்களின் வாயிலிருந்து வெடித்துச் சிதறிய சொற்களே மேலே மேற்கோட் குறிகளுக்கிடையே இருப்பவை.

எதை மாற்றியாக வேண்டுமென்பதற்காகப் பெரிய முயற்சி பண்ணவேண்டும் எனத் திரும்பத் திரும்ப வலியுறுத்தினார் அய்யா?

''நாம் சமுதாயத்திலே ஈனப் பிறவிகளாக - அசிங்கப்படும்படியாக, இன்னொரு சாதியானுக்கு - அடிமைகளாக, அவனுடைய தாசி மக்களாக இருக்கவேண்டும் - இருக்கிறோம் - இருந்து வருவதுதான் ஆட்சியினுடைய தன்மை என்று கருதும்படியாக இழிவான நிலைமையிலே இருக்கிறோம். அதிலிருந்து மாற வேண்டுமென்று கேட்கிறோம்'' - என்று அய்யாவே அதை விளம்பினார்.

''நான் பிறக்கிறதற்கு முன்னேயே தேவடியாள் மக்கள் நீங்கள்; நான் பிறக்கிறதற்கு முன்னேயே சூத்திரர்கள் நீங்கள் - நான்காவது சாதி நீங்கள்; இப்போது நாளைக்குச் சாகப் போகிறேன் - சூத்திரனாய் விட்டுவிட்டுத்தானே சாகிறேன். அப்புறம் என்ன என்னுடைய தொண்டு?''

மனம் நொந்து - உளந் துடித்து - அய்யா வெளியிட்ட இக் கருத்து நம்மை உலுக்கி, எதற்கும் துணிய வைக்கிறதல்லவா? மேலும், ''நமது வியாதி - நோய் ('சூத்திரர்கள்', 'வேசி மக்கள்' என்ற நோய்) பெரிது; மிகமிகப் பெரிது! இது புற்று, தொழு நோய் போன்றது'' என்பதாக நோயின் தன்மையைக் கண்டுபிடித்து இன்றைக்கு 70 ஆண்டுகட்கு முன்பே தமிழர்கட்கு - திராவிடர்கட்கு உணர்த்திவிட்ட அய்யா, தொடர்ந்து இறுதி நேரம்வரை அந்நோயினைத் தீர்த்துவிட வேண்டுமெனப் போராடிக்கொண்டே யிருந்தார்.

அப்போராட்டத்தின்போது சுயராஜ்யம் பற்றிக் குறிப்பிட்டவர்களுக்கு, ''நாங்கள் சுயராஜ்யத்திற்கு விரோதிகள் அல்லர். ஆனால் சுயராஜ்யத்தில் சூத்திரன், பஞ்சமன் இருக்கமாட்டான்; மனிதன்தான் இருப்பான் என்றால் நாங்கள் உடனே ஒப்புக்கொண்டு வணக்கம் செலுத்துகிறோம். 'அந்த வேறு சங்கதி, இருக்கட்டும்' என்று கூறினால் அந்த வேறு சங்கதியை எங்களிடமே விட்டுவிடுங்கள் - நாங்கள் தீர்த்துவிடுகிறோம்'' என்று விடையிறுத்தார் அய்யா.

அதேபோன்று ''பொருளாதாரமும் படிப்பும் எல்லாவற்றையும் சமமாக்கிவிடும்'' என்று வாதிட்டவர்களிடம்'' செல்வத்திலும் கல்வியிலும் முன்னிலையில் நிற்கும் இராஜாசர் முத்தையா (செட்டியார்) சர். இராமசாமி முதலியார். சண்முகம் (செட்டியார்), மறைமலை அடிகள், 'சீஃப் ஜட்ஜ்' இராஜமன்னார், 'சீஃப் மினிஸ்டர்' இராமசாமி (ரெட்டியார்) 'பாரிஸ்டர்' எதிராஜ் போன்றவர்கள் சூத்திரர்கள் அல்லவா?

N.A. விஜய்

பழக் கமிசன் ஏஜெண்ட்

138, வடக்கு மாரட் வீதி, மதுரை-1

உரிமை: ஓ.வி.கே.நீ. அறிவுச் செல்வம்

தொலைபேசி: 39027

கண் கண்ணாடிகளுக்கு

தொ.பே: 26172

கிங் ஆப்டிகல்

272, மேலமாசி வீதி, மதுரை-1

எனவே கல்வி, பொருளாதார உயர்வு, அறிவு, ஆராய்ச்சி, திறமை ஆகிய எதுவுமே சூத்திரப் பட்டத்தை - சமுதாய இழிவை ஒதுக்கவில்லையே!'' என வழக்காடினார் அய்யா.

மானங்கெட்டதனம்

ஆயினும் இத்தகைய இழிவினை - கீழ்நிலையினை மாற்றித்தீர வேண்டுமென்றும் இந்தச் செயலுக்கே முதன்மை யளிக்கப்பட வேண்டுமென்றும் - அய்யாவையும் அவர்தம் இயக்கத்தையும் தவிர பிற இயக்கங்களும் அரசியல் தலைவர்களும் கவலையோ அக்கறையோ காட்டவில்லை. இதுபற்றி, ''இதை யாரும் கவனிக்கவில்லை. எங்களால்தான் முடியும் என்று இருக்கிறது நிலைமை. வேறு எந்தக் கட்சிக்காரனுக்கும் இதிலே கவலை இல்லை; இவர்களோடு சேர்ந்தால் ஒட்டுப் போய்விடுமே என்று பார்க்கிறான் - மானம் போகிறதைப்பற்றி அவனுக்கு வெட்கமில்லை!'' என்று குறிப்பிட்ட அய்யா அவர்கள், ''மானம் இருந்தால் இந்த நாட்டில் பார்ப்பாரக் குஞ்சு இருக்குமா? இருக்க முடியுமா? ஒரு பயல் பூணூல் போட்டுக்கிட்டு நம் எதிரிலே வருவானா? 'என்னடா அர்த்தம், இந்தப் பயலுக்குப் பூணூல் இருக்கிறது; ஏ அயோக்கியப் பயலே, என்ன அர்த்தம்? நீ பிராமணன் நான் சூத்திரன் என்று அர்த்தம். போடு உன்னைச் செருப்பாலே' - அப்படி யென்று ஆத்திரமல்லவா வரும் - நமக்கு மானம் இருந்தால்?'' என மனக் குறையும் எரிச்சலும் பட்டார்.

என்றாலும் அதையே பெரிதாகப் பொருட்படுத்திக்கொண்டு வாளா விருக்கவில்லை அய்யா. சுமார் அரை நூற்றாண்டுக் கருத்துப் பரப்பலுக்குப் பின்

`நம் இயக்கத்தவரை மாபெரும் கிளர்ச்சி யொன்றிற்கு அணியப்படுத்தும் முயற்சியில் இறுதியாக இறங்கினார். ''தோழர்களே, நம்முடைய நிலைமை உலகத்திலேயே பெரிய மானக் கேடான நிலைமை! இரண்டாயிரம் வருடமாக இருக்கிற முட்டாள் தனத்தைவிட, இந்தச் சட்டத்தில் இருக்கிறதே, - 'இந்து லா' விலேயும் அரசியல் சட்டத்திலேயும் - அது மகாமகா மானங்கெட்டத்தனம்'' என்பதாக நம்மவர்க்கும் நம் நடவடிக்கைகட்கு ஒத்துழைப்பு நல்க முன்வரும் மானமறவர்கட்கும் எழுச்சி யூட்டினார், நம் தந்தை.

''நாம் உண்மைக்குத்தான் போராடுகிறோம் - பொய்க்குப் போராடவில்லை; பொது நலத்துக்குத்தான் போராடுகிறோம் நான்கு கோடி மக்களுடைய நன்மைக்குத்தான் போராடுகிறோம்'' என்று ஊக்கவுரை செய்த தமிழினத் தலைவர் பெரியாரவர்கள், ''நமக்கு ரொம்பக் கவலை இருக்கணும்; நம் இளைஞர்கள் எல்லாம் துணியணும்; கல்யாணம் பண்ணினவன் பெண்டு பிள்ளையோடு இருக்கிறவன், மற்ற வசதியும் இருக்கிறவன் ஒரு பக்கம் இருந்தாலும் - இளைஞனாக, வாழ்க்கையிலே மாட்டிக் கொள்ளாமல் தண்டுமுண்டு இல்லாத மாதிரியாக இருக்கிற ஆட்கள் எல்லாம் இதிலே புகுந்துகொள்ளணும், அப்போதுதான் பயப்படுவான்'' என நம் இளைஞர்கட்குச் சிறப்பழைப்பு விடுத்து, ''இப்படியே சாகவேண்டியதுதானா? உலகம் உள்ளவரைக்கும் நம் பெண்டுகள் எல்லாம் பார்ப்பானுடைய வைப்பாட்டிகள் என்றுதான் இருக்கணுமா?'' என உசுப்பிவிட்டு, ''அருமைத் தோழர்களே, இது நமக்கு ஒரு கடைசி முயற்சி என்று நினைக்கணும். இப்படியே சாகிறதைவிட ஈனத்தனம் வேறே இல்லை!'' என இறுதி ஆணையும் வழங்கினார்.

பதிலுக்குப் பதில்?

நேரடி நடவடிக்கைகளை - உடனடியாக விளைவுகளை உண்டாக்கவல்ல பலப்பல நடவடிக்கைளைப்பற்றி அய்யா கருதிப் பார்த்தார்கள்.

''நான் ஏன் சூத்திரன்? என்று கேட்டால், அது பகவான் செயல் என்று கூறப்படுகிறது. அப்போதுதான் நாங்களும் கூறவேண்டியிருக்கிறது - கொடு அந்தப் பகவானுக்கு இரண்டு உதை; எல்லாம் சரியாகிவிடும் என்று''

''இதற்கெல்லாம் காரணம் என்ன? திருப்பிச் சொல்லாத காரணம்; அவர்களைக் கண்டிக்காத காரணம், பார்ப்பானைக் கண்டால், 'வாப்பா, தேவடியாள் மகனே! எப்போது வந்தாய்?' என்று கேட்கணும், 'ஏண்டா அப்படிக் கேட்கிறாய்? என்றால், 'நீ எழுதி வைத்தாயடா, என்னைத் தேவடியாள் மகன் என்று! நான் நிஜமாகவே சொல்லுகிறேன், நீ தேவடியாள் மகன் என்று' கூறணும். இதில் என்ன தப்பு?''

''நம் பெண்டுகளிடத்திலே போய்ச் சொல்லணும் - 'அம்மா, விளக்குமாறு எடுத்துக் கொள்; இந்த அரசியல் சட்டத்தை எடுத்துக் கொள்; தெருவிலே வை; போடு சீவுகட்டையாலே அதைக் குத்திக் குத்தி என்று. 'ஏனம்மா

Sangam

Sweets & Restaurant
78, Town Hall Road
Madurai - 1 Ph: 34959

Sree Sangam
Sangam Corner
A-1/3B K.K. Nagar
Madurai - 20 Ph: 46918 PP

New Sangam
Suguna Store Stop
MIG 346 Anna Nagar

Specialist in Sweets & Savouries

இனிய வாழ்த்துக்கள்

செயக்குமார்

விளம்பர முகவர்

344, வடக்கு மாசிவீதி, மதுரை-1
தலைமை: திருநெல்வேலி-671011

அரசியல் சட்டத்தை விளக்குமாற்றாலே போடு கிறாய்?' என்று கேட்டால், 'அதை எழுதின அயோக்கியப் பயல்கள் என்னைப் பார்ப்பா னுக்குத் தேவடியாள் என்று எழுதி இருக்கி றான்; பின்னே என்ன, அதனைக் கொஞ்சட் டுமா?' என்று கேட்கச் சொல்லுகிறேன்''

— இவைபோன்ற கிளர்ச்சித் திட்டங்கள் - போர் முறைகள் அய்யா அவர்களால் நமக்கு வழிகாட்டும் முறையில் அறிவிக்கப்பட்டன.

''இந்த மாதிரியான பதிலுக்குப் பதிலான முறையை நாம் எடுக்காததனாலே, நாதி இல்லை நம்மைப் பற்றிப் பேசுகிறதற்கு; கேள்வி இல்லை நம்மைப் பற்றிப் பேசுகிற தற்கு!'' எனும் காரண விளக்கத்தினையும் நமக்கு அவர் தந்தார்.

அரசியல் சட்டத்திருத்தம்

இவற்றையெல்லாம் அறிவித்த அய்யா அவர்கள் உடனடியாக இவற்றைச் செயலுரு வில் நடை முறைப்படுத்தும் கட்டளை நமக்கு வழங்கினாரில்லை. இத்தகைய நடவடிக்கை களை மேற்கொள்ளுவதற்கு முன் இந்திய அரச மைப்புச் சட்டத்தைத் திருத்துவதற்கான முயற் சியில் இறங்கினார் அவர்! 8, 9-12-73 ஆம் நாட்களில் சென்னையில் தமிழர் சமுதாய இழிவு ஒழிப்பு மாநாடு' எனும் மிகப்பெரிய எழுச்சி மாநாடு ஒன்றினைக் கூட்டி, நமக்குற்ற இழிவுகளெல்லாம் துடைக்கப்படும் வகையில் அரசமைப்புச் சட்டத்தில் ஓர் உறுப்பு (Caste is Abolished in its any form) அருமையான தீர்மானங் களை நிறைவேற்றி, மாநாடு முடிந்தவுடனே மாநாட்டுத் தீர்மானங்களைக் குடியரசுத் தலை வர், பிரதம மந்திரி, மந்திரிகள், பார்லிமெண்ட் மெம்பர்கள் ஆகியோர்க்கு அனுப்பி, ஆதர வான பதிலை அவர்கள் அனுப்பிவைக்க வேணும் எனக் கேட்கப் போவதாகவும், அது வந்த பிறகு நம் மக்களுக்கு அனுகூலமாக இல் லாவிட்டால் கிளர்ச்சியில் இறங்கப் போவதா யும் அறிவிப்புச் செய்தார், அய்யா.

''சாதி இல்லை என்கிற நிலைமை ஏற்பட்டு விட்டால் எவ்வளவு பெரிய காரியம் என்று நீங்கள் நினைக்கிறீர்கள்?'' எனவும், ''சாதி இல்லை என்று சொன்னால், பார்ப்பான் எவ னையும் கொல்ல வேண்டியது இல்லையே; பார்ப்பான் எல்லாம் செத்தான் என்றுதானே அர்த்தமாகிவிடும்?'' என்றும் அவர் குறிப்பிட் டமை எத்துணை பொருள் செறிந்தது!

நமது இழிவை மாய்த்து நம் மானத்தை மீட்டுத் தந்து நம்மை உயர்ந்த மக்களாக உலகி னர் முன்னே உலவவிட இவ்வளவு பெரும் துணிவான நடவடிக்கையில் இறங்கிய தமிழி னத் தந்தை அதன்பிறகு பத்து நாட்களில் மருத் துவமனைக்கு எடுத்துச் செல்லப்பெற்று நம்மி டமிருந்து பிரிக்கப்பட்டுவிட்டார்!

இறுதி நாட்கள்

அய்யாவின இறுதி நாட்கள் எப்படிப்பட் டவை?...

''இரண்டு நாளாய்ப் பட்டினி கிடந்தேன்; நேற்றுத்தான் காலையிலே ஒரு கப் கஞ்சி; இராத்திரி 9 மணிக்கு ஒரு தடவை கஞ்சி; முந்தா நாள் பூராவும் ஒன்றும் இல்லை; தண்ணீர் கூடக் குடிக்கவே இல்லை. இன்றைக்குக் காலையில் வந்தேன்; ஒரு இட்டிலி கொடுத்தார்கள்; இன் னொரு இட்டிலி கொடு என்றேன்; முடியாது என்று சொல்லிவிட்டார்கள்! இருந்தாலும் உங் களைப் பார்க்கிறபோது - மறுபடியும் இன்னும் எட்டு நாட்கள் பேசுவதற்கு இல்லையே என்று, மனதிலே இருக்கிறதைச் சொல்லுகி றேன்''

— மறைவதற்கு முந்திய மாதம் பொதுமக் களிடம் அய்யா அவர்களே வெளியிட்டவை இவை. (இதை எழுதும் போதே நமக்குக் கட் டுக்கடங்காத கண்ணீர் வழிகிறது!) இத்தகைய உடல்நிலையில் - சூழ்நிலையில் இருக்க நேர்ந்த அய்யா தாம் விட்டுச் செல்லும் கட மையை நிறைவேற்றித் தருதற்குத் தகுதி நிரம் பிய ஒருவரை இனங்காட்டி, நன்கொடையாக நமக்கு அளித்துவிட்டுச் சென்றார்கள். அந்த நன்கொடை - நம் கழகப் பொதுச்செயலாளர் மானமிகு கி. வீரமணியவர்கள் - அய்யாவின் நம்பிக்கை பொய்த்துப் போகாதென்று நிலை நாட்டும் வண்ணம் மதுரை இளைஞரணி மாநாட்டில், ''அய்யா காலத்தில் அவர்கள் தொடுத்த போரை நாம் முடித்தே ஆக வேண் டும்; இனி மேலும் நம்முடைய சமுதாயத்தில் சூத்திரப் பட்டம் நமக்கு இருக்கக்கூடாது. எந் தக் கூட்டம் காலம் காலமாக நம்மை அழுத்தி - நம்மைப் பார்ப்பானுடைய வேசி மக்களாக ஆக்க நினைக்கிறதோ, அந்தக் கூட்டத்தன்

ஆதிக்கத்துக்கு கல்லறை கட்டியாக வேண்டும் '' எனச் சூளுரை செய்துவிட்டார்!

எல்லா வகை வல்லமையும் செல்வாக்கும் படைத்த இந்தத் தலைமையின் காலத்திலேயே அய்யாவின் பணி முடிக்கப்பட்டாக வேண்டும் என்பதை நன்குணர்ந்திருப்போர் நாம்.

அரசியல் சட்டம் ஏற்பளித்துள்ள இந்துச் சட்டம் ஏற்றுக்கொண்டுள்ள மனுதர்மச் சட்டத்தை ஏற்றுக் கொள்ளவேண்டிய கட்டாயத்திலுள்ள 'இந்துக்கள்' என்போரில் பார்ப்பனரல்லார் அனைவரும் 'சூத்திரர்' என்பதுவும், கிறித்தவர் - முஸ்லீம்கள் - பார்சியர் அல்லா அனைவரும் - மதச் சார்புடையோர், நம்பிக்கையற்றோர் - இருதரப்பினரும் சட்டப்படி 'இந்துக்கள்' என்பதுவும் நாம் நன்கறிந்த நடப்பு உண்மைகள்.

அணியமாவோம்!

எனவே இழிவு நீக்கத்திற்காக நம் கழகத் தலைமை திட்டமிடும் எவ்வகை நடவடிக்கைகளையும் செய்து முடிக்க நாம் அணியமாவோம்.

''நாம் கூடுமான வரைக்கும் பெண்களை இதிலே புகவைக்கணும்; ஆண்கள் ரொம்பப் பேர் வரமுடியும்; இருந்தாலும் 100 க்கு 10 வீதமாவது பெண்கள் வரணும்; ஆயிரம் பேர் போனார்கள் என்றால் அதிலே 100 பெண்கள் இருக்கணும். கிளர்ச்சிக்கு அது ரொம்பத் தூண்டுகோலாய் இருக்கும்.....

தாய்மார்கள் நமக்கு ரொம்ப உதவி பண்ணுவார்கள், 'அம்மா இப்போது இந்தச் சண்டை உங்களுக்காகத்தான்; உங்களைத் தான் பார்ப்பானின் வைப்பாட்டி என்று சொல்லிவிட்டான்; ஆனதினாலே, நீங்கள் ஏதோ உங்களால் ஆனதை இந்தக் காரியத்தில் செய்யுங்கள்' என்று நாம் சொன்னால்''.

— என்று அய்யா கூறிய அறிவுரைப்படி பெண்பாலரை நிறைய இப்பணியில் கொணர்ந்து குவிக்கும் பொறுப்பினை நம் மகளிரணியினர் வெற்றியாக ஏற்று முடிப்பர் என்பதில் அய்யம் ஏது?

''இந்தக் கிளர்ச்சி, நான் விளையாட்டுக்குச் சொல்லவில்லை - இந்தக் கிளர்ச்சியை ஆரம்பிக்கிற இடந்தான் தமிழ் நாடே தவிர, ஏறக்குறைய இந்தியாவிலே பகுதி நாட்டுக்கு மேலே ஒரு வருஷத்துக்குள்ளே நெருப்புப் பிடித்துக் கொள்ளும் - ஒரு வருஷத்துக்குள்ளே!'' என்பது நம் அறிவாசானின் கணிப்பு.

விரைவில் 'சூத்திரப் புரட்சி' வெடிக்கட்டும்!
நாடெங்கும் கிளர்ச்சித் தீ பிடிக்கட்டும்!

பட்டிவீரன்பட்டி சவுந்தரபாண்டியனார்

ஆதி திராவிடர் சமுதாயத்தின் நலன் காப்பவராகத் தாமே உருவாகிக் கொண்டுள்ளவர் என்று ஊ.பு.அ. சவுந்தரபாண்டியன் அவர்களை சட்டமன்றத்திலேயே பிறிதொரு உறுப்பினர் என். துரைராஜா பாராட்டினார்.

— முனைவர் பு. இராசதுரை அவர்கள் எழுதிய ''சுயமரியாதை இயக்கத்திற்கு நாடார்கள் ஆற்றிய தொண்டு'' பக்கம் 11.



பக்தர்கள் சண்டை

நம் நாட்டில் மற்றவர்கள் சண்டையைக் காட்டிலும் பக்தர்கள் சண்டையே அதிகம். என் தெய்வம் பெரிதா? உன் தெய்வம் பெரிதா என்ற சண்டைதான் அதிகம்.

— சென்னை தமிழிசைச் சங்கக் கட்டடத் திறப்பு விழாவில் முதலமைச்சர் இராசகோபாலாச்சாரியார் 15.4.1953.

திரும்பிப் பார்க்கிறோம்...!

கவிஞர் கலி. பூங்குன்றன்

பத்து வயது சிறுவன் வீரமணியாக தமிழகத்திற்கு அறிமுகமானவர். மேசைமீது நிற்க வைத்துப் பேச வைக்கப்பட்டவர். அந்தப் பத்து வயதிலும்கூட வெளியூர் சுற்றுப் பயணங்கள் உண்டு. அன்று நடக்கத் தொடங்கிய அந்தக் கால்கள் இன்றுவரை ஓய்வு எடுத்துக்கொள்ளவேயில்லை. தமிழ்நாட்டின் ஒவ்வொரு சிற்றூரும், தெருவும் கூட இவருக்கு அத்துப்படி.

காரில் பயணம் செய்துகொண்டிருக்கும்போது திடீரென்று விழித்து சாலை ஓரத்தில் இருக்கக்கூடிய ஒரு மரத்தைப் பார்த்துக்கூட, காரோட்டிப் பாதை தவறி செல்லுகிறார் என்பதைக் கணிக்கக் கூடிய நினைவாற்றலும் துரிதமும் மிக்க துடிப்புச் சக்தி அது.

அறுபதாண்டு வயதில் அரை நூற்றாண்டுப் பொது வாழ்க்கை என்பது இவருக்கே உரித்தான தனி முத்திரை! அந்த வகையில் தமிழ்நாட்டுப் பொது வாழ்க்கையில் உள்ள மூத்த தலைவர்களுள் இவர் ஒருவர் என்பதுதான் சரியான கணக்கு!

எடுத்து வைத்த முத்திரையடிகள்!

மழலை பருவந் தொட்டு அவர் எடுத்து வைத்த ஒவ்வொரு அடியும் முத்திரையடி. அந்த மழலை மொழி பேச்சைக் கேட்டு, 'இதோ நமக்கு ஒரு திருஞான சம்பந்தன்' என்று பாராட்டுரை புகன்றவர் அறிஞர் அண்ணா.

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் பட்டதாரி மாணவராக இருந்த காலத்திலும் ''வீரமணி!'' என்ற சொல் அப்பல்கலைக் கழக மாணவர்கள் மத்தியில் மட்டுமல்ல. சென்னைப் பல்கலைக் கழகம் வரை எதிரொலித்த சொல்! பேச்சுப் போட்டியில் அவர் கலந்துகொள்கிறார் என்றால் ''முதல் பரிசு'' அவருக்காகக் காத்திருக்கும்.

எம்.ஏ., பொருளாதாரத்தில் பல்கலைக் கழக முதல் மாணவர் - தங்கப் பதக்கம் பெற்றவர். சோம்பல் - அவரின் முதல் எதிரி. நாளைக்குப் பார்த்துக்கொள்ளலாம் என்கிற சுகமான தள்ளி வைப்புகளை அவரிடம் காணவே முடியாது.

''முடியாது'' என்று மற்றவர்களால் கருத முடிந்ததை ''முடியும்'' என்று சொல்லி ''முடிக்க முடிகிறது!'' இவரால் என்றால் காரணம் இந்த ரகசியம்தான்.

சாதாரணமாக நடப்பது என்றால்கூட அவர் நடை வேகத்தோடு ஈடுகொடுத்து நடந்து செல்லுவது என்பது மற்றவர்களுக்கு மிகவும் கடினம்.

நடையில் உள்ள இந்த இயல்பு அவரது நடவடிக்கைகள்வரை தொடர்கிறது. அவரிடம் பணியாற்றுகிறவர்கள் நாளடைவிலாவது இதற்குத் தங்களைத் தயார்படுத்திக்கொள்ளாவிட்டால், அதிகநாள் தாக்குப்பிடித்திருக்க முடியாது. அது தான் பல தடவையும் இங்கு நடந்திருக்கிறது. தாக்குப் பிடிக்க முடியாதவர்கள் தாறுமாறாகப் பேச ஆரம்பிப்பார்கள் என்பது மனித இயல்புக் குணத்தில் மிகச்சாதாரணம்!

புரட்சிக்கவிஞரின் தொலை நோக்கு!

"பாடிக் கை வீசிப் பலருடன் உலவி வேடிக்
கைவேண்டும் வாடிக்கைதனை
இவன் பாற் காண்கிலேன் அன்றும் இன்றும்"

என்றும், ''பெரியார் துணை ஒன்றே பெரிதெனக் கருதிய கருத்து வீரமணியை வீண் செயல் எதிலும் வீழ்த்தவில்லை'' என்றும் 1957 - லேயே புரட்சிக் கவிஞர் அவர்கள் பாடியது ஒரு கவிஞு

னின் தொலை நோக்குக் கணிப்பு என்பதை நாடே கண்டுகொண்டுவிட்டது இப்பொழுது.

தந்தை பெரியார் அவர்களிடத்தில் வந்தார்கள்; இருந்தார்கள்; பறந்தார்கள் என்பதுதான் வழமை. தந்தை பெரியார் அவர்களிடத்தில் கடைசிவரை இருந்ததோடு மட்டுமல்ல; தந்தை பெரியார் கண் மூடியதற்குப் பிறகும் காலத்திற்கும் அந்த இயக் கத்தைத் தூக்கிச் சுமக்கும் தளகர்த்தராகி விட்டார்.

பெரியாருக்குப்பின் இந்த இயக்கம் இருக்கி றது; இலட்சியம் வீர நடைபோடுகிறது; இன உரிமைகள் மீட்கப்படுகின்றன; சமூக நீதிக்களத் தில் அடுக்கடுக்கான வெற்றிகள் குவிக்கப்படுகின் றன என்றால் இவற்றிற்கெல்லாம் காரணம் இந்த மூலசக்திதான் - அது தந்தை பெரியார் என்கிற தத்துவ சக்தியிலிருந்து கிடைக்கப்பெற்றது.

போற்றுதல்களும் - தூற்றுதல்களும்!

பொதுவான தமிழர் கண்ணோட்டமே இவரின் அணுகுமுறை. தங்களுக்கு வசதியாக இருக்கும் பொழுது இந்த அணுகுமுறைகளைப் போற்றுவ தும் வசதி குறைவாகத் தங்களுக்கு மாறும்பொ ழுது தூற்றுவதும் அரசியலார்களுக்கு வழமை யாக இருந்து வருகிறது. இந்தத் தூற்றுதல் படலம் திட்டமிட்ட ஒரு பிரச்சார இயக்கமாகவே நடை பெறுகிறது.

இவற்றை அவர் பொருட்படுத்துவதில்லை. பிரச்சினை என்று வரும்பொழுது, தந்தை பெரி யார் எப்படி நடந்துகொண்டார் என்பதுதான் அவர் பார்க்கும் அளவுகோல்!

உலகம் என்ன நினைக்கும் என்பது அவருக்குப் பொருட்டல்ல; பெரியார் கண்ணோட்டப்படி எது சரி என்பதுதான் அவரின் கவலை!

எம்.ஜி.ஆர். அவர்கள் இட ஒதுக்கீட்டில் வரு மான வரம்பு அளவுகோலைத் திணித்தபோது, அதனுடைய தீய விளைவுகளை நம் மக்களுக்குப் புரிய வைப்பதில் எவ்வளவு சங்கடங்கள் இருந் தன!

போராட்டம் நடத்தி எம்.ஜி.ஆரைப் பணிய வைத்ததாக சான்றுகள் இல்லை என்று சோர்ந்து போனவர்கள் மத்தியிலே, துணிவாக நின்று களங் கள் அமைத்து, அந்த ஆணையைப் பின் வாங்கச் செய்ததோடு மட்டுமல்ல; பிற்படுத்தப்பட்ட மக் களின் இட ஒதுக்கீடு சதவிகிதத்தை 31-லிருந்து 50 ஆக உயர்த்தவும் செய்தவர் மானமிகு வீரமணி தானே!

திராவிடர் கழகம் இப் பிரச்சினையில் தொடர்ந்து பிரச்சாரம் செய்துவந்தது; போராட் டம் நடத்தியது குறித்து செய்தியாளர்கள் மத்தி யில் ஒப்புக்கொண்டதோடு மட்டுமல்ல; அதன் காரணமாகத்தான் மறுபரிசீலனை செய்கிறோம் என்றும் வெளிப்படையாக முதல்வர் எம்.ஜி.ஆர். சொன்னாரே!

எத்தனை எத்தனை முயற்சிகள்!

இந்த மண்டல் குழுப் பரிந்துரைபற்றிய பிரச்சி னையைத்தான் எடுத்துக்கொள்வோமே!

காகா கலேல்கர் தலைமையில் பிரதமர் நேரு காலத்தில் அமைக்கப்பட்ட பிற்படுத்தப்பட் டோர் குழுவின் பரிந்துரைகளுக்கு ஏற்பட்ட பரி தாப முடிவுதான் இதற்கும் ஏற்படப்போகிறது என்றுதானே பெரும்பாலோர் கருதியிருந்தார்கள்.

ஆனால் தந்தை பெரியாரின் சீடர் மானமிகு வீரமணி என்னென்ன முயற்சிகளை மேற்கொண் டார். எத்தனை களங்கள்!! எத்தனை அணுகுமு றைகள்!!

இது ஒரு இந்தியப் பிரச்சினை என்பதால் எத்தனை எத்தனை நாட்கள் வட நாட்டில் செலவ ழித்து இருப்பார். எத்தனை எத்தனை தலைவர்க ளைச் சந்தித்து இருப்பார்.

ஒடுக்கப்பட்ட மக்கள் என்றாலும் அவர்களுக் குள் எத்தனை எத்தனை சங்கங்கள்! எத்தனை எத்தனை வித்தியாசமான தலைவர்கள். இவர்க ளையெல்லாம் ஒரு இடத்தில் உட்கார வைத்து ஒரு முகமான முடிவுகளை எடுத்து வைப்பது என்றால் சாதாரண காரியமா?

இதெல்லாம் நடக்கக் கூடியதல்ல என்றுதான் பலரும் கருதினார்கள்; சொன்னார்கள்.

இலட்சியத்தில் இரும்புப் பிடியும் சாதிப்பதில் விடாப்பிடியும் உழைப்பதில் கழிப்பற்ற தன்மை யும் இருந்தால் நிறைவேறாத வெற்றி என்று ஒன்று இருக்கமுடியுமா?

அதுதான் மண்டல் குழுப் பரிந்துரைகள் விஷ யத்தில் இப்பொழுது நடைபெற்று இருக்கிறது.

அந்தத் தகுதிகளை உடைய தலைவர் வீரமணி அவர்கள்தான் இந்த சாதனைக்கான சரித்திர நாய கர்.

சமூக நீதியைக் கையில் எடுத்துக்கொண்டு இந் தியா முழுமையும் ஒடுக்கப்பட்ட மக்கள் ஓரணி - பார்ப்பனர்கள் மற்றொரு அணி என்கிற சரியான அணிவகுப்பை ஏற்படுத்தித் தந்ததில் நமது பொதுச்செயலாளர் முக்கிய வெற்றி பெற்றுள் ளார்.

ஒடுக்கப்பட்ட மக்களின் வரலாற்றில் இது ஒரு புதிய அத்தியாயம். தந்தை பெரியார் தொடங்கி வைத்த சமூக நீதி வரலாற்றில் மண்டல்குழுப்

சென்னையில் கழகத்தின் சார்பில் - அகில இந்திய தாழ்த்தப்பட்டோர் -
பிற்படுத்தப்பட்டோர் உரிமைக் காப்பு மாநாடு (12.12.1982)

பரிந்துரை அமுலாக்கம் என்பது குறிப்பிடத்தக்க திருப்பம் வாய்ந்தது. இதனை மேலும் செழுமைப் படுத்தி மேலேறியாகவேண்டும்.

அதற்கான கவனத்தையும் உடனே தாங்கிச் செயல்பட முனைந்துள்ளார் பொதுச்செயலாளர் அவர்கள். அடுத்த திங்கள் ஆந்திரா - விசாகப்பட்டினம், லக்னோ என்று பயணம் தொடங்கிவிட்டது.

பட்டியலைப் பாரீர்!

இந்த நேரத்தில் அரிமா நோக்காகக் கடந்த 13 ஆண்டுகள் மண்டல்குழுப் பரிந்துரைகள் தொடர்பான பயணத்தையும், களங்களையும் சற்றே திரும்பிப் பார்ப்போம்!

மலையின் உச்சியிலிருந்து மண்ணை நோக்கினால் தலை சுற்றல் ஏற்படுவதுபோல உணர்வு ஏற்படுகிறது. இதோ அந்தப் பட்டியல்:

மண்டல் குழு தன் பரிந்துரை அறிக்கையை 31.12.1980 அன்று நடுவணரசிடம் அளித்தது.

19.1.1981

இன்று திருச்சியில் நடைபெற்ற திராவிடர் கழக மத்திய நிர்வாகக் குழுக் கூட்டத்தில், மண்டல் குழுவின் பரிந்துரையை உடனடியாக அமுல்படுத்துமாறு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

1.3.1981

1.3.81 முதல் *15.3.81* வரை ''பிற்படுத்தப்பட்டோர், தாழ்த்தப்பட்டோர் உரிமை காப்புக் கூட்டங்கள்'' நாடு முழுவதும் நடத்தப்பட்டன. மண்டல் குழுப் பரிந்துரைகள் பற்றி நாட்டு மக்களிடத்திலே எடுத்துக் கூறப்பட்டன.

29.3.1981

குடந்தையிலே வகுப்புரிமை மாநாடு நடத்தப்பட்டு, மண்டல்குழுப் பரிந்துரைகளை அமுலாக்க வற்புறுத்தப்பட்டது.

9.5.1981

கரூரில் இட ஒதுக்கீடு ஆதரிப்பு மாநாடு நடத்தப்பட்டது.

10.5.1981

கரூரில் நடைபெற்ற திராவிடர் கழக மத்திய நிர்வாகக் குழுக் கூட்டத்தில் மண்டலறிக்கையை நாடாளுமன்றத்தில் வைக்காததற்குக் கண்டனம் தெரிவிக்கப்பட்டது.

8.8.1981

8.8.81 பிற்பகலில் - திண்டுக்கல்லில் தாழ்த்தப்பட்டோர் - பிற்படுத்தப்பட்டோர் உரிமை காப்பு மாநாடு நடைபெற்றது.

6.10.1981

திருச்சியில் திராவிடர் கழக மத்திய நிர்வாகக்குழு கூடி மண்டல் குழு பரிந்துரைகளை நடைமுறைப்படுத்த வேண்டுகோள் விடுக்கப்பட்டது. நாடு தழுவிய எண்ணத்தை உருவாக்க முயற்சிகள் மேற்கொள்வது என்று தீர்மானிக்கப்பட்டது.

31.10.1981

ஆத்தூரில் (சேலம்) பார்ப்பன ஆதிக்க ஒழிப்பு மாநாடு நடத்தி மத்திய அரசுத் துறைகளில் பார்ப்பனர் ஆதிக்கத்தைச் சுட்டிக்காட்டி, விரைவில் மண்டல்குழு பரிந்துரைகளை நிறைவேற்ற வலியுறுத்தப்பட்டது.

11.11.1981

நவம்பர் 11 முதல் 18 முடிய தமிழகம் முழுவதும் பார்ப்பன ஆதிக்க ஒழிப்பு வாரம் கடைப்பிடிக்கப்பட்டு மக்கள் மத்தியில் மண்டல் குழுப் பரிந்துரைகள் அமுலாக்கப்பட வேண்டியதன் அவசியம்பற்றி விளக்கிப் பொது மக்களின் கருத்து உருவாக்கப்பட்டது.

13.12.81

தருமபுரியில் பார்ப்பன ஆதிக்க ஒழிப்பு மாநாடு நடத்தப்பட்டது.

1.1.1982

மதுரையில் மாவட்ட இளைஞரணி மாநாடும் பேரணியும் நடத்தப்பட்டு மண்டல் குழுப் பரிந்துரைகளை அமுல்படுத்து என்று வலிமையான குரல் எழுப்பப்பட்டது..

6.2.1982

தஞ்சை மாவட்டம் குடவாசலில் பார்ப்பன ஆதிக்க ஒழிப்பு மாநாடு நடத்தப்பட்டது.

13.2.1982

சாத்தூரில் நடைபெற்ற மேற்கு முகவை மாவட்ட திராவிடர் கழக மாணவரணி மாநாட்டில் - மத்திய அரசில் பிற்படுத்தப்பட்டோருக்கான இட ஒதுக்கீட்டின் அவசியம் பற்றி எடுத்துரைக்கப்பட்டது.

25.2.1982

மண்டல் குழு அறிக்கை கிடப்பில் போடப்பட்டு இருப்பதை எதிர்த்து பிரதமருக்கு தந்திகள் கொடுக்குமாறு திராவிடர் கழகப் பொதுச்செயலாளர் விடுத்த அறிக்கையைத் தொடர்ந்து ஏராளமான தந்திகள் டில்லிக்குப் பறந்தன.

7.3.1982

மேட்டூரில் நடைபெற்ற இளைஞரணி எழுச்சி மாநாட்டிலும் மண்டல் குழு அறிக்கையை நாடாளுமன்றத்தில் வைக்குமாறு வலியுறுத்தப்பட்டது.

13.3.1982

கிழக்கு முகவை மாவட்ட இளைஞரணி எழுச்சி மாநாடும், பேரணியும் ராமேசுவரத்தில் நடைபெற்றன. பார்ப்பனர் காட்டிய சலசலப்புகள் முறியடிக்கப்பட்டு மண்டல் குழுப் பரிந்துரைகளை செயல்படுத்துக என்று விண்ணதிர முழக்கமிடப்பட்டது.

20.3.1982

சென்னை சைதாப்பேட்டையில் மண்டல் குழுப் பரிந்துரைகளை அமுலாக்கக் கோரும் மாநாடு கழகத்தின் சார்பில் நடத்தப்பட்டது.

இம்மாநாட்டில் தேவராஜ் அர்ஸ் அவர்களும் பங்குகொண்டு மண்டல் குழு பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்படவேண்டும் என்று வலியுறுத்தினார்.

28.3.1982

திருச்சி மாவட்ட திராவிடர் கழக இளைஞரணி மாநாடு லால்குடியில் எழுச்சியுடன் நடத்தப்பட்டது.

4.4.1982

மயிலாடுதுறையில் மண்டல் குழுப் பரிந்துரைகளை அமுலாக்கக்கோரும் மாநாடு நடைபெற்றது.

11.4.1982

தஞ்சை மாவட்டம் மன்னார்குடியில் நடைபெற்ற திராவிடர் கழக மத்திய நிர்வாகக் குழுக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் பிழிவு:

பெரும்பான்மையான மக்களின் ஆட்சி முறையான ஜனநாயக முறையை (Democracy - a rule of majority) ஏற்றுக்கொண்ட இந்த நாட்டில் சிறுபான்மை மக்களான பார்ப்பனர்களுக்கு அஞ்சி பெரும்பான்மை மக்களான பிற்படுத்தப்பட்ட மக்களின் உரிமை சாசனமான மண்டல் குழு அறிக்கையை வெளியிடாமலும், நாடாளுமன்றத்தில் வைக்காமலும் காலம் நீட்டித்து வருவது கண்டிக்கப்பட்டது.

அகில இந்திய அளவில் ஒடுக்கப்பட்ட சமூக அமைப்புகளின் தலைவர்களை அழைத்து சென்னையில் மிகப் பெரிய மாநாடு கூட்டி பிற்படுத்தப்பட்ட மக்களின் உணர்வை வெளிப்படுத்துவது என்று கழக மத்திய நிர்வாகக் குழுவில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

25.4.1982

வ.ஆ. வேலூரில் பார்ப்பன ஆதிக்க ஒழிப்பு மாநாடு நடத்தப்பட்டது.

13.6.1982

திருச்சியில் புதிய வரலாறு படைக்கும் தாழ்த்தப்பட்டோர், பிற்படுத்தப்பட்டோர் உரிமைக் காப்பு மாநாடும், மண்ணையும் விண்ணையும் குலுக்கிய ஒடுக்கப்பட்டோர் பேரணியும் நடத்தப்பட்டன.

அம்மாநாட்டில் நாடாளுமன்ற உறுப்பினர் ராம் விலாஸ் பஸ்வான், டாக்டர் கலைஞர், ஜனதா அரசில் கல்வி அமைச்சராக இருந்த டி.பி. யாதவ், ஜெய்பால்சிங், கஷ்யப், ஏ.கே. அப்துல் சமது எம்.பி., டி.என். அனந்தநாயகி, வி.டி. ராஜசேகர் முதலியோர் பங்கு கொண்டு மண்டல் குழு அறிக்கையை காலதாமதமாக நாடாளுமன்றத்தில் வைத்ததோடு அல்லாமல், அதனைச் செயல்படுத்துவதிலும் காலதாமதம் செய்வது ஏன் என்று போர்க்குரல் கொடுக்கப்பட்டது.

28.9.1982

மண்டல் குழுப் பரிந்துரைகளை விளக்கி கழக இளைஞரணி சார்பில் செப்டம்பர் 28 ஆம் தேதி முதல் நவம்பர் 7 ஆம் தேதிவரை தமிழகத்தின் பல இடங்களில் கழக இளைஞரணி சார்பில் பயிற்சி முகாம்கள் நடத்தப்பட்டன.



டில்லியில் தலைவர்களுடன் ஆலோசனைக் கூட்டம் (22.1.1980)

பஞ்சாப் குருதாஸ்பூரில் கழகப் பொதுச்செயலாளர் (6.3.1983)

11.12.1982 - 12.12.1982

மண்டலறிக்கை செயல்பாட்டிற்காக அகில இந்திய தாழ்த்தப்பட்டோர், பிற்படுத்தப்பட்டோர் உரிமை காப்பு மாநாடு திராவிடர் கழகத்தின் சார்பில் சென்னை பெரியார் திடலில் நடைபெற்றது.

மண்டல் குழு பரிந்துரைகளை அமுலாக்கக்கோரி நடைபெற்ற மாநாட்டையொட்டி மகத்தான ஊர்வலம் சென்னை கடற்கரை சீரணி அரங்கிலிருந்து புறப்பட்டு பெரியார் திடலை அடைந்தது. இம் மாநாட்டில் டாக்டர் கலைஞர், மராட்டிய மாநில ஒடுக்கப்பட்டோர் சங்கப் பிரதிநிதி சுபாசா லுங்கி, முன்னாள் மத்திய அமைச்சர்கள் சந்திரஜித், பிரம் பிரகாஷ் பிரிஜ்லால்வர்மா, பீகாரின் முன்னாள் முதல்வர் காப்பூரி தாகூர் மற்றும் ராம் விலாஸ் பஸ்வான், போலோ பஸ்வான், சுவர்ணகுமார் (கேரளா), அசாம் பிற்படுத்தப்பட்டோர் சங்கச் செயலாளர் பானுபுஷன், பஞ்சாப் குருத்சரண்சிங், ம.பி. ஜகநாத்சிங், கர்நாடகம் வி.டி. ராஜசேகர், ஜெய்பால் சிங் கஷ்யப் எம்.பி., ஏ.கே.ஏ. அப்துல் சமது எம்.பி., ஆந்திர மாநில இ. காங். மேலவைக் கொறடா ஏ. சக்ரபாணி, மண்டல்குழு உறுப்பினர் கே. சுப்பிரமணியம், சி.டி. தண்டபாணி எம்.பி., தமிழக சட்டப் பேரவைத் தலைவர் க. இராசாராம் முதலியோர் கலந்து கொண்டனர்.

17.12.1982

மண்டல் குழு பரிந்துரையை அமுலாக்கக் கோரி இந்தியா முழுதும் கையெழுத்து மற்றும் கைநாட்டு இயக்கம் - தந்தை பெரியார் நினைவு நாளான டிசம்பர் 24 ஆம் தேதி துவங்கும் என செய்தியாளர்களிடையே சென்னை பெரியார் திடலில் கழகப் பொதுச்செயலாளர் கி. வீரமணி கூறினார்.

இந்தக் கையெழுத்து இயக்க முடிவு நாளென - காந்தியார் மறைந்த ஜனவரி 30 ஆம் தேதி நிர்ணயிக்கப்பட்டுள்ளதாக சந்திரஜித் கூறினார். இதன்படி திராவிடர் கழகம் தமிழ்நாட்டில் செயல்பட்டு 5 லட்சம் கையொப்பங்கள் திரட்டப்பட்டன.

24.12.1982

தந்தை பெரியார் நினைவு நாளான இன்று மண்டலறிக்கை செயல்பாட்டிற்காகக் கையெழுத்து இயக்கம் துவங்கியது.

திராவிடர் கழகத்தின் சார்பில் இன்று மாலை சர்வ கட்சி கூட்டம் கூட்டப்பெற்று, காலம் கடத்தாமல் டில்லி அரசு மண்டலறிக்கையை நிறைவேற்றவேண்டும் என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

22.1.1983

''தாழ்த்தப்பட்டோர், பிற்படுத்தப்பட்டோர் மலைவாழ் மக்கள் தேசிய ஒன்றியம்'' சார்பில் 22 மற்றும் 23 தேதிகளில் டில்லியில் நடந்த ஆலோசனைக் கூட்டத்தில் பல்வேறு மாநிலங்களைச்சேர்ந்த தலைவர்கள் பங்கேற்றனர்.

கழக சார்பில் தமிழினக் காவலர் கி. வீரமணி பங்கேற்றார்.

இக்கூட்டத்தின் முடிவுகள்:

மண்டல் குழு பரிந்துரையை அமுலாக்கக் கோரி மார்ச் 18 இல் இந்தியா முழுதும் மாவட்டத் தலைநகர்களில் பேரணி.

ஏப்ரல் 14 மற்றும் 15 இல் புதுடில்லியில் மாபெரும் மாநாடு.

குடியரசுத் தலைவர் ஜெயில்சிங்குடன் சந்திப்பு

''விட்டல்பாய் பட்டேல் அவுஸ் எனப்படும் கான்ஸ்டிடியூசன் கிளப்''பில் நடந்த அனைத்திந்திய தாழ்த்தப்பட்டோர் - மலைவாழ் மக்கள் - பிற்படுத்தப்பட்டோர் - சிறுபான்மையினர் அமைப்புகளின் தலைவர்கள் ஆலோசனைக் கூட்டத்தில் கலந்துகொண்ட தலைவர்களது தூதுக்குழுவில் இடம் பெற்ற கழகப் பொதுச்செயலாளர் கி. வீரமணி - டில்லி குடி அரசுத் தலைவர் மாளிகையில் குடியரசுத்தலைவர் ஜெயில்சிங்கைச்சந்தித்து மண்டலறிக்கை பரிந்துரைகளை விரைந்து செயல்படுத்த வலியுறுத்தினர்.

17.2.1983

சென்னையில் திராவிடர் கழகம் சார்பில் நடைபெற்ற அகில இந்திய தாழ்த்தப்பட்டோர், பிற்படுத்தப்பட்டோர் உரிமை காப்பு மாநாட்டுக்கு முதல்கட்ட வெற்றியாக ஏப்ரல் 30 இல் மண்டலறிக்கைபற்றி ஆராய டில்லி அரசு மாநில முதல்வர்களது இரண்டு நாள் மாநாட்டிற்கு அழைப்பு விடுத்தது..

28.2.1983

திருச்சியில் கூடிய திராவிடர் கழக மத்திய நிர்வாகக் குழுக் கூட்டத்தில், மண்டல் குழு எந்த அடிப்படையில் இட ஒதுக்கீட்டைக் கூறியுள்ளதோ, அந்த அடிப்படையை விட்டு விலகாமல் அமுல்படுத்தக் கோரிக்கை விடப்பட்டது.

5.3.1983

டில்லியில் அகில இந்திய தாழ்த்தப்பட்டோர், பிற்படுத்தப்பட்டோர் மலைவாழ் மக்களின் தேசிய ஒன்றிய நிர்வாகக் குழுக் கூட்டம் நடந்தது. தமிழினக் காவலர் கி. வீரமணி கலந்துகொண்டார்.

6.3.1983

பஞ்சாப் மாநிலம் குருதாஸ்பூரில் நடைபெற்ற தாழ்த்தப்பட்டோர், பிற்படுத்தப்பட்டோர் உரிமை காப்பு மாநாட்டில் கழகப் பொதுச்செயலாளர் பங்கேற்றார். மண்டல் குழு அறிக்கையில் கூறப்பட்டுள்ள செய்திகளை விரிவாக எடுத்துரைத்தார். பொதுச்செயலாளருக்கு மாபெரும் வரவேற்பு அளிக்கப்பட்டது.

18.3.1983

மண்டல் குழு பரிந்துரையை அமுலாக்கிட எல்லா மாவட்டத் தலைநகர்களிலும் எழுச்சி மிகு பேரணிகள் நடத்தப்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவர்களிடம் மனுக்கள் தரப்பட்டன.

13.4.1983

ஒடுக்கப்பட்டோர் உரிமை காப்பு மாநாடு எழுச்சியோடு டில்லியில் நடந்தது. கருஞ்சட்டைக் குடும்பங்கள் இம்மாநாட்டில் பெருந்திரளாக கலந்துகொண்டனர். மண்டல் குழு பரிந்துரையை செயற்படுத்த வலியுறுத்தி ஆகஸ்டு 9-ல் நாடு தழுவிய மக்கள் கிளர்ச்சியை நடத்துவதென்ற முடிவோடு முடிந்தது மாநாடு. கடலூரில் ஏற்பட்ட விபத்து காரணமாக பொதுச்செயலாளர் இந்நிகழ்ச்சியில் கலந்துகொள்ள முடியவில்லை. ஆனால், கழகக் குடும்பத்தினர் ஏராளம் கலந்துகொண்டனர்.

கையெழுத்துப் படிவங்கள்

மண்டல் குழு பரிந்துரைகளை அமுல்படுத்த டில்லி அரசை வற்புறுத்திய 5 லட்சம் பேரின் கையெழுத்து மற்றும் கைநாட்டுப் பிரதிகளை மாநாட்டுப் பொறுப்பாளர்களிடம் கழகத் தோழர்கள் அளித்தனர்.

பொதுச்செயலாளர் இல்லாத குறை தவிர மாநாட்டில் குறையேதுமில்லை என்று வட புலத் தலைவர்கள் கூறினர்.

மண்டல் குழு வெற்றி நாயகர் பொதுச்செயலாளருக்கு எல்.அய்.சி. - எஸ்.சி; பி.சி., சங்கத்தினர் பாராட்டு (14.9.93 சென்னை).



பாட்னாவில் (பீகார்) பொதுச்செயலாளர் (9.10.83)

மாநாட்டில் பொதுச்செயலாளர் உணர்ச்சி உரை படிக்கப்பட்டது.

15.4.1983

புதுடில்லியில் நடந்த மாநாட்டுப் பிரதிநிதிகள் இன்று குடியரசுத் தலைவர் ஜெயில் சிங்கை சந்தித்து மண்டலறிக்கை செயல்பாட்டிற்கு ஆவன செய்ய வலியுறுத்தினர்.

கழக சார்பில் திரட்டப்பட்ட 5 லட்சம் கையெழுத்திட்ட படிவங்கள் குடி அரசுத் தலைவர் திரு. ஜெயில் சிங்கிடம் ஒப்படைக்கப்பட்டன.

மண்டலறிக்கை குறித்து போராட்டம் ஏதும் நடத்தவேண்டாம் என்றும், ஆவன செய்வதாயும் தூதுக்குழுவிடம் ஜெயில்சிங் வேண்டுகோள் விடுத்தார்.

27.7.1983

நெய்வேலியில் வேலை கிட்டா தமிழின இளைஞரணி மாநாடு நடத்தப்பட்டது. மண்டல் குழு பரிந்துரைகளை நிறைவேற்றத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

8.8.1983

சென்னையில் கூடிய திராவிடர் கழக மத்திய நிர்வாகக் குழுக் கூட்டத்தில் மண்டலறிக்கையை இதுவரை நிறைவேற்றாத மத்திய அரசைக் கண்டித்து எச்சரிக்கை தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

3.10.1983

முற்பகல் எழும்பூர் புகைவண்டி நிலையம் முன் மண்டல் குழு பரிந்துரைகளை செயல்படுத்த டில்லி அரசை வற்புறுத்தி மகத்தான ஆர்ப்பாட்டம் ஒன்று நடத்தப்பட்டது. அனைத்துக் கட்சிக் குழு ஏற்பாடு இது.

ஆர்ப்பாட்டத்துக்கு கழகப் பொதுச்செயலாளர் தலைமை தாங்க - முன்னிலை சி.டி. தண்டபாணி எம்.பி., டி.என். அனந்தநாயகி, பல்வேறு அமைப்புகளின் தலைவர்கள். முதல் நாள் 2.10.83 இல் சென்னை பெரியார் திடலில் நடந்த விளக்கக் கூட்டத்தில் உரையாற்றினர்.

8.10.1983

இரவு ஏழே முக்கால் மணியளவில் குடியரசுத் தலைவர் ஜெயில் சிங்கை சந்தித்த பொதுச்செயலாளர் மண்டல் குழு பரிந்துரையை செயற்படுத்த வலியுறுத்தினார்.

உடன் சென்றோர் - சந்திரஜித் மற்றும் டாக்டர் குழந்தைவேலு எம்.பி.,

9.10.83

பீகார் மாநிலத் தலைநகர் பாட்னாவில் மாநில தாழ்த்தப்பட்டோர் - மலைவாழ் மக்கள் - சிறுபான்மையோர் உரிமை மாநாடு: கழகப் பொதுச்செயலாளர் பங்கேற்பு. மண்டல் குழுபற்றிய மாநாடு இது.

23.10.83

கோவையில் கூடிய திராவிடர் கழக மத்திய நிர்வாகக் குழுக் கூட்டத்தில் மத்திய உள்துறை அமைச்சர் நாடாளுமன்றத்தில் உறுதி அளித்தும் மண்டல் பரிந்துரைகள் அமுல்படுத்தத் தயக்கம் ஏன்? என்று வினா எழுப்பியது.

15.11.83

மதுரை மாநாட்டையொட்டி குமரி, கோவை, திருவாரூர், வேலூர், சென்னை, தர்மபுரி, ராமேசுவரம் ஆகிய இடங்களிலிருந்து கழகத்தின் சார்பில் வழிநடைகள் புறப்பட்டு வழி நெடுக மண்டல் குழு பரிந்துரைகள்பற்றிப் பிரச்சாரம் செய்துவந்தன.

4.12.83

இரவு நாகபுரியில் மராத்திய மாநில (விதர்பா பகுதி) மண்டல் கமிஷன் அமுலாக்கக் கோரும் மாநாடு, சிறப்புரை: கழகப் பொதுச்செயலாளர் கி. வீரமணி.

7.3.84

மண்டல் குழு பரிந்துரைகளை செயல்படுத்த அடுத்த நடவடிக்கை மேற்கொள்வது பற்றி புதுடில்லியில் தாழ்த்தப்பட்ட - பிற்படுத்தப்பட்ட தலைவர்களுடன் கழகப் பொதுச்செயலாளர் ஆலோசனை.

பாபு ஜெகஜீவன்ராம் - கர்ப்பூரிதாகூர் ஆகியோர் சந்திப்பு.

1.4.84

ஜனவாடி கட்சி சார்பில் உ.பி. மாநிலத்து அலகாபாத்தில் இட ஒதுக்கீட்டு ஆதரவு மாநாடு. சிறப்புரை: கழகப் பொதுச்செயலாளர் மண்டல் குழுபற்றிய மாநாடு இது.



அலகாபாத்து மாநாட்டில் (உ.பி.) பொதுச்செயலாளர் (1.4.84)

ஆந்திர மாநிலம் தாடபள்ளி பேரணியில் பொதுச்செயலாளர் (5.8.84)



2.4.84

மண்டல் குழு பரிந்துரைபற்றி ஆராய டில்லி அரசால் நியமிக்கப்பட்டுள்ள அமைச்சரவைக் குழுவின் தலைவரான ஆர். வெங் கட்ராமனுடன் டில்லியில் பொதுச்செயலாளர் சந்திப்பு.

மண்டலறிக்கை செயல்பாட்டுக்கு வற்புறுத்தல்.

5.6.84

ஆந்திர மாநிலம் தாடபள்ளியில் மண்டல் குழு அறிக்கை வலியுறுத்தும் மாநாடு. பொதுச்செயலாளர் பங்கேற்பு.

9.8.84

மண்டல் குழு பரிந்துரைகள் செயல்படுத்த வலியுறுத்தி டில்லியில் பிரதமர் வீட்டுமுன் கழகப் பொதுச்செயலாளரும், தோழர்களும், நாடாளுமன்ற உறுப்பினர்களும், பிற கட்சியினரும் மறியல் செய்யச் சென்றபோது கைது செய்யப்பட்டனர்.

15.8.84

திருச்சியில் கூடிய திராவிடர் கழக மத்திய நிர்வாகக் குழுக் கூட்டத்தில் மத்தியில் ஆளும் இந்திரா காங்கிரஸ் மண்டல் குழு பரிந்துரைகளை அமுல் செய்ய மறுப்பதாலும், பார்ப்பன ஆதிக்க உணர்வுடைய ஆட்சியாக இருப்பதாலும் சட்டமன்ற, நாடாளுமன்ற தேர்தலில் காங்கிரசைத் தோற்கடிக்கவேண்டும் என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

22.8.84

குடந்தையில் திராவிடர் கழக இளைஞரணி மாநாடு நடைபெற்றது. மாநாட்டில் மண்டல் குழு பரிந்துரைகளை உடனடியாக அமுல்படுத்த வற்புறுத்தப்பட்டது.

9.2.85

திருச்சியில் கூடிய திராவிடர் கழக மத்திய நிர்வாகக் குழுக் கூட்டத்தில் மண்டல் குழு பரிந்துரையை அமுல்படுத்தக் கோரும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

13, 14.4.85

கழக சார்பில் இட ஒதுக்கீடு பாதுகாப்பு மாநாடு - சென்னை பெரியார் திடலில்.

★ 50 சதவீத இட ஒதுக்கீடு குறையக்கூடாது.

★ மண்டல் குழு பரிந்துரையை டில்லி அரசு நடைமுறைப்படுத்தவேண்டும்.

14.7.85

சென்னை குலுங்கும் வகையில் கழக மாநில மாநாட்டுப் பேரணி, இட ஒதுக்கீட்டை பாதுகாக்கும், பல முடிவுகள் - பிற்பகல் துவங்கிய இட ஒதுக்கீடு பாதுகாப்பு மாநாடு.

6.12.85

டாக்டர் அம்பேத்கர் நினைவு நாளான இன்று புதுடில்லியில் தாழ்த்தப்பட்ட - பிற்படுத்தப்பட்ட மக்கள் பங்கேற்ற எழுச்சிப் பேரணியை எஸ்.ஸி., பி.சி. சிறுபான்மையோர் ஒருங்கிணைப்புக் கழகம் நடத்தியது. கழகப் பொதுச்செயலாளரும் நம் தோழர்களும் இட ஒதுக்கீட்டையும் - மண்டல் பரிந்துரைகளை அமுல்படுத்த வற்புறுத்தி பேரணியில் முழக்கமிட்டு வந்தனர். பேரணி முடிவில் பொதுச் செயலாளர் உள்ளிட்ட 25 பேர் கொண்ட தூதுக்குழுவினர் குடியரசுத் தலைவர் ஜெயில் சிங்கை சந்தித்து மண்டலறிக்கை தொடர்பாக வலியுறுத்தினர்.

20.4.86

திருச்சியில் திராவிடர் கழக மத்திய நிர்வாகக் குழு கூடியது. மண்டல் குழு பரிந்துரைகளை நிறைவேற்ற வலியுறுத்த தென் மாநில ஒடுக்கப்பட்டோர் மாநாட்டைக் கூட்டுவது என்று தீர்மானிக்கப்பட்டது.

2.9.86

கழக சார்பில் கூட்டப்பட்ட தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட சங்க அமைப்புகளின் கூட்டம் சென்னையில் நடந்தது. 1.10.86 முதல் 10.10.86 வரை டில்லியில் நடக்கவுள்ள மண்டலறிக்கை நிறைவேற்றக் கோரும் ஆர்ப்பாட்டத்தில் அனைவரும் பங்கேற்க கழகப் பொதுச்செயலாளர் வேண்டுகோள் விடுத்தார்.

21.9.86

ஆந்திரத் தலைநகர் அய்தராபாத்தில் தாழ்த்தப்பட்டோர், பிற்படுத்தப்பட்டோர், ஒடுக்

கப்பட்டோர் அமைப்புகளின் மாநாடு - மறு நாள் தந்தை பெரியார் பிறந்த நாள் விழா ஆகிய இரண்டிலும் பொதுச்செயலாளர் பங் கேற்பு.

7.10.86

புதுடில்லியில் தாழ்த்தப்பட்டோர், பிற்ப டுத்தப்பட்டோர், மலைவாழ் மக்கள் மற்றும் சிறுபான்மை ஒன்றியம் சார்பில் நாடாளுமன் றம் முன் மறியல். பொதுச்செயலாளர் நூற் றுக்கணக்கான கழகத் தோழர்களுடன் கைது. மொத்தம் நான்காயிரம் பேர் கைது.

மண்டல் குழு பரிந்துரைகள் செயல்பாடு - தாழ்த்தப்பட்டோர் இட ஒதுக்கீடு உயர்வு கோரி நடந்த மறியல் இது.

9.11.86

சிதம்பரத்தில் கூடிய திராவிடர் கழக மத் திய நிர்வாகக் குழுக் கூட்டத்தில் மண்டல் குழுப் பரிந்துரைகளை நிறைவேற்ற வலியு றுத்தத் தொடர் போராட்டம் நடத்துவது என்று முடிவு எடுக்கப்பட்டது.

9.12.86

தாழ்த்தப்பட்டோர், மலைவாழ் மக்கள், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மைனாரிட்டி தேசிய ஒன்றியம் சார்பாக பல்வேறு மாநிலப் பிரதிநிதிகளையும் உள்ளடக்கிய தூதுக்குழு குடியரசுத் தலைவரையும், பிரதமரையும் சந் தித்து மண்டல் குழு செயல்படுத்த வலியுறுத் தியது. பிரதமரை *9.12.86*-லும் குடி அரசுத் தலைவர் ஜெயில்சிங்கை *10.12.86*-லும் சந் தித்த இத்தூதுக்குழுவில் பொதுச்செயலாளர் இடம் பெற்றிருந்தார்.

4.1.87

கோவையில் இன்று பிற்பகல் தென் மண் டல ஒடுக்கப்பட்டோர் சமூக நீதி மாநாடு நடைபெற்றது, வடபுலத் தலைவர்களின் சிறப்புரை முத்தாய்ப்பாக இருந்தது. சந்திர ஜித் யாதவ், சவுத்ரி பிரம் பிரகாஷ், பி.பி. மவுரியா, டாக்டர் பீமப்பா (கர்நாடகம்), ஆந் திர தலித் மகாசபை தாரகம், கான்சிராம், என்.ஜி.யு.கே. (டில்லி), எம்.கே. இராகவன் (கேரளம் எஸ்.என்.டி.பி. யோகம்) முதலி யோர் பங்குகொண்டனர்.

5.1.87

கோவை பிரசிடெண்சி ஹாலில் அனைத் திந்திய ஒடுக்கப்பட்ட இனத்துப் பேராளர் கள் மாநாடு நடந்தது. ஏராளமான பேராளர் கள் கலந்துகொண்டனர்.

27.4.87

ஒடுக்கப்பட்ட இனங்களின் தேசிய ஒன்றி யம் சார்பில் மண்டலறிக்கை செயல்பாட்டு இருநாள் மாநாடு லக்னோவில் எழுச்சியுடன் துவங்கியது. பொதுச்செயலாளர் பங்கேற் றார்.

24.5.87

தஞ்சையில் திராவிடர் கழகம் மற்றும் தென் மாநில சமூக நீதி அமைப்புகள் நடத் திய ஒடுக்கப்பட்டோர் பேராளர்கள் மாநாடு துவங்கியது.

25.5.87

குடி அரசுத் தலைவர் கியானி ஜெயில்சிங் சமூக நீதி மாநாட்டை துவக்கி வைத்தார். சிறப்பாக பேரணி நடைபெற்றது.

11.10.87

ஆந்திராவின் விசாகப்பட்டினத்தில் பிற்ப டுத்தப்பட்டோர் மாநாடு கழக பொதுச்செய லாளர் மற்றும் தென் மாநில சமூக நீதி அமைப்பின் தலைவர் நீதிபதி பி. வேணுகோ பால் பங்கேற்றனர்.

24.4.88

கழக மத்திய நிர்வாகக் குழு திண்டுக்கல் லில் கூடி, மண்டல் குழு அறிக்கையை செயல்படுத்தக் கோராத, முயற்சி ஏதும் செய் யாத எந்தக் கட்சிக்கும், தலைவர்கட்கும் தேர் தலில் ஒடுக்கப்பட்ட தமிழர்கள் ஆதரவு தரக் கூடாது என்று தீர்மானம் நிறைவேற்றியது.

20.5.88

கேரள மாநிலம் எர்ணாகுளத்தில் பிற்படுத் தப்பட்டோர் மாநாடு. பொதுச்செயலாளர், நீதிபதி பி. வேணுகோபால் - மண்டல் குழு அறிக்கையை மத்திய அரசு அமுலுக்குக் கொண்டுவர வேண்டும் என்கின்ற கருத்திற்கு அழுத்தம் கொடுக்கப்பட்டது.



டில்லியில் பிரதமர் இந்திரா காந்தி வீடுமுன் மறியல் செய்யப் புறப்பாடு (9.8.84)

டில்லி - நாடாளுமன்றமுன் மறியல் செய்யப் புறப்பாடு (7.10.1986)

8.1.89

திருச்சியில் சமூக நீதி மாநாடு - நீதிபதி பி. வேணுகோபால் தலைமையில் நடந்த இம் மாநாட்டில் பல்வேறு மாநிலங்களிலிருந்தும் சமூக நீதித் தலைவர்கள் பங்கு கொண்டனர்.

19.2.89

போடியில் கூடிய மத்திய நிர்வாகக்குழு கூட்டத்தில் மண்டல் பரிந்துரைகளை நிறை வேற்ற மத்திய அரசுக்குக் கோரிக்கை விடப் பட்டது.

18.4.89

பெங்களூரில் நடைபெற்ற பிற்படுத்தப் பட்டோர் சம்மேளனம் நடத்திய வகுப்பு ரிமை மாநாட்டில் கழகப் பொதுச்செயலாள ரும், நீதிபதி பி. வேணுகோபாலும் பங்கேற்பு.

26.7.89

மண்டல் பரிந்துரைகளை நிறைவேற்ற மத்திய அரசை வலியுறுத்தும் அஞ்சலகம் முன் மறியலை விளக்கி கழகப் பொதுச்செயலா ளர் ரயில் சுற்றுப்பயணம் துவக்கம்.

1.8.89

மண்டல் குழு பரிந்துரைகளை செயற்ப டுத்த வலியுறுத்தி தமிழகம் முழுவதும் அஞ்ச லகம் முன் மறியல், அண்ணா சாலை அஞ்சல கம் முன் நடைபெற்ற மறியலில் கழகப் பொதுச்செயலாளர் கைது. தமிழகம் முழுவ தும் 10 ஆயிரம் திராவிடர் கழகத் தோழர்கள் கைது செய்யப்பட்டனர்.

17.9.89

ஒடுக்கப்பட்டோர் உரிமையை வலியுறுத் தும் வெகு மக்கள் சமுதாயக் கட்சியின் சைக் கிள் பேரணியைக் குமரி முனையில் கழகப் பொதுச்செயலாளர் துவக்கிவைத்தார்.

25, 26.9.89

இட ஒதுக்கீடு மற்றும் சமூக நீதிக்கான அகில இந்திய இருநாள் மாநாடு புதுடில்லி யில் சிறப்புற நடந்தது. மாநாட்டை நீதிபதி பி. வேணுகோபால் துவக்கி வைத்தார். சிறப் புரை: கழகப் பொதுச்செயலாளர்.

3.2.90

பிரதமர் பொறுப்பு ஏற்ற பிறகு முதன்மு றையாக சென்னை வந்த பிரதமர் வி.பி. சிங் அவர்களிடம் மண்டல் குழு பரிந்துரைகளை அமுலாக்கக் கோரும் மனு ஒன்றினை சென்னை பெரியார் திடலில் கழகப் பொதுச் செயலாளர் அளித்தார்.

26.5.90

தஞ்சையில் சமூக நீதி மாநாடு முன்னாள் குடி அரசுத் தலைவர் கியானி ஜெயில்சிங், தமிழக முதலமைச்சர் டாக்டர் கலைஞர், உச்ச நீதிமன்ற முன்னாள் நீதிபதி ஓ. சின்னப்ப ரெட்டி, முன்னாள் மத்திய அமைச்சர் டாக்டர் சத்தியவாணிமுத்து, அப்துல் லத்தீப் எம். எல்.ஏ., முதலியோர் பங்கு கொண்டனர்.

இம்மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட முக்கிய முதல் தீர்மானம்

இவ்வாண்டை சமூக நீதி ஆண்டாக அறி வித்து, மண்டல் கமிஷன் பரிந்துரையை மய்ய அரசு உடனடியாகச் செயல்படுத்துவது டன், அதற்கு வசதியாகப் பிற்படுத்தப்பட் டோர் பட்டியலை முடிவு செய்வதில் ஒவ் வொரு மாநில அரசும் அளிக்கும் பட்டியலை இறுதியானதாக ஏற்றுக்கொள்ளவேண்டும் என இம்மாநாடு கேட்டுக்கொள்கின்றது.

21.6.90

இந்திய நடுவணரசு கூட்டிய அண்ணல் அம்பேத்கர் நூற்றாண்டு விழா ஆலோசனைக் கூட்டத்தில் கலந்துகொண்ட கழகப் பொதுச் செயலாளர் அவர்கள், ''பாபா சாகேப் அம் பேத்கர் அவர்களின் நூற்றாண்டு நடக்கும் இவ்வாண்டில் மண்டல் குழுப் பரிந்துரை களை உடனடியாக அமுல்படுத்தவேண்டும்; அடக்கப்பட்ட, ஒடுக்கப்பட்ட மக்களுக்கு சமூக நீதி கிடைக்காவிட்டால் கிளர்ச்சி வெடிப்பதைத் தடுக்கமுடியாது'' என்று எச்ச ரித்தார்.

23.7.90

சென்னையில் நடைபெற்ற திராவிடர் கழக இளைஞரணி மாநில மாநாட்டுப் பேர ணியில், மண்டல் குழுப் பரிந்துரைகளை உட னடியாக செயல்படுத்தவேண்டும் என்ற கோரிக்கையை இளைஞர்கள் விண் முட்டும் முழக்கங்களாக எழுப்பிவந்தனர்.



தஞ்சை சமூக நீதி

மாநாட்டில் மக்கள் கடல்...

மண்டல் குழுவுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும்
இந்தியன் எக்ஸ்பிரஸ் ஏட்டுக்கு
அதன் அலுவலக முன்பே தீயிடல் (8.9.90)

5.8.90

நாளை நடக்க இருக்கும் ஜனதா தள நாடாளுமன்ற உறுப்பினர்கள் கூட்டத்தில் மண்டல் குழு பரிந்துரைகள் அமுலாக்கும் முடிவை எடுப்பீர்கள் என ஆவலுடன் எதிர்பார்க்கின்றோம் என்று பிரதமருக்கு கழகப் பொதுச்செயலாளர் தந்தி ஒன்று கொடுத்தார்.

11.8.90

மண்டல் குழு பரிந்துரையை அமுல் செய்து பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு 27 விழுக்காடு இட ஒதுக்கீடு செய்த பிரதமருக்கும், தேசிய முன்னணி அரசுக்கும் நன்றி தெரிவித்து இன்று மாலை சென்னை பெரியார் திடலில், திராவிடர் கழகத்தின் சார்பில் நன்றி அறிவிப்புப் பொதுக்கூட்டம் நடைபெற்றது. தமிழக மூதறிஞர் குழுத் தலைவர் ஜஸ்டிஸ் திரு. பி. வேணுகோபால் அவர்கள் தலைமை வகித்த இக்கூட்டத்தில் கழகப் பொதுச்செயலாளர் உணர்ச்சி உரை ஆற்றினார்.

மண்டல் குழு பரிந்துரைகள் அமுலானதற்குப் பிறகு நாட்டிலே நடைபெற்ற முதலாவது நன்றி அறிவிப்புப் பொதுக்கூட்டம் இதுவாகும்.

12.8.90

சேலத்தில் கழகப் பொதுச்செயலாளர் தலைமையில் கழக மத்திய நிர்வாகக் குழு கூடியது.

மண்டல் குழு பரிந்துரைகளை நடைமுறைப்படுத்திய தேசிய முன்னணி ஆட்சியைப் பாராட்டியும், கல்வியகங்களிலும் மண்டல்குழு பரிந்துரைகள்படி இட ஒதுக்கீடு செய்ய மத்திய அரசை வலியுறுத்தியும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

16.8.90

மண்டல் குழு பரிந்துரைகளை நடைமுறைப்படுத்திய பிரதமர் வி.பி. சிங் படத்தை வீட்டுக்கு வீடு மாட்டி நன்றி காட்டும் பொருட்டு, கழக சார்பில் வி.பி. சிங்கின் படம் வெளியிடப்பட்டது. முற்போக்கு இளைஞர் முன்னணி சென்னையில் நடத்திய பிரதமருக்கான நன்றியறிவிப்புக் கூட்டத்தில், பிரதமர் படத்தை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சிப் பொதுச்செயலாளர் ப. மாணிக்கம் வெளியிட, அதனை நீதிபதி பி. வேணுகோபால் முதல் படத்தைப் பெற்றுக்கொண்டார்.

1.9.90

மண்டல் குழு பரிந்துரைகள் நிறைவேற்றத்திற்கு உறுதுணையாக இருந்த மத்திய அமைச்சர் சரத் (யாதவிற்கு) சென்னை நிகழ்ச்சி ஒன்றில் கழகத் துணைப் பொதுச்செயலாளர் வழக்கறிஞர் கோ. சாமிதுரை சால்வை போர்த்தி, கழக சார்பில் பாராட்டுத் தெரிவித்தார்.

8.9.90

மண்டல் குழு பரிந்துரைகளை எதிர்த்து எழுதும் 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' ஏட்டின் சென்னை அலுவலகம் முன் இந்தியன் எக்ஸ்பிரஸ் ஏடு கொளுத்தப்பட்டது. தலைமை - கழகப் பொருளாளர் கா.மா. குப்புசாமி.

மண்டல் குழு பரிந்துரைகள் அமுலாக்கத்தை அடுத்து கழகப் பொதுச்செயலாளருக்கு தொலைபேசிகள், தந்திகள், கடிதங்கள் வாயிலாக வந்த பாராட்டுக் குவியல்கள் கணக்கற்றவை. நேரில் பாராட்டியோரும் ஏராளம்.

17.9.90

சென்னையில் நடந்த தி.மு.கழக நிகழ்ச்சியில் பங்கேற்ற பிரதமர் வி.பி. சிங் நிகழ்த்திய சமூக நீதி உரைக்கு - பாஸ்டனில் இருந்து கழகப் பொதுச்செயலாளர் பாராட்டுத் தந்தி அனுப்பினார்.

20.9.90

மண்டல் குழுப் பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தலை எதிர்த்து பார்ப்பன சங்கங்கள் அக்டோபர் முதல் நாள் உண்ணா விரதப் போராட்டம் நடத்தப் போவதாக அறிவித்தன. இதற்குப் பதிலடியாக உண்ணாவிரதம் நடக்கும் இடத்திற்கெதிரேயே கழக சார்பில் உண்ணும் விரதம் நடத்தப்படும் என திராவிடர் கழகத் தலைமை நிலையம் அறிவித்தது. இதையொட்டி பார்ப்பனர்கள் தங்கள் போராட்டத்தை பல இடங்களில் கைவிட்டனர்.

23.9.90

மண்டல் குழுப் பரிந்துரைகளை எதிர்த்து விஷமத்தனமான செய்திகளை வெளியிட்ட

மண்டல் குழு அமுலாக்கத்தைத் தடை செய்த உச்ச நீதிமன்ற ஆணை எரிகிறது. (10.10.1990)

''இந்தியன் எக்ஸ்பிரஸ்'', ''தினமணி'', ''ஆந்திர பிரபா'' ஆகிய நாளேடுகளை ஏற்றிச் சென்ற வேன் திருத்தணி முச்சந்தியில் மடக்கி நிறுத்தப்பட்டு - ஏடுகள் எரிக்கப்பட்டன. இது தொடர்பாக திருத்தணி நகர தி.க. செயலாளர் வாகையூரான், இளைஞர் அணி துணைச்செயலாளர் திலீபன், நகர இளைஞர் அணிப் பொறுப்பாளர்கள் ரசாக், இராவணன் என்கிற ஜெயவேலு, தும்பிக்குளம் திராவிடர் கழகக் கிளைச்செயலாளர் ஈ. பகிரங்கன் ஆகியோர் கைதாயினர். காவல் துறையால் வழக்குத் தொடரப்பட்டது.

இந்த எரிப்புகள் நாடு முழுதும் தொடர்ந்தன. ஏராளமான கழகத் தோழர்கள் மீது வழக்குகள் பதியப்பட்டன.

28.9.90

மண்டல் குழுப் பரிந்துரைகள் அமுலாக்கத்தை எதிர்த்து நடக்கவிருந்த உண்ணாவிரதத்தைக் கை விடுவதாகப் பார்ப்பனர் சங்கம் அறிவித்ததை அடுத்து - உண்ணும் விரதத்தையும் ரத்து செய்தது கழகம்.

1.10.90

மண்டல் குழுப் பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தலை எதிர்த்து திருச்சியில் பட்டினிக் கிளர்ச்சி நடத்த முயன்ற ''தமிழ்நாடு பார்ப்பனர் சங்க இளைஞரணி'' - கழகப் பிரச்சாரத்தின் விழிப்புணர்ச்சி எதிரொலியாகப் பொதுமக்களால் விரட்டியடிக்கப்பட்டது.

இந்த உண்ணாவிரதம் நடந்தால் உண்ணும் விரதம் நடத்தப் போவதாக ஏற்கெனவே அறிவித்திருந்த திருச்சி மாவட்ட திராவிடர் கழகம் - வெற்றிகரமாக மண்டல் குழுப் பரிந்துரை ஆதரவுப் பேரணியைத் திருச்சியில் நடத்தியது.

4.10.90

''மண்டல் குழுப் பரிந்துரை - சுப்ரீம் கோர்ட் தடை - நமது கடமை'' - என்ற தலைப்பில் கழகப் பொதுச்செயலாளர் இன்றிரவு சென்னை பெரியார் திடலில் நிகழ்த்திய உரை - ஒலி நாடா மூலம் தமிழ்நாடு முழுதும் எதிரொலித்தது.

8.10.90

மண்டல் குழுப் பரிந்துரை அமுலாக்கத்தை எதிர்க்கும் வகையில் 'நீதி'பதிகளைத் தடம் புரட்டிய சங்கராச்சாரி கும்பலைக் கண்டித்து - பார்ப்பனர்களின் தலைமை நிலையமான காஞ்சிபுரம் சங்கர மடம் முன் கழக இளைஞரணியினர் உட்பட அனைத்துக் கட்சியினர் ஆர்ப்பாட்டம் நடத்திக் கைதாயினர். பின்னர் விடுவிக்கப்பட்டனர்.

10.10.90

தேசிய முன்னணி ஆட்சி அமுல்படுத்திய மண்டல் குழுப் பரிந்துரை இட ஒதுக்கீட்டை எதிர்த்து உச்ச நீதிமன்றம் பிறப்பித்த தடை ஆணை நகல்கள் தமிழகம் முழுதும் கொளுத்திய கழகத் தோழர்கள் கைதாயினர்.

சென்னையில் சுப்ரீம் கோர்ட் ஆணை நகலை எரித்த கழகப் பொதுச்செயலாளரும், தோழர்களும் கைதாயினர். பின்னர் விடுவிக்கப்பட்டனர்.

கழகப் பொதுச்செயலாளர் கைதாவது - இது 27-வது முறை.

எரிக்கப்பட்ட நகல்களின் சாம்பல் - உச்சநீதிமன்ற பார்ப்பனத் தலைமை நீதிபதி ரங்கநாத் மிஸ்ராவிற்கு அஞ்சல் மூலம் தமிழகம் முழுவதுமிருந்தும் அனுப்பப்பட்டன.

13.10.90

மண்டல் குழுப் பரிந்துரை அமுலாக்கத்திற்கு தடை விதித்த உச்ச நீதிமன்ற நீதிபதி ரங்கநாத் மிஸ்ரா சங்கராச்சாரிகள் தரிசனத்திற்கு காஞ்சி வருவதாக இருந்தது. இவருக்குக் காஞ்சியில் கழக சார்பில் கருப்புக்கொடி காட்டப்படும் என பொதுச்செயலாளர் அறிவித்ததை அடுத்து தனது காஞ்சிப் பயணத்தை ரத்து செய்தார் நீதிபதி மிஸ்ரா.

27.10.90

மண்டல் குழுப் பரிந்துரைகளுக்கு சுப்ரீம் கோர்ட் தடை விதித்திருப்பதற்கு எதிர்ப்பு தெரிவித்து நீதிபதிக்குக் கண்டனக் கடிதங்களும், நீதிபதிகளின் கொடும்பாவி எரித்த சாம்பல்களும் சுப்ரீம் கோர்ட்டில் குவிந்தன. நாள்தோறும் 2,500 சாம்பல் உறைகள் வருவதாக உச்ச நீதிமன்றத்தில் குறிப்பிட்டார், தலைமை நீதிபதி மிஸ்ரா.

12.11.90

சமூக நீதிக்காக தேசிய முன்னணி ஆட்சியின் பிரதமர் பதவியைத் தியாகம் செய்ய



சென்னை குறளகமுன் மறியல் (18.3.1991)

குடியரசுத் தலைவர் ஆர். வெங்கட்ராமனுக்குக் கறுப்புக்கொடி (9.11.91)

நேர்ந்ததையொட்டி பதவி விலகிய பிரதமர் வி.பி. சிங், மத்திய தொழிலாளர் நலத்துறை அமைச்சராயிருந்த ராம் விலாஸ் பஸ்வான் ஆகியோரை டில்லியில் சந்தித்து, இருவருக்கும் கழகப் பொதுச்செயலாளரும், தென் மாநில சமூக நீதிக்குழு அமைப்புத் தலைவர் ஜஸ்டிஸ் வேணுகோபாலும் பொன்னாடை அணிவித்துப் பாராட்டினர்.

24.11.90

திருச்சி காஜாமலை பெரியார் நூற்றாண்டு கல்வி வளாகத்தில் - கழகப் பொதுச்செயலாளர் தலைமையில் நடந்த கழக மத்திய நிர்வாகக் குழுவில் - வி.பி. சிங் தலைமையிலான தேசிய முன்னணி ஆட்சிக் கவிழக் காரணமாயிருந்த ஆதிக்கச் சக்திகளுக்குக் கண்டனம் தெரிவிக்கப்பட்டது. மண்டல் குழுப் பரிந்துரைபற்றிய விழிப்புணர்வை ஊட்ட குமரிமுதல் சென்னைவரை கழகப் பொதுச்செயலாளர் பிரச்சாரம் நடத்துவதென முடிவெடுக்கப் பட்டது.

30.11.90

சமூக நீதிக் கொள்கைக்காக தன் ஆட்சியையே இழந்த முன்னாள் பிரதமர் வி.பி. சிங் தமிழகம் வருகையில் மகத்தான வரவேற்பளிக்க - கழகம் கூட்டிய அனைத்துக்கட்சிக் கூட்டம் முடிவெடுத்தது.

7.12.90

சமூக நீதிக்காக பிரதமர் பதவி துறந்த வி.பி. சிங் இன்றிரவு சென்னை விமான நிலையம் வந்தபோது கழக சார்பிலும் மாபெரும் வரவேற்பளிக்கப்பட்டது. கழகத் துணைப் பொதுச்செயலாளர் வழக்கறிஞர் கோ. சாமிதுரை, கழக சட்டத்துறை செயலாளர் வழக்கறிஞர் எஸ். துரைசாமி, கழகத் தலைமை நிலையச் செயலாளர் கலி. பூங்குன்றன் ஆகியோர் வி.பி. சிங்கிற்குப் பொன்னாடை அணிவித்தனர்.

18.3.91

மண்டல் குழுப் பரிந்துரைகள் முடக்கம் மற்றும் பொதுப் பிரச்சினைகள் சிலவற்றினை முன்னிட்டு தமிழகம் முழுதும் கழக சார்பில் ஆர்ப்பாட்டங்கள் நடந்தன. சென்னையில் நடந்த ஆர்ப்பாட்டத்தைத் துவக்கி வைத்தார் - கழகப் பொதுச்செயலாளர்.

17.9.91

தமிழக அரசின் சார்பில், இன்று மாலை சென்னை கலைவாணர் அரங்கில் நடைபெற்ற தந்தை பெரியார் பிறந்த நாள் விழாவில் - மண்டல் குழு பரிந்துரைப்படி 50 விழுக்காடு இட ஒதுக்கீட்டை வலியுறுத்தி சட்டசபைத் தீர்மானம் நிறைவேற்றப்பட வேண்டும் என முதல்வர் ஜெயலலிதாவிற்குக் கழகப் பொதுச்செயலாளர் கோரிக்கை வைத்தார்.

30.9.91

மண்டல் குழு பரிந்துரைகளை முழுமையாக நிறைவேற்றவேண்டும். அதோடு, மண்டல் குழு பரிந்துரையில் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு 27 விழுக்காடு ஒதுக்கீடு என்பதை 50 விழுக்காடு என்று உயர்த்தவேண்டும் என டில்லி அரசை வலியுறுத்தி முதல்வர் ஜெயலலிதா கொண்டு வந்த தீர்மானம் சட்டப் பேரவையில் ஒரு மனதாக நிறைவேறியது.

17.9.91 அன்று, சென்னை கலைவாணர் அரங்கில் தமிழ்நாடு எடுத்த அய்யா பிறந்த நாள் விழாவில் கழகப் பொதுச்செயலாளர் இதற்கான கோரிக்கையை முதல்வரிடம் விடுத்திருந்தார்.

7.10.91

மண்டல் குழு பரிந்துரைகளை அமுல்படுத்த வலியுறுத்தி சென்னை மற்றும் மாவட்டத் தலைநகர்களிலுள்ள மத்திய அரசு அலுவலகங்கள் முன் கழக சார்பில் பேரணிகள், ஆர்ப்பாட்டங்கள் எழுச்சியுடன் நடந்தன. அனைத்துக் கட்சிகளும் இவற்றில் பங்கேற்றன.

சென்னை பெரியார் திடலில் ஆர்ப்பாட்ட ஊர்வலத்தைக் கழகப் பொதுச்செயலாளர் துவக்கி வைத்தார். சென்னையில் நடந்த கண்டன ஊர்வலத்திற்கு தலைமை - வட சென்னை மாவட்ட தி.க. தலைவர் க. பலராமன். ஆர்பாட்டத் தலைமை - தென் சென்னை மாவட்ட தி.க. தலைவர் எம்.பி. பாலு.

14.10.91

நெய்வேலி - 10-வது வட்டம் திருமண அரங்கில் கழகப் பொதுச்செயலாளர் தலைமையில் கழக மத்திய நிர்வாகக் குழு கூடியது.

''மண்டல் குழு பரிந்துரைகள் அமுலாக்கம் விரைவுபடவேண்டும்'' என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

28.10.91

மண்டல் குழு பரிந்துரை தொடர்பான வழக்கைக் காலம் தாழ்த்தாமல் உடனடியாக முடிவிற்குக் கொண்டுவர வலியுறுத்தி உச்சநீதிமன்றத்தின் முன் எழுச்சியுடன் ஆர்ப்பாட்டம் நடந்தது.

சமூக நீதிக்கான ஆசிய அமைப்பின் ஏற்பாட்டில் நடந்த இந்த ஆர்ப்பாட்டத்தில் 17 மாநிலங்களைச் சேர்ந்தவர்கள் பங்கேற்றனர்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் கழகத் துணைப் பொதுச்செயலாளர் வழக்கறிஞர் கோ. சாமிதுரை, நீதிபதி பி. வேணுகோபால் முதலியோர் தமிழகத்திலிருந்து பங்கேற்றனர்.

9.11.91

மண்டல் குழு பரிந்துரையில் மத்திய அரசின் அலட்சியப் போக்கினைக் கண்டித்தும், மற்றும் பொதுப் பிரச்சினைகள் சிலவற்றினை முன் வைத்தும் குடியரசுத் தலைவர் ஆர். வெங்கட்ராமன் சென்னை வந்தபோது கழகப் பொதுச்செயலாளர் தலைமையில் கருப்புக்கொடி காட்ட முயன்ற கழகத் தோழர் - தோழியர்கள் ஆயிரக்கணக்கில் கைதாயினர்.

15.2.92

சேலத்தில் - தென் மாநில சமூக நீதி மய்யத்தின் தலைவர் நீதிபதி பி. வேணுகோபால் தலைமையில் நீதிக் கட்சி பவள விழா மாநாடு நடைபெற்றது.

மாநாட்டில் - ''குறிப்பிட்ட தேதி நிர்ணயம் செய்து மத்திய அரசு மண்டல் குழுப் பரிந்துரைகளைச் செயல்படுத்தவேண்டும்'' என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

31.5.92

திருச்சியில், கழகப் பொதுச்செயலாளர் அவர்கள் தலைமையில் நடைபெற்ற கழக மத்திய நிர்வாகக் குழுவில் - மண்டல் குழுப் பரிந்துரைகளை மத்திய அரசு உடனடியாக அமுல்படுத்தவேண்டும் என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

23.11.92

மண்டல் குழுப் பரிந்துரைகள் பற்றிய இந்திய உச்சநீதிமன்றத் தீர்ப்பையடுத்து கழகப் பொதுச்செயலாளருக்குப் பாராட்டுகள் குவிந்த வண்ணமுள்ளன. அமெரிக்கா வாழ் தமிழர்களை பல்துறை வல்லோர் கூட்டாகக் கையெழுத்திட்டு பொதுச்செயலாளருக்கு வாழ்த்துக் கடிதம் அனுப்பி வைத்தனர்.

அவர்கள் விவரமாவது:

டாக்டர் சோம. இளங்கோவன், சிகாகோ. வ.செ. பாபு, சிகாகோ. தமிழ்ச் சங்கத் துணைத் தலைவர் ந. விசுவநாதன், சிகாகோ. பொறியாளர். டாக்டர் திருநாவுக்கரசு -செயின்ட் லூயிஸ், விஞ்ஞானி.

6.12.92

புதுவை லட்சுமி திருமண நிலையத்தில், கழகப் பொதுச்செயலாளர் மானமிகு கி. வீரமணி தலைமையில் கழக மத்திய நிர்வாகக் குழு நடைபெற்றது.

மண்டல் குழு பரிந்துரை தொடர்பான உச்சநீதிமன்ற தீர்ப்பை உடன் மத்திய அரசு அமுல்படுத்தவேண்டும் என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

23.4.93

மண்டல் குழு பரிந்துரைகளை அமுல்படுத்துதல், பதவி உயர்விலும் இட ஒதுக்கீடு கோருதல், இட ஒதுக்கீடு 50 சதவீதத்திற்கு மேல் போகக்கூடாது என்கிற உச்சநீதிமன்ற தீர்ப்பை மாற்றுதல், பிற்படுத்தப்பட்டோர்களுள் பொருளாதார அளவுகோல் காட்டி இட ஒதுக்கீடு பெற முடியாமல் ஆக்கும் உச்சநீதிமன்றத் தீர்ப்புக்குத் திருத்தம் செய்தல் இவற்றை உள்ளடக்கிய கோரிக்கைகளுடன் திராவிடர் கழகம், தாழ்த்தப்பட்ட - பிற்படுத்தப்பட்ட சமூக அமைப்புகள் இணைந்து இன்று தமிழ்நாடு முழுவதும் மாவட்டத் தலைநகரங்களில் மத்திய அரசு அலுவலகம் முன் மறியல் போராட்டத்தில் ஈடுபட்டது.

முற்பகல் 11 மணிக்கு சென்னை பெரியார் திடலிலிருந்து கழகப் பொதுச்செயலாளர் தலைமையில் ஊர்வலம் புறப்பட்டது.

வன்னியர் சங்கத்தின் மாநிலத் தலைவர் சா. சுப்பிரமணியம் அய்.ஏ.எஸ். (ஓய்வு) ஊர்வலத்தைத் துவக்கி வைத்தார்.

ஊர்வலம் சென்னை மாநகராட்சி கட்டடமான ரிப்பன் பில்டிங்கோடு நிறுத்தப்பட்டு

மண்டல் பரிந்துரையை அமுலாக்கக் கோரி
மறியல் — கைது (சென்னை 23.4.93)

30.3.93 செவ்வாய் காலை 10.30 மணிக்கு சென்னை பெரியார் திடலில் நடைபெற்ற சமூக நீதி அமைப்புகளின் கலந்துரையாடல் கூட்டத்தில் கழகப் பொதுச்செயலாளர் கீ. வீரமணி கருத்துக் கூறுகிறார். உடன் சா. சுப்பிரமணியம் அய்.ஏ.எஸ். (ஓய்வு) (வன்னியர் சங்கத் தலைவர்), நீதிபதி திரு. பெ. வேணுகோபால், டி.பி. பாரதி அய்.ஏ.எஸ். (ஓய்வு), டாக்டர் வீ. இராமகிருஷ்ணன் (தேவர் பேரவை)

ஏராளமான தோழர்கள் கழகப் பொதுச்செய லாளரோடு கைது செய்யப்பட்டனர்.

மாவட்டத் தலைநகர்களிலும் இந்தக் கிளர்ச்சி நடந்தது.

காலையில் கைதானோர் மாலையில் விடு விக்கப்பட்டனர்.

21.8.93

மதுரை குலுங்கிய தமுக்கம் திடலில் நடை பெற்ற சமூக நீதி மாநாட்டில் - மத்தியில் ஆட்சியில் உள்ள நரசிம்மராவ் அரசு மண்டல் பரிந்துரையை நடப்பிற்குக் கொண்டு வரா மல் மெத்தனம் காட்டி வருவதைக் கண்டித்து, எந்த வகையான போராட்டத்திற்கும் இளை ஞர்களும், மற்றுமுள்ள எல்லோரும் தயார் என்பதைத் தெரிவித்து, அதற்கான ஆணை யைத் திராவிடர் கழகப் பொதுச்செயலாளர் தமிழினக் காவலர் மானமிகு கி. வீரமணி அவர்களிடம் இருந்து எதிர்பார்க்கிறது - என்பதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

1.9.93

இட ஒதுக்கீடு 50 சதவிகிதத்துக்கு மேல் போகக்கூடாது என்ற உச்சநீதிமன்ற தீர்ப்பு நகல் இன்று தமிழகம் முழுதும் கொளுத்தப் பட்டது, அதன் சாம்பல் உச்சநீதிமன்றத்துக்கு அனுப்பப்பட்டது. தமிழகம் முழுதும் 15 ஆயிரம் கழகத்தோழர்கள் கைது.

8.9.93

மண்டல் குழு பரிந்துரையின்படி பிற்படுத் தப்பட்ட மக்களுக்கு டில்லி அரசு பதவிகளில் 27 சதவிகித இட ஒதுக்கீடு உடனடியாக மத் திய அரசால் அமுல்படுத்தப்படுவதாக -

மத்திய சமூக நலத்துறை அமைச்சர் சீத்தா ராம் கேசரி செய்தியாளர்களிடம் டில்லியில் இன்று அறிவித்தார்.

மண்டல் குழு பரிந்துரை அமுலாக்கச் செய்தி வெளியானதை அடுத்து - சென்னையில் இருந்த கழகப் பொதுச்செய லாளர் டில்லியில் இருந்த மத்திய அமைச்சர் சீத்தாராம் கேசரி அவர்களைத் தொலைபேசி மூலம் தொடர்புகொண்டு பாராட்டு தெரி வித்தார். இட ஒதுக்கீடு அமுல் தொடர்பான மத்திய அரசு ஆணையில் உள்ள குறைபாடுக ளையும் சுட்டிக்காட்டிய பொதுச்செயலாளர்

''எப்படியோ! கதவு திறக்கப்பட்டது'' எனக் கூறி அமைச்சர் கேசரியிடம் மகிழ்ச்சி தெரிவித்தார்.

மண்டல் குழு அறிக்கை அமுல் பற்றிய டில்லியின் ஆணை வெளியான சில நிமிடங் களில் - இதனை வரவேற்று கழகப் பொதுச் செயலாளர் ஒரு அறிக்கை வெளியிட்டார். டில்லியின் ஆணை, சமூக நீதிப் போராட்டத் திற்குக் கிடைத்த வெற்றி என குறிப்பிட்டி ருந்த கழகப் பொதுச்செயலாளர் -

''மண்டல் குழு பரிந்துரைகளை மேலும் கிடப்பில் போடாமல் நடப்பில் கொண்டு வந்ததற்காகப் பிரதமரையும், மத்திய சமூக நலத்துறை அமைச்சர் கேசரி; இதனை விரை வுபடுத்த தன் வாழ்வையே தியாகம் செய்ய முன் வந்த சமூக நீதிக் காவலர் வி.பி. சிங் ஆகியோருக்கு தனது நெஞ்சார்ந்த பாராட்டுக் களையும் நன்றியையும் தெரிவித்தார்.

9.9.93

சென்னையில் இன்று மாலை செய்தியாளர் களைச் சந்தித்த திராவிடர் கழகப் பொதுச்செ யலாளர் கீழ்க்கண்ட கருத்துக்களை வலியு றுத்தினார்.

1. பொருளாதார வரம்பை நீக்கவேண்டும்.

2. தனியார் துறைகளிலும் இட ஒதுக் கீட்டை அமுலாக்கவேண்டும். பொதுத் துறை சுருங்கி, தனியார்த் துறை விரிவாகும் இந்த கால கட்டத்தில் இது மிகவும் அவசியம் என்று வலியுறுத்தினார்.

ராகுல்ஜி கருத்து

பிராமணர்கள், பவுத்தர்களைத் தங்களது பலமான விரோதிகள் என்று கருதுகிறார்கள். எல்லா நாட்டிலும் உள்ள பவுத்தர்கள், பசு மாமிசம் சாப்பிடுகிறார்கள் என்ற காரணத்திற்காகவே, பசு மாமிசம் தடை செய்யப்பட்டதென்றும் பசுவையும் பிராமணர்களையும் காப்பாற்றுவது தர்மம் என்றும், பிராமணர்கள் பிரசாரம் செய்யத் தொடங்கி இருக்கிறார்கள்.

- ராகுல சாங்கிருத்தியாயனின் 'வால்காவிலிருந்து கங்கை வரை', பாகம் 2, பக்கம் 76.

வருகை தந்தோர்!

நமது கல்வி நிலையங்களுக்கும், நிறுவனங்களுக்கும் வருகை தந்து மகிழ்ந்த முக்கியப் பார்வையாளர்கள்.

வல்லம் (தஞ்சாவூர்)

1. அமெரிக்காவில் விஸ்கான் மாநிலத்தில் - பிரபல தொழிற்சாலை அதிபரான 'ராம்' என்று அழைக்கப்படும் துக்காராம் அவர்கள் வருகைதந்து மாணவியர்களிடையே அறிவுரை வழங்கியதோடு Career Guidence Programme ஆண்டுதோறும் நடத்திட வைப்புத் தொகையாக கல்லூரிக்கு 5 லட்ச ரூபாய் வழங்கிட முடிவு செய்துள்ளதாக அறிவித்தார்.

2. அமெரிக்கா நார்த் கெரோலினா மாநிலத்திலிருந்து வல்லத்திற்கு வருகைபுரிந்து, வகுப்புகளை மாணவியர்களுக்கு எடுத்த கம்ப்யூட்டர், எலக்ட்ரிக்கல் துறை வல்லுனரான பேராசிரியர் டாக்டர் தணி. கே. சேரன் அவர்களும் அவரது துணைவியார் மருத்துவ மனோவியல் டாக்டர் செல்வி அவர்களும் 3 நாள் தங்கி மாணவிகள், ஆசிரியர்களிடையே கலந்துரையாடி, இறுதியில் 5000 யு.எஸ். டாலர் கல்லூரி நிதிக்கு அளித்தனர்.

இவர்கள் திருச்சிக்கும் சென்று அங்குள்ள கல்வி நிலையங்களையும் பார்த்து மகிழ்ந்தனர்.

அமெரிக்காவின் பிரபல தொழில் நிறுவனமான Ganton Technology நிறுவன துணைத் தலைவர் திரு. சாந்தாராம் அவர்கள் குடும்பத்துடன் வல்லம் வருகைதந்து கல்வி நிலையங்களைக் கண்டு மகிழ்ந்தனர்.

அமெரிக்காவில் சிக்காகோவில் மருத்துவர்களாக பணிபுரியும் டாக்டர்கள் சந்திரன் - தம்பதிகள், டாக்டர் தாரா உட்பட வல்லம் வருகை தந்து மகிழ்ந்து 'சிறுதுளி பெருவெள்ளம' நிதி அளித்தனர்.

கனடாவில் நியுஃபவுண்ட லாண்ட் மாநிலத்தில் சர் செயிண்ட் ஜான்ஸ் பகுதியில் சுமார் 3000 மாணவர்களுக்கு மேல் படிக்கும் கேபோட் தொழில் கல்வி கல்லூரி Cabot Community college) கல்வித் துறைத் தலைவர், டீன் ஃபேசி (Facey) மற்றொரு தலைவர் மார்லிமாண்டு (Mr. Marlimondu) ஆகியோர் வருகை புரிந்து நிறுவனங்களைக் கண்டு கலந்துரையாடினர். அவர்கள் வருகை புரிவதற்குக் காரணமாக அமைந்தவர் 'அர்மா' ஆய்வக இயக்குநர் டாக்டர் அருள் பிச்சை நாராயணன் அவர்கள் ஆவார்கள்!

திருச்சி

14.10.92: நிறுவனர் நாள் விழா மற்றும் பெரியார் கணினி மய்ய திறப்பு விழா. உயர்திரு. அலெக்ஸ் யூல் அவர்கள்.

28.12.92: தந்தை பெரியார் நினைவு நாள், பெரியார் - மணியம்மை குழந்தைகள் காப்பகக் கட்டடத் திறப்பு விழா.

தலைமை: உயர்திரு. இராம் விலாஸ் பஸ்வான் எம்.பி., அவர்கள்.

திறப்பாளர்: உயர்திரு. வி.பி. சிங் அவர்கள்.

8.3.93: திருச்சி பெரியார் மாளிகை வளாகத்தில் பெரியார் சிலை திறப்பு. 1. மலேசியா அமைச்சர் டத்தோ சாமிவேலு, 2. சிங்கப்பூர் தொழிலதிபர் எம்.ஆர். சந்திரன், 3. சிங்கப்பூர் தொழிலதிபர் மூர்த்தி ஆகியோர் பங்கேற்றனர்.

சென்னை

சென்னை பெரியார் திடலில் பெரியார் சுயமரியாதைப் பிரச்சார நிறுவனத்தின் மூலமாக இயங்கும் பெரியார் மருத்துவ அறப்பணிக் கழகத்தின், பெரியார் நகர குடும்ப நல மய்யம், பெரியார் - மணியம்மை இலவச மருத்துவமனை, பெரியார் நோய் பரிசோதனை மய்யம் ஆகிய மருத்துவ பகுதிகளை உள்நாட்டு மற்றும் அயல்நாட்டு பார்வையாளர்கள் சுற்றிப் பார்த்து பெரியார் மருத்துவ அறப்பணிக் கழகத்தின் சிறப்பினை வியந்து பாராட்டியவர்களின் பட்டியல் (31.10.92 முதல் 4.8.93 வரை)

பார்வையிட்ட நாள்	பார்வையாளர் பெயர்
31.10.92	அ.மு. திருநாவுக்கரசு,

	மலேசியா திராவிடர் கழகம்
19.11.92	க. பாஸ மாணிக்கம், தலைவர் மலாயன் இந்தியன் காங்கிரஸ், சொகூர் மாநிலம், மேற்கு மலேசியா
19.11.92	ந. சுப்பிரமணியன், சென்னை-50
19.11.92	டாக்டர் பி.டபிள்யூ.சி. சத்யவேலு, துணைப் பேராசிரியர், சமூக இயல்துறை, சென்னை மருத்துவக் கல்லூரி.
19.11.92	பி.எஸ். மணியம், ம.தி.க.
31.12.92	டாக்டர் பி.பி. ராஜன் பி.எஸ்சி., எம்.டி.எஸ்., எஃப்.அய்.சி.டி., துணைவேந்தர் டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவக் கல்லூரி
12.2.93	ஜோசப் இடமருகு, துணைத் தலைவர், இந்தியப் பகுத்தறிவாளர் கழகம், டில்லி.
3.3.93	திரு. ருஸ்ஸல் ரோவ், பி.ஏ.,, திருமதி பாலின் ரோவ், 142, Clements Road, East Ham, London EC
17.3.93	''திருச்சுடர்'' கே.ஆர். ராமசாமி, மலேசியா திராவிடர் கழகம்.
17.3.93	சு.தே. மூர்த்தி, சிங்கப்பூர்
20.4.93	சண்முகசுந்தரம், முன்னாள் துணைவேந்தர், மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக் கழகம்.
20.4.93	உட்காட்டு நாயக்கர் Senior Human settlements Officer, United Nations Centre for Human Settlements P.O. Box 30030 NAIROBI, KENYA.

உச்சநீதிமன்ற தீர்ப்பில் பெரியார்

மண்டல் குழுத் தொடர்பாக உச்சநீதி மன்றம் 16.11.92 அன்று ஒரு தீர்ப்பை அளித்தது. அத்தீர்ப்பில் நீதிபதி திரு.எஸ். இரத்தினவேல் பாண்டியன் அவர்கள் குறிப்பிட்டிருக்கும் ஒரு பகுதி

In fact this is the realisation of the dream of BHARAT RATNA Dr. B.R. Ambedkar, of the great Periyar Ramaswamy and Dr. Ram Manohar Lohia.

14.5.93	Dr. A.M. Kamal Basha M.D., Mariyam Nursing Home, kodambakkam, M.S. 24.
10.6.93	பில்ஹம்ரே, இந்தியாவுக்கான திட்ட ஆலோசகர், உலக வங்கி.
11.6.93	என். இன்னய்யா, தலைவர், பகுத்தறிவாளர் கழகம், ஆந்திரப் பிரதேசம், செயலாளர், மனித நேய கழகம், ஆந்திரப் பிரதேசம்.
18.6.93	டாக்டர். ஜி. திருநாவுக்கரசு M.D., D.M., M.R.C.P., (UK)
15.7.93	தணி. கே. சேரன், Ph.D., M.B.A., P.E., USA
23.7.93	பாலமூர்த்தி, கேபோட் காலேஜ் செயின்ட் ஜான், என்.எப். கனடா. AIA 279.
4.8.93	சாம்.பி. சாந்தாராம், விஸ்கான்சின் USA.
4.8.93	எஸ்.என். நெய்னா முகமது, B. Nagar, N.L. 627 351.
4.8.93	கே. புகாரி, அபுதாபி
4.8.93	ஜி. அசோகன், ஆசிரியர், ஜாப் கைடுலைன்ஸ், சென்னை.

CST TNGST/ 591150

நியூ உதயம்

பேன்சி கவரிங்

25 - 28/1, மேற்கு சன்னதி, சிதம்பரம் - 608 001

தொலைபேசி : 22606

((((((((((()))))))))))))

((((((()))))))

(((()))))

((()))

கிளைகள்:

மயிலாடுதுறை | பட்டுக்கோட்டை | நாகர்கோயில்

****

****

****

இவைகளின் உரிமையாளர்

எஸ். வேல்பாண்டி,
10.பி, வாணக்கார தெரு,
சிதம்பரம்.

தந்தை பெரியாரின் பிறந்த நாளில்
அன்பான வாழ்த்துக்கள்

"சன் பர்னிச்சர்"

32, கிச்சிப்பாளையம் மெயின் ரோடு,
சேலம் - 1

எங்களிடம் மடக்கு நாற்காலிகள் மடக்குக் கட்டில்கள் சன்மைக்கா டேபிள்கள் மற்றும் தேவையான அனைத்துப் பொருட்களும் மொத்தமாகவும் சில்லறையாகவும் குறைந்த விலையில் கிடைக்கும்.

அறிவு ஆசான் தந்தை பெரியாரின்
115-வது பிறந்த நாள் வாழ்த்துக்களை
வழங்குவோர்
* * *

"குறிஞ்சி கார்னர்"

லுங்கிகள், பனியன் - ஜட்டி -
டவல் ரகங்கள் குறைந்த
விலையில் விற்போர்

* * *

9,10 திப்பு சுல்தான் மார்க்கட்
முதல் அக்ரகாரம், சேலம் - 1

விடுதலை மலருக்கு எங்கள்
வாழ்த்துக்கள்!

அய்யாவின் பணி முடிக்கும்
ஆசிரியருக்கு துணை
நிற்போம்

ஆர். எஸ்.
டைலர்ஸ்

(ஜோதி தியேட்டர் எதிரில்)

192, அண்ணாசாலை
ஆர்க்காடு - 632503
உரிமை : ஏ. பன்னீர் செல்வம்

தந்தை பெரியார் 115-வது பிறந்த நாள்
"விடுதலை" சிறப்பிதழுக்கு
வாழ்த்துக்கள் !

*
***
****

SELVAM
TAILORS

****
***
*

48, S.P. KOIL STREET
CHIDAMBARAM

வாழ்க தந்தை பெரியார் !

அய்யாவின் 115-வது பிறந்தநாள் வாழ்த்துக்கள் !

தமிழா தமிழனாக இரு;

தமிழா இன உணர்வு கொள் !

* * *

டாக்டர் G. மணிசாமுவேல் B.D.S.

மலர்க தமிழீழம் !

சரஸ்வதி அம்மாள் பல் மருத்துவமனை

5B/136 மெயின் ரோடு, நெய்வேலி - 607 802

சிறப்பு வருகை : இரவு 7 முதல் 9 மணி வரை

ஜெயா மெடிக்கல்ஸ், மெயின் பசார், நெய்வேலி - 3.

தொலைபேசி : 22223

சீதாலட்சுமி ஸ்டோர்ஸ்

உரிமையாளர் : **என். ஏகாம்பரம்**

மளிகை, பாவா முதலி தெரு, சிதம்பரம்.

தரமான மளிகை சாமான்கள் மொத்தமாகவும், சில்லரையாகவும் கிடைக்கும்

தொலைபேசி (P.P) : 22223

கிரிஜா ஸ்டோர்ஸ்,

உரிமையாளர் : **என். கெஜபதி**

மளிகை, பாவா முதலி தெரு, சிதம்பரம்.

வெல்லம், சர்க்கரை, மைதா, சீனி, பருப்பு வகைகள் மொத்த வியாபாரம்

தொலைபேசி (P.P) : 22223

அம்மன் ஏஜென்சீஸ்

பாவா முதலி தெரு, சிதம்பரம்.

ஏஜென்ட் : AVT, WIPRO, BANISH, TRIPTH, MAIDA,

S.K.M. தீவனம், பத்மினி பத்தி வகைகள்

With Best Compliments From

Phone : 24315

*****
****
***
*

M/S. N.V. VENKATESWARAN

TIMBER MERCHANT

*
***
****
*****

138, W.B. ROAD, TRICHY - 8

எம் சிந்தையில் கலந்திட்ட
தந்தையே வாழ்க !
தமிழினக் காவலர் வழியினில்
நடைபோடுவோம் !!

***

மு. மூர்த்தி
(நகர தி.க. செயலாளர்)

***

தில்லை காபி பார்

1, வேணுகோபால்பிள்ளை தெரு,
சிதம்பரம் - 608001.

With Best Compliments

N. ARUMUGAM
ROYAL GASKETS
(Mfr. of automobile packings)
11, Seerangam Street No.2
Dadagapatti
Salem-636006.

With Best Compliments from

அம்மா மருந்தகம்

208, பாரதி சாலை, இராயப்பேட்டை, சென்னை - 14.
(அமீர் மகால் எதிரில்)
அரசு அங்கீகாரம் பெற்றது.
தொலைபேசி: 842511

தந்தை பெரியார் பிறந்த நாள் வாழ்த்துக்கள்

எப்பொருள் யார்யார் வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பதறிவு - குறள்

பத்தாண்டு சேவையில் எங்களது
பயணம் தொடர்கிறது

அக்ரோ கெமிகல் ஏஜென்சி

(Sponsered by the Govt. of India)

உரம் பூச்சி மருந்து விற்பனை நிலையம்

35 A/7 எம்.பி.டி. ரோடு, முத்திக்கடை, இராணிப்பேட்டை - 632 402

உரிமையாளர் : பொ. பெருமாள்

Regd. No.4789 "விடுதலை பெரியார் மலர்" 17-9-1993 நன்கொடை ரூ.25/-
VIDUTHALAI PERIYAR MALAR



SOFT BYTE

Computer Consultants

Head Office
55, Shanthi Complex
26, Ranganathan Street
T. Nagar, Madras-600 017

Branch Office
54-K, Jaffersha St.,
TRICHY - 620 008

OFFERS

- Corporate Training
- Computer Awareness Programme (CAP) in Schools.
- Software Development
- Dealers for ET & T Educational Video Cassettes and Computer Systems (PC/XT/AT)

பெரியார் சுயமரியாதைப் பிரச்சார ஸ்தாபனத்தின் செயலாளர் மானமிகு கி. வீரமணி அவர்களை ஆசிரியராகவும், பிரசுரதாரராகவும் கொண்டு, சென்னை 'விடுதலை' ஆப்செட் பிரிண்டர்சில் (50, ஈ.வெ.கி. சம்பத் சாலை, சென்னை - 600 007) அச்சிட்டு வெளியிடப்பட்டது.

திராவிடன் நல நிதி லிமிடெட்

பெரியார் திடல், சென்னை - 7. ☎ 56 26 99

உங்கள் பணத்திற்கு பூரண பாதுகாப்பும்
அதிக வட்டியும் தரும் ஒரே நிறுவனம்

திராவிடன் நல நிதி

எண்ணற்ற தமிழர் பலன் பெறும்பொழுது
நீங்கள் ஏன் இன்னும் தயங்குகிறீர்கள்

எங்கள் புதிய அதிகரிக்கப்பட்ட வட்டி விகிதம்

நிலை வைப்பு நிதி :

தொகை	காலம் மாதம்	வட்டி வீதம் மாத வட்டி	6 மாதம் ஒரு முறை	ஆண்டுக்கு ஒரு முறை
1000/-	6	15%	-	
1000/-	12	16%	16.5%	17%
1000/-	24	17%	17.5%	18%
1000/-	36	18%	18.5%	19%
25000 ம் மேலும்	36 60*	19%	19.5%	20%
50000 ம் மேலும்	60**	20%	20.5%	21%

ஓய்வூதியர் நல திட்டம் :

தொகை	காலம் மாதம்	வட்டி வீதம் மாத வட்டி	6 மாதம் ஒரு முறை	ஆண்டுக்கு ஒரு முறை
25000 ம் மேலும்	36 60*	19.5%	20%	20.5%
50000 ம் மேலும்	60**	20.5%	21%	21.5%

முதிர்வடைந்து புதுப்பித்தால் ரூ. *2,500* ஊக்கத்தொகை வழங்கப்படும்.

* முதிர்வடைந்து புதுப்பித்தால் ரூ. *5,000* ஊக்கத்தொகையாக வழங்கப்படும்.

று வைப்பு நிதி :

தொகை	முதிர்வு தொகை				
	6 மாதம்	12 மாதம்	24 மாதம்	36 மாதம்	46 மாதம்
1000	1072	1,170	1,400	1,660	2,000

உங்களது சேமிப்பு 46 மாதங்களில் இரட்டிப்பாகிறது

பி. வேணுகோபால்
தலைவர்

பதிவு எண்: 4789
T15
R005
விடுதலை ஆஃப்செட் பிரிண்டர்ஸ், சென்னை-